தாயுமானவரின் திருப்பாடல்கள்

மூலமும் உரையும்

முதல் தொகுதி

உரையாசிரியர்

புலவர். அ. மாணிக்கனார் M.A.,

தமிழ்ப் பேராசிரியர், (ஓய்வு)

அ. மா. ஜெயின் கல்லூரி, சென்னை - 114.

வர்த்தமானன் பதிப்பகம்

ஏ. ஆர். ஆர். காம்ப்ளெக்ஸ்,

141, உஸ்மான் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

முதல் பதிப்பு : 1991
உரிமை : பதிப்பகத்திற்கே.

விலை : ரூ. 40-00

அச்சிட்டோர் :
அலைகள் அச்சகம்,
86, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024

பதிப்புரை

தமிழ் இலக்கிய வரலாறு காலந்தோறும் புதுப்புது மாற்றங்களைக் கொண்டது. பக்தி இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட சமயக் குரவர் 'நால்வர்' வரலாறு நாடறிந்த ஒன்று. பெரும்பாலும் தன்னுணர்ச்சிப் பாடல்களையே கொண்ட பழங்கால இலக்கிய நிலை மாறிப் பக்தி இலக்கியம் தோன்றிய காலம் 'நால்வர்' காலம்! இந்த வகையில் பிற்காலத்திலும் நால்வர் தோன்றினர், பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர், இராமலிங்க அடிகளார் ஆகிய இவர்களைப் பிற்கால நால்வர் எனலாம்.

பொதுவாக, ஆன்ம சிந்தனை பற்றிய பாடல்களைச் சங்க இலக்கியங்களில் காண்பதரிது. பிற்கால இலக்கியங்களோ இந்த ஆன்ம சிந்தனையிலேயே ஆழ்ந்துள்ளனர். பட்டினத்தார், தாயுமானவர் பாடல்களில் ஆன்ம சிந்தனையும், வினை விளக்கமும், நிலையாமையும் பெரிதும் இடம் பெற்றுள்ளன. 'பக்தியில்லாதவர் நட்பே வேண்டாம்' என்று கூறுகிறது, தாயுமானவர் பாடல் ஒன்று. மனிதன் ஒரு குறிக்கோளுடன் வாழவேண்டும் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

தாயுமானவரின் நெஞ்சை உருக்கும் பாடல்களை உரையுடன் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். பட்டினத்தார் பாடல்களுக்கு உரை வகுத்த பேராசிரியர் அ. மாணிக்கனார் இந்த நூலுக்கும் உரை வகுத்துள்ளார். மிகக் கஷ்டமான தத்துவங்கள் அடங்கிய பாடல்களை யாவரும் புரிந்து கொள்ளுமாறு உரை வழங்கிய பேராசிரியருக்கு நன்றி கூறுகிறோம்.

வழக்கமாக அச்சிட்டு உதவிய அலைகள் அச்சகத்தார்க்கும் நன்றி.

அடுத்து, திருவாசகமும் திருப்புகழும் உரையுடன் வரும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

—பதிப்பகத்தார்

பொருளடக்கம்

தாயுமானவரின் வரலாறு

சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று **வேதாரணியம்** (திருமறைக்காடு). அத்தலம் திருநாவுக்கரசராலும் திருஞான சம்பந்தராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. அங்குக் கோயிலின் கதவுகள் வேதங்களால் பூசிக்கப்பட்ட பின்பு அவற்றால் காப்பு இடப்பட்டு மூடப்பட்டிருந்தன. அக்கதவு களைத் திறக்கப்படுமாறு பாடியவர் திருநாவுக்கரசர், அது மூடும்படி பாடியவர் திருஞானசம்பந்தர்.

அந்தத் தலத்தில் வேளாளர் மரபு ஒன்று சிறந்து விளங்கியது. அதனுள் தோன்றிய மாண்பையுடையவர் **கேடிலியப்பப் பிள்ளை**. அவர் **'கசவல்லி'** என்ற அம்மை யாரை மணந்து இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வந்தார். இவருடைய தமையனாரின் பெயர் **வேதாரணியப்பிள்ளை**.

சைவப் பழமாய் விளங்கிய இவரைச் சைவ ஆதீனத்தார் அந்தத் தலத்தில் கோயிலின் அலுவலராக அமர்த்தினர். அக்காலத்தில் அவர்க்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு அவர் **சிவசிதம்பரம்** எனப் பெயரிட்டார்.

திருச்சிராப்பள்ளியை ஆண்டு வந்த நாயக்க மன்னரான முத்துக் கிருஷ்ண நாயக்கர் கேடிலியப்பபிள்ளையின் ஒழுக்க மேன்மையையும் அறிவுத் திறனையும் நேரில் கண்டார். தம் தலைமைக் கணக்கராய் அவரை அமர்த்திக் கொண்டார். அதனால் அவர் திருச்சிராப்பள்ளிக்கு வரநேர்ந்தது.

அக்காலத்தில் தம் தமையனார் வேதாரணியப் பிள்ளைக்கு பிள்ளைப் பேரின்மையால் தம் மகன் சிவசிதம் பரத்தை அவர்க்கு மகன்மையாகத் தந்தார். அதன் பின் திருச்சிராப்பள்ளி இறைவரான தாயுமானவர் அருளால்

அவர்க்கு ஓர் ஆண் மகவு தோன்றியது. அம்மகவே நம் தாயுமானவ அடிகள் ஆவார்.

தாயுமானவர் உரிய முறையில் வளர்க்கப் பெற்றார். அக்காலத்தில் அவர் சைவ நூல்களையும் மெய்கண்ட சாத்திரங்களையும், கந்தரனுபூதி, திருப்புகழ், முதலான நூல்களையும் கற்றார். அவையெல்லாம் அவர்க்கு இறைவர் அருளால் எளிதில் கற்கத் தக்கனவாய் அமைந்தன. தென் மொழியையே அன்றி வடமொழியையும் அவர் கற்று வல்ல வரானார். (அவருடைய பாடல்களில் வடமொழிச் சொற்கள் அதிகமிருப்பதை இது புலப்படுத்தும்) அவர் கற்ற கல்வி பிறவிப் பிணிப்பை அறுக்க உதவியது. தம் கல்வி கொண்டு மற்றவரை அவர் மருட்டியதில்லை.

கல்வி வளம் நிறைவு பெற்று விளங்கிய தாயுமானவரின் ஆற்றலை அக்காலத்தில் மன்னராய் விளங்கிய விசயரங்க சொக்க நாதர் அறிந்தார். தாயுமானவரின் தந்தை கேடிலியப்பப் பிள்ளை சிவபதம் அடைந்ததால் அம்மன்னர் நம் தாயுமானவரையே அத்தலைமைக் கணக்கர் பதவியில் அமர்த்தினார்.

அரசியலில் தாயுமானவர் ஈடுபட்டிருப்பினும் அவர் நாட்டமெல்லாம் இறையுணர்விலேயே இருந்தது. தாம் சந்திக்கும் எல்லாரிடமும் தத்துவ விசாரணையைச் செய்து வந்தார், அவரது ஆன்ம ஈடேற்றத்துக்குரியவாறு ஞானாசிரியர் ஒருவரின் காட்சி அவர்க்கு வாய்த்தது.

திருச்சிராப்பள்ளிக் குன்றின் படி வழியின் பக்கத்தில் 'திருசாரமா முனிவர் மடாலயம்' ஒன்றிருந்தது. அச் சாரமா முனிவர் திருமூலரின் மரபில் வந்தவர். அவரால் அம்மடம் நிறுவப் பெற்றது. அந்த மடத்தின் பதினேழாம் தலைவராக விளங்கியவர் மௌன குரு அடிகள். (அவரது பெயர் சிதம்பரநாதர் என்பதாகும்) அவரது தரிசனமே தாயுமான வர்க்குக் கிட்டியது. தம் பாடல்களில் இம்மௌன குருவையே தாயுமானவஅடிகள் போற்றிப் புகழ்ந்து பாடியுள்

ளார் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. இம்மௌன குருவே தாயுமானவர்க்குச் சிவதீட்சை அளித்தார். அதனுடன் தாயுமானவர்க்கு இருந்த ஐயங்களையும் மௌன குரு போக்கியருளினார். அவர் தாயுமானவர்க்கு விளக்கியருளிய நூல்களுள் ஒன்று 'சிவஞான சித்தியார்'. இம்மடம் பிற் காலத்தில் 'மௌன மடம்' என்ற பெயரில் விளங்கியது. இதை நிர்வாகம் செய்து வருவது தருமை ஆதீனம்.

மௌன குருவிடம் பெற்ற உபதேசத்தைப் பற்றித் தாயுமானவர் சிந்தித்து வந்தார். அங்ஙனம் அவர் சிந்தித் தவையே அவர் தம் பாடல்களின் முற்பகுதி என்பர் அறிஞர்.

தாயுமானவர் இறையருள் பெற்று நின்ற தன்மையை மன்னர் அறிந்தார். தம் பிழையை யுணர்ந்து அடிகளை நோக்கித் தம்மைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண் டார். அவர் தம் விருப்பின்படி இறை நெறியை மேற் கொண்டு ஒழுகலாம் என்று கூறினார். எனினும் தாயுமானவர் அரசியல் நெறியினின்று விடுபடவில்லை. அரசியல் அலுவலை மேற்கொண்ட வண்ணமே அருள் நெறியில் ஒழுகி வந்தார், நிருவாண தீட்சை பெற்றுத் துறவை மேற்கொள்ள வேண்டும் என்று மௌன குருவிடம் வேண்டினார். அவர் 'அதற்குச் சிறிது காலம் இல்லறத்தில் இருந்து பின் துறவை மேற் கொள்ளும்படி' பணித்தார்.

பின்னர், விசயரங்க சொக்கநாத நாயக்கர் இறையடி யைச் சேர்ந்தார். அதனால் அவருடைய மனைவி மீனாட்சி ஆட்சி பீடத்தில் அமர்ந்தார். அவர் தாயுமானவரின் அழகில் ஈடுபட்டு அவருடன் தீ நெறியில் ஒழுக முயன்றார் ஆதனால் தாயுமானவர் திருச்சிராப் பள்ளியை விட்டு வெளி யேறித் தம் சிறிய தாயாரின் மகனான 'அருளைய பிள்ளை என்பவருடன் நல்லூரில் வாழ்ந்து வந்தார், (இந்த அருளைய பிள்ளையே தாயுமானவர் மீது அகவல் பாடியுள்ளார் இதனை இந்நூலின் இறுதியில் காண்க.)

பின்பு விராலிமலையில் அந்த இருவரும் தங்கியிருந்தனர். சித்தர்களின் தொடர்பு அங்குத்தான் தாயுமானவர்க்குக் கிட்டிற்று பல நாட்கள் அங்குத் தங்கிய பின்பு இராமேசுவரத்தை அடைந்தனர். இராமேசுவரத்துக்குத் 'தேவை' என்ற பெயர் உண்டு. அங்குள்ள அம்மை மீது பாடப்பட்டதே 'மலைவளர் காதலி' பதிகம். இப்பதிகத்தை இந்நூலில் பிற் பகுதியில் காண்க. கபிலை நகரின்கண் வீற்றிருக்கும் பெரிய நாயகி மீது பாடல் பாடியதை 38 ஆம் அத்தியாயமாய்க் காண்க.

அங்குத் தாயுமானவர் ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார். அங்கு மழை இல்லாதிருந்தது. எனவே தாயுமானவர் ஒரு வெண்பாவைப் பாடினார். அவ்வெண்பா வருமாறு :

'சைவ சமயம்' சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறை சூடும் தெய்வமெனில்— ஐவரை வென்று
ஆனந்த இன்பில் அழுந்துவது முத்தி எனில்
வானங்காண் பெய்ம்மின் மழை'

இதனை அவர் பாடியபின் நாடு மலிய மழை பொழிந்தது. இந்த அற்புதத்தை அறிந்த மக்கள் வியப்பு அடைந்து அவர்க்குத் தொண்டுகளைச் செய்து வரலாயினர்.

அவர் நிகழ்த்திய அற்புதத்தை அறிந்தவருள் ஒருவர், அவருடைய தமையனாரான சிவசிதம்பரம் பிள்ளை. அவர் தாயுமானவரிடம் வந்து மணம் செய்து கொள்ள வேண்டினார். தம் குருவின் ஆணையும் அருளும அதுவேயாதலால் மணம் செய்து கொள்ள இசைந்தார்.

அவர்க்கு 'மட்டுவார் குழலி' என்ற கற்புச் செல்வியை மணம் முடித்து வைத்தனர். இல்லறத்தை மேற்கொண்ட அவர்க்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு அவர் 'கனக சபாபதி' என்ற திருப்பெயரைச் சூட்டினார்.

சில ஆண்டுகளே இல்லறத்தில் ஒழுகினார் அடிகள். பின்பு மட்டுவார் குழலியம்மையார் மறைந்தருளினார் அதனால் தம் மகனைத் தமையனாரிடம் ஒப்படைத்து விட்டுத் திருச்சிராப் பள்ளியை அடைந்தார். தம் ஞானாசிரியரை அடைந்து தமக்கு நிருவாண தீட்சை அளிக்கும்படி வேண்டிக் கொண்டார். தாயுமானவரின் பக்குவமுற்ற நிலையைக் கண்ட மௌன குரு துறவுநிலையை யும் ஞான உபதேசத்தையும் அருளினார். தம் குருவின் அடியிலே இருந்த வண்ணமே ஞான நிட்டையைப் பயின்று வந்தார். திருச்சிராப்பள்ளியில் உள்ள தட்சணாமூர்த்தி திருமுன்பு நிட்டை பயிலும் இடமாய் அமைந்தது. அக்காலத்தில் அவருடன் இருந்து வந்தவர் அருளையர் ஆவார்.

தலங்கள் பலவற்றுக்கும் சென்று ஆங்காங்குள்ள இறைவனை வணங்க வேண்டும் என்ற எண்ணம் அடிகளுக்கு ஏற்பட்டது, தன் ஞானாசிரியரிடம் இசைவு பெற்றுப் பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டார். இறுதியில் இராமநாதபுரத்தை அடைந்தார். அந்த நகரத்தில் 'காட்டூரணி' என்ற இடத்தில் புளியமரம் ஒன்றின்கீழ் நிட்டையில் அமர்ந்திருந்தார்.

தாயுமானவர் அங்குத் தங்கியிருந்த இடத்தில் ஓர் அம்மையார் சோலையும் நீர் நிலையும் ஏற்படுத்தினார். அந்த இடம் 'இலட்சுமிபுரம்' என்று இப்போது வழங்கு கின்றது.

அங்கே அடிகள் நிட்டையில் கூடியிருந்தார் பல நாட்கள். அதைக் கண்ட பலர் அவர் இறந்துவிட்டதாக நினைத்துத் தீமூட்டிவிட்டனர். கண் விழித்த அடிகள் நிகழ்ந்ததை அறிந்தார், உடலைக் காக்க முனையாது இறையடியைச் சேர்ந்தார். இது செவி வழி வழங்கிவரும் செய்தியாகும்.

இது நிகழ்ந்தது சாலிவாகன சகாப்தம் சுபகிருது ஆண்டு தை மாதம் திங்கட்கிழமை விசாக நட்சத்திரம் பௌர்ணமியில் (கி.பி, 1659 இல்)என்பர். எனவே அடிகளாரின் காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு ஆகும். தாயுமானவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 1452.

அடிகள் அங்கு இருந்தபோது அருளையர்க்கும் கோடிக்கரை ஞானியாருக்கும் ஞான உபதேசம் செய்தார். அடிகள் மறைந்தபோது அருளையர், கோடிக்கரை ஞானிகள், அபியுக்தர் முதலியவர் மனமுருகித் துதித்துப் பாடல்களைப் பாடினர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தாயுமானவரின் திருப் பாடல்கள்

1. திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1. சிவத்தின் இயல்பு

அங்கிங் கெனாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாம்
தம்தெய்வம் எம்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழங்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது அது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன எலாம் மோன உருவெளிய தாகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம்.

(திருவருள் என்பது ஞானவடிவான அருள்சத்தி. பரசிவம் என்பது இன்பவடிவினனான இறைவன்.

எனவே அம்மையப்பரான இறைவர்க்கு வணக்கம் என்பது பொருள். இது முதல் மூன்று செய்யுட்கள் இவ்வணக்கத்தைக் கூறும்.)

1. பல அண்டங்களுள் தொலைவில்உள்ளது அருகில் உள்ளது எனச் சுட்டிக் கூறாதபடி எங்கும் பேரொளியாக முழுநிறை இன்பமாய்த் தன் அறிவாற்றலுடன் பிரிவின்றி நிறைவாக விளங்கி நிற்பது எந்தப் பொருள்?

தன்னுடைய அருளான வெளியிலே எல்லா வுலகங்களும் நிலைத்திருக்கும்படி விருப்பம் வைத்து உயிர்களுக்குள் உணர்வுகளாய் விரிந்திருப்பது எந்தப்பொருள்?

உள்ளத்தால் நினைப்பதற்கும் சொல்லால் உரைத் தற்கும் எட்டாமல் அப்பாற்பட்டு நிலை பெற்றுள்ளது எந்தப் பொருள்?

பலவகைப்பட்ட சமயங்களும் 'தம்முடைய தெய்வம்' என்றும் 'எம்முடைய தெய்வம்' என்றும் எல்லாவிடங்களி லும் தொடர்ந்து விடாது பற்றி நேர் நின்று வாதிட்டுக் கொள்ளும்படியும் அவ்வவர் இறையாக நின்றது எந்தப் பொருள்?

இங்ஙனம் எங்கும் முடிவைப் பெறாத பெருவழக்காகி எத்தொழிலும் வல்ல ஒப்பற்ற அறிவு வடிவாகிப் பேரின்ப வடிவாய் எக்காலத்தும் நிலையாய் உள்ளது எந்தப் பொருள்?

பின்னும் இரவு பகல் அல்லாது நின்ற ஓரிடத்தை உடையது எந்தப் பொருள்?

அந்தப் பொருளே அனைவருடைய கருத்திற்கும் ஒத்தது. ஆகவே அந்தப் பொருளேயான சிவபெருமானைக் காணப்படுகின்ற பூதங்களும் அவற்றின் தொடர்புகளாகவும் மௌன வடிவான வெளியீடாகவும் எண்ணி யாம் கை குவித்து வணங்குவோம்.

(திருமூல நாயனாரின் வழியில் வந்த தம் ஞானாசிரியரான மௌன குருவைத் தாயுமானவர் இதில் வணங்கினார் எனவும் கூறுப.)

2. அருளின் பெருமை

ஊர் அனந் தம் பெற்ற பேர் அனந் தம் சுற்றும்
உறவனந் தம் வினையினால்
உடல் அனந் தம் செயும் வினை அனந் தம் கருத்
தோ அனந் தம் பெற்றபேர்
சீர்அனந் தம் சொர்க்க நரகமும் அனந்தம் நல்
தெய்வமும் அனந்தபேதம்
திகழ்கின்ற சமயமும் அனந்தம் அதனால் ஞான
சிற்சத்தியால் உணர்ந்து
கார் அனந் தம்கோடி வருடித்த தென அன்பர்
கண்ணும்விண் ணும் தேக்கவே
கருதரிய ஆனந்த மழை பொழியும் முகிலை நம்
கடவுளைத் துரியவடிவைப்
பேர்அனந் தம்பேசி மறைஅனந் தம்சொலும்
பெரியமவு னத்தின்வைப்பைப்
பேசரும் அனந்தபத ஞானஆ னந்தமாம்
பெரியபொரு ளைப்பணிகுவாம்.

2. பிறந்த ஊர்களோ அளவு இல்லாதவை. பல வகைப்பட்ட பிறவிகள் தோறும் பெற்றிருந்த பேர்களோ அளவு இல்லாதவை. சூழ்ந்திருந்த உறவுகளோ அளவு இல்லாதவை. இருவினைகளின் வேறுபாடுகளினால் உண்டனே உடல்களோ அளவு இல்லாதவை, பெற்ற அந்த உடல்களால் செய்யும் தொழில்களோ அளவு இல்லாதவை, எண்ணிய எண்ணங்களோ அளவு இல்லாதவை. பெற்ற பெரிய சிறப்புகளோ அளவு இல்லாதவை. துறக்கமும் (சொர்க்கமும்) நரகமும் அளவு இல்லாதவை. நல்ல

தெய்வங்களும் அளவில்லாத வேறுபாடுகளுள் கூடியவை. விளங்கும் சமயங்களும் அளவு இல்லாதவை.

எனவே, ஞானமே திருமேனியான பராசக்தி அருளால் அறிந்து கொண்டு பல கோடி மேகங்கள் மழை பெய்தாற் போல், அடியவரின் கண்களும் இதயங்களும் நிறையும்படி, நினைத்தற்கு இயலாத இன்ப மழையைப் பெய்யும் மேகத்தை, நம் இறைவனை, நாலாம் நிலையான துரிய உருவை, அளவில்லாப் பெயர்களை எடுத்துக் கூறி எண்ணற்ற வேதங்கள் புகழ்ந்து பேசுகின்ற பெரிய மௌனமான புதையலை, சொல்வதற்கரிய அளவில்லாத பதமும் பேரறிவும் பேரின்பமும் ஆகிய பெரிய பொருளை (பரசிவத்தை) யாம் வணங்குவோம்.

3. பராசக்தியின் இயல்பு

அத்துவித வத்துவைச் சொற்ப்ரகா சத்தனியை
அருமறைகள் முரசறையவே
அறிவினுக் கறிவாகி ஆனந்த மயமான
ஆதியை அனாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தம்பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வ்யோமநிலையை,
நித்தநின் மலசகித நிட்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விடய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தம்அறி யாதபடி சித்தத்தில் நின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலிசெய்வாம்.

3, இரண்டு என்ற தன்மை இல்லாத பொருளை, மந்திரத்தையே தன் திருமேனியாகக் கொண்ட ஒன்றினை, அரிய மறைகள் பலரும் அறியும்படி ஒலிக்க உயிருக்கு உயிராகிப் பேரின்ப மயமான முதன்மையான பொருளை, பழைய ஒப்பற்ற உண்மை வடிவை, மதத்தொடர்பு இல்லாத தான, நிலை பெற்றதும் நிறைவுள்ளதும், தனக்குப் புகலிடம் வேண்டாததும், தான் புகலிடமாய் உள்ளதும், அமைதியுடையதுமாய் உள்ள அப்பெரு வெளியை, இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய தன்மையுடன் கூடிய சிறந்த பொருளை, புலன்களில் பற்றுக்கள் சிறிதும் இல்லாத தூய்மையுடையதை, விகாரம் இல்லாமையைப் பொதுவாய் நிலைபெற்று விளங்கும் நிரஞ்சமான நிராமயப் பொருளை, கருத்தறியாத வகையில் கருத்தில் நின்று ஒளிர்கின்ற மேலான பேரொளிப் பிழம்பை, அறிவுப் பெருவெளிக்குள் முழு நிறைவடிவாய்த் தானே முழு முதலான தெய்வத்தைக் கைகூப்பித் தொழுவோம்.

(சாலம்பரகிதம் - ஆரம்பம் இல்லாதது. புட்கலம் - நிறைவு. நிராம்பலம் - ஆகரவு வேண்டாதது. ஆலம்பம்- அடைக்கலமாகும் இடம். வியோமம் - வெளி. நிஷ்ப்ர பஞ்சப் பொருள் - உலகைக் கடந்த பொருள். நிரஞ்சனம்- இருள் இல்லாமை. நிராமயம் - நோய் இல்லாமை)

2. பரிபூரணானந்தம்

[இறைவன் முழுநிறைவான பேரின்ப வடிவாய் விளங்குபவன் என்பதை இப்பகுதியில் அடிகள் விளக்குவார். இப் பகுதியுள் உள்ள பாடல்கள் பத்து.]

4. நிட்டையை அருள்வாய்

வாசாக யிங்கரியம் அன்றி ஒரு சாதனம்
மனோவாயு நிற்கும்வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேன் துறவு

மார்க்கத்தின் இச்சைபோல
நேசானு சாரியாய் விவகரிப் பேன் அந்த
நினைவையும் மறந்தபோது
நித்திரைகொள் வேன் தேகம் நீங்கும் என
நெஞ்சம் துடித்தயருவேன் [எண்ணிலோ
பேசாத ஆனந்த நிட்டைக்கும் அறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
போய்க்குணம் அறிந்திந்த நாய்க்கும்ஒரு வழிபெரிய
பேரின்ப நிட்டையருள்வாய்
பாசா டவிக்குள்ளே செல்லா தவர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

4. ஆசை என்ற காட்டுக்குள் சென்று புகாதவர்க்கு அருட் கனி பழுத்துத் தேன் ஒழுகப் பெற்று விளங்கும் கற்பக மரமே! பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் இல்லாது நிறைந்து விளங்கும் முழுநிறைவான பேரின்பப் பொருளே!

இறைவனின் புகழைத் தொடர்ந்து கூறும் தொண் டினையே அல்லாது மனமும் வாயும் அடங்கும் வண்ணம் ஒரு பயிற்சியை இடைவிடாத பழக்கமாக நான் கொண்டு அறியேன்.

துறவு நெறியில் விருப்பம் உடையவன் போன்று மற்றவர் மயங்கும் வகையில் பொருத்தமாக எடுத்துச் சொல் வேன். அத்தகைய நினைவையும் மறந்தபோது உறக்கம் கொள்வேன்.

என் உடலானது நீங்கும்' என்று எண்ணினாலோ மனம் துடித்துத் தளர்ச்சி அடைவேன்.

இத்தகையது என்று கூற இயலாத பேரின்பமான நிட்டைக்கும் அறிவு சிறிதும் இல்லாத பேதையேனுக்கும்

நெடுந்தொலைவு, என்றாலும் என் பேய் போன்ற அறியாமைக் குணத்தை அறிந்து, நாய் போன்ற இந்தக் கடையேனுக்கும், ஒப்பற்ற நல்ல 'நெறியான பேரின்பத்தை அளிக்கும் நிட்டையை அருள்வாயாக!

[வாசாகயிங்கரியம் — வாய்த் தொண்டு. வாலாயம் — பழக்கம். அனுசாரி — இணக்கம்.]

5. என் பரிபாக காலம்

தெளிவாக ஊர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பனமுதல்
தேதங்க ளத்தனையும் மோகங்கொள் பௌதிகம்
சென்மித்த வாங்கிறக்கும்
விரிவாய பூதங்கள் ஒன்றோடொன் றாய்அழியும்
மேற்கொண்ட சேடமதுவே
வெறுவெளி நிராலம்பம் நிறைசூன்யம் உபசாந்தம்
வேதவே தாந்தஞானம்
பிரியாத பேரொளி பிறக்கின்ற அருள் அருள்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமை என்றைக்கும் இறவாமை யாய்வந்து
பேசாமை யாகுமெனவே
பரிவாய் எனக்குநீ அறிவிக்க வந்ததே
பரிபாக காலமலவோ
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

5. பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் இல்லாமல் நிறைந்து விளங்கும் முழுநிறைவான இன்பமே! அறிவுடன் தவழ்வனவும் நடப்பனவும் பறப்பனவும் தொழிலை மேற்கொண்டனவும் முதலான மாயாகாரிய உடல்கள் அனைத்தும் மயக்கத்தை உடைய பூதத் தொடர்பாய் உரைக்கப்பட்டுத் தோன்றியபடியே அழிந்து போகும். பரவிய

ஐந்து பூதங்களும் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிவிடும். இவற்றுக்கெல்லாம் மேம்பட்டிருக்கின்ற எக்காலத்தும் அழியாது எஞ்சியுள்ள பொருளே அறிவுப் பெருவெளி; ஆதரவு இல்லாதது; பெரும் பாழ்; வெறுப்பு விருப்பு இன்மையை உண்டாக்கும் வேதங்களும் உபநிடதங்களும் கூறும் சிவ ஞானம்; எங்கும் நீங்காத பேரொளிப் பிழம்பில் தோன்றும் திருவருள்; அத்தகைய திருவருளைப் பெற்றவர் அடைந்த பெருமை; எக்காலத்தும் பிறவாமையும் இறவாமையும் ஆகி வந்த மோன நிலைஆகும். இத்தகையவற்றை அடியேனுக்கு அறிவுறுத்தற்காகத் தாங்கள் எழுந்தருளி வந்ததற்குக் காரணம் என் பரிபக்குவ காலம் அன்றோ?

(சென்மிக்க — தோன்றிய. சேடம் — எஞ்சி நிற்பது. நிராலம்பம் — பற்றுக் கோடு இல்லாதது. உபசாந்தம் — விருப்பு வெறுப்பு இன்மை.)

6. யாவும் நின் செயல்

ஆராயும் வேளையில் பிரமாதி யானாலும்
ஐயஒரு செயலுமில்லை
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராம்என இருந்தபேரும்
நேராக ஒருகோபம் ஒருவேளை வர அந்த
நிறைவொன்று மில்லாமலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளறு வார் வசன
நிர்வாக ரென்றபேரும்
பூராய மாய்ஒன்று பேசுமிடம் ஒன்றைப்
புலம்புவார் சிவராத்திரிப்
போதுதுயி லோம்என்ற விரதியரும் அறிதுயிற்
போலே யிருந்துதுயில்வார்
பாராதி தனிலுள்ள செயலெலாம் முடிவிலே
பார்க்கில்நின் செயலல்லவோ?

பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

6. நோக்கும் இடம் எல்லாம் நீக்கம் இல்லாது நிறைந்து விளங்கும் முழுநிறைவான பேரின்பப் பொருளே!

ஐய, நன்கு ஆராய்ந்து பார்க்கும் வேளையில் நான் முகன் முதலான தேவர்களுக்கும் தமக்கு என ஒரு செயலும் இல்லை!

அமைதியுடனே பேசாமை என்ற பெருமை கூடிய குணத் தில் திங்களைப் போன்றவர் இவர் என்று எல்லாரும் கூறும் படியாய் விளங்கியிருந்தவர்களும் வெளிப்படையாய் ஒரு சமயம் சினம் தோன்றுமானால், தாம் மேற் கொண்டிருந்த அந்த அமைதி சிறிதும் இல்லாது பெருமூச்சுவிட்டு நிலை தவறிச் சொல் தவறி உளறுவர், பேச்சாற்றலில் வல்லவர் என்ற பேரும் ஆராய்ச்சியுடன் ஒன்றைப் பேசும் காலத்தில் தாம் சொல்ல வேண்டியதை விடுத்து வேறொன்றினைப் பேசுவர்.

சிவராத்திரியில் கண்மூடி உறங்க மாட்டோம் என்ற விரதம் பூண்டவரும் அறிவுடன் கூடிய நித்திரை போல் தம்மையறியாது இருந்து உறங்குவர்.

எனவே, பூமி முதலான இடங்களில் எல்லாம் நிகழும் செயல்கள் எல்லாம் முடிவாய் ஆராய்ந்து பார்க்கும் போது இறைவ, நும் செயலாக விளங்குவனவே அல்லாமல் வேறும் உள்ளனவோ?

(வசன நிர் வாகர் — பேச்சில் வல்லவர். பூராயம் — ஆராய்ச்சி. பாராதி — பூமி முதலியவை.)

7. கன்மத்தின் இயல்பு

அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே
அம்மாயை இல்லாமையே

யாமென்னும் அறிவுமுண் டப்பாலும் அறிகின்ற
அறிவினை அறிந்து பார்க்கின்
எண்டிசை விளக்கும்ஒரு தெய்வ அரு ளல்லாமல்
இல்லையெனும் நினைவுமுண் டிங்கு
யானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே
இன்பமெனும் அன்புமுண்டு
கண்டன எலாம்அல்ல என்றுகண் டனைசெய்து
கருவிகர ணங்கள்ஓயக்
கண்மூடி ஒருகண மிருக்கஎன் றால்பாழ்த்த
கன்மங்கள் போராடுதே
பண்டையுள் கன்மமே கர்த்தா எனும்பெயர்ப்
பட்சம்நான் இச்சிப்பனோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே;

7. இவ்வுலகமும் வெளியுலகங்களும் மாயையின் காரியங்களாகும். அந்த மாயையானது காரியப்பாட்டினால், அஃது இல்லாமை போன்று தோன்றுவதான அறிவும் உண்டாகும். அதற்கு மேலும் உணரும் உணர்ச்சியை உணர்ந்து பார்க்குமிடத்து எட்டுத் திக்குகளையும் விளங்கச் செய்கின்ற ஒப்பற்ற முழுப்பரம்பொருளின் அருள் இல்லாமல் மாயாகாரியம் இல்லை என்னும் எண்ணமும் உண்டு.

இங்கு யான் என்னும் அகப்பற்றும் எனது என்ற புறப் பற்றும் என்ற செருக்குகள் நீங்கும்படி நாலாம் நிலையான துரியத்தின் அருளால் நிலைத்து நிற்பதே அல்லாமல், இன்பம் என்று சொல்லப்படுவதன் வித்தான அன்பும் உண்டு.

காணப்படும் பொருள்கள் எல்லாம் நிலையானவை அல்ல என்று கண்டித்துக் கருவிகளும் கரணங்களும் ஒடுங்குமாறு ஒரு நொடிப்பொழுது கண்மூடி யோகத்தில் இருப் போம் என்றால், பாழான கன்மங்கள் இடையூறாய்ப் போர் செய்கின்றனவே! முன்னமே அமைந்துள்ள கன்ம

வினைகளே வினை முதலான கருத்தா என்கின்ற பெயர் கொள்ளும்படி நேசம் வைத்து அவற்றை விரும்புவேனோ;

(அண்டம் — உலகம்; பகிரண்டம் — வெளியுலகம்! உயிரின் அன்பை ஏற்று இறைவன் இன்பம் அளிக்கின்றதால் அன்பின் விளைவே இன்பம்.)

8. மெய்ஞ்ஞானம் உண்டாக வேண்டும்

சந்ததமும் எனதுசெயல் நினது செயல் யானெனுந்
தன்மைநினை யன்றிஇல்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே
இந்தநிலை தெளியநான் நெக்குருகி வாடிய
இயற்கைதிரு வுள்மறியுமே
இந்நிலையி லேசற் றிருக்கஎன் றால்மடமை
இதசத்ரு வாகவந்து
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மம்
திருப்புமோ தொடுவழக்காய்ச்
சென்மம்வரு மோஎனவும் யோசிக்கு தேமனது
சிரத்தையெனும் வாளுமுதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமும் தந்தெனைப்
பாதுகாத் தருள்செய்குவாய்;
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

8. பார்க்கும் இடம் எல்லாம் நீக்கம் இன்றி நிறைந்திருக்கும் முழுமையான நிறைந்த பேரின்பமே! எப்போதும் என் செயல் நின் செயலே ஆகும். நான் என்ற தன்மை உன்னை யல்லாது இல்லாமையால் யான் நினக்கு வேறானவனும் இல்லை. மறையின் முடிவும் ஆகமங்களும் ஒன்றுபடும்

நிலை இதுவேயாகும். இந்த அரிய நிலைமையை அறிந்து கொள்ள நான் மனம் உருகி வாட்டம் அடைந்த இயல்பை உன் திருவுருவம் அறிந்திருக்குமே! இத்தகைய அருமையான நிலையிலே உள்ளத்தை ஒடுக்கிச்சற்று இருக்கலாம் என்றால், அறியாமையானது நன்மை செய்யும் பகைவனைப் போல் வந்து என் மனத்தில் குடி கொள்கின்றதே! 'மலம் மாயை கன்மங்கள் திரும்ப வந்து என்னைப் பற்றுமோ?' என்றும், 'தொடர் வழக்கமாய்ப் பிறவி உண்டாகுமோ!' என்றும் என் உள்ளம் எண்ணுகின்றது! சிரத்தை என்று சொல்லப் பட்ட வாளையும், பிறவியின் வேர் நீங்குமாறு நின் திருவடி உணர்வான சிவஞானம் என்ற உள்ளத்தின் வன்மையையும் தந்து என்னைக் காத்தருளுவாய்!

(சிந்தை — இறைநூல் நம்பிக்கை.)

9. வாதிடுவார் வாதங்கள்

பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்
பொறிபுலன் அடங்குமிடமே
பொருளென்பர் சிலர் கரண முடிவென்பர் சிலர்குணம்
போனஇட மென்பர் சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
நட்டநடு வேஇருந்த
நாமென்பர் சிலர் உருவமா மென்பர்சிலர் கருதி
நாடிலரு வென்பர் சிலபேர்
பேதமற உயிர்கெட்ட நிலையமென் றிடுவர்சிலர்
பேசில்அரு ளென்பர்சிலபேர்
பின்னுமுன் னும்கெட்ட சூனியம தென்பர்சிலர்
பிறவுமே மொழிவர் இவையால்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலால்
பரமசுக நிட்டை பெறுமோ;
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

9. சிலர் மண் விண் முதலிய ஐந்து பூதங்களும் ஒடுங்குவதற்கு முதற்காரணமான மாயையினையே முதற்பொருள் என்பர். சிலர் ஐம்பொறிகளால் கவரப்படும் நுகர் பொருள் ஐந்தும் ஒடுங்கும் இடமே முதற்பொருள் என்பர். சிலர் அந்தக் கரணம் ஒடுங்கும் இடமே முதற்பொருள் என்பர். சிலர் மூன்று குணங்களும் ஒடுங்கும் இடமே முதற்பொருள் என்பர். சிலர் நாத வடிவமே முதற்பொருள் என்பர். சிலர் விந்துவின் வடிவமே முதற்பொருள் என்பர். சிலர் நடுவில் இருக்கும் ஆன்மாவான நாமே முதற்பொருள் என்பர். சிலர் உருவப் பொருளே முதற் பொருள் என்பர், சிலர் நன்றாக எண்ணி ஆராயுமிடத்து அருவப் பொருளே முதற் பொருள் என்பர். சிலர் வேற்றுமை நீங்க உயிர் உணர்வான சிற்றறிவு நீங்கிய இடமே முதற்பொருள் என்பர். சிலர் சொல்லுமிடத்துத் திருவளே முதற்பொருள் என்பர். சிலர் முடிவும் முதலும் இல்லாத சூனியமே முதற்பொருள் என்பர். சிலர் வேறு நிலைகளையும் முதற்பொருள் என்பர்,

இவற்றால் என் மனம் பாதரசம் போன்று ஒருநிலைப் படாது சலித்தலை அடையுமேயல்லாது மேலான இன்பத்தை அளிக்கும் நிட்டையினை அடையுமோ?

10. யாரை நோவேன்

அந்தகா ரத்தையோர் அகமாக்கி மின்போல்என்
அறிவைச் சுருக்கினவரார்
அவ்வறிவு தானுமே பற்றினது பற்றாய்
அழுந்தவும் தலைமீதிலே
சொந்தமாய் எழுதிப் படித்ததார் மெய்ஞ்ஞான
சுகநிட்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவும் உண்டுண்டு
தூங்கவைத் தவரார் கொலோ

தந்தைதாய் முதலான அகிலப்ர பஞ்சம்
 தனைத்தந்த தெனதாசையோ
தன்னையே நோவனோ பிறரையே நோவனோ
 தற்கால மதைநோவனோ
பந்தமா னதுதந்த வினையையே நோவனோ
 பரமார்த்தம் ஏதும் அறியேன்,
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
 பரிபூர ணானந்தமே!

10. பார்க்கும் இடம் எவ்லாம் சிறிதும் நீக்கம் இல்லாமல் நிறைந்திருக்கின்ற முழு நிறைவான பேரின்பமே!

அறியாமை என்ற இருளை ஓர் இல்லமாய் ஆக்கி மின் னலைப் போல என் அறிவைச் சுருக்கியவர் எவர்? அந்த அறிவும் தான் பிடித்ததையே ஆதாரமாகக் கொண்டு அதில் மூழ்கவும் என் தலையில் உரிமையுடன் எழுதி வைப்பதற்குக் கற்றவர் யார்? உண்மையான ஞான இன்பத்துக்குக் காரண மான நிட்டையினைப் பொருந்தாமல் சோற்றை அடைத்து வைத்த துருத்தியைப் போன்ற வுடலை நிலையானது என எண்ணியும் பல முறை உண்டதையே உண்டு உறங்கும் செயலைச் செய்வித்தவர் எவர்?

தாய் தந்தை முதலான உலகம் முழுவதையும் உண்டாக் கியதற்குக் காரணம் அடியேனின் விருப்பமோ? நானே என்னை நொந்து கொளவேனோ? அல்லது அயலாரை நொந்து கொள்வேனோ? பிறவித் தளையை உண்டாக்கிய முன்னைய வினைகளை நொந்து கொள்வேனோ? மேலான மெய்ப் பொருள் சிறிதும் அறிந்திலேன்!

11. மோனநிலை எய்தவேண்டும்

வாராதெ லாம்ஒழிய வருவன எலாம் எய்த
 மனதுசாட் சியதாகவே
மருவநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த

மரபுசம ரசமாகவே
பூராய மாய்உணர ஊகமது தந்ததும்
பொய்யுடலை நிலையன்றெனப்
போதநெறி தந்ததும் சாசுவத ஆனந்த
போகமே வீடென்னவே
நீராள மாய்உருக உள்ளன்பு தந்ததும்
நின்னதருள் இன்னுமின்னும்
நின்னையே துணைஎன்ற என்னையே காக்கஒரு
நினைவுசற் றுண்டாகிலோ
பாராதி அறியாத மோனமே இடைவிடாப்
பற்றாக நிற்க அருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

11. பார்க்கின்ற இடங்களில்எல்லாம் நீக்கம் இல்லாமல் நிறைந்து விளங்கும் முழுமையான இன்ப வடிவே!

வாராதவை எல்லாம் ஒழிக. வருபவை எல்லாம் வந்து சேர்க, என் உள்ளமானது நடுநிலையான சான்றாய் நின்று பொருந்தும் நிலையைத் தந்ததும் வேதாந்தமும் சித்தாந்தமும் சமமாய் அமைய, இன்றியமையாது அறியும்படி உய்த்துணரத்தக்க அறிவை எழுப்பியருளியதும், இந்தப் பொய்யான உடலை என்றும் நிலைத்திருப்பது அன்று என்று முடிவு செய்ய ஞான நெறியை அருளியதும், என்றும் அழியாத பேரின்பப் பெரு நுகர்வே வீடுபேறு என்று நீரின் இயல்பைப் போல் உருகும்படி உள்ளன்பை அளித்ததும் நின் திருவருளே ஆகும்.

மேலும் மேலும் நின்னையே துணையாய்ப் பற்றிய என்னைப் பாதுகாக்க ஒப்பற்ற திருவுளம் நினக்குச் சிறிது உண்டாகுமாயின், நிலம் முதல் நாதம் இறுதியான தத்துவங்களால் அறியப்படாத மோன நிலையே இடையறாத பற்றுக் கோடாகக் கொண்டு நான் அத்தகைய நிலையில் தவறாது நிற்கும்படி அருளுவாய்!

(பூராயமாய் — இன்றியமையாததாய்)

12. என் மனம் ஒடுங்க அருள்வாய்

ஆழாழி கரையின்றி நிற்கஇலையோ கொடிய
ஆலமமு தாகஇலையோ
அக்கடலின் மீதுவட வனல்நிற்க இல்லையோ
அந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்க இல்லையோ மேருவும்
தனுவாக வளைய இலையோ
சத்தமே கங்களும் வச்ரதரன் ஆணையின்
சஞ்சரித் திட இல்லையோ
வாழாது வாழவே இராமனடி யால்சிலையும்
மடமங்கை யாகஇலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்கஇலையோ
பாழான என்மனம் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

12. பார்க்கின்ற இடம் எல்லாம் நீக்கம் என்பது இல்லாது நிறைந்திருக்கின்ற முழு நிறைவான பேரின்பமே!

மிக ஆழமான கடலானது கரை என்பது இல்லாமலேயே தன் எல்லையைக் கடவாமல் நிற்க வில்லையோ! கொடிய ஆலகால நஞ்சானது, சிவபெருமானே, நினக்கு உணவாக ஆகவில்லையோ? கடலின் நடுவே வடவைக் கனல் என்ற தீயானது அவியாது நிற்க வில்லையோ? வானின் நடுவே பல உலகங்களும் ஒன்றுக்கு ஒன்று ஏற்றத் தாழ்வு இல்லாமல் நிலைமாறாமல் நிற்க வில்லையோ! மேருமலை ஒரு காலத்தில் வளைந்து நின் கைக்கு வில்லாய் அமைய வில்லையோ! ஏழுவகையான மேகங்களும் வச்சிரப் படையை யுடைய இந்திரன் ஆணையினால் தக்க காலத்தில் மழை

பொழிந்து வானத்தில் உலவவில்லையா? புகழுடன் வாழும் படி இராமனின் அடியால் கல்லும் அகலிகை என்ற இளம் பெண்ணாய் ஆகவில்லையோ? உருத்திராக்கம் மந்திரம் (திருவைந்தெழுத்து) முதலானவையால் அவரவர் விரும்பும் சித்திகள் இந்த வுலகத்தில் நிலை பெறுமாறு வைக்க வில்லையோ? பாழான என் உள்ளம் உள்முகப்பட்டு ஒடுங்கி நின் திருவடியில் குவியும்படி ஓர் உபாயத்தைச் செய்வது, எல்லாம் வல்ல நின் திருவருட்கு அரியதாகுமா?

13. ஆசைக்கு அளவில்லை

ஆசைக்கொர் அளவில்லை அகிலமெல் லாம்கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேஇனும் காயகற் பம்தேடி
நெஞ்சுபுண் ணாவார் எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதுமாக முடியும்
உள்ளதே போதும்நான் நான் எனக் குளறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே!

'13. பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் இல்லாது நிறைந்து விளங்கும் முழு நிறைவான பேரின்பமே! அவா விற்கு ஓர் எல்லை இல்லை! உலகங்கள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்யினும் அங்ஙனம்

ஆளும் மன்னர் 'கடலின் மீதும் தன் ஆணை செல்ல வேண்டும்' என்றே எண்ணுவர். குபேரனைப் போன்று அழகிய பொருளை மிகுதியாய்ச் சேர்த்து வைத்துக் கொண் டிருப்பவரும் செம்பு முதலான தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் இயல்புடைய இரசவாத வித்தையைச் செய்ய விரும்பித் திரிவர்.

நீண்ட காலம் இந்த வுலகத்தில் இருந்து இன்பத்தை அனுபவித்து வாழ்ந்த வரும் மேலும் இவ்வுலகத்தில் நிலைத்து வாழ்வதன் பொருட்டு அதற்குரிய 'காயகற்பம்' என்ற மருந்தைத் தேடி மனம் உடைந்து வருந்துவர்.

இவை எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கும்போது வயிற்றுப் பசி நீங்கச் சோறு என்ற மருந்து உண்ணுதலும் காம நோய் தீரச் சிற்றின்பம் அனுபவித்தலும், உடல் இளைப்பு நீங்க அயர்ந்து உறங்குதலும் என்ற இவ்வளவி லேயே முடியும்.

ஆகவே, உள்ளதே போதும், 'நான் நான்' என்று அகங் காரம் கொண்டு புலம்பி ஒன்றை விட்டு ஒன்றைத் தொட்டு ஆசை என்ற கடலுள் விழுந்து அழுந்தாமல் மனம் அடங்கு தலான தூய அடிமை நிலையை எனக்கு அருளல் வேண்டும்.

3. பொருள் வணக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

14. பெருவெளியை வணங்குவோம்

நித்தியமாய் நின்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடராய் எல்லாம்

வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப்
சிந்தை செய்வாம். [பெருவெளியைச்

14. முக்காலத்தும் உள்ளதாய், இயல்பாகவே பாசங் கனின்று நீங்கியதாய், வடிவம் இல்லாததாய், நோய் இல்லாததாய். அன்பு செலுத்தாதவர்க்குத் தொலைவில் உள்ளதாய், அதனை உடையவர்க்கு அண்மையதாய், துரியத்தில் சுடர்ப்பிழம்பாய், எல்லாவற்றிற்கும் நிலைக் களமாய், இன்ப வடிவாகி, மன மொழிகளுக்கு எட்டாத அறிவு வடிவாய் விளங்கும் ஒப்பற்ற பொருளை —ஆனந்த தொடர்பையுடைய பெருவெளியை நாம் உள்ளத்தால் விரும்பித் தொழுவோம்!

(நிட்களம் — வடிவு இல்லாமை; நிராமயம் — நோய் இல்லாமை; சுகாரம்பம் — இன்பத் தொடக்கம்)

15. சித்தாந்தப் பேரொளியை வணங்குவோம்

யாதுமனம் நினையும் அந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி அன்பருக்கே
பேரா னந்தக்
கோதில்அமு தூற்றரும்பிக் குணம்குறியொன் றறத்
கொடுத்துக் காட்டும் [தன்னைக்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்.

15. உள்ளம் எந்தப் பொருளை நினைக்குமோ அந்த நினைவுக்கு ஏற்றவாறு நினைவாகி, எந்தப் பொருளிடத்தும் வேறுபாடு இல்லாமல் ஒன்றுபட்டு நின்று, உயிர்க்கு உயிராகி விளங்குவது பரம்பொருள். அது தன்னிடத்து

அன்பு பூண்ட அடியாரிடத்துக் குற்றம் இல்லாத பேரின்பத்தை அளிக்கின்ற அமுத ஊற்று அரும்பிச் சுரந்து அளிக்கும்; அது குணமும் பெயரும் இல்லாது நீங்கத் தன்னை அளித்து விளங்கும், அத்தகைய தீதற்ற எந்நெறிக்கும் மேலான சித்தாந்த ஒளிப் பிழம்பினை நாம் உள்ளத்தால் துதிப்போம்.

16. பரம்பொருளை வணங்குவோம்

பெருவெளியாய் ஐம்பூதப் பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வரும்இடமாய் மனமாதிக்கு எட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளால் காட்டிடவும் அன்பரைக்கோத்
கொண்டப் பாலும் [தறவிழுங்கிக்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருள் அந்தப்
சிந்தை செய்வாம். [பொருளினையாம்

16. (பரம்பொருள்) அருட்பெருவெளியானது; ஐந்து பூதங்களுக்குப் பிறப்பிடமானது; கூறுவதற்கரிய பெரிய மௌன நிலையில் வெளிப்படும் இடமானது; மனம் வாக்கு காயங்களுக்கு எட்டாத பேரின்பமானது; ஞான குரு பேரருளால் காட்டவும் அன்பர்களுடன் உறவு கொண்டு தாம் வேறு உயிர் வேறு என்ற வேறுபாடு அற விழுங்கி, அதன் மேலும் அறிவதற்கு அரிதாகக் கலந்தது. இத்தகைய இயல்புகளையுடையது எந்தப் பொருள்? அந்தப் பொருளை யாம் உள்ளத்தினால் துதிப்போம்.

17. விழிநீர் சிந்தி வணங்குவோம்

இகபரமும் உயிர்க்குயிரை யானெனதற் றவர்உறவை
எந்த நாளும்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்

துரிய வாழ்வை
அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
அமிர்தை நாடி
மொகுமொகுஎன இருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கள்
முகிழ்த்து நிற்பாம்.

17. இம்மை மறுமை இரண்டிலும் உயிர்க்கு உயிராய் நின்று, துணை செய்யும் பேருயிரை, 'யான்' என்றும் 'எனது' என்றும் எண்ணும் அகங்கார மமகாரங்களை நீக்கியவர்க்கு உறவாக இருப்பதை, எக் காலத்தும் பேரின்ப நிறைவானதும் பற்றுக்கோடு இல்லாததுமாய் உள்ளதைத், துரியத்தில் வாழ்வதை, அடியவரின் உள்ளம் மகிழும்படி வரும் தேனை, முக்கனிபோல் இனிதாய் விளங்குவதை, கற்கண்டு போன்ற சுவை பொருந்தியதை, அமுதம் போன்றதை, உள்ளத்தால் துதித்து, இரண்டு கண்களினின்றும் 'மொகு மொகு' என்று நீர்த்துளிகளைச் சிந்திக் கைமலர்களைக் குவித்து வணங்குவோம்.

18. தீமையற்ற பொருளை வணங்குவோம்

சாதி குலம் பிறப்பு இறப்புப் பந்தம் முத்தி அருவுருவுத்
தன்மை நாமம்
ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவறநின்று
இயக்கஞ் செய்யும்
சோதியை மாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம்.

18. சாதி, குலம், பிறப்பு, இறப்பு, இவற்றால் வரும் பந்தம், பந்தத்தை விலக்கும் வீடுபேறு, அருவத் தன்மை, உருவத் தன்மை, பெயர் என்னும் இவை ஏதும் இல்லாமல்,

எந்தப் பொருளிடத்தும், எங்கும் நீக்கம் இல்லாமல் நிலை பெற்று இயங்கும் சோதியைச் சிறந்த தூய்மையான அருட்பெரு வெளியை, மனம் நிறையும்படி விளங்கும் துரிய வாழ்வை, குற்றம் இல்லாத மேலான பொருளை, திருவருளையே நினைவாகக் கொண்டு உள்ளத்தால் துதிப்போம்.

19. மௌன குருவை வணங்குவோம்

இந்திரசா லம் கனவு கானலின்நீர் எனவுலகம்
எமக்குத் தோன்றச்
சந்ததமும் சிற்பரத்தால் அழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க
புந்திமகி ழுறநாளும் தடையறஆ னந்தவெள்ளம்
பொலிக என்றே
வந்தருளும் குருமௌனி மலர்த்தாளை அனுதினமும்
வழுத்தல் செய்வாம்.

19. இந்த வுலகமானது இந்திர சாலவித்தை போன்றும், கனவைப் போன்றும், கானல் நீரைப் போன்றும் எமக்குத் தோன்றுமாறு, எப்போதும் பேரறிவுடைய முழுமுதல் இறைவனை யான் சேர்ந்து வாழ்க என்றும், 'உள்ளம் மகிழும்படி எக்காலத்தும் தடையின்றி இன்ப வெள்ளமானது பெருகுக' என்றும், வந்து அருள் செய்கின்ற மௌன குருவினது தாமரை போன்ற திருவடிகளை நாள்தோறும் உள்ளத்தால் துதிப்போம்.

20. ஆனந்தப் பொருளை வணங்குவோம்

பொருளாகக் கண்டபொருள் எவைக்கும்முதற்
பொருளாகிப்
போத மாகித்

தெருளாகிக் கருதும்அன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தே னாகி
அருளானோர்க்கு அகம்புறம்என் றுன்னாத பூரணஆ
னந்த மாகி
இருள்தீர விளங்குபொருள் யாதந்தப் பொருளினையாம்
இறைஞ்சி நிற்பாம்.

20. இவ்வுலகத்தில் பொருளின் தன்மையுடையன வாய்க் காணப்படுகின்ற எல்லாவற்றுக்கும் இன்றியமையாத பொருளாகி, அறிவாகி, தெளிவாகி, தன்னை நினைக்கின்ற அடியவரின் வறுமை நீங்குமாறு அனுபவிக்க வந்த செழுந் தேனாகி, தன் அருளைப் பெற்றவர்க்கு உள் என்றும் வெளி என்றும் நிலையாமைக்குக் காரணமான நிறைந்த பேரின்ப வடிவாகி, அஞ்ஞானம் என்ற இருள் நீங்குமாறு விளங்கும் பொருள் எது? அந்தப் பொருளை யாம் வணங்கித் துதிப்போம்.

21. பெரிய பொருளை வணங்குவோம்

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா
முனிவர்சித்தர்
ஆதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணம்கற் பனைகடந்த
செல்வ மாகிக்
கருதரிய மலரின்மணம் எள்ளில்எண்ணெய் உடல்
கலந்தெந் நாளும் உயிர்போல்
துரியநடு வூடிருந்த பெரியபொருள் யாததனைத்
தொழுதல் செய்வாம்.

21. அரிய மறையின் உச்சியில் விளங்கும் பொருளாகி, வானவர், பெரு முனிவர், சித்தர் முதலியவரால் அறிந்து கொள்வதற்கு அரிய நிறைவாகி, தனக்கு ஆதியான பொருளையும் கற்பனையையும் கடந்து நின்ற செல்வமாகி,

நினைப்பதற்கு அரிய மலரின் மணம் போலாகி, எள்ளிலே உள்ள எண்ணெயைப் போலவும் உடலில் உயிர் போலவும் கலந்து நின்று எப்போதுப் துரிய பதத்தில் நடுவில் இருக்கின்ற பெரிய பொருள் எது? அந்தப் பொருளை நாம் வணங்குவோம்.

22. சாந்த அருளை வணங்குவோம்

விண்ணாதி பூதமெலாம் தன்னகத்தில் அடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்டஅன்பர் கண்ணூடே ஆனந்தக்
கடலாய் வேறொன்று
எண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளும்
இறையே உன்தன்
தண்ணாரும் சாந்த அருள் தனைநினைந்து
கரமலர்கள்
தலைமேற் கொள்வாம்.

22. வானம் முதலான பூதங்களை எல்லாம் தனக்குள் அடக்கி, வெட்ட வெளியாய் ஞானக் கண் நிறையுமாறு கண்ட அன்பர்களின் ஞானக் கண்ணில் இன்பக் கடலாகி, அந்த அன்பர் வேறு ஒன்றையும் எண்ணாதபடி அவர்களிடத்தில் உள்ளம் இரங்கி அருள் செய்கின்ற இறைவனே! நின் குளிர்ச்சிநிறைந்த அமைதியான திருவருளை நினைந்து, கைம்மலர்களை உச்சி மீது கொண்டு வணங்குவோம்!

23. பெருந்தகையே நின்னை வணங்குவோம்

விண்ணிறைந்த வெளியாய் என் மனவெளியில்
வெளியினூடும் கலந்தறிவாம்
தண்ணிறைந்த பேரமுதாய்ச் சதானந்த மானபெருந்
தகையே நின்பால்

உண்ணிறைந்த பேரன்பால் உள்ளுருகி மொழிகுழறி
உவகை யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்னருளைக்
கருத்தில் வைப்பாம்.

23. ஐந்து பூதங்களுள் ஒன்றான வானமும் அடங்குமாறு அமைந்த பெருவெளியாகி, என் உள்ளமான வெளியிலும் சேர்ந்து, என் அறிவு வெளியிலும் சேர்ந்துகூடி, குளிர்ச்சியுடைய பேரமிழ்தாய், எப்போதும் பேரின்பமாய் விளங்கும் பெருந்தகையே! நின்னிடத்தில் தனக்குள் நிறைந்த பேரன்பினால் உள்ளம் நெகிழ்ந்து உருகி, சொல் தடுமாற்றம் அடைந்து, மகிழ்ச்சியடைந்து, கண்கள் நிறைந்த நீரைப் பொழிய, கைகள் குவிய, நின் அருளை நினைவில் வைப்போம்.

24. என் உயிர்த்துணையை வணங்குவோம்

ஆதியந்தம் காட்டாத முதலாய் எம்மை
அடிமைக்கா வளர்த்தெடுத்த அன்னைபோல
நீதிபெருங் குருவாகி மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமல மாகி
வாதமிடுஞ் சமயநெறிக் கரிய தாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியை என் உயிர்த்துணையை நாடிக் கண்ணீர்
சொரியவிரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம்.

24. தோற்றமும் முடிவும் இல்லாத முதலாய் விளங்குவது எங்களைத் தன் திருத்தொண்டுக்காக வளர்த்தெடுத்த அன்னைபோல் நீதியுடைய சிவகுருவானது; மனம் மொழிகளுக்கு எட்டாத நிலையான பொருளானது; மாசு இல்லாதது; மலம் இல்லாதது.

வீணாக வாதம் செய்கின்ற சமய வாதிகளுக்கு அறிதற்கு அரிதாவது; மோன நிலை உடையவரிடத்து வெளிப்பட்டு விளங்கும் பேரறிவுப் பேரொளியாவது; என் உயிர்க்கு உற்றதுணையாய் இருப்பது. இங்ஙனம் உள்ளதைக் குறித்துக் கண்ணீர் சொரிய இரண்டு கைகளையும் குவித்து வணங்குவோம்.

25. பேரன்புடன் பசுபதியை வணங்குவோம்

அகரவுயிர் எழுந்தனைத் து மாகி வேறாய்
அமர்ந்ததென அகிலாண்டம் அனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி அல்ல வாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாம்
தோயாத அறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்.

25. 'அ' என்ற உயிர் எழுத்தானது, எல்லா எழுத்துகளும் தானே ஆகி அவற்றிற்கு வேறாகவும் ஆகி நிற்கும்; அவ்வாறு நிற்பது போல் இறைவன் எல்லா வுலகங்களும் தானே ஆகி; உலகத்தாரால் சொல்லப்படும் எல்லாப் பொருள்களுமாகி, அவை அல்லாதவையும் ஆகி எல்லாப் பொருள்களுக்கும் மேலான பொருள் ஆகி விளங்குகின்றான். சொல்வதற்கு அரிய தன்மை உடையதாகி, குற்றம் இல்லாத கொள்கைகளில் உள்ள வேறுபாடுகள் அனைத்திலும் பற்றாத முதறிவாகி, தூய்மையாகி, ஒப்பற்ற உயிர்களுக்குத் தலைமையாய் உள்ளான்; இத்தகைய இயல்புடைய பொருளான இறைவனை இடைவிடாது எண்ணிப் பெருமூச்சு விட்டு மிக்க அன்புடனே நாம் வணங்குவோம்.

4. சின்மயானந்த குரு

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

26. எனக்கும் அருள்வாயோ?

அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினால் உருகிவிழிநீர்
ஆறாக ஆராத முத்தியின தாவேச
ஆசைக் கடற்குள்மூழ்கிச்
சங்கர! சுயம்புவே! சம்புவே! எனவுமொழி
தழுதழுத் திடவணங்கும்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையும்
தண்ணருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லால் உணர்த்தியே
சொருபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேல் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

26. மிகவும் உயர்ந்த பக்குவத்தையுடைய சனகர் முதலான முனிவர்கள் நால்வரும் வணங்கி அருகில் வீற்றிருப்ப, கூறுவதற்கு அருமையான நெறியுடைய ஒரு சொல்லினால் அறிவுறுத்தி உண்மை இன்ப நுகர்வைக் காட்டிச் செம்மையான தாமரை இருக்கை மீது கல்லால மரத்தின்கீழ் வீற்றிருக்கின்ற சித்தாந்தப் பேற்றிற்குரிய முழு முதலே! திருச்சிராப் பள்ளியில் உயிர்கள் உய்ந்தருள

வீற்றிருக்கின்ற தட்சிணாமூர்த்தியே! உண்மை அறிவு இன்பங்களை அளிக்கும் மெய்க்குருவே!

அழகான கைகளால் நல்ல மலர்களைக் கொண்டு திருவடியில் தூவி உடலானது புளகம் கொள்ளப் பக்தியால் உள்ளம் உருகி விழியினின்று கண்ணீர் அருவிபோல் வடியத் தெவிட்டாத வீடு பேற்றின் வெறி வேட்கை என்ற கடலுக்குள் முழுகி, 'சங்கமனே! சுயம்புவாய் (தான் தோன்றியாய்) இருப்பவனே! சம்புவே (பேரின்ப நிலைக்களமாய் இருப்பவனே!) என்று வாயார வாழ்த்திச் சொல் தடுமாற வணங்கும் சித்தாந்த நன்னெறியில் நில்லாத புன்னெறியில் செல்லும் என்னையும் குளிர்ந்த கருணை தந்து ஆள்வாயோ!

(சங்கரன்—இன்பத்தை அளிப்பவன். சுயம்பு-தானே உண்டானவன். சம்பு—இன்பம் உண்டாவதற்கு நிலைக்களம் ஆனவன்.)

27. நீ என்முன் தோன்றுவது என்று?

ஆக்கையெனும் இடிகரையை மெய்யென்ற பாவிநான்
அத்துவித வாஞ்சையாதல்
அரியகொம் பில்தேனை முடவன்இச் சித்தபடி
யாகும் அறிவவிழஇன்பம்
தாக்கும்வகை ஏதி(ந்)நாள் சரியைகிரி யாயோக
சாதனம் விடுத்ததெல்லாம்
சன்மார்க்க மல்ல இவைநிற்க என் மார்க்கங்கள்
சாராத பேரறிவதாய்
வாக்குமனம் அணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும் படிக்குபாயம்
வருவித் துவட்டாத பேரின்ப மானசுக
வாரியினை வாய்மடுத்துத்
தேக்கித் திளைக்கநீ முன்னிற்பது என்றுகாண்

சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

27. வீடுபேற்றை அளிக்கின்ற முழுமுதலே! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உய்யுமாறு வீற்றிருக்கின்ற தட்சிணாமூர்த்தியே! பேரறிவு பேரின்பத்தை அளிக்கின்ற மெய்மையுடைய குருவே!

உடல் என்று உரைக்கப்படுகின்ற அழிந்த ஆற்றின் கரையை அழியாதுள்ள உண்மைப் பொருள் என்று எண்ணி வாழும் பாவி நான்; அத்துவிதப் பொருளின் மீது விருப்பம் வைத்தல் என்பது எட்டுவதற்கு அரிய கொம்பில் கட்டறபட்டுள்ள தேனை அருந்த முடவன் ஒருவன் விரும்பியபடியே ஆகும்.

ஆதலால், என் அறிவானது விரியும்படி இன்பம் உண்டாகின்ற வகை யாது? இந்நாள் வரையிலும் சரியை, கிரியை, யோகம் என்பனவற்றின் பழக்கத்தைக் கொள்ளாமல் விட்டுவிட்டதெல்லாம் நன்னெறி யாகாது!

இவை நிற்க, எத்தகைய நெறிகளும் அணுகாத பெருமையுடைய அறிவுருவாகிச் சொல்லும், உள்ளமும் பொருந்தாத மெய்ப்பொருள் எளியேனுக்கு வந்து வாய்க்கும்படி உபாயத்தை உண்டாக்கித் தெவிட்டாத பேரானந்தமான இன்பக் கடலை வாய் வைத்து உண்டு நிறைய அனுபவிக்க நீ என் முன் தோன்றுவது என்று?

(ஆக்கை - தத்துவங்களால் ஆக்கப்படுவது)

28. பூரணன் எனும் பெயர் பொருந்துமோ

ஔவியம் இருக்க நானென்கின்ற ஆணவம்
அடைந்திட் டிருக்க லோபம்

அருளின்மை கூடக் கலந்துள் ளிருக்கமேல்
ஆசா பிசாசமுதலாம்
வெவ்விய குணம்பல இருக்க என் அறிவூடு
மெய்யன் வீற்றிருக்க
விதியில்லை என்னிலோ பூரணன் எனும்பெயர்
விரிக்கிலுரை வேறுமுளதோ
கவ்வுமல மாகின்ற நாகபா சத்தினால்
கட்டுண்ட உயிர்கள்மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே
கதியான பூமிநடுவுள்
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்யகுண மேருவே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்குவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

28. பற்றுகின்ற ஆணவமலமான நாகபாசத்தால் கட்டப்பட்ட உயிர்களுடைய மூர்ச்சையாகிக் கிடக்கின்ற நிலைமையானது விரைவாய் அகன்று போகும்படி, வலிய வந்தருளும் ஞான சஞ்சீவி என்ற மருந்தே!

வீடுபேறு என்ற நிலத்தின் நடுவுள் செம்மையாய் வளர்ந்து ஓங்கும் மிகவும் சிறந்த மேரு என்ற குணமலையே; வீடுபேற்றை அளிக்கின்ற முழு முதலே; திருச்சிராப்பள்ளி யில் உயிர்கள் உய்தி பெற வீற்றிருக்கின்ற தட்சிணா மூர்த்தியே! உண்மை அறிவு இன்பங்களை அளிக்கின்ற குருவே!

என்னிடம் பொறாமை பொருந்தியிருக்கவும், 'நான்' என்ற ஆணவமானது சேர்ந்திருக்கவும், உலோபத்தன்மை இரக்க குணம் கலந்து உள்ளே இருக்கவும், மேலும் ஆசை என்ற பேய் முதலிய கொடிய குணங்கள் பலவும் பொருந்தி யிருக்கவும், இங்ஙனம் அவையிருப்பதால் என் அறிவில் மெய்ம்மையுடையவனான நீ வீற்றிருக்க விதியில்லை என்று கூறுவாயானால் 'பூரணன்' என்றநின் திருப்பெயரை (அதன்

பொருளை) விரித்தால் அதன் பொருளானது வேறாக இருக்குமோ?

29. உன்னை அடைய அருள் செய்யாயோ?

ஐவகை யெனும்பூத மாதியை வகுத் ததனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்து நல் லறிவையும் வகுத்து மறை
ஆதிநூ லையும்வகுத்துச்
சைவமுத லாம்அளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநான் அணுகவும்
தண்ணருள் வகுக்க இலையோ
பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்இலா மெய்யர் அறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

29. பொய்யானது மிக்கு விளங்குகின்ற உள்ளத்தை உடையவர்கள் காணக்கூடாத காட்சியே! பொய் இல்லாத மெய்மையுடையவரின் அறிவில், முழு மெய்யுணர்வாய்த் திகழ்ந்து எல்லை இல்லாத பெருவடிவமாய் ஆகி, போக்கும் வரவும் இல்லாது இருக்கின்ற பொருளே! தெய்வத்தன்மை யுடைய வேதத்தின் முடிவான பிரணவ மந்திரத்தின் உட்பொருளே! முடிந்த முடிவு எனப்படும் விழுமிய முத்தி யளிக்கும் முதலே! திருச்சிராப்பள்ளியில் வீற்றிருக்கின்ற தட்சிணாமூர்த்தியே! ஞான ஆனந்தத்தை அளிக்கின்ற குருவே!

ஐந்து வகையாகச் சொல்லப்படுகின்ற பூதங்கள் முதலிய வற்றைப் படைத்தாய், அவற்றில் இயங்குபவைகளான உயிர்களையும் இயங்காது நிற்பவைகளையும் ஆகிய யாவற்றையும் படைத்தாய்; அவற்றிற்கு நல்லறிவையும் வகுத்தாய்; மறை முதலான நூல்களையும் படைத்தாய்; சைவம் முதலான அளவில்லாத சமயங்களையும் படைத்தாய்! அதற்கு மேல் சமயத்தைக் கடந்து அப்பாற்பட்ட மௌன சமரச நிலையைப் படைத்தாய்; இத்தகைய உன்னை நான் அன்புடன் அடைந்து உய்ந்திடவும் குளிர்ந்த கருணையைப் படைக்க வில்லையோ!

(அசரம் - நிலையாக உள்ள பொருள்கள். சரம் - இயங்கும் உயிர் முதலியவை. அகண்டிதம் - வரையறுக்கப் படாதது.)

30. என்ன காரணமோ?

ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினால்
ஆகின்ற ஆக்கைநீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநான்
அறியாத காலமெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போந்தநெறி என்றிருந்தேன்
பூராய மாகநின தருள்வந் துணர்த்தஇவை
போனவழி தெரியவில்லை
எந்தநிலை பேசினும் இணங்கவிலை அல்லால்
இறப்பொடு பிறப்பையுள்ளே
எண்ணினால் நெஞ்சது பகீரெனும் துயிலுறாது
இருவிழியும் இரவுபகலாய்ச்
செந்தழலின் மெழுகானது அங்கம் இவை என்கொலோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

30. வீடு பேற்றை அளிக்கும் முழுமுதலே! திருச்சிராப் பள்ளியில் உயிர்கள் உய்யும்படி வீற்றிருக்கும் தட்சிணா மூர்த்தியே! உண்மை அறிவு இன்பங்களை அளிக்கின்ற குருவே!

ஐந்து வகையாய் உள்ள பூதங்களின் வேறுபாட்டால் உண்டாக்கப்படுகின்ற உடலானது நீரின்மீது தோன்றுகின்ற குமிழியைப் போல் நிற்கின்றது என்று நான் அறிந்து கொள்ளாதிருந்தேன். அக்காலம் முழுதும் உள்ளம் மகிழும் படி உண்ணத்தக்கவற்றை உண்டு, நல்லாடைகளை உடுத்து இன்பம் அனுபவிப்பதே நல்ல நெறி என்றே யான் எண்ணி யிருந்தேன். இத்தகைய என்னிடம் நின் திருவருள் வந்து ஆதியந்தமாக முற்றும் அறிவிக்க, இவை சென்ற வழி தெரியவில்லை. எந்த நிலையை எடுத்துப் பேசினும் உள்ளம் கொள்ளவில்லை. இவையல்லாமலும் இறக்கும் போதும் பிறக்கும் போதும் உயிர்கள் படும் துன்பத்தை எண்ணினால் என் உள்ளமானது திடுக்கிடுகின்றது. இரண்டு கண்களும் இரவு பகலாக உறங்கவில்லை. என் உடலும் செந்நிறத் தீயில் இட்ட மெழுகாய் உருகுகின்றது. இங்ஙனம் நிகழ்வதற்கு என்ன காரணமோ!

(பூராயம் - முழுவதும். ஆகமத்தின் முடிவு சித்தாந்தம் ஆகமம் - முறை.)

31. நீ செய்த அருள்!

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை அமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற

பெரியவிளை யாட்டமைத்திட்டு
ஏரிட்ட தன்கருதி மொழிதப்பின் நமனை விட்
டிடருற உறுக்கி இடர்தீர்த்து
இரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொண்மின் என்று
சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

31. முடிவு செய்யப்பட்ட வீடு பேற்றை அளிக்கின்ற முழு முதலே! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உய்யுமாறு வீற்றிருக்கின்ற தட்சிணாமூர்த்தியே! உண்மை அறிவு இன்பங்களை அளிக்கின்ற குருவே!

கரிய ஆணவ மலத்தால் அமைந்த கருவாகிய சிறிய வீட்டில், உணர்ச்சி இல்லாத கண் இல்லாத குழந்தையைப் போல் கட்டுப்பட்டிருந்த எம்மை, வெளியில் வரச் செய்தாய்; துன்பமான காவலை அமைத்தாய்; அதற்குப் பொருத்தமான பெயரை அமைத்தாய், உண்மை என்று பேசப்படும் பாழான நிலைத்திராத உடலானது வன்மை பெறுமாறு பல வகை உணவுகளை உண்ணச் செய்தாய்; பெரிய வுலகத்தில் இறப்பு பிறப்பாகப் பொருந்தும் பெரிய விளையாட்டை வைத்தாய்; அழகுடைய தன் சொல்லான வேத நெறியிலே தவறினால், அவ்வாறு தவறிய வயிரை இயமனை அனுப்பித் துன்பம் அடையும்படி தண்டித்து அத்துன்பத்தையும் நீக்கி இரவு பகல் என்பது இல்லாத பேரின்ப வீட்டில் பொருந்தி உறங்குங்கள் என்று எங்களுக்கு எல்லாச் சிறப்புகளையும் அமைத்த உலக அன்னையின் வடிவான எம் தந்தையே!

32. எனக்குச் செய்த உதவியை என் என்பேன்?

கருமருவு குகையனைய காயத்தின் நடுவுள்
களிம்புதோய் செம்பனையயான்

காண்தக விருக்கநீ ஞானவனல் மூட்டியே
கனிவுபெற உள்ளுருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பட்சத்தை என் சொல்லுகேன்
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்தம்
ஆதியாம் அந்தமீதும்
அத்துவித நிலையராய் என்னையாண் டுன்னடிமை
யானவர்கள் அறிவினூடும்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

32. அரிய புகழ் படைத்த வேதாந்த சித்தாந்தங்களான ஆதி அந்தங்கள் மீதும் அத்துவித நிலை உடையவராகி என்னை ஆட்கொண்டு உன் அடியவரின் அறிவிடத்தும் அழகுடைய கல்லால மரத்தின் கீழும் வீற்றிருக்கின்ற சித்தாந்த முத்தி முதலே! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உயர்ந்து விளங்க வீற்றிருக்கின்ற தட்சிணாமூர்த்தியே! உண்மை அறிவு இன்பங்களை அளிக்கின்ற குருவே!

கருப் பையினுள் பொருந்திய குகை போன்ற உடலின் இடையில் களிம்பு பற்றிய செம்பினைப் போன்ற நான் காணும்படியாய் இருக்கும்போது, நீ ஞானத்தீயை உண்டாக்கி உள்ளே தானே உருகும்படி செய்தாய். பக்குவத்தை உணர்ந்து நின் திருவருளான குளிகையால் (மருந்தினால்) தீண்டி மாற்றம் செய்து பத்து மாற்றுப் பொன்னாய்ச் செய்தாய். இத்தகைய என்னை அடிமை கொண்ட உன் பெருங் கருணையை என்னவென்று உரைப்பேன்!

33. மௌன குருவே, நீ செய்த உபதேசம்!

கூடுத லுடன்பிரித லற்று நிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதல் அற்றுக்
குணம்அற்று வரவினொடு போக்கற்று நிலையான
குறிஅற்று மலமும்அற்று
நாடுதலும் அற்று மேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலும் அற்று விந்து
நாதமற் றைவகைப் பூதபே தமும்அற்று
ஞாதுருவின் ஞானம்அற்று
வாடுதலும் அற்று மேல் ஒன்றற் றிரண்டற்று
வாக்கற்று மனமுமற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலும் அற்றவிடம்நிலை என்ற மௌனியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

33. முத்தி நிலையை அளிக்கும் இறையே! திருச்சிராப் பள்ளியில் உயிர்கள் உய்ய வீற்றிருக்கும் தட்சிணா மூர்த்தியே! அறிவு மயமான குருவே!

கூடுவதுடன் பிரிதலும் இல்லாததாகி, தொடர்பு இல்லாததாகி. குவிதலும் மலர்தலும் இல்லாததாகி, குணம் அற்றதாகி, வரவும்போக்கும் இல்லாததாகி, நிலையான அடையாளம் இல்லாததாகி, குற்றம் அற்றதாகி, நினைத் தலும் இல்லாததாகி, மேல் எனவும் கீழ் எனவும் நடுவு எனவும் சொல்லப் பொருந்துதலும் இல்லாததாகி, விந்து நாதங் களும் இல்லாதாகி, ஐந்து பூத வேற்றுமைகளும் இல்லாத தாகி, வாட்டம் அடைதலும் இல்லாததாகி, பின்னும், ஒன்று என்ற தன்மை இல்லாததாகி, இரண்டு என்ற தன்மை இல்லாததாகி, சொல் இல்லாததாகி, உள்ளமும் இல்லாத

தாகி, நிலை பெற்ற முழுநிறைஇன்பக்கடலில் வாய் வைத்து உண்டு பரவசமாகித் தேடுதலும் இல்லாத இடம் உண்மை நிலை என்று உபதேசம் செய்தாய் மௌன குருவே!

34. நின்னருள் தேவை

தாராத அருளொலாம் தந்தருள மௌனியாய்த்
தாயனைய கருணைகாட்டித்
தாளிணை என் முடிசூட்டி அறிவில் சமாதியே
சாசுவத சம்ப்ரதாயம்
ஓராமல் மந்திரமும் உன்னாமல் முத்திநிலை
ஒன்றோ டிரண்டெனாமல்
ஒளியெனவும் வெளியெனவும் உருவெனவும் நாதமாம்
ஒலியெனவும் உணர்வுறாமல்
பாராது பார்ப்பதே ஏதுசா தனமற்ற
பரமஅநு பூதிவாய்க்கும்
பண்பென றுணர்த் தியது பாராமல் அந்நிலை
பதிந்தநின் பழஅடியார்தம்
சீராய் இருக்கநினது அருள்வேண்டும் ஐயனே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே

34. மறைகளில் முடிவாய்க் கூறப்பட்ட வீடுபேற்றை அளிக்கும் முழுமுதலே! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உய்யும்படி வீற்றிருக்கும் தட்சிணா மூர்த்தியே! ஞானமய மான இன்பத்தை அளிக்கின்ற குருவே!

தரக் கூடாத நின் திருவருள் முழுதும் அளித்தருளும்படி மௌன குருவாகித், தாய் போன்ற அருளைச் செய்து நின் இருதிருவடிகளை என் தலையில் சூட்டினாய். ''அறிவில் கூடும் நிட்டையே நிலையான தன்மையுடையது என்றும், பகுத்துணராமலும், மந்திரத்தை எண்ணாமலும், முத்தி

நிலையானது ஒன்று இரண்டு என்று கூறாமலும், ஒளி எனவும்,வெளி எனவும், வடிவு எனவும், நாதமாகிய ஒலி எனவும் கருவிகளால் காணாமல் திருவருளால் காண்பதே எவ்வகையான சாதனமும் இல்லாத மேலான அனுபூதி கிடைத்தற்குரிய வழி'' என்றும் நீ அறிவுறுத்தினாய். அவற்றை ஆராய்ந்து பாராமல், அந்த நிலையில் தங்கிய, நின் பழைய அடியார்களின் சிறப்பை நான் பெற்றிருக்க நின் அருள் எனக்கு வேண்டும் ஐயனே!

35. அடிமையாகக் கொள்வாயோ?

போதமாய் ஆதிநடு அந்தமும் இலாததாய்ப்
புனிதமாய் அவிகாரமாய்ப்
போக்குவர வில்லாத இன்பமாய் நின்றநின்
பூரணம் புகலிடமதா
ஆதரவு வையாமல் அறிவினை மறைப்பதும்நின்
அருள் பின்னும் அறிவின்மைதீர்த்து
அறிவித்து நிற்பதும்நின் அருள் ஆகில் எளியனேற்
கறிவாவதே தறிவிலா
ஏதம்வரு வகையேது வினையேது வினைதனக்
கிடோன காயமே தென்
இச்சா சுதந்திரம் சிறிதும்இலை இகபரம்
இரண்டினுள் மலைவுதீரத்
தீதில்அருள்கொண்டினி உணர்த்தியெனை
ஆள்வையோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

35. மறைகளில் முடிவாகக் கூறப்பட்ட முத்தியை அளித்தருளும் முதல்வனே! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உய்ந்து விளங்கும் வகை வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியே! ஞான மயமான இன்பத்தை அளிக்கும் குருவே!

ஞானவடிவாகி, முதல் நடுவு முடிவு இல்லாததாகி, தூயதாகி, விகாரம் அற்றதாகி, போக்கு வரவு இல்லாத இன்ப வடிவாகி' விளங்கும் உன் முழுநிறைவான நிலையையே அடைக்கலத்துக்குரிய இடமாய்க் கொண்டு, (நின்னிடம்) அன்பு வைக்காது, அறிவை மறைப்பதும் நின் அருளே யாகும். மேலும் அறியாமையை நீக்கி எனக்குள் இருந்து அறிவுறுத்தி நிற்பதும் உன் அருளே ஆகும்.

அங்ஙனமாயின், எனக்கு அறிவாவது எது? அறிவில்லாது போகும் குற்றம் உண்டாகின்ற வகை யாது? அறியாமைக்குக் காரணமான வினை யாது? எனக்கு அன்பு எனப்படும் இச்சைக்குரிய தலைமைப்பாடு சிறிதும் இல்லை. இம்மை மறுமை என்ற இரண்டிடத்தும் என் மயக்கம் நீங்கு மாறு, நின் மெய்யான திருவருளைக் கொண்டு, இனியேனும் அறிவுறுத்தி, என்னை அடிமையாகக் கொள்வாயோ!

36. ஞானமின்றி முக்தி இல்லை

பத்திநெறி நிலைநின்றும் நவகண்ட பூமிப்
பரப்பைவல மாகவந்தும்
பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றியெழுநா
மத்தியிடை நின்றும் உதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கடைத்தும்
மவுனத் திருந்தும் உயர் மலைமுழை தனில்புக்கு
மன்னுதச நாடிமுற்றுஞ்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோடு அங்கியைச்
சோமவட் டத்தடைத்துச்
சொல்லரிய அமுதுண்டும் அற்பவுடல் கற்பங்கள்
தோறும் நிலை நிற்கவீறு
சித்திசெய் தும்ஞானம் அலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே

சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

3௦. மறைகளில் முடிவாய்ச் சொல்லப்பட்ட முத்தியை அளிக்கும் முதல்வனே! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உய்தி பெற்று விளங்க வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியே! ஞானமயமான இன்பத்தை அளித்தருளும் குருவே!

பத்தி நெறியில் நிலையாய் நின்றும் ஒன்பது கண்டங்களையுடைய பூமியின் பரப்பை வலமாக வந்தும் கடலிலே நீராடியும், ஆறுகளில் நீராடியும், பசி நீர்வேட்கை இல்லாது தீயின் நடுவில் நின்றும், உலர்ந்து உதிரும் சருகுகளையும் நீரையும் காற்றையும் வலிய பசியைப் போக்குதற்கு உண்டும் மௌன நிலையை மேற்கொண்டு இருந்தும், உயர்ந்த மலைக் குகைகளில் புகுந்தும், நிலையான தசநாடி முழுவதையும் தூய்மைப்படுத்தியும் தீயைச் சந்திர மண்டலத்தில் சேர்த்தும், கூறுவதற்கு அரிய அமுதத்தை உண்டும், அற்பவுடல் ஊழிகள் தோறும் நிலைத்து நிற்குமாறு மேலான சித்தியை அடைந்தும், ஞானம் உண்டானால் அல்லது வீடு பேறு கிட்டுமோ?

5. மௌனகுரு வணக்கம்

37. ஞான யானை என என்னை வளர்த்தாய்

ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படஉதறி
ஆங்கார முளையை எற்றி
அத்துவித மதமாகி மதமாறும் ஆறாக
அங்கையின் விலாழியாக்கிப்
பாசவிருள் தன்நிழல் எனச்சுளித் தார்த்து மேற்
பார்த்துப் பரந்தமனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க உண்டுமுக
படாமன்ன மாயைநூறித்

தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக்கு ளேயடக்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்து நின்
திருவருள் பூர்த்தியான
வாசமுறு சற்சார மீதென்னை ஒருஞான
மத்தகச மெனவளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே!

37. மந்திர குருவே! யோக தந்திர குருவே! தமிழ் ஆகம நூலை (திருமந்திரத்தை) அருளிய திருமூலர் மரபில் வந்தருளிய மௌன குருவே! ஆசை என்ற விலங்கை முற்றும் அழியுமாறு உதறி (அறுத்து) அகங்காரம் என்ற முளையைப் பிடுங்கி எறிந்து, மெய்ப் புணர்ப்பு என்னும் அத்துவித மதத்தை உடையதாகி, ஆறு மதங்களும் நதிகளாகத் துதிக்கையின் உமிழ் நீராக (விலாழி) செய்து, பாசமான இருளைத் தன் நிழல் என நினைத்துச் சினந்து ஆரவாரித்து, மேல் நோக்கிப் பரவிய உள்ளத்தினைப் பெருங் கவளமாய் (உணவாய்) நிறைய உண்டு, நெற்றிப் பட்டத்தைப் போன்ற மாயையை அழித்து ஒளி பெற நீ வைத்த சின் முத்திரை என்ற அங்குசத்தைச் சிவந்த கையில் அடக்கி, ஞான மயமான பேரானந்தத்தில் முழுகி நின் திருவருள் நிறைவில் உறைதல் பொருந்திய பரந்த யானை கட்டும் கூடத்தில் என்னை மெய் யுணர்வு மதம் பொழிகின்ற யானை போன்று வளர்த்தாய்!

(இதில் அமைந்துள்ள உருவகம் வருவாறு: இதனைப் பாடிய தாயுமானவர் யானை. ஆசை-சங்கிலி. அகங்காரம் முளை. அத்துவிதம் - மதம். மாயை - முகபடாம். சின் முத்திரை - அங்குசம்.)

(இவருடைய ஞானாசிரியர் மௌன குருதேசிகர் என்பர். அவர்க்கு இங்கு வணக்கம் செலுத்துகிறார் என்பது குறிப்பு.)

38. நீ செய்த விசித்திரம் நறுன்!

ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்
அடங்கவெளி யாகவெளிசெய்து
அறியாமை அறிவாதி பிரிவாக வறிவார்கள்
அறிவாக நின்ற நிலையில்
சிந்தையற நில் என்று சும்மா இருத்திமேல்
சின்மயா னந்த வெள்ளம்
தேக்கித் திளைத்துநான் அதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகாண்
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழ அரு
ளியநந்தி மரபுவாழ்க
என்றடியர் மனமகிழ வேதாக மத்துணிபு
இரண்டில்லை யொன் றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி
மௌனோப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்தரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே,

38. மந்திரத்தை அருளிய குருவே! யோக தந்திரத்தை அருளிய குருவே! திருமூலர் வழியில் வந்த குருவே! ஐந்து வகைப்பட்ட பூதங்கள் முதலாக நாதம் இறுதியாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களும் இன்னதன்மையுடையவை என வெளிப்படையாக உண்மை விளங்கும்படி விளக்கி, அறிவு அறியாமை முதலானவற்றை வெவ்வேறாய்ப் பிரித்து அறியவல்லவர், 'அறிவுருவாய் நின்ற நிலையில் நீயும் மனம் அற நிற்பாய்' என்று சும்மா இருக்கும்படி செய்தாய்! அதன் மேலும் அறிவு மயமான இன்ப வெள்ளத்தில் நிறைய அனுபவித்து நான் அதுவாய் இருக்கும்படி நீ செய்தாய்! இந்த வியப்பான செயல் மிகவும் நன்று.

என் தந்தையான கல்லால மரத்தின்கீழ் வீற்றிருக்கும்சிறந்த குரு வாழ்க! அங்ஙனம் வாழுமாறு அருள் செய்த நந்தியின்

மரபு வாழ்க!' என்று அடியவர் உள்ளம் மகிழ வேதம் ஆகமம் என்பனவற்றின் துணிபு இரண்டாய் இல்லை; பதி ஒன்று, என்று அருளிச் செய்வதற்காகவே எழுந்தருளி வந்த ஆசிரியப் பெருந்தகையே! எல்லாச் சாத்திரங்களிலும் மிஞ்சிய சிவஞான சித்தியார் என்று கூறப்படும் சாத்திரத்தில் உள்ள முறைப்படியே மௌன உபதேசம் செய்ய வந்த குருவே!

39. எனக்கு அருள் செய்வது என்று?

ஆதிக்க நல்கினவர் ஆர் இந்த மாயைக்கென்
அறிவின்றி இடமில்லையோ
அந்தரப் புட்பமும் கானலின் நீரும்ஓர்
அவசரத் துபயோகமோ
போதித்த நிலையையும் மயக்குதே அபயம்நான்
புக்கஅருள் தோற்றிடாமல்
பொய்யான உலகத்தை மெய்யா நிறுத்தியென்
புந்திக்குள் இந்த்ரசாலம்
சாதிக்குதே இதனை வெல்லவும் உபாயம்நீ
தந்தருள்வ தென்று புகல்வாய்
சண்மதத் தாபனமும் வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையும்
மாதிக்கொ டண்டப் பரப்பெலாம் அறியவே
வந்தருளும் ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே!

39. இந்த மாயைக்குத் துன்புறுத்தி அடக்கி ஆளும் ஆற்றல் தந்தவர் யார்? இந்த மாயைக்கு என் அறிவே அல்லாது வேறு இடம் இல்லையோ! வானத் தாமரையும், கானல் நீரும் ஓர் பயன் தந்து உதவவேண்டிய நேரத்தில் உதவுமோ? என் குருவே, இது நீ உபதேசித்த

உபதேசத்தையும் கைவிடுமாறு மயக்குகின்றதே! நான் அடைக்கலமாகப் புகுந்து அடைந்த உன் திருவருள் சிறிதும் தோன்றாத வண்ணம் நிலையற்ற இந்த வுலகத்தை உண்மை என்று கொள்ளும்படி நிலை நாட்டி என் அறிவில் இந்திரசால வித்தையை விளையாடிக் காட்டுகின்றதே! இத்தகைய மாயையை வெல்ல உபாயத்தை நீ அருளுவது என்று? கூறுவாயாக! ஆறு வகைப்பட்ட மதங்களை நாட்டிய வகையையும் வேதாந்தச் சித்தாந்தங்களைச் சமரசங்களாய் நிர்வகிக்கத் தக்க அனுபூதி நிலையையும் பெருந்திக்குகளுடன் கூடிய உலகப் பரப்பெல்லாம் அறியுமாறு வந்து எனக்கு அருள் செய்தாய்.

40. ஒரு மொழியால் என்னை ஆண்டாய்

மின்னனைய பொய்யுடலை நிலையென்றும் மையிலகு
விழிகொண்டு மையல்பூட்டும்
மின்னார்கள் இன்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்கமென்றும்
பொன்னை அழியாதுவளர் பொருளென்றுபோற்றி இப்
பொய்வேட மிகுதி காட்டிப்
பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலாம்
போக்கிலே போகவிட்டுத்
தன்னிகரில் லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவானுபூதி
மன்னஒரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே!

40. ஞானத்தை அருளிய குருவே! மந்திரத்தை உபதேசித்த குருவே! யோக தந்திரங்களை அருளிய குருவே!

திருமூலர் வழியில் வந்த குருவே! தோன்றி மறையும் இயல் பினால் மின்னலைப் போன்றுள்ள பொய்யான வுடலை நிலையானது என்றும், மைபூசப் பெற்று விளங்கும் விழிகளைக் கொண்டு காமத்தை ஊட்டுகின்ற மங்கையர் இன்பமே உண்மை என்றும், உயர்ந்த மாளிகைகள் துறக்க வுலகம் என்றும், பொன்னை அழியாது மேன் மேலும் வளரும் பொருள் என்றும், விரும்பி, இந்தப் பொய் வேடத்தின் பெருமையை வெளிக் காட்டிப் பொறுமை, அறிவு, துறவு, கொடை முதலிய நல்ல குணங்கள் எல்லாவற்றையும் அவற்றின் போக்கிலேயே போகும்படி விடுத்து, தனக்கு நிகர் இல்லாத உலோபகுணம் முதலிய பாழான பேய் பற்றிக் கொள்ள, உலகில் உலகாயதனின் சமய ஒழுக்கத்தைச் சாராது, வேதாந்தச் சித்தாந்தச் சிவானுபூதியைப் பொருந்தும்படி ஒரு மொழி சொல்லி, என்னைத் தடுத்தாட் கொண்டு, அன்பினால் என்னை வாழச் செய்தாய்.

41. நம் மரபாக அறிவுறுத்தியவை

போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற்கு இருக்குமதுபோல்
புருடர்பெறு தருமாதி வேதமுடன் ஆகமம்
புகலும் அதில் நாலாம்பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சிஅனு மானமுதல்
நானா விதங்கள்தேர்ந்து
நான்நான் எனக்குழறு படைபுடை பெயர்த்திடவும்
நான்குசா தனமும்ஓர்ந்திட்
டானநெறி யாம்சரியை யாதிசோ பானமுற்று
அணுபட்ச சம்புபட்சம்
ஆமிரு விகற்பமும் மாயாதி சேவையும்
அறிந் திரண் டொன்றென்னும்ஓர்
மானத விகற்பமற என்றும்நிற் பதுநமது
மர பென்ற பரமகுருவே

மந்தரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே!

41. மந்திரத்தை உபதேசித்தருளியே குருவே! யோக தந்திரங்களை அருளிய குருவே! திருமூலர் மரபில்வரு குருவே! உணவு சமைக்கும் மடைப்பள்ளியில் உண்பதற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் இருப்பதைப் போல், மக்கள் அடைவதற்குரிய அறம் முதலான நான்கும் மறையுடன் ஆகமங்களும் உள்ளன. அவற்றால் உண்டாகும் மெய்யுணர்வு நெறி முதன்மையானதாகும். அதனைக் காணல் கருதுல் உரை என்றும் பல அளவைகளால் நன்குஆராய்ந்து 'நான்' 'நான்' என்னும் குளறு படியை அடியோடு ஒழிக்கவும், நான்கு வகைகளையும் ஆராய்ந்து உணர்ந்து, நல்ல நெறிகளான சரியை கிரியை முதலானவற்றை அடைந்து அனுபட்சம், சம்பு பட்சம் என்ற இரண்டு வேறுபாடுகளையும் மாயை முதலானவற்றையும் நன்குணர்ந்து, பொருள் நிலையுண்மை இரண்டு என்றோ ஒன்று என்றோ சொல்லத்தக்க உள்ளத்து வேறுபாடுகள் இல்லாது ஒழிய, வெற்றி கண்டு நிற்பதே நம் மரபாகும் என அறிவுறுத்தருளிய மேலான குருவே! மந்திர குருவே! யோக தந்திரகுருவே! திருமூலர் மரபில் வந்த மௌன குருவே!

(அனுபட்சம் — ஆன்மாக்கள் தாமே பக்குவப்பட்டு இறைவனை அடையும் நெறி. சம்பு பட்சம் — இறைவன் திருத்தப் பக்குவப்பட்டு அவனை அடையும் நெறி)

42. என்னை ஆட்கொள்ள நினைவாய்!

கல்லாத அறிவும் மேற் கேளாத கேள்வியும்
கருணைசிறி தேதுமில்லாக்
காட்சியும் கொலைகளவு கட்காம மாட்சியாய்க்
காதலித் திடுநெஞ்சமும்
பொல்லாத பொய்ம்மொழியும் அல்லாது நன்மைகள்

பொருந்துகுணம் ஏதும் அறியேன்
புருடர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருடார்த்தம் ஏதும்இல்லேன்
எல்லாம் அறிந்தநீ அறியாத தன்றெனக்கு
எவ்வண்ணம் உய்வண்ணமோ
இருளையிருள் என்றவர்க் கொளிதா ரகம் பெறும்
எனக்குநின் அருள்தாரகம்
வல்லான் எனும்பெயர் உனக்குள்ளதே இந்த
வஞ்சகனை ஆள நினைபாய்
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே!

42. மந்திரத்தை அருளிய குருவே! யோக மந்திரங்களை அருளிய குருவே! திருமூலர் வழியில் வந்த மௌன குருவே!

இறைவன் நூலான செந்தமிழ் மறை நூல்களைக் கல்லாது பிறவற்றைக் கற்றதால் உண்டாகும் அறிவுடையேன்; அத்தகைய நூல்களைக் கேளாத பிறவற்றைக் கேட்ட கேள்வி உடையேன்; மிகவும் சிறிய அருளும் பொருந்தியிராத அறிவுடையேன்; கொலை களவு கள்ளுண்ணல் காமம் என்ற இவற்றைச் சிறந்தவை என்று நினைக்கும் மனமுடையேன்; கொடிய பொய்ம்மொழியும் உடையேன். இவையே அல்லாமல் நன்மை அமைந்த குணங்கள் எவற்றையும் நான் அறியேன்!

யான் மக்கள் வடிவம் கொண்டுள்ளதே அன்றி மக்கட்குரிய அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றுள் ஒன்றையும் அடைந்திலேன்! எல்லாவற்றையும் அறியும் நீ அறியாததன்று. இத்தகைய எனக்கு எவ்வாறு உய்யும் வகை வாய்க்குமோ?

இருளை இருள் என்று கொண்டவர்க்கு ஒளி ஆதாரமாக அமையும். அதைப் போன்று நின்னை அடைந்த

எனக்கு நின் திருவருளே ஆதாரமாகும். வல்லவன் என்ற பெயர் உனக்கே உண்டாகியுள்ளது. ஆதலால் இந்த வஞ்சக னான என்னை ஆட்கொள்ள நினைப்பாய்!

43. குருவின் இயல்பு

கானகம் இலங்குபுலி பசுவொடு குலாவும் நின்
கண்காண மதயானை நீ
கைகாட்ட வும்கையால் நெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக ஏந்திவருமே
போனகம் அமைந்ததென அக்காம தேனுநின்
பொன்னடியில் நின்றுசொலுமே
புவிராசர் கவிராசர் தவராசன் என்றுனைப்
போற்றிசய போற்றியென்பார்
ஞானகரு ணாகர முகம்கண்ட போதிலே
நவநாத சித்தர்களும் உன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதல்
ஞானிகளும் உனைமெச்சுவார்
வானகமும் மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடும்உன்
மகிமையது சொல்லவெளிதோ
மந்த்ரகுரு வே யோக தந்த்ரகுரு வே மூலன்
மரபில்வரு மௌனகுருவே!

43. மந்திர குருவே, யோக தந்திரம் அருளிய குருவே! திருமூலர் மரபில் தோன்றிய மௌன குருவே! நின் திருவருள் துணையினால், காட்டில் வாழ்கின்ற கொடிய புலி பசுவுடன் கூடி விளையாடும், நின் கண் காணும்படி மதயானை யானது, நீ கையைக் காட்டின அளவில் பெரிய மரக்கட்டை களைத் தீயை யுண்டாக்குவதற்காக மிகுதியாகச் சுமந்து கொண்டு வரும்; வான் உலகில் உள்ள காமதேனு என்ற பசுவானது நின் பொன் அடியின் கீழ் நின்று பலவகை உணவுகள் ஆயத்தமாய் உள்ளன எனக் கூறும்.

மண்ணுலகினை ஆளும் புவி மன்னர்களும், கவிமன்னர் களும் 'தவ மன்னரே, வணக்கம், நினக்கு வெற்றி யுண்டாகுக!' என்று புகழ்ந்து பாராட்டி நிற்பர்.

ஞானத்தையுடைய அருளுக்கு இருப்பிடமான நின் திருமுகத்தைக் கண்ட அளவிலே ஒன்பது வகையாகக் கூறப் படுகின்ற சித்தர்களும் உன் அரிய நட்பை விரும்புவர். சுகர், வாம தேவர் முதலான ஞானியரும் உன்னை மிகவும் புகழ்ந்து கொண்டாடுவர். விண்ணுலகத்தவரும் மண் ணுலகத்தவரும் வந்து எதிரே நின்று தொழுகின்ற அப் பெருமையைச் சொல்வது என்பது எளிதோ?

(நெகிடி-தீமூட்டுதல்; போனகம்-சிறந்த உணவு.)

44. நின்னை வணங்க என்னை அழைப்பது எப்போது?

சருகுசல பட்சணிகள் ஒருகோடி யல்லால்
சகோரபட் சிகள்போலவே
தவளநில ஒழுகமிர்த தாரைஉண் டழியாத
தன்மையர் அனந்தகோடி
இருவினைகள் அற்றிரவு பகலென்பது அறியாத
ஏகாந்த மோனஞான
இன்பநிட் டையர்கோடி மணிமந்த்ர சித்திநிலை
எய்தினர்கள் கோடிசூழக்
குருமணியி ழைத்திட்ட சிங்கா தனத்தின்மிசை
கொலுவீற் றிருக்கும்நின்னைக்
கும்பிட்டு அனந்தமுறை தெண்டனிட் டென்மனக்
குறையெலாம் தீரும்வண்ணம்
மருமல ரெடுத்துன்இரு தாளை அர்ச் சிக்கஎனை
வாஎன்று அழைப்பதெந்நாள்
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே!

44. மந்திரத்தை அருளிய குருவே, யோக தந்திரங்களை அருளிய குருவே, திருமூலர் மரபில் தோன்றிய மௌன குருவே,

துறவை மேற்கொண்டவர்களுள் சருகுகளையும் நீரையும் உணவாக உண்டு வாழ்பவர் ஒரு கோடியர். சகோரப் பறவையைப் போல் (யோக முறையினால் தம்புருவ நடுவில் உள்ள) வெண்மையான நிலவு ஒளியுடன் ஒழுகும் அமிர்த தாரகைகளை உண்டு அழிவற்ற தன்மையுடையவராய் வாழ்பவர் பல கோடியர். இரவு பகல் என்றில்லாமல் இறைவனின் அருள் திறத்தினால் இருவினைகளைச் செய்யாமல் தவிர்த்துத் தனிமையும் ஞானமும் என்னும் இவற்றை அடைய இன்ப நிட்டையை உடையர் கோடியர். மணி மந்திர சித்தி நிலை பெற்றவர் கோடியர். இவர்கள் எல்லாம் சூழ்ந்திருக்க நல்ல நிறம் உடைய மணிகளைச் செதுக்கிய அரியணை மீது வீற்றிருக்கின்ற நின்னை வணங்கிப் பலமுறை நிலத்தில் வீழ்ந்து பணிந்தெழுந்து, என் உள்ளத்தில் உள்ள குறைகள்யெல்லாம் நீங்குமாறு, மணமுடைய மலர்களை எடுத்து வந்து நின் இரண்டு திருவடிகளையும் அருச்சிக்கும் பொருட்டு என்னை வா என்று நீ அழைப்பது எப்போது?

(பட்சணி - உண்டு வாழ்பவர். சகோரம்-ஒருவகைப் பறவை. அது திங்களின் நிலவு ஒளியில் உண்டான அமிழ்தத்தை உண்டு வாழ்வது.)

45. அகங்காரத்தினது இயல்பு

ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
ஆணவத் தினும்வலிதுகாண்
அறிவினை மயக்கிடும் நடு அறிய ஒட்டாது
யாதொன்று தொடினும் அதுவாய்த்
தாங்காது மொழிபேசும் அரிகரப் பிரமாதி

தம்மொடு சமானமென்னும்
தடையற்ற தேரில்அஞ் சுருவாணி போலவே
தன்னில்அசை யாது நிற்கும்
ஈங்கா ரெனக்குநிகர் என்னப்ர தாபித்
திராவணா காரமாகி
இதயவெளி எங்கணும் தன்னரசு நாடுசெய்
திருக்கும் இத னொடெ நேரமும்
வாங்கா நிலாதடிமை போராட முடியுமோ
மௌனோப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

45. மௌன நிலையை உபதேசித்தருளிய குருவே, மந்திர குருவே, யோக தந்திர குருவே, திருமூலர் மரபில் வந்த மௌன குருவே,

அகங்காரம் என்ற குல வேடரைப் போன்ற பேயானது பாழான ஆணவப் பேயை விட வன்மை யுடையது. அஃது என் அறிவை மயக்கிவிடும். நடுவுநிலைமையை அறிந்து கொள்ள விடாது. அது யாதொரு பொருளைப் பற்றினும் அப்பொருளாக நின்று பொறுக்க இயலாத சொற்களைச் சொல்லும். நான்முகன், திருமால், அரன் என்ற மூன்று தேவர்களும் எனக்கு ஒப்பானவர் என்று அது கூறும்.

தடையில்லாது செலுத்தும் தேரில் உள்ள அச்சாணியைப் போல் பிறவற்றை இயக்கித் தான் அசையாது நிற்கும், 'இவ்வுலகத்தில் என்னை ஒப்பவர் யார்?' என்று கூறி மிக்க இருளே பெருவடிவாகி என் உள்ளம் எங்கும் தன் ஆட்சி செலுத்தும் நாடாக எண்ணி ஆட்சி செலுத்தும். இதனுடன் எப்போதும் விலகி நில்லாது உன் அடிமையான நான் போராடி வெல்ல முடியுமோ?

(ஆங்காரம்—அகங்காரம் என்பதன் திரிபு. செருக்கு என்பது பொருள். மணி—இரசக் குளிகை. மந்திரம்—பஞ்சாட்சரம்.)

46. மலையென நம்பினேன்

பற்றுவெகு விதமாகி ஒன்றைவிட் டொன்றனைப்
பற்றியுழல் இருமிபோலப்
பாழ்ஞ்சிந்தை பெற்றநான் வெளியாக நின்னருள்
பகர்ந்தும்அறி யேன் துவிதமோ
சிற்றறிவது அன்றியும் எவரேனும் ஒருமொழி
திடுக்கென் றுரைத்தபோது
சிந்தைசெவி யாகவே பறையறைய உதரவெந்
தீநெஞ்சம் அளவளாவ
உற்றுணர வுணர்வற்றுன் மத்தவெறி யினர்போல
உளறுவேன் முத்திமார்க்கம்
உணர்வதெப் படி இன்ப துன்பம்ச மானமாய்
உறுவதெப் படி ஆயினும்
மற்றெனக் கையநீ சொன்னஒரு வார்த்தையினை
மலைஇலக் கெனநம்பினேன்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே!

46. மௌன நிலையை உபதேசித்த குருவே! மந்திர குருவே! யோக தந்திர குருவே! திருமூலர் மரபில் வந்த மௌன குருவே!

பற்றுவதற்குரிய இடம் பலவிதமாய்க் கொண்டு ஒன்றை விடுத்து வேறொன்றைப் பற்றி உழலும் புழுவைப் போன்று கொடிய மனத்தைக் கொண்டவன் நான். வெளிப்படையாக நின் திருவருளைப் பாராட்டிப் புகழ்ந்தறியேன். துவிதநிலை (இரண்டு நிலை) என்றாலோ அது சிற்றறிவாக முடியும். அதுவன்றியும் எவரேனும் ஒரு சொல்லைத் 'திடும்' என்று கூறும் போது, செவியே மனமாக பறையறையும். அறையவும், கொடிய வயிற்றுத் தீயானது உள்ளத்தைக் கலக்கும்படி பொருந்தும். அங்ஙனம் பொருந் துவதால், அறிவதற்குரிய உணர்வும் அற்றுப் பெரும் பித்துக்

கொண்ட வெறியினர் போல உளறுவேன். இத்தகைய நான் வீடுபேற்று நெறியை அறிவது எப்போது? இன்ப துன்பங்கள் சமமாகக் கொள்வது எவ்வாறு? எம் ஐய! நீ எனக்கு அருளிய ஒரு சொல்லை, மலையை இலக்காகக் கொண்டாற் போன்று நம்பினேன்.

6. கருணாகரக் கடவுள்

47. உன்னை எப்போதும் நினைவேனோ?

நிர்க்குண நிராமய நிராஞ்சன நிராலம்ப
 நிர்விடய கைவல்யமாம்
நிட்கள அசங்க சஞ்சலரகித நிர்வசன
 நிர்த்தொந்த நித்த முத்த
தற்பர விச்வாதீத வ்யோமபரி பூரண
 சதானந்த ஞான பகவ
சம்பு சிவ சங்கரா சர்வேச என்றுநான்
 சர்வகாலமு நினைவனோ
அற்புத அகோசர நிவர்த்திபெறும் அன்பருக்கு
 ஆனந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொரூபசாட் சாத்கார
 அனுபூதி அனுகூதமுங்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழல்
 கண்ணூ டிருந்தகுருவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
 கருணா கரக்கடவுளே!

47. "மாயையின் செயற்பாடான மூன்று குணங்களுள் ஒன்றும் இல்லாதவனே! நோய் இல்லாதவனே! மாசு இல்லாதவனே! பற்றுக்கோடு இல்லாதவனே! புலன்களை வென்றவனே! வீடு பேற்று வடிவுடையவனே! அருவமானவனே! கூட்டம் இல்லாதவனே! அசைவு அற்றவனே! பேச்சு

இல்லாதவனே! இரண்டாவதில்லாதவனே! எப்போதும் நிலையாய் இருப்பவனே! பாசங்களினின்று நீங்கியவனே! உயிர்களிடத்து அன்புடையவனே! உலகத்தைக் கடந்தவனே! அருள் வெளியில் நிறைந்திருப்பவனே! எப்போதும் இன்பமாய் இருப்பவனே! ஞான வடிவினனே! ஆறு பண்புகள் நிறையப் பெற்றவனே! இன்பவடிவுடையவனே! மங்களமானவனே! இன்பத்தை அளிப்பவனே! எல்லாவற்றுக்கும் இறைவனே'' என்று சொல்லி நான் இடையறாது உன்னை எப்போதும் நினைவேனோ?

வியக்கத்தக்க பண்பை உடையவனே! எவராலும் அறியப்படாதவனே! விடுதலை விரும்பும் அன்பர்க்கு இன்ப நிறைவான அத்துவித நிலையான உண்மையையுடையவனே! உண்மை வடிவின் கண்கூடான இன்ப அனுபவப் பொருளே! இரகசியமும் உண்மையாய்க் காணும்படி மூன்று கண்களுடன் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்தருளும் குருவே! நினைத்தற்கு அரிய தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்து ஆடுகின்ற கருணைக்குப் பிறப்பிடமாகின்ற இறைவ!

நிராமயன் - நோயற்றவன், நிரஞ்சனன் - குற்றம் அற்றவன். நிராலம்பன் - பற்றுக்கோடு இல்லாதவன். கைவல்யம் - வீடு பேறு. நிட்களம்—உருவம் அற்றவன். அசங்கம் - கூட்டம் அற்றவன். சஞ்சல ரகிதன் — அசைவு இல்லாதவன். நிர்த்தொந்தன் — இரண்டாவது இல்லாதவன். விஸ்வாதீதன் — உலகத்தைக் கடந்தவன். வ்யோம பரிபூரணன் — அருள் வெளியில் நிறைந்திருப்பவன். சம்பு — இன்ப வடிவினன். அகோசரன் —எவராலும் அறியப்படாதவன். அனு சூதம் — இரகசியம்.

48. சுகவாரியை என் சொல்வேன்?

மண்ணாதி ஐந்தொடு புறத்தில்உள கருவியும்
வாக்காதி சோத்ராதியும்

வளர்கின்ற சத்தாதி மனமாதி கலையாதி
மன்னுசுத் தாதியுடனே
தொண்ணூற்றொடு ஆறும் மற்றுள்ளனவும்
மௌனியாய்ச்
சொன்னஒரு சொல்கொண்டதே
தூவெளிய தாய் அகண் டானந்த சுகவாரி
தோற்றும் அதை என்சொல்லுவேன்
பண்ணாரும் இசையினொடு பாடிப் படித்தருள்
பான்மைநெறி நின்றுதவறாப்
பக்குவ விசேடராய் நெக்குநெக் குருகிப்
பணிந்தெழுந்து இருகைகூப்பிக்
கண்ணாறு கரைபுரள நின்றஅன் பரையெலாம்
கைவிடாக் காட்சியுறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

48. மண் முதலான ஐந்து பூதங்களுடன் வெளியே யுள்ள கருவிகளும் வாக்கு முதலான கன்மேந்திரியங்கள் ஐந்தும், வளர்கின்ற ஓசை முதலான புலன்கள் ஐந்தும், மனம் முதலான அந்தக் காரணம் நான்கும், கலை முதலான வித்தியா தத்துவம் ஏழும், நிலையான சுத்த தத்துவத்துடன் தொண்ணூற்றானும் மற்றும் உள்ளவையும், மௌன குருவாய் வந்து உபதேசித்தது ஒரு மொழி. அந்த ஒரு மொழியை உட்கொண்ட அளவிலே தூயவானமாகி இடை யறாத இன்பக் கடல் காணப்படுவதை என்னவென்று கூறுவேன்? பண்ணுடன் கூடிய இசையுடன் பாடிப் பொருள் விளங்க ஓதித், திருவருட் பான்மை வழிநின்று, பிழையாத தீவிரப்பக்குவத்தை உடையவராய் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி,வணங்கி எழுந்து, இரண்டுகைகூப்பி கண்ணீரான ஆறு கரை புரண்டு ஓட, அடியவர்களை எல்லாம் கைவிடாத உறவே! நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த கூத்தாடுகின்ற கருணைக்கு இருப்பிடமானவனே!

49. வீடுபேற்றுக்கு வழி யாது?

எல்லாமுன் அடிமையே எல்லாமுன் உடைமையே
எல்லாமுன் னுடையசெயலே
எங்கணும் வியாபிநீ என்றுசொலும் இயல்பென்று
இருக்காதி வேதமெல்லாம்
சொல்லால் முழக்கியது மிக்கஉப காரமாச்
சொல்லிறந் தவரும்விண்டு
சொன்னவையும் இவை நல்ல குருவான பேரும்
தொகுத்தநெறி தானும்இவையே
அல்லாமல் இல்லையென நன்றா அறிந்தேன்
அறிந்தபடி நின்றுசுகம்நான்
ஆகாத வண்ணமே இவ்வண்ணம் ஆயினேன்
அதுவுநின தருளென்னவே
கல்லாத அறிஞனுக் குள்ளே உணர்த்தினை
கதிக்குவகை ஏது புகலாய்
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே!

49. நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடும் கருணைக்கு இருப்பிடமான கடவுளே! ''எல்லாரும் நின் அடிமைகளே! எல்லாப் பொருள்களும் நின் பொருள்களே! எல்லாச் செயல்களும் நின் செயல்களே! எங்கும் பரவியிருப்பவன் நீயே!'' என்று கூறும் இயல்புடையதென்று இருக்கு முதலான வேதங்கள் எல்லாம் சொல்லால் முழக்கின; பேச்சற்றவர்களான முனிவர்களும் மிக்க உதவியாய் எண்ணி விளக்கமாகக் கூறியவையும் இவையே! நல்ல ஆசாரியரும் தொகுத்துச் சொன்ன மார்க்கங்களும் இவைகளே! வேறு இல்லை! என்று நான் நன்கு உணர்ந்தேன். அங்ஙனம் உணர்ந்த வண்ணம் நின்று நான் இன்பம் அடையாமல் இப்படி ஆனேன். அதுவும் நின் திருவருளே என்று, கல்லாத வறியேனுக்குள்ளே அறிவித்தாய். வீடுபேற்றுக் கு வழி யாது? கூறுவாய்!

50. எப்போது நின்கருணைக்கு உரியவன் ஆவேன்?

பட்டப் பகல்பொழுதை இருளென்ற மருளர்தம்
பட்சமோ எனதுபட்சம்!
பார்த்தஇடம் எங்கணும் கோத்தநிலை குலையாது
பரமவெளி யாகஒருசொல்
திட்டமுடன் மௌனியாய் அருள்செய் திருக்கவும்
சேராமல் ஆராகநான்
சிறுவீடு கட்டியதில் அடுசோற்றை உண்டுண்டு
தேக்குசிறி யார்கள்போல
நட்டனைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
நன்னிலய மாகஉன்னி
நானென்று நீயென் றிரண்டில்லை என்னவே
நடுவே முளைத்தமனதைக்
கட்டஅறி யாமலே வாடினேன் எப்போது
கருணைக் குரித்தாவனோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

50. நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்தில் திருக் கூத்தியற்றும் அருளுக்கு இருப்பிடமான கடவுளே! கடிய பகல் பொழுதை இருளை உடைய இரவுக் காலம் என்னும் மயக்க அறிவுடையவரின் பகுதியோ என் பகுதி? கண்ட இடம் எல்லாம் என்னை விழுங்கிய நிலை கெடாமல் அருள் வெளியிலேயே ஒரு சொல்லை மௌனியாய்த் திருத்த மாய் நீ அருள் செய்தாய். அவ்வாறிருந்தும், அந்நெறியில் நான் ஒழுகாமல் என்னை வேறு ஒருவனாக நினைத்துச், சிறிய மணல் வீடு கட்டி அதிலே சமைத்திட்ட மணல் சோற்றை யுண்டது போல நடித்துத் தெவிட்டிய சிறுவரைப் போல் நடுவுநிலைமையதாகக் கற்றிட்ட கல்வியும், அதனால் அடைந்த அறிவும், நல்ல நிலைக்களமாக நினைத்து, 'நான்,

என்றும் 'நீ' என்றும் 'இரண்டு இல்லை' என்று துணிந்து, நடுவில் முளைத்த மனத்தை அடக்கி, என் வழியில் நிற்கச் செய்ய அறியாமல் நான் மிகவும் வாட்டம் அடைந்தேன். எப்போது நான் நின் கருணைக்கு உரியவன் ஆவேனோ?

51. யான் என் செய்வேன்?

மெய்விடா நாஉள்ள மெய்யருள் இருந்துநீ
மெய்யான மெய்யையெல்லாம்
மெய்யென வுணர்த்தியது மெய் இதற் கையமிலை
மெய்யேதும் அறியாவெறும்
பொய்விடாப் பொய்யனேன் உள்ளத் திருந்துதான்
பொய்யான பொய்யையெல்லாம்
பொய்யெனா வண்ணமே புகலவைத் தாய்எனில்
புன்மையேன் என்செய்குவேன்?
மைவிடாது எழுநீல கண்டகுருவே விண்டு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கள் தொறு நின்றகுருவே
கைவிடா தேஎன்ற அன்பருக்கு அன்பாய்க்
கருத்தூ டுணர்த்துகுருவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

51. நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்துள் இன்பக் கூத்து இயற்றும் அருளுக்கு இருப்பிடமான இறைவனே! மேகம்போன்ற கருமை நீங்காது அழகுடன் வளரும் நீலகண்ட வடிவான மெய்க் குரவனே! திருமால் வடிவான ஞான குருவே! தாமரை மலரைப் பொருந்தி மறைகளை ஓதும் நான்முகன் வடிவான குருவே! மதங்களில் எல்லாம் விளங்கும் குருவே! எங்களைக் கைவிடாதிருக்க வேண்டும் என்று வேண்டிக் [கொள்ளும் மெய்யடியாரிடத்து

அன்பாய்க் கருத்துள் நின்று உண்மையை உணர்த்தும் குருவே!

மெய்ம்மையை விட்டு நீங்காத நாவை உடைய மெய்மை யுடையவரிடத்து நீ மேலோங்கியிருந்து மெய்ப் பொருள் களையெல்லாம் மெய்ம்மையே என்று உணர்த்தினாய். அஃது உண்மையேயாகும். இதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை.

மெய்ம்மை ஒரு சிறிதும் அறியாத — வெறும் பொய்யை விட்டு நீங்காத — பிறப்புக்கு உரியவனான என் மனத்துள் இருந்து கொண்டு, அப்பொய்களை எல்லாம் பொய் என்று எண்ணாத வண்ணம் செய்தாய், அவற்றை மெய் என்று கூறுமாறு செய்தனை! இவ்வாறாயின், மிகத் தாழ்ந்த யான் என்ன செய்வேன்!

52. பூசை செய்யாததற்குக் காரணம்!

பண்ணேன் உனக்கான பூசையொரு வடிவிலே
பாவித்தி றைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி யப்
பனிமலர் எடுக்கமனமும்
நண்ணேன் அலாமலிரு கைதான் குவிக்கஎனின்
நாணும்என் னுளம்நிற்றிநீ
நான்கும்பி டும்போ தரைக்கும்பி டாதலால்
நான்பூசை செய்யல்முறையோ
விண்ணே விணாதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே அவ் வித்தின்முளையே
கண்ணே கருத்தே என் எண்ணே எழுத்தே
கதிக்கான மோனவடிவே

கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே'

52. இறைவ! உனக்குரிய பூசையை நான் செய்த தில்லை. ஒரு வடிவத்தில் நின்னைப் பாவனை செய்து வணங்க, அதற்காகவே பார்க்கும் மலர்கள் எல்லாவற் றுள்ளும் நீயே நிறைந்து விளங்குகின்றாய். அதனால் அம்மலரைப் பறிக்கவும் நான் எண்ணமாட்டேன். அன்றியும், இரண்டு கைகளைக் குவித்து வணங்கலாம் என்றாலோ என் உள்ளத்துள் நீயே நிற்கின்றாய். ஆதலால் அதற்கு என் மனம் நாணம் கொள்கின்றது. அங்ஙனம் மனத்தின் ஒருமைப் பாடின்றி நான் கும்பிடும்போது அஃது அரைக் கும்பிடே! ஆதலால் நான் நின்னைப் பூசை செய்தல் முறை யாகாது! பெருவெளியே, விண் முதலான பூதங்களே! நாத தத்துவமே! மறையே! மறை முடிவே! மேன்மையுடைய கேள்வியே! கேள்விஎன்ற நிலத்துள் முளைக்கின்ற விதையே! அந்த விதையினின்றும் தோன்றும் முளையே! கண்களே! மனமே! என் தருக்கமே! எழுத்தான இலக்கணமே! வீடு பேற்றுக்குக் காரணமான மௌன வடிவே! நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் அருளுக்கு இருப்பிடமானவனே!

53. ஞானத்துக்கு உரியவர்

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றும்எனலால்
சகமி திருந்தாலும் மரணமுண் டென்பது
சதாநிட்டர் நினைவதில்லை
சிந்தைஅறி யார்க்கிது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரலரோ

இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர்
இருக்காதி வேதமுனிவர்
எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள்
இரவிமதி ஆதியோர்கள்
கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்கள் யாவரும்
கைகுவித் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

53. மறைமொழியானது கூறுவது, எப்போதும் மனம் எதையேனும் ஆசையால் பற்றினால், அதுவாகவே வந்து முடிவுபெறும் என்பதாம். ஆதலால், இவ்வுலகத்தில் இருப் பினும் இறப்பு உண்டு என்பதை நீங்கா நிட்டையில் உள்ளவர் எண்ணிப் பார்ப்பதில்லை. இந்த உண்மை உள்ளத்தில் ஊன்றி உணரும் அறிவில்லாதவர்க்குக் கூறுவ தன்று. அங்ஙனம் கூறினும் பல வாதங்களுக்கு காரண மாகும்.

தெய்வக் குணமுடைய மார்க்கண்டரும், சுகர் முதலான முனிவரும், சித்தாந்த நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும் என்றும் பொன்றாச் செல்வர் அல்லரோ! இந்திரன் முதலிய வானவரும், நான்முகன், திருமால் முதலான தேவர்களும், இருக்கு முதலான வேதங்களை ஓதியுணர்ந்த முனிவர்களும், எண்ணில்லாத கணநாதர்களும், சத்தியநாதர் முதலான ஒன்பது சித்தர்களும், கதிரவன் சந்திரன் முதலானவர்களும் கந்தவர்களும், கின்னரர்களும் மற்றுமுள்ளவரும் கை கூப்பி வணங்கும் இறையே! நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தியற்றும் அருளுக்கு இருப்பிட மானவரே!

54. அருள் செய்க!

துள்ளுமறி யாமனது பலிகொடுத்தேன் கன்ம
துட்டதேவதைகள் இல்லை

துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன் அன் பபிடேகநீர்
உள்ளுறையில் என்ஆவி நைவேத்தியம் பிராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகாலம் அன்றிது சதாகால பூசையா
ஒப்புவித்தேன் கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னே சீனியே
திவ்யரசம் யாவும் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளன்அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லவுறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

54. துள்ளும் இயல்பையுடைய என் மனம் என்ற ஆட்டினைப் பலி தந்தேன். ஆதலால் கன்மம் என்ற தீய தேவதைகள் இனிமேல் என்னைத் துன்புறுத்த மாட்டா. அருள்நிலை என்று கூறப்படும் நான்காம் நிலையான துரிய நிலையில் விளங்கும் அமைதி தேவதையான நினக்கே, நின் தொண்டனான அடியேனின் அன்பானது மஞ்சனம் ஆட்டும் திருமஞ்சன நீர் ஆகும். என் உள்ளத்தில் நீ தங்கினால் என் உயிரானது நைவேத்தியம் ஆகும். என் உயிர்ப்பு மணமுடைய நறும்புகையாகும். எனது அறிவு, சுடர் தீப மாகும். இத்தகைய வழிபாடு, குறித்த ஒரு பொழுது மட்டு மன்று. எப்போதும் நின் திருவடிக்குத் தவறாது இயற்றும் வழிபாடாக ஒப்புவித்தேன். ஆதலால் எனக்கு அருள் செய்வாய்!

மறைகளால் தெளிவாய் வடிக்கப்பட்ட அமிர்தத் தொகுதியே! தெளிவான தேனே! இனிய சீனியே! தெய்வத் தன்மையுடைய சுவைகள் எல்லாம் ஒருசேரக் கூடி ஒழுகும் பாகே! தெவிட்டாத இன்பமே! கள்வனான என் அறிவில்

மெல்ல மெல்ல வெளிப்படக் கலக்க வரும் நல்ல உறவே! நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்துள் ஆனந்தக் கூத்தி யற்றும் கருணைக்கு இருப்பிடமான இறையே!

(மறி-ஆடு. கர்மதுஷ்ட தேவதை-கன்மமான தீய தேவதை.)

55. கல்நெஞ்சனுக்கு அருள்வாயோ?

உடல்குழைய என்பலெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஒருறவும் உன்னிஉன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பி யார்த் தார்த்தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானே அவ் வானில்இன்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடுழி
வாழி என வாழ்த்தியேத்தும்
கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளியை
கல்நெஞ்ச னுக்கெளியையோ
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே!

55. நினைப்பதற்கு அரிய தில்லைச் சிற்றம்பலத்தில் இன்பக் கூத்து இயற்றும் அருளுக்கு இருப்பிடமானவனே! நல்ல தவத்தைச் செய்தலால் உடலானது குழையவும், அது காரணமாய் எலும்புகள் உருகவும், அன்பின் மிகுதியால் இரு கண்களினின்று கண்ணீர் ஊற்றுக் கண் திறந்தாற்போல் பெருகி வழிந்திடவும், இரும்பு ஊசியானது காந்தக் கல்லைக் கண்டு அதனிடம் சென்று சேர்வதைப் போன்று, ஒப்பில்லாத

உன் உறவை எண்ணி எண்ணி, மனம் படபட எனத் துடித்து உள்ளே நடுக்கம் அடையவும், பாடி ஆடிக் குதித்துக் குளிர்ந்த சந்திரனிடம் உண்டாகும் நிலவைப் போன்ற புன்னகையை விரித்துப் பலகால் ஆரவாரம் செய்து எழுந்து, இதழ்கள் அலரும் தாமரை மலர் போன்ற கைகளை விரித்தும் குவித்தும், 'வானே, அந்த வானின்று பொழியும் மழையே! மழைத் தாரைகளால் உண்டாகும் பெருக்கே! நெடுங்காலம் வாழ்க' என்று வாழ்த்தித் துதிக்கும், கடலானது மடை திறந்தாற் போன்ற அன்பரின் அன்புக்கு எளியவனாய் இருப்பாய்! கல் நெஞ்சனான எனக்கு எளிமையாய் இருப்பாயோ!

56. எல்லா இன்பங்களையும் உதவுக!

இங்கற்ற படி அங்கும் எனவறியும் நல்லறிஞர்
எக்கால முமுதவுவார்
இன்சொல்தவ றார்பொய்ம்மை யாமிழுக்குரையார்
இரங்குவார் கொலைகள்பயிலார்
சங்கற்ப சித்தரவர் உள்ளக் கருத்திலுறை
சாட்சிநீ இகபரத்தும்
சந்தான கற்பகத் தேவாய் இருந்தே
சமத்தவின் பமுமுவுவாய்
சிங்கத்தை ஒத்தெனைப் பாயவரு வினையினைச்
சேதிக்க வருசிம்புளே
சிந்தா குலத்திமிரம் அகலவரு பானுவே
தீனனேன் கரையேறவே
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளரருள்
கனவட் டக்கப்பலே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே!

56. 'இம்மையில் நிகழ்ந்து முடிந்தபடியே மறுமையிலும் நிகழும், என்று அறிகின்ற பேரறிவினர் எப்போதும்

மற்றவர்க்கு உதவுவர். அவர் இனிய சொல் சொல்லுவதில் தவறார். குற்றமுடைய பொய்ம்மொழி பேசார். பிறர்க்கு இரங்குவர். பிறவுயிர்களைக் கொல்லுதலைச் செய்யார். இத்தகைய உயர்ந்த கொள்கைகளை உறுதியாகக் கடைப் பிடிக்கும் சித்தரின் உள்ளக் குறிப்பில் வீற்றிருந்து நீங்காத சான்றாய், இம்மை மறுமை இரண்டிலும், தெய்வ மரங் களான சந்தனம் கற்பகம் என்பவை போல் விளங்கி எல்லா வகையான இன்பங்களையும் இறைவ, நீ உதவுவாய்!

சிங்கத்தைப் போன்று என்னைக் கொன்று தின்னவரும் வினைகளை அந்தச் சிங்கத்தை அடக்கவல்ல சிம்புள் பறவை போல் வருபவனே! உள்ளத்தில் உண்டாகும் கவலை என்ற பேரிருள் நீங்குமாறு வரும் கதிரவனே! எளியவனான நான் பிறவி என்ற கடலைக் கடந்து வீடுபேறு என்ற கரையை அடைந்து ஏறும்படி, எல்லை இல்லாத என் பேரன்பான வெள்ளத்தில் உலவுகின்ற அருள்வான வெளியில் ஓடி உலவும் மரக்கலமே! நினைத்தற்கரிய தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தை இயற்றும் அருளுக்கு இருப்பிடமான கடவுளே!

(சிம்புள் — சிங்கத்தையும் வெல்ல வல்ல பறவை. அஃது எட்டுக் கால்களையுடையது. இரணியனைக் கொல்லத் தூணின்று வெளிப்பட்ட நரசிம்மத்தின் ஆவேசத்தை அடக்கச் சிவபெருமான் சிம்புள் பறவையாய் வந்தார் என்பது இங்குக் குறிக்கத் தக்கது. இப்பறவை 'சரபம்' எனவும் கூறப்படும்.)

7. சித்தர் கணம்

57. சித்தரை வணங்குதல்

திக்கொடு திகந்த மும் மனவேக மென்னவே
    சென்றோடி ஆடிவருவீர்

செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவளாவி
உக்ரமிகு சக்ரதரன் என்னநிற் பீர் கையில்
உழுந்தமிழும் ஆசமனமா
ஓரேழு கடலையும் பருகவல் லீர் இந்த்ரன்
உலகும்அயி ராவதமுமே
கைக்கெளிய பந்தாய் எடுத்துவிளை யாடுவீர்
ககனவட் டத்தையெல்லாம்
கடுகிடை யிருத்தியே அட்டகுல வெற்பையும்
காட்டுவீர் மேலும்மேலும்
மிக்கசித் திகளெலாம் வல்லநீர் அடிமைமுன்
விளங்கவரு சித்தியிலிரோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

(மௌன குரு, சித்தரான திருமூலர் மரபில் வந்தவர். ஆதலால், சித்தர் கூட்டத்தை வணங்குகின்றார் இப்பகுதியில்.)

57. வேதாந்தச் சித்தாந்தங்களைச் சமரசமாய்க் கொண்டு சிறந்த நிலையை அடைந்ததால் உண்டான ஞானத்தையுடைய சித்தர்களே! நீவிர் திக்குகளிலும் திக்குகளின் எல்லையிலும் மனத்தின் வேகத்தைப் போன்று விரைவாய்ச் சென்று ஓடியும் விளையாடியும் வருவீர்!' செம்பொன் மயமான பெரிய மேருமலையுடன் நல்ல குணமான மேரு மலை போன்று விளங்கும் துருவ மண்டலம் வரை சென்று பொருந்தி வேகம் மிக்க ஆழிப்படையையுடைய திரிவிக்கிரமன் போன்று விளங்குவீர். கையகத்தே கொண்ட உழுந்தின் அளவாய் ஆழமான ஏழுகடல்களையும் குடிக்கும் நீராய்க் (ஆசமன நீராய்க்) குடிக்க வல்லவர் ஆவீர்! வான் உலகத்தையும் அதிலே உள்ள ஐராவதம் என்னும் யானை

யையும் கைகளுக்கு எளிதாகப் பந்து போல் எடுத்து விளையாடுவீர்! வான மண்டலங்களையெல்லாம் கடுகைத் தொளைத்து அதில் புகுத்தி எட்டுக்குல மலைகளையும் காண்பிப்பீர்! மேன்மேலும் மிக்க சித்திகளை எல்லாம் செய்ய வல்ல நீங்கள் உங்களின் அடியவனான என் எதிரில் பலரும் அறியும்படி வருகின்ற சித்தியைப் பெற்றில்லையோ!

(சித்தரைத் தமக்கு அருள் செய்ய வேண்டும் எனத் தாயுமானவர் வேண்டுகின்றார்)

58. நெஞ்சக் கல்லை உருகச் செய்வீர்!

பாட்டளி துதைந்துவளர் கற்பகநல் நீழலைப்
பாரினிடை வரவழைப்பீர்
பத்மநிதி சங்கநிதி இருபாரி சத்திலும்
பணிசெயும் தொழிலாளர்போல்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர் பிச்சை
கேட்டுப் பிழைப்போரையும்
கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு
கேணியிடை குறுகவைப்பீர்
ஓட்டினை யெடுத்தாயி ரத்தெட்டு மாற்றாக
ஒளிவிடும் பொன்னாக்குவீர்
உரகனும் இளைப்பாற யோகதண் டத்திலே
உலகுசுமை யாகவருளால்
மீட்டிடவும் வல்லநீர் என்மனக் கல்லையனல்
மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

58. வேதாந்தச் சித்தாந்தங்களைச் சமரசமாகக் கருதியவரான சிறந்த நிலையை அடைந்ததால் உண்டான ஞானம் பொருந்திய சித்தர் கூட்டமே! நீவிர், இசைப்

பரட்டையுடைய வண்டுகள் நெருங்கி மொய்க்கின்ற வான் உலகக் கற்பக மரத்தின் நல்ல நிழலை இம்மண் உலகத்தில் வரவழைப்பீர்!

பதும நிதி, சங்க நிதி என்ற இரண்டு வான் செல்வங் களும் ஏவலர் போன்று உங்கள் இருபக்கங்களிலும் நின்று நீவிர் கேட்டவற்றைத் தந்து வருமாறு நீங்காது நிற்கச் செய்வீர்!

பிச்சை எடுத்து உண்டு வாழ்கின்ற மிக்க வறுமை உடையவரையும் முடியணிந்து ஆளும் மன்னராய் ஆக்குவீர்!

யுகமுடிவில் தோன்றும் பெரிய வெள்ளத்தை ஒரு சிறிய கிணற்றில் வந்து அடங்கும்படி செய்வீர்! உடைந்த மட்பாண்ட ஓட்டைக் கையினால் எடுத்து ஆயிரத்தெட்டு மாற்றையுடைய ஒளிரும் பொன்னாய் ஆக்கி வைப்பீர்!

இம்மண்ணுலகத்தைச் சுமக்கும் ஆதிசேடனும் இளைப் பாறும் பொருட்டு உங்கள் யோக தண்டமான முக்கோலில் அந்தவுலகச் சுமையை மீட்டிட வல்லீர்! எளியேனின் மனமான கல்லைத் தீயில் பட்ட மெழுகினைப் போல் உருகச் செய்வது உம் வியக்கத்தக்க செயலுக்கு அரிதாகுமோ? ஆகாது.

(பதும நிதி, சங்க நிதி—வான் உலகில் உள்ள செல் வங்கள். தாமரை வடிவாகவும், சங்கின் வடிவாகவும் அவை கேட்டார்க்குக் கேட்டவற்றைக் கேட்டவண்ணம் அளிப்பவை.)

59. உம் வல்லமை சொல்ல எளிதோ?

பாரோடுநன் னீராதி ஒன்றொடொன் றாகவே
பற்றிலய மாம்போதினில்
பரவெளியின் மருவுவீர் கற்பாந்த வெள்ளம்

பரந்திடின் அதற்குமீதே
நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
நிற்பீர் விகற்பமாகி
நெடியமுகில் ஏழும் பரந்துவரு டிக்கிலோ
நிலவுமதி மண்டலமதே
ஊரென விளங்குவீர் பிரமாதி முடிவில்விடை
ஊர்தியரு ளால்உலவுவீர்
உலகங்கள் கீழ்மேல வாகப் பெருங்காற்று
உலாவின்நல் தாரணையினால்
மேருவென அசையாமல் நிற்கவல்லீர் உமது
மேதக்க சித்தியெளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

59. வேதாந்தச் சித்தாந்தங்களைச் சமமாய்க் கருதியவராய்ச் சிறந்த நிலையை அடைந்ததால் உண்டான ஞானமுடைய சித்தர் கூட்டமே!

நிலத்துடன் நல்ல நீர் முதலாகச் சொல்லப்படுகின்றவை ஒன்றுடன் ஒன்று பற்றித் தொடர்ந்து ஒடுங்கும் காலத்தில் மேலான அருள் வெளியில் நீங்கள் தங்கியிருப்பீர்கள்! யுகமுடிவில் தோன்றும் பெருவெள்ளம் பொங்கிப் பரவிவரின், அவ்வெள்ளத்தின் மீது, நீரில் வாழ்கின்ற வண்டு என்னுமாறு அசைந்து சுழன்று சிவயோக நிலையில் இருப்பீர்! ஏழு பெரிய மேகங்கள் வேறுபாட்டை அடைந்து எங்கும் பரவி மழை பெய்தால் நிலவுடைய சந்திர மண்டலமே இடமாகக் கொண்டு அங்கு விளங்குவீர்கள். நான்முகன் முதலானவரின் முடிவு காலத்தில் ஏற்றை ஊர்தியாக உடைய சிவன் அருளால் திரிவீர்கள். உலகங்கள் எல்லாம் கீழ்மேலாய் ஆகுமாறு பெருங்காற்று வீசுமானால் நல்ல 'தாரணை யோகத்'தினால் மேருமலை போன்று அசைவின்றி நிற்பதில் வல்லமை உடையீர்! உம் மேன்மையுடைய சித்தியானது கூறுவதற்கு எளியதோ?

(தாரணை—எட்டு யோகங்களுள் ஒன்று.)

60. மானிடப் பிறவி அரியது

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏதுவரு மோஅறிகிலேன்
கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழு தேஅருள்
ககனவட் டத்தில்நின்று
காலூன்றி நின்றுபொழி ஆனந்த முகிலொடு
கலந்துமதி அவசமுறவே
பண்ணுவது நன்மை இந் நிலைபதியு மட்டுமே
பதியாய் இருந்ததேகப்
பரிவுகுலை யாமலே கௌரிகுண் டலிஆயி
பண்ணவிதன் அருளினாலே
விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவேன் உமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

60. வேதாந்தச் சித்தாந்தங்களைச் சமரசமாய்ப் பாவித்ததால் உண்டான ஞானம் பொருந்திய சித்தர் கூட்டமே!

எண்ணுதற்கு இயலாத பிறவிகளுள் மக்கள் பிறப்பு மற்றப் பிறவிகளை விட அரியதாகும். அந்த மக்கள் பிறவி தவறிவிட்டால் எந்தப் பிறவி வாய்க்குமோ? அங்ஙனம் வாய்க்கும் அப்பிறவிகளில் என்ன துன்பம் உண்டாகுமோ? அறியேன்!

ஆதலால் இடம் அகன்ற இப்பூமியில் நான் வாழ்கின்ற போதே, திருவருளான வானவட்டத்தில் நின்று, நிலைத்து நின்று பேரின்ப மழையைப் பொழிகின்ற மேகத்துடன்

சேர்ந்து, என் அறிவானது என் வயம் இழந்து அதன் வயம் ஆகுமாறு செய்வது நன்மை தருவதாகும். இந்நிலையில் அழுந்தும் வரைக்கும், உயிர் தங்கும் நிலைக்களமாய் உள்ள உடல் ஆடிவரும் பவுரிக் கூத்துக் கலைந்து போகாது, கௌரியான குண்டலி சத்தி என்ற அம்மையின் திருவருளால் அறிவுப் பெருவெளியில் நிலை பெற்றிருக்கின்ற சந்திர னிடத்துள்ள அமிர்தமானது இடையறாது பெய்ய உம் அடிமையான நான் விரும்புவேன்!

(பரிவு- கூத்து வகைகளுள் ஒன்று. குண்டலி சத்தி- மூலாதாரத்தில் பாம்பு வடிவாய் இருக்கும் ஒரு சத்தி.)

61. பொய்யொழுக்கத்தைக் கைவிடுவது எப்போது?

பொய்திகழும் உலகநடை என்சொல்கேன் என்சொல்
பொழுதிபோக கேதென்னிலோ கேன்
பொய்யுடல் நிமித்தம் புசிப்புக் கலைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவம் அலாமலிது செய்தவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும்வெளியாய்க்
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ அதையறிகிலேன்
மைதிகழும் முகிலனம் குடைநிழற் றிடவட்ட
வரையினொடு செம்பொன்மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்
வரைந்துசய விருதுகாட்டி
மெய்திகழும் அட்டாங்க யோகபூ மிக்குள் வளர்
வேந்தரே குணசாந்தரே
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

61. வேதாந்தச் சித்தாந்தங்களைச் சமரசமாகப் பாவித்ததால் உண்டான நன்னிலை பெற்ற ஞானமுடைய சித்தர் கூட்டமே!

பொய்யே மிக்கு விளங்கும் மக்கள் ஒழுக்கத்தைப் பற்றி யான் என்ன சொல்வேன்! என்ன சொல்வேன்! அந்த மக்களின் பொழுதுபோக்கு எவ்வாறு உள்ளதென்றால் நிலைக்காத பொய்யான உடலின் பொருட்டாய் உண்ண வேண்டிய உணவுக்காக அலைந்து திரிந்து இரந்து உண்ணுதல், உண்டபின் கண்மூடி உறங்குதல் ஆகும். இவை பொய்யான ஒழுக்கமே அல்லாது உயிர்க்கு உறுதி தரும் தவம் அன்று. கண் பார்வை இல்லாத குருடர்க்கும் வெளிப்படையாய்க் காணப்பட்டது இந்த ஒழுக்கமாகும். இந்த ஒழுக்கத்தைக் கைவிட்டு விலகி நிற்றல் எக்காலமோ? அதை யுணரும் ஆற்றல் எனக்கு இல்லை! கருமையுடைய மேகக் கூட்டம் குடை போன்று நிழலைச் செய்திட எட்டு மலைகளுடன் செம்பொன் மேருவான பெரிய மலையின் பக்கத்தும் யோக தண்டான கோலை எழுதிப் பெறற்கரிய வெற்றியின் பேரடையாளமாய்க் காட்டி மெய்யுணர்வு நன்கு விளங்கும் அட்டாங்க யோக நிலத்தில் வளர்கின்ற அரசரே! சிறந்த குணங்களையுடையவரே!

62. தவராச யோகராய் வீற்றிருப்பீர்!

கசதுரக முதலான சதுரங்க மனமாதி
　　கேள்வியின் இசைந்துநிற்பக்
கெடிகொண்ட தலம் ஆறும் மும்மண்ட லத்திலுங்
　　கிள்ளாக்குச் செல்ல மிக்க
தெசவிதம தாய்நின்ற நாதங்கள் ஒலிடச்
　　சிங்காச னாதிபர்களாய்த்
திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடை
　　திகழ்ந்திட, வசந்தகாலம்
இசையமலர் மீதுறை மணம்போல ஆனந்தம்

இதயமேல் கொள்ளும் வண்ணம்
என்றைக்கும் அழியாத சிவராச யோகராய்
இந்த்ராதி தேவர்களெலாம்
விசயசய சயவென்ன ஆசிசொல வேகொலு
விருக்கும்நும் பெருமைஎளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

62. வேதாந்த உண்மைகளைச் சமரசமாய்ப் பாவித்ததால் உண்டான நன்னிலை பெற்ற ஞானமுடைய சித்தர் கூட்டமே!

யானை குதிரை முதலாகக் கூறப்படும் மன்னர்க்குரிய நான்கு வகைப்பட்ட படைகள் போல், தவ வேந்தரான உங்கட்கு அந்தக் கரணம் நான்கும் நீங்கள் இட்ட வேலையை தட்டாமல் செய்து நிற்கவும், புகழ் பொருந்திய ஆறு மூல ஆதாரங்களிலும் மூன்று மண்டலங்களிலும் உம் அதிகாரம் செல்லவும், மேலாய்ப் பத்து வகையான நாதங்கள் ஒலிக்கவும், திக்குகளிலும் திக்குகளின் முடிவுகளிலும் முழுமதியான குடை ஒளி வீசவும், வசந்த காலம் வர, மலர்களில் உள்ள மணம் போல உள்ளத்தில் இன்பமானது குடிகொள்ளும் வகையில் எந்நாளும் அழியாத சிவராச யோகச் செல்வராய் விளங்குவீர். இந்திரன் முதலாகக் கூறப்படுகின்ற வானவர் அனைவரும் 'வெற்றி உமக்கு உண்டாகுக, மேலான வெற்றி உமக்கு உண்டாகுக!' என்று வாழ்த்துக் கூறக் கொலு வீற்றிருப்பீர். இந்த உம் பெருமையானது கூற எளிதோ?

(தாயுமான அடிகள்) சித்தரை மன்னருடன் ஒப்பிட்டு இங்குப் பேசுகின்றார். மன்னர்க்கு யானை முதலிய நான்கு படை இருப்பதைப் போன்று சித்தர்க்கு அந்தக் கரணம் நான்கும் உள்ளன. மன்னர்க்கு ஆணை மூன்றுலகங்களிலும் செல்வதைப் போன்று சித்தர்க்கு மூன்று மண்டலங்களிலும் செல்கின்றது. மன்னர்க்குரிய காகளம் முதலிய

கருவிகள் உள்ளன போல் சித்தர்க்கு பத்து ஒலிகள் வாத்தியங்களாய் உள்ளன. மன்னர்க்கு வெண்குடை உள்ளது போலச் சித்தர்க்கு மதியான குடை உள்ளது. மன்னர்க்குக் கட்டியம் கூறும் மக்கள் இருக்கக் கொலு வீற்றிருப்பதைப் போல் இந்திரர் முதலிய தேவர்கள் சித்தர்க்கு வாழ்த்துக் கூறக் கொலு வீற்றிருப்பர்.

(கெடி—புகழ். கெசம்—யானை. அந்தக் கரணம்— மனம் புத்தி, சித்தம், அகங்காரம். கிள்ளாக்கு — ஆணை. மூன்று மண்டலம் — அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம். தசவித நாதங்கள் — சிணி நாதம், சிணி சீணி நாதம், கண்ட நாதம், சங்க நாதம், வீணா நாதம், தாள நாதம், முரளீ நாதம், பேரி நாதம், மிருதங்க நாதம், மேக நாதம். ஆதாரங்கள் ஆறு — மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை).

63. காட்சியளித்தல் வேண்டும்

ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை
அகிலத்தின் மிசையுள்ளதோ?
ஆடிய கறங்குபோல் ஓடியுழல் சிந்தையை
அடக்கியொரு கணமேனும்யான்
காணிலேன் திருவருளை அல்லாது மௌனியாய்க்
கண்மூடி யோடுமூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
கனலினை எழுப்பநினைவும்
பூணிலேன் இற்றைநாள் கற்றதும் கேட்டதும்
போக்கிலே போகவிட்டுப்
பொய்யுலக னாயினேன் நாயினும் கடையான
புன்மையேன் இன்னமின்னம்
வீணிலே அலையாமல் மலையிலக் காகநீர்
வெளிப்படத் தோற்றல்வேண்டும்

வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே!

63. வேதாந்தச் சித்தாந்த உண்மைகளைச் சமரசமாய் நினைத்தலால் நல்ல நிலையைப் பெற்ற ஞானமுடைய சித்தர்களே!

உலகத்தில் உள்ள ஆண்களிலும் பெண்களிலும் என்னைப் போன்ற அறிவற்றவர் உலகத்தில் உண்டோ? வானில் சுழல்கின்ற காற்றாடியைப் போன்று புலன்களில் விரைவாய் ஓடி வருந்தித் திரியும் உள்ளத்தை அங்ஙனம் செல்லாமல் தடுத்து ஒருகணப் பொழுதேனும் திருவருளை நான் காண வில்லை. அதுவே அல்லாமலும், மௌன நிலையுடையவனாகிக் கண்களை மூடி இயல்பாய் ஓடும் மூச்சைத்தடுத்துக் கலைகளையுடைய மதியைத் தொடும்படி மூலாக்கினியை எழுப்புவதற்குரிய எண்ணத்தையும் கொண்டுள்ளேன். இந்நாள் வரையிலும் நான் கற்றதையும் கேட்டதையும் அவை செல்லும் வழியிலேயே விட்டுவிட்டேன். விட்டுப் பொய்யான உலக வாழ்க்கை உடையவன் ஆனேன். நாயை விட இழிந்தவனான நான் இனிமேலும் வீணான செயல்களில் புகுந்து திரியாமல் மலைக்குறி போல் நீங்கள் வெளிப் படக் காட்சி அளித்தல் வேண்டும்.

64. என் பாடலின் தன்மை

கன்னலமு தெனவும்முக் கனியெனவும் வாயூறு
கண்டெனவும் அடியெடுத்துக்
கடவுளர்கள் தந்ததல அழுதழுது பேய்போல்
கருத்தில்எழு கின்றதெல்லாம்
என்னதறி யாமைஅறி வென்னும்இரு பகுதியால்
ஈட்டுதமிழ் என்தமிழினுக்கு
இன்னல்பக ராதுலகம் ஆராமை மேலிட்டு

இருத்தலால் இத்தமிழையே
சொன்னவன் யாவன் அவன் முத்திசித் திகளெலாம்
தோய்ந்தநெறி யேபடித்தீர்
சொல்லுமென அவர்நீங்கள் சொன்னஅவையில்சிறிது
தோய்ந்தகுண சாந்தனெனவே
மின்னல்பெற வேசொல்ல அச்சொல்கேட் டடிமைமனம்
விகசிப்பது எந்தநாளோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகர் சித்தர்கணமே!

64. வேதாந்தச் சித்தாந்த உண்மைகளைச் சமமாகப் பாவித்தவராகிய, சிறந்த நிலையை அடைந்ததால் உண்டான ஞானத்தையுடைய சித்தர்கூட்டமே!

கருப்பஞ் சாற்றின் சுவை போலவும், முக்கனிகளின் சுவை போலவும், நாவில் நீர் ஊறுவதற்குக் காரணமான கற்கண்டைப் போலவும் நான் பாடும் பாடலுக்கு இறைவன் அடி எடுத்துத் தந்ததன்று. பலகாலும் அழுது அழுது பேய் போல் என் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களை எல்லாம் எளியேன் அறிவு அறியாமை என்னும் இரண்டும் பொருந்தப் பாடப்பட்டது செந்தமிழ் (மாலை). அங்ஙனம் என்னால் பாடப்பட்ட தமிழ் மாலைக்கு மிக்க அன்பு அதிகப்பட்டிருத்தலால் இவ்வுலகமானது இதற்குக் குற்றத்தைக் கூறாது. அதுபோக, முத்தி சித்திகள் எல்லாம் பொருந்திய நெறியையே கற்ற சித்தர்களே! இத்தமிழ் மாலையைக் கூறியவன் யார் என்று சொல்லுங்கள் என்று அவ்வுலகத்தவர் உங்களை வினவுவர். வினவின், நீங்கள் அதற்கு விடையாய் 'நற்பண்பு அமைந்த குணத்தவன் இதனைப் பாடினான்' எனக் கூறினால், அந்த இனிய நல்ல உரைகளைக் கேட்டு மகிழ்ச்சி அடையும் நாள் எந்த நாளோ!

(சுந்தரமூர்த்தி நாயனார்க்குப் பாடல்.பாட இறைவன் அடி எடுத்துத் தந்தான். சேக்கிழார்க்கும், 'உலகெலாம்" என்றதொடக்க அடியை இறைவன் அளித்தனன். அதுபோல் தனக்கு இறைவன் அடியெடுத்துத் தரவில்லை என்று தாயுமானவர் இதில் குறித்துள்ளார்.)

65. தவராச சிங்கம் என்பதேன்?

பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலால்
போந்திடை ஒடுக்கமுறலால்
பொலிவான வெண்ணீறு பூசியே அருள்கொண்டு
பூரித்த வெண்ணீர்மையால்
எற்பட விளங்கு ககனத்தில்இமை யாவிழி
இசைந்துமேல் நோக்கமுறலால்
இரவுபகல் இருளான கனதந்தி படநூறி
இதயம் களித்திடுதலால்
பற்பல விதம்கொண்ட புலிகலையின் உரியது
படைத்துப்ர தாபமுறலால்
பனிவெயில்கள் புகுதாயல் நெடியவான் தொடர் [நெடிய
பருமர வனங்களாகும்
வெற்பினிடை யுறைதலால் தவராச சிங்கமென
மிக்கோர் உமைப்புகழ்வர்காண்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

(இச்செய்யுளில் தவத்தவர்க்கும் சிங்கத்துக்கும் ஒப்புமை கூறப்பெற்றுள்ளது.)

65. வேதாந்தச் சித்தாந்த உண்மைகளைச் சமரசமாகப் பாவித்தராகிய, சிறந்த நிலையை அடைந்ததால் உண்டான ஞானம் பொருந்திய சித்தர்கணங்களே! அழகுடைய கைகால்களில் கூரிய நகங்களைப் பெற்றிருத்தலாலும், இடுப்பானது சுருங்கிக் [illegible]ப்படுவதாலும்,

அழகுடைய வெண்ணீற்றைப் பூசித் திருவருள் பெற்று இறுமாந்துள்ள மதிக்கத்தக்க குணத்தாலும், ஒளியுண்டாக விளங்கும்படி அறிவு வெளியில் இமை கூடாமல் மேல் நோக்கியிருத்தலாலும். இரவிலும் பகலிலும் உயிர்களின் அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் ஆணவம் என்ற பெரிய யானை இறக்கும்படி செய்து மனம் களிப்படைந் திருத்தலாலும், பற்பல விதமான புலித் தோலையும் மான் தோலையும் இருக்கையாகப் பெற்று மிக்க புகழைப் பெற்றி ருத்தலாலும், பனி வெயில் முதலானவை நுழையப் பெறாமல் அகன்ற வானத்தை அளாவிய உயர்ந்த பருத்த மரங்கள் நெருங்கப் பெற்ற காடு நிறைந்த மலையிடை வாழ்தலாலும், 'தவராச சிங்கம்' என்று உயர்ந்தவர் உம்மைப் புகழ்ந்து பாராட்டுவர்.

(கூரிய நகங்களைப் பெற்றிருத்தல், சுருங்கிய இடை, வெண்நிறம், மேல் நோக்கிய விழிகள், யானையைக் கொல்லல், புலி மான் தோல்களை வைத்திருத்தல், காட்டில் வாழ்தல் என்பவை தவத்தவர்க்கும் சிங்கத்துக்கும் பொது வான பண்புகள்.)

66. நான் பெற்ற கல்வி முக்தி தருமோ?

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும்அறி வில்லாதஎன்
கன்மத்தை என்சொல்கேன் மதியைஎன் சொல்லு
கைவல்ய ஞானநீதி கேன்
நல்லோர் உரைக்கிலோ கன்மம்முக் கியம்என்று
நாட்டுவேன் கன்மம்ஒருவன்
நாட்டினாலோ பழைய ஞானம்முக் கியம்என்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வர வும்திரா விடத்திலே
வந்தவா விவகரிப்பேன்

வல்லதமிழ் அறிஞர்வரின் அங்ஙனமே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தைஎன் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

66. வேதாந்தச் சித்தாந்த உண்மைகளைச் சமரசமாகப் பாவித்தவராகிய, நன்னிலை பெற்றதால் உண்டான ஞானத்தையுடைய, சித்தர் கூட்டமே!

நல்ல பண்பாடின்றி நூலைக் கற்றவரை விடக் கல்லாதவர்களே மிகவும் நல்லவர்கள்! நல்லவர்கள்!

கல்வி கற்றும் ஞானம் பெற்றிராத என் ஊழ்வினைப் பலனை என்னவென்று சொல்வேன்? விடுபேற்றை அளிக்கும் மெய்யுணர்வு நீதிகளை நல்லவர் எடுத்துக் கூறினால், அந்த வுணர்வை விடச் செய்யும் வினையே முதன்மையானது என்று நிலை நாட்டுவேன்! வேறொருவன் வினையே முதன்மையானது என்று பலவாறு கூறுவானாயின் தொன்று தொட்டு வருகின்ற ஞானமே முக்கியமானது எனக் கூறுவேன். வடமொழியில் வல்லவன் ஒருவன் வந்து வாதிட்டால், அவன் உரைப்பவை திராவிடமான தமிழ் மொழியில் வந்தது என்று வாதிடுவேன். தமிழில் வல்ல அறிஞர்வரின், வடமொழியினின்று சில சொற்களைக் கூறுவேன். இங்ஙனமாக, எவரையும் முறைப்படி வெல்லாமல், அவர்களை மயக்கி ஓட்டிவிடும்படியாய் எனக்கு வாய்த்த கல்வியால் பயன் என்ன? அது வீடு பேற்றைத் தருமோ?

8. ஆனந்தமான பரம்

67. பல குற்றங்கள்

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்றும் ஒன்றிலேன்பால்

கோரம்எத் தனை பட்ச பாதம்எத் தனை வன்
குணங்கள் எத் தனை கொடியபாழ்ங்
கல்லாமை எத்தனை அகந்தையெத் தனை மனக்
கள்ளம் எத்தனை உள்ளசற்
காரியம் சொல்லிடினும் அறியாமை எத்தனை
கதிக்கென் றமைத்த அருளில்
செல்லாமை எத்தனை விர்தாகோட்டி என்னிலோ
செல்வதெத் தனை முயற்சி
சிந்தையெத் தனை சலனம் இந்த்ரசா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலா
அல்லாமை எத்தனை அமைத்தனை உனக்கடிமை
யானேன் இவைக்கும் ஆளோ?
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

67. இந்த அண்டங்களும் இதற்கு அப்பால் உள்ள மற்ற அண்டங்களும் நின் திருவருட் பெரு நிறைவில் சிறியனவாய் அடங்க எங்கும் நிறைந்த பேரின்பமான பரம் பொருளே!

கொல்லாமை என்ற குணமானது அளவில்லாத தீய குணங்களைப் போக்கும். அத்தகைய சிறந்த குணம் சிறிதும் என்னிடம் இல்லை! இத்தகைய என்னிடம் கொடுமைகள் எத்தனை உள்ளன! ஒரு பக்கம் சாய்தலான தீமைகள் எத்தனை அமைத்தாய்! வலிய கொடுங்குணங்கள் எத்தனை அமைத்தாய்! கொடியவும் பாழ்படுவதற்கும் காரணமான கல்லாமைக் குணங்கள் எத்தன அமைத்தாய் அகங்காரக் குணங்கள் எத்தனை அமைத்தாய்! மனக்! குற்றங்கள் எத்தனை அமைத்தாய்; மெய்மையான நற் செயல்களைக் கூறினும் அவற்றை அறிந்து கொள்ளாமை யான தீயகுணங்கள் எத்தனை அமைத்தாய்! வீடுபேற்றுக்கு என்று அமைக்கப்பட்ட அருட்குணங்கள் எத்தனை அமைத்தாய்! பயனில்லாத வீணர் கூட்டம் என்றாலோ

பெருவேட்கையுடன் ஓடிடும் விருப்பம் எத்தனை அமைத்தாய்! பயனற்ற முயற்சியில் செல்லும் எண்ணங்கள் எத்தனை அமைத்தாய்! அழிவையுடைய கண்கட்டு வித்தை யான இந்திர சாலத்தைப் போன்ற இந்தப் பொய்யான வுடலில் விருப்பம் முதலாகப் பொருந்தாத பண்புகள் எத்தனை என்னிடம் அமைத்தாய்! நான் நினக்கு அடிமை யானேன். இத்தகைய நான் கொடிய இக்குணங்களுக்கும் அடிமை ஆவேனோ! ஆகமாட்டேன்! (விந்தாகோட்டி — வீணர் கூட்டம்)

68. உன்னை அறிதற்கு வல்லார் யார்?

தெருளாகி மருளாகி உழலும்மன மாய்மனம்
சேர்ந்துவளர் சித்தாகி அச்
சித்தெலாம் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்திரமாய்த்
திரமாகி நானாவிதப்
பொருளாகி அப்பொருளை அறிபொறியு மாகிஐம்
புலனுமாய் ஐம்பூதமாய்ப்
புறமுமாய் அகமுமாய்த் தூரம் சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
இருளாகி ஒளியாகி நன்மைதீ மையுமாகிம்
இன்றாகி நாளையாகி
என்றுமாய் ஒன்றுமாய்ப் பலவுவாய் யாவுமாய்
இவையல்ல வாயநின்னை
அருளாகி நின்றவர்கள் அறிவதல் லால்ஒருவர்
அறிவதற் கெளிதாகுமோ?
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

68. இந்த உலகமும் இதற்கு அப்பால் அமைந்துள்ள உலகங்களும் நின் திருவருட்பெரு நிறைவில் அடங்கும்படி எங்கும் நிறைந்த பேரின்பமான பரம்பொருளே!

தெளிவாகி, மயக்கமாகி, இடைவிடாது சுழலும் மனமாகி, மனத்தைச் சேர்ந்து வளர்வதற்கு இடமான அறிவாகி, அந்த அறிவனைத்தையும் ஆழ்ந்து நிற்கும் பேரறிவான சிவ ஞானமாகி, வியப்புடைய ஒன்றாகி, அசைவற்றதாகி, பலவகைப்பட்ட பொருள்களாகி, அப்பொருளை அறியும் ஐம்பொறிகளுமாகி, ஐந்த பூதங்களாகி, வெளியுமாகி, உள்ளுமாகி, நெடுந்தொலைவாகி, அண்மையுமாகி, போக்கும் வரவும் ஆகி, இருளாகி ஒளியாகி, நன்மை தீமைகளுமாகி, இன்றாகி நாளையுமாகி, என்றுமாகி, எல்லாமாகி, இவை அனைத்தும் அல்லவுமாகியுள்ளாய். இத்தகைய நின்னை, நின் திருவருளுக்கு இலக்காகி நின்ற அறிஞர் அறிவதே அல்லாது, வேறொருவர் அறிவதற்கு அது எளியதாகுமோ!

69. அறுவகைச் சமயத்தோறும் நின்னை அறியார்

மாறுபடு தர்க்கம் தொடுக்க அறிவார் சாண்
வயிற்றின் பொருட்டதாக
மண்டலமும் விண்டலமும் ஒன்றாகி மன துழல
மாலாகி நிற்க அறிவார்
வேறுபடு வேடங்கள் கொள்ள அறிவார் ஒன்றை
மெணமெணென் றகம்வேறதாம்
வித்தைஅறி வார் எமைப் போலவே சந்தைபோல்
மெய்ந்நூல் விரிக்க அறிவார்
சிறுபுலி போல்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்க அறிவார்
திரமென்று தம்தம் மதத்தையே தாமதச்
செய்கையொடும் உளற அறிவார்
ஆறுசம யங்கள்தொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாவரறிவார்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

69. இந்த வுலகமும் இதற்கு அப்பால் உள்ள உலகங்களும் நின்னருள் நிறைவில் அடங்கும்படி ஒரு பெரு நிறைவாகிப் பேரின்பமாய் விளங்கும் பரம்பொருளே! மக்களுள் சிலர் நாவல்லமையால் மாறுபடுவதற்குரிய தருக்கங்களைத் தொடுத்து வாதிட அறிவார்கள்! சாண் அளவுள்ள வயிற்றின் பொருட்டாய் மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒன்றாக எண்ணி உள்ளம் சுழலப் பேராசை கொண்டு நிற்க அறிவார்கள்! வெவ்வேறான கோலங்களைக் கொள்ள அறிவார்கள். ஒரு மந்திரத்தை நாவினால் சொல்லிய வண்ணம் மனம் வேறு படுவதற்குரிய கலையை அறிவார்கள். எங்கலைப் போன்று சந்தையில் பல பொருள்களையும் பரப்பி வைப்பதைப் போல உண்மை நூற்பொருளைப் பரப்பிட அறிவார்கள். சினமுடைய புலியைப் போன்று சீறி மூச்சைத் தடுத்து விழிகள் மிகவும் சிவக்க அறிவார்கள். தங்கள் தங்கள் மதக் கொள்கையையே உறுதியானது என்று தாமத குணமேம்பாட்டால் மனம் போனவாறு உளற அறிவார்கள். ஆனால் அறுவகைப்பட்ட சமயங்கள் தோறும் அவரவர் கொள்கைக்கு ஏற்ப வெவ்வேறாகி வெளிப்பட்டு நின்று விளையாடும் நின் உண்மையினை அறிவார் யார்?

70. அடியேன் பொய்யுலகை நாடுதல் முறையோ?

காயிலை யுதிர்ந்தகனி சருகு புனல் மண்டிய
  கடும்பசி தனக்கடைத்தும்
 கார்வரையின் முழையில் கருங்கல்போல் அசையாது
  கண்மூடி நெடிதிருந்தும்
தீயினிடை வைகியும் தோயமதில் மூழ்கியும்
  தேகங்கள் என்பெலும்பாய்த்
 தெரியநின் றும்சென்னி மயிர்கள்கூ டாக்குருவி
  தெற்றவெயி லூடிருந்தும்
வாயுவை அடக்கியும் மனதினை அடக்கியும்

மௌனத்தி லேஇருந்தும்
மதிமண்ட லத்திலே கனல்செல்ல அமுதுண்டு
வனமூ டிருந்தும் அறிஞர்
ஆயுமறை முடிவான அருள்நாடி னார் அடிமை
அகிலத்தை நாடல் முறையோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

70. இந்தவுலகும் இதற்கு அப்பால் உள்ள உலகங்களும் நின் திருவருள் பெருநிறைவில் அடங்கும்படி எங்கும் நிறைந்த பேரின்பமான பரம்பொருளே! கடுமையான பசி வந்தபோது கிடைத்த காய், இலை, உதிர்ந்த கனி, சருகு, நீர் என்ற இவற்றுள் ஒன்றை அப்பசியைப் போக்க வயிற்றுள் நிரப்பியும், பெரிய மலைகளில் போய் அங்கிருக்கும் குகைகளில் கருங்கல்லைப் போன்று அசையாமல் கண்களை மூடி, நீண்ட நாள் அசையாதிருந்தும், ஐந்து தீக்களின் நடுவில் இருந்தும், குளிர்ந்த நீரில் முழுகியும், உடல்கள் எலும்புக் கூடாய் விளங்கித் தோன்ற மெலிந்திருந்தும், தலை மயிர் ஒட்டிய சடையாய் ஆக அதனைக் குருவிகள் கூடு என்று எண்ணித் தங்குமாறு கொடிய வெயிலில் இருந்தும், பிராண வாயுவான மூச்சினை அடக்கியும், மோன நிலை எய்தியும், புருவத்தின் நடுவில் உள்ள திங்கள் மண்டிலத்தில் மூலத் தீயினை எழுப்பிச் செல்லுமாறு விடுத்து அங்குள்ள அமிழ்தத்தை உண்டு காட்டிலே தங்கியிருந்தும், மேலான அறிஞர், ஆராயப்படும் மறைமுடிவான திருவடித் திருவருளை நாடினார். அவர்களுக்கு மாறாக நான் பொய்யுலகை மெய் என்று எண்ணி அதை நாடுதல் முறையோ!

71. குணமும் குற்றமும் அவனே!

சுத்தமும் அசுத்தமும் துக்கசுக பேதமும்
தொந்தமுடன் நிர்த்தொந்தமும்

தூலமொடு சூக்குமமும் ஆசையும் நிராசையும்
சொல்லுமொரு சொல்லின்முடிவும்
பெத்தமொடு முத்தியும் பாவமொடு அபாவமும்
பேதமொடு அபேதநிலையும்
பெருமையோடு சிறுமையும் அருமையுடன் எளிமையும்
பெண்ணினுடன் ஆணுமற்றும்
நித்தமும் அநித்தமும் அஞ்சன நிரஞ்சனமும்
நிட்களமும் நிகழ்சகளமும்
நீதியும் அநீதியும் ஆதியொடு அனாதியும்
நிர்விடய விடயவடிவம்
அத்தனையும்நீ அலதுள ளத்தனையும் இல்லையெனின்
யாங்கள்உனை யன்றியுண்டோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

71. இந்தவுலகமும் இதற்கு அப்பால் உள்ள உலகங்களும் தன்னருள் நிறைவில் அடங்கும்படி ஒரு பெரு நிறைவாகிப் பேரின்பமாக விளங்கும் பரம்பொருளே! தூய்மையும் அழுக்கும் (அசுத்தமும்) துன்ப இன்ப வேறுபாடுகளும், தொடர்பும் தொடர்பின்மையும், பருமையும் நுண்மையும், ஆசையும், ஆசையின்மையும், புகழ்ந்து சொல்லப்படும் மறையும் அதன் முடிவும், பற்றும் பற்றின்மையும், நினைத்தலும் நினையாமையும், ஒற்றுமையும் வேற்றுமையும், பெருமையும் சிறுமையும், அருமையும் எளிமையும், பெண்மையும் ஆண்மையும், அழியாமையும் அழிவும், குற்றமும் குற்றம் இல்லாமையும், உருவமின்மையும் அடையக்கூடிய உருவத் தன்மையும், நீதியும் அநீதியும், ஆதியும் அநாதியும், ஒருவர்க்குக் காணப்படுபவையும் காணப்படாதவையும் என்னும் இவை எல்லாமும் நீயே அல்லால் என் அளவும் வேறு பொருள் இல்லை. அங்ஙனமாயின், யாங்கள் உன்னையன்றித் தனியே பிரிந்து வேறு நிற்பது உண்டோ?

(தொந்தம் — தொடர்பு; நிர்த்தொந்தம் — தொடர்பின்மை; பெத்தம் — கட்டு; பந்தம். முத்தி — விடுதலை;

பாவம்—பாவித்தல். நினைத்தல். அபாவம்— நினையாமை. அஞ்சனம் — குற்றம். நிரஞ்சனம் — குற்றம் இன்மை. விடயம் — காணப்படுபவை. நிர்விடயம் — காணப்படா தவை.)

72. நின் அடியாருடன் என்னைச் சேர்ப்பது நின்பராம்

காராரும் ஆணவக் காட்டைக்களைந் தறக்
 கண் டகங் காரமென்னும்
கல்லைப் பிளந்து நெஞ் சகமான பூமிவெளி
 காணத் திருத்தி மேன்மேல்
பாராதி அறியாத மோனமாம் வித்தைப்
 பதித் தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டும்மா மாயைவன்
 பறவைஅணு காதவண்ணம்
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
 நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
 நின்னருள் பாரம் என்றும்
ஆராரும் அறியாத சூதான வெளியில்வெளி
 யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
 ஆனந்த மானபரமே!

72. இந்த அண்டமும் இதற்கு அப்பால் உள்ள அண்டங்களும் நின்திருவருள் பெருநிறைவில் அடங்கும்படி எங்கும் நிறைந்த பேரின்பமான பரம்பொருளே! நின் மெய்யன்பர், இருள் நிறைந்திருக்கும் ஆணவமான காட்டினை வேருடன் பறித்து வெட்ட வெளியாய் ஆக்கி, அகங்காரம் என்ற கல்லைப் பிளந்து, மனம் என்ற நிலமானது வெளிப்பட்டுத் தோன்றுமாறு திருத்துவர்; மேலும் மேலும் பூவுலகினர் முதலியவர் அறியாத மோன நிலை என்ற விதையை

அதில் வித்துவர்; அன்பான நீரைப் பாய்ச்சுவர்; அது வளர்ந்து பயிராய் விளையுமட்டும், பெரிய மாயை என்ற வலிய பறவை சேர்ந்து அப்பயிரை அழிக்க இயலாதபடி தாம் செய்ய வேண்டிய தவ முயற்சியில் சிறிதும் குறைவில்லாது செய்வர்; செய்து காப்பர்; அதனால் விளைந்த சிவ போகத்தை அனுபவித்து உய்வர். அத்தகைய நின் மெய் அடியார் கூட்டத்தை நான் அடையும்படி நீ எனக்கு முன் நின்று காப்பது நின் திருவருளுக்குரிய கடமை. எக்காலத்தும் எவ்வகைப் பட்ட மேலோரும் உணராத அறிவுப் பெருவெளி எனப்படும் சிதாகாயத்தில் (அறிவு வெளியில்) வெளிப்பட்டருளும் துரிய வடிவே!

73. என் பொல்லாங்கை எவர்க்குச் சொல்வேன்!

வானாதி பூதமாய் அகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகடலுமாய்
மதியாகி இரவியாய் மற்றுள வெலாமாகி
வான்கருணை வெள்ளமாகி
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவும்
நானென்பது அற்றிடாதே
நான்நான் எனக்குளறி நானா விகாரியாய்
நானறிந் தறியாமையாய்ப்
போனால் அதிட்டவலி வெல்லவெளி தோ பகல்
பொழுதுபுகு முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள் வான்தனை எழுப்பவச
போதிப்ப தெந்தநெறியை மோயினிப்
ஆனாலும் என்கொடுமை அநியாயம் அநியாயம்
ஆர்பால் எடுத்துமொழிவேன்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

73. இந்த அண்டமும் இதற்கு அப்பால் உள்ள அண்டங்களும் நின்னருள் நிறைவில் அடங்கும்படி எங்கும் நிறைந்த பேரின்பமான பரம்பொருளே! வான் முதலான ஐந்து பூதங்களாகி, மேலும் பல அண்ட கோடிகளாகிப் பலவுயர்ந்த மலைகளாகி, உலகை வளைத்து நிற்கும் கடலாகி, சந்திரனாகி, கதிரவனாகி, மேலும் உலகத்தில் காணப்படும் எல்லாப் பொருள்களுமாகி, சிறந்த அருள் வெள்ளமாகி, நானாகி நின்றவனும் நீயாகி நின்றிட செய்யும் நிலையும், நான் என்ற ஆணவ முனைப்பும் நீக்காமலே, 'நான், நான்' என உளறிப் பலவகைப்பட்ட விகாரம் உள்ளவன் ஆகி, நான் அறிந்தும் அறியாதவனாகி உள்ளம் போன போக்கில் சென்றால் அச்செயல் என் அறிவுக்கு எட்டாததாகும். அதை வெல்வது என்பது எளிதோ? பகற் காலம் நீங்குவதற்கு முன் கண்மூடிப் பொய் உறக்கம் கொள்பவனை அவ்வுறக்கத்தினை ஒழிக்க வேறு ஒருவனுக்கு முடியுமோ? இனி அறிவுறுத்துவது எந்த நெறியை? ஆயினும் நான் என்னுடைய கொடுமையை நினைத்தால், அஃது அநியாயம்? அநியாயம்! இதனை எவர்க்கு நான் எடுத்துச் சொல்வேன்.

74. நீயன்றி எனக்கு வேறு கதி ஏது?

பொய்யனேன் புலையனேன் கொலையனேன்
புலப்பட அறிந்துநிலையாப் [நின்னருள்
புன்மையேன் கல்லாத தன்மையேன் நன்மைபோல்
பொருளலாப் பொருளை நாடு
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்
வினையனேன் என்றென்னைநீ
விட்டுவிட நினைவையேல் தட்டழிவது அல்லாது
வேறுகதி ஏதுபுகலாய்
துய்யனே மெய்யனே உயிரினுக் குயிரான
துணைவனே இணையொன்றிலாத
துரியனே துரியமும் காணா அதீதனே

சுருதிமுடி மீதிருந்த
ஐயனே அப்பனே எனுமறிஞர் அறிவைவிட்டு
அகலாத கருணைவடிவே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

74. இந்த அண்டமும் இதற்கு அப்பால் உள்ள பல அண்டங்களும் நின்னருள் நிறைவில் அடங்கும்படி எங்கும் நிறைந்த பேரின்பமான பரம் பொருளே!

'நான் பொய்யை யுடையேன். புலாலை உண்பேன். கொல்லும் செயலை உடையேன். நின் அளவற்ற பொருள் நன்கு அறிந்திருந்தும் அதில் நிலைத்திராத தாழ்மை உடையேன். உலகியல் நூலைக் கற்பதே அன்றி ஞான நூலைக் கல்லாத தன்மையை உடையேன். மெய்ப் பொருள் அல்லாத பொய்ப் பொருளை நன்மை தருவதாக எண்ணி விரும்பும் கொடியேன். கொடிய சினத்தை உடையேன். பித்துக் குணத்தை உடையேன். தீவினை உடையேன்' என்று இங்ஙனம் நினைத்து என்னை விட்டுவிட நீ எண்ணுவாயானால், நான் நிலை தடுமாறுவதன்றி வேறு கதியேது? கூறுவாய்! 'தூய்மையானவனே; மெய்யானவனே! ஆருயிர்க்கு உயிராய் விளங்கும் துணைவனே! நிகர் எவரும் இல்லாத துரிய நிலையில் உள்ளவனே! அந்தத் துரியமும் காண இயலாத அதைக் கடந்து உள்ளவனே! வேதத்தில் உச்சியாய் விளங்கும் ஐயனே! தந்தையே!' என்று இப்படிப் பலவகையாகத் துதிக்கின்ற நல்லறிஞரின் அறிவாகிய இடத்தை விட்டு நீங்காத அருள் வடிவானவனே!

75. என்னைப் போன்ற அறிவிலி எவருமிலர்!

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்என்
இதயமும் ஒடுங்கவில்லை
யானெனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை

யாதினும் அபிமானம்என்
சித்தமிசை குடிகொண்ட தீகையொ டிரக்கம்என்
செனமத்தும் நானறிகிலேன்
சீலமொடு தவவிரதம் ஒருகனவி லாயினும்
தரிசனம் செய்துமறியேன்
பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்பது அல்லாது சும்மா இருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை உண்டோ சொலாய்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே

75. இந்த அண்டமும் இதற்கு அப்பால் உள்ள வேறு அண்டங்களும் நின்னருள் நிறைவில் அடங்கும்படி எங்கும் நிறைந்த பேரின்பமான பொருளே!

பதி நூல்கள் அல்லாது உலக நூல்கள் எவ்வளவு கற்றாலும் என் மனம் ஒடுங்கும் நிலையை அடையவில்லை; 'நான்' என்ற அகந்தையானது என்னை விட்டு எள்ளளவும் நீங்க வில்லை! எல்லாப் பொருள்களிலும் பற்றானது என் உள்ளத்தில் குடிகொண்டுள்ளது. ஈதலுடன் இரக்கம் என்பதை என் பிறவியில், பிறந்தது தொடங்கி இதுவரை யான் அறிந்ததில்லை!

நல்ல ஒழுக்கத்தையும் தவமும் நோன்பும் ஆகியவற்றை ஒரு கனவிலும் கூட நான் கண்டதில்லை. பேசுவது பொய் யான சொல்லேஅல்லாது மருந்துக்கேனும் மெய்ம் மொழியை நான் கூறியறியேன். மற்றவர் விரும்பிக் கேட்கும்படி அற நெறியைப் போதிப்பதே அல்லாது முனைப்பு அற்றுச் செயலும் அற்றுச் சும்மா இருந்து உன் திருவருளைப் பெறாத அறிவிலி யான் ஆவேன். என்னைப் போல அவ்வளவு தீய குணம் உடையவர்களைக் கண்டதாகவேனும் அல்லது கண்ட

தாய்ச் சொன்னதாகவேனும் இவ்வுலகத்தில் உண்டோ? கூறுவாயாக!

76. மௌன குருவின் அருள்

எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
ஏழைநீ என்றிருந்திட்டு
எனதாவி உடல்பொருளும் மௌனியாய் வந்துகை
ஏற்றுநம தென்ற வன்றே
பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்யுடலை மெய்யென்னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாக நானென்னல்
பொய்யினும் பொய்யாகையால்
மைக்கால் இருட்டனைய இருளில்லை இருவினைகள்
வந்தேற வழியுமில்லை
மனமில்லை அம்மனத் தினமில்லை வேறுமொரு
வரவில்லை போக்குமில்லை
அக்காலம் இக்காலம் என்பதிலை எல்லாம்
அதீதமய மானஅன்றோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!

76. இந்த அண்டமும் இதற்கு அப்பால் உள்ள அண்டங்களும் நின்னருள் நிறைவில் அடங்கும்படி எங்கும் நிறைந்த பேரின்பமான பொருளே!

மௌன குருவாய் எழுந்தருளி வந்து எக்காலத்திலும் நீ சுதந்தரமாக ஒரு செயற்கை இல்லாத அறிவிலி என்று எனக்குப் போதித்து, எழுந்தருளியிருந்து என் உயிர் உடல் பொருள் என்ற மூன்றையும் கையால் ஏற்றுக் கொண்டு, 'நம்முடையவை' என்று நீ அருளிச் செய்தாய். அங்ஙனம் செய்த போதே, பொய்யான காலமும் பொய்யான இடமும்

பொய்ப் பொருளில் ஆசையும், பொய்யான உடலை மெய் என்று கொள்ளுதலும் பொய்யுறவுடையவரை மெய்யுறவுடையவராய் எண்ணிப் பற்றுதலும் பொய்யாகவே முடியும்! நான் என்பது பொய்யாய் ஆகிவிடுவதால், மழைக்காலத்தில் உண்டாகும் இருளை ஒத்த அஞ்ஞானமாகிய இருள் இல்லை. இருவினைகளான நன்மை தீவினைகள் வந்து தொடர்வதற்கு வழியுமில்லை. அத்த மனத்தில் தோன்றும் எண்ணம் எழுச்சி முதலிய இனமான உட் கருவிகளும் செயல் இல்லை. மேலும் ஒரு பிறப்பும் இறப்பும் இல்லை. அவை இல்லாமல் போகவே சென்ற காலமான அக்காலம் நிகழ்காலமான இக்காலம் என்று சொல்வதற்கு இடம் இல்லை. எல்லாம் மேன்மையான வடிவாயிற்றன்றோ!

9. சுக வாரி

(சுகம் - இன்பம். வாரி - கடல். இறைவன் இன்பக் கடலாக உள்ளான் என்பது பொருள்.)

7. நின்னருளால் இன்பம் உண்டாகும்

இன்னமுது கனிபாகு கற்கண்டு சினிதேன்
எனருசித் திடவலியவந்து
இன்பம் கொடுத்தநினை எந்நேரம் நின்அன்பர்
இடையறா துருகிநாடி
உன்னிய கருத்தவிழ உரைகுளறி உடலெங்கும்
ஒய்ந்தயர்ந் தவசமாகி
உணர்வரிய பேரின்ப அநுபூதி யுணர்விலே
உணர்வார்கள் உள்ளபடிகாண்
கன்னிகை ஒருத்திசிற் றின்பம்வேம்பு என்னினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்
கருதிநகை யாவள் அதுபோல் னெனக்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை

தோற்றின் சுகாரம்பமாம்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

77. தூய்மையான முக்குணச் சார்பில்லாத மேலான தெய்வமே! பேரொளியே! பேரின்பப் பெருங்கடலே! இனிய அமிழ்தம் போன்றும், மா பலா வாழை என்ற முக்கனியின் இனிமை போன்றும், சருக்கரை போன்றும், கற்கண்டு போன்றும் சீனத்துச் சருக்கரை போன்றும், தேன் போன்றும் சுவையுண்டாகும்படி நீ அடியாரிடம் வலிய வந்து திருவடியின்பத்தை நின் கருணையால் ஊட்டினாய். இத்தகைய இன்பத்தை அனுபவித்த நின் மெய்யன்பர் எப்போதும் நின்னையே நினைந்து உருகுவர்; விரும்புவர்; எண்ணிய மனமலர் நெகிழச் சொல் தடுமாற்றம் அடைந்திடுவர்; உடல் இளைத்து மிக்க உணர்வால் தன் வயம் இழப்பர். நின்வயமாகிப் பேரின்பச் செல்வத்தை அனுபவிப்பர்.

பெண்மை முழுமையும் கனியப் பெறாத பெண் ஒருத்தி இளமையில், சிற்றின்பத்தைப் பருவம் வரப்பெறாத காரணத்தால் கசக்கும் என்பாள். பின் பருவம் கனியப் பெற்ற போது அந்த இன்பத்தைப் பேரின்பம் எனக் கொள்வாள். கணவனின் அருளைப் பெற்று வாழ்வாளாயின், ''முன்னம் நாம் என்ன சொன்னோம்'' என்று எண்ணித் தன்னை நினைந்து சிரித்துக் கொள்வாள்.

அதைப் போன்று, சொன்னபடி கேட்டு நடக்கும் அறிவற்ற எனக்கு, நினது அருளானது உண்டாகுமாயின், பேரின்பத் தோற்றம் ஓங்கும்.

78. அறியாப் பருவத்தில் ஆண்டது!

அன்பின்வழி அறியாத என்னைத் தொடர்ந்தென்னை
அறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநான்

அற்றேன் அலந்தேனென
என்புலன் மயங்கவே பித்தேற்றி விட்டாய்
இரங்கியொரு வழியாயினும்
இன்பவெள்ள மாகவந் துள்ளம் களிக்கவே
எனைநீ கலந்ததுண்டோ
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகை தனக்கும்உண்டோ
தமியனேற் கிவ்வணம் திருவுளம் இரங்காத
தன்மையால் தனியிருந்து
துன்பமுறின் எங்ஙனே அழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்கும் உரையாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

78. தூய்மையான முக்குணச் சார்பில்லாத மேலான தெய்வமே! பேரொளியே! பேரின்பக் கடலே! அன்பின் வழியை அறியாத என்னைத் தொடர்ந்து வந்து, என்னையே யான் அறிந்து கொள்ளாத இளம்பருவத்தில், நான் நின்னிடம் கொள்ளும் ஆசை வெள்ளத்தைப் பெருகச் செய்தாய். அதனால் நான் தீர்ந்தேன். நினைந்து வாடினேன்'' என்னும்படி என் அறிவு மயங்குமாறு பித்து ஏற்றி விட்டாய்!

அங்ஙனம் செய்த நீ ஒருமுறையாயினும் இரங்கி இன்ப வெள்ளமாய் என்னிடம் வந்து, என் மனம் மகிழும்படி என்னைச் சேர்ந்ததுண்டோ? தனக்குரிய பருவத்தில் மலர்ந்த மலர்க்கு மணம் உண்டு. அவை அரும்புக்கு உண்டாகுமோ?

எனக்கு இங்ஙனம் நீ மனம் இரங்காத தன்மையினால், யான் தனித்திருந்து துன்பத்தை அடைந்தால், நின் உண்மையடியார் அடையும் இன்பம் எனக்கு எவ்வாறு வந்து அடையும்! சொல்வாய்!

79. மௌனியாய் இருக்க அருள்வாய்

கல்லேனும் ஐயவொரு காலத்தில் உருகும்என்
கல்நெஞ்சம் உருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையயு நான்முகன்
கற்பிக்க ஒருகடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையாய் இறங்கியெனை
வாழ்விப்ப துன்பரம்காண்
பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ
புகலிடம் பிறிது முண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட்கு
புன்மையேன் ஆவனந்தோ அயலுமாய்ப்
சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்கஅருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

79. தூய்மையான முக்குணங்களின் சார்பில்லாத மேலான கடவுளே! பேரொளியே! பேரின்பக் கடலே! வலிய கருங்கல்லும் வெம்மையால் ஒரு காலத்தில் உருகும். ஆயின் வலிய என் கல் நெஞ்சம் உருகவில்லையே! நின் அருளுக்குப் பொருந்தாத வன்மையை என் உள்ளத்துக்குப் படைத்திட்ட நான்முகன் ஒரு கடவுளோ! வல்லவன் ஒருவன் அமைத்ததே வாய்க்கால் என்கின்ற பெருவழக்கத்துக்கு ஒரு குற்றமும் உண்டாகுமோ? அருள் பெரு வெளியாய் நின்று பேரின்பப் பெருமழையாய் அருளி இறங்கி வந்து என்னை வாழ்விப்பது நின் கடமையாகும். குழந்தையானது பொல்லாததாய் அமைந்திடின், பெற்ற தாய் அதைத் திருத்தி ஆட் கொள்ளாமல் தள்ளிவிடுவது முறையாகுமோ? அவள் அவ்வாறு செய்திட்டால் அக்குழந்தைக்குப் புகலிடமாய் அடைவதற்கு வேறு இடம் உண்டோ?

நான் பொய்யுரை புகல்வேன் ஆயின் நின் திருவருளுக்குப் புறம்பாகித் தாழ்ந்தவன் ஆவேன்! ஐயோ! சொல்லால் சொல்வதால் இன்பப் பயன் ஏதும் இல்லை! எனவே, பேச்சற்று மௌனியாய் வாளா இருக்குமாறு அருளுவாயாக.

80. உலக வாழ்வை விரும்பேன்

என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப உடல்
இளக மனம் அழலின்மெழுகாய்
இடையறா துருகவரு மழைபோல் இரங்கியே
இருவிழிகள் நீர்இறைப்ப
அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்து
ஆனந்த மழைபொழிவை உள்ளன்பி லாதஎனை
ஆர்க்காக அடிமைகொண்டாய்
புன்புலால் மயிர்தோல் நரம்பென்பு மொய்த்திடு
புலைக்குடிலில் அருவருப்புப்
பொய்யல்லவே யிதனை மெய்யென்று நம்பிஎன்
புந்திசெலு மோபாழிலே
துன்பமாய் அலையவோ உலகநடை ஐயவொரு
சொப்பனத் தினும் வேண்டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

80. தூய்மையான முக்குணங்களின் சார்பில்லாத மேலான இறைவனே! பேரொளியே! இன்பக் கடலே!

என் எலும்புகள் எல்லாம் நெகிழ்ந்து உடையவும், மயிர்ப்புளகம் உண்டாகவும், உடலானது கட்டுவிட்டுக் குழையவும், உள்ளமானது இடையறாது தீயிலே இடப்பட்ட மெழுகினைப் போன்று உருகவும், இரண்டு விழிகளும் பூமியை நோக்கிவரும் மழையைப் போல் நீரைச் சொரியவும், அன்பினால் மூர்ச்சை அடைந்து நிற்கும் (உயிர்ப்பு அற்றி

ருக்கும்) மெய்யடியாருக்கு, உயிரைத் தழைக்கச் செய்கின்ற அமிர்த சஞ்சீவி' என்ற மருந்தைப் போல் எழுந்தருளி வந்து அருளான பேரின்பப் பெருமழையைப் பொழிவாய்!

உள்ளத்தில் உண்மையான அன்பு இல்லாத என்னை யார் பொருட்டு அடிமை கொண்டாய்? அற்பமான ஊன் மயிர் தோல் நரம்பு எலும்பு என்ற இவை நிறைந்திருக்கின்ற புலால் நாற்றம் வீசும் சிறிய வீடான இவ்வுடலில் அருவருப்புக் கொள்வர். அது பொய்யன்று. இந்தப் புல்லிய வுடலை மெய் என்று கொண்டு நம்பி என் அறிவானது வீணிலே செல்லுமோ? நான் துன்பம் அடைந்து அலையவோ? ஐயனே! இவ்வுலக வாழ்வை ஒரு கனவிலும் நான் விரும்பேன்!

81. உற்றதுணை!

வெந்நீர் பொறாதெனுடல் காலின்முள் தைக்கவும்
வெடுக்கென் றசைத்தெடுத்தால்
விழியிமைத் தங்ஙனே தண்ணருளை நாடுவேன்
வேறொன்றை ஒருவர் சொல்லின்
அந்நேரம் ஐயோவென் முகம்வாடி நிற்பதுவும்
ஐயநின் அருள் அறியுமே
ஆனாலும் மெத்தப் பயந்தவன் யானென்னை
ஆண்டநீ கைவிடாதே!
இந்நேரம் என்றிலை உடற்சுமைய தாகவும்
எடுத்தால் இறக்கவென்றே
எங்கெங்கும் ஒருதீர்வை ஆயமுண் டாயினும்
இறைஞ்சுசுக ராதியான
தொன்னீர்மை யாளர்க்கு மானிடம் வகுத்தவருள்
துணையென்று நம்புகின்றேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

81. தூய்மையான முக்குணங்களின் சார்பு அற்ற மேலான இறையே! பேரொளியே! பேரின்பக்கடலே!

என் உடலானது வெந்நீரைப் பொறுத்துக் கொள்ளாது! என் காலில் முள் தைத்துக் கொள்ளவும் வெடுக்கென்று அசைத்து (அம்முள்ளை) எடுத்தால் அதனைப் பொறுத்துக் கொள்ளாமல் அப்போது கண் இமைத்துக் குளிர்ந்த நின் திருவருளைச் சிந்திப்பேன். ஒருவர் ஓர் உயிரைக் கொல்வாராயின், அப்போதே, ஐயோ, என்று முகம்வாடி வருந்தி நிற்பேன். இதனை நின் திருவருள் நன்கு அறியுமே! ஆயினும் யான் மிகவும் பயந்தவன். ஆகவே, என்னை ஆட்கொண்ட நீ கைவிடாதே! உடலின் சுமை, இன்ன நேரத்தில்தான் விழும் என்ற வரையறையில்லை! அஃது அங்ஙனமாகவும், உடலை எடுத்தால் இறக்க என்றே எங்கும் ஒரு தீர்ப்பும் கடமையும் உண்டு. ஆனாலும் வணங்கும் சுகமுனிவர் முதலிய பழைமையான குணத்தையுடையவர்க்கு மக்கள் உடலை அமைத்த திருவருளே உற்ற துணையாகும் என நம்புகின்றேன்.

82. எனக்குப் பேச வாயும் உண்டோ?

பற்றுவன அற்றிடு நிராசையென் றொருபூமி
பற்றிப் பிடிக்கும் யோகப்
பாங்கிற் பிராணலயம் என்னுமொரு பூமியிவை
பற்றின்மனம் அறும்என்னவே
கற்றையஞ் சடைமௌனி தாமே கனிந்தகனி
கனிவிக்கவந்த கனிபோல்
கண்டதிந் நெறியெனத் திருவுளக் கனிவினொடு
கனிவாய்த் திறந்தும் ஒன்றைப்
பெற்றவனும் அல்லேன் பெறாதவனும் அல்லேன்
பெருக்கத் தவித்துளறியே
பெண்ணீர்மை என்ன இரு கண்ணீர் இறைத்து
பேய்போல் இருக்கவுலகம் [நான்

சுற்றிநகை செய்யவே உலையவிட் டாய்எனில்
சொல்லவினி வாயும்உண்டோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

82. தூய்மையான முக்குணங்களின் சார்பில்லாத மேலான தெய்வமே! பேரொளியே! பேரின்பக் கடலே!

ஐம்பொறிகளால் பற்றப்படுவனவான ஐம்புலன்களில் பற்று ஒழிந்து அவர் இல்லாமை என்று கூறப்படுகின்ற ஒரு நிலம் உண்டு. உயிர்வளியைத் தொடர்ந்து பிடித்து நிறுத்துகின்ற யோகாப்பியாசத்தால் வருகின்ற பிராணாலயம் என்ற ஒரு பூமி உண்டு. இவற்றை ஆதாரமாகப் பிடித்தால் மனமானது இறக்கும் என்று திரண்ட சடையையுடைய மௌனகுரு, 'தானாகவே கனிந்த கனியைக் கனியாகுமாறு செய்ய உண்டான கனிபோல், கண் கூடாகக் கண்டது இந்த நெறியாகும்' என்று உள்ளத்து இரக்கத்துடன், கனிவாய்த் திறந்தேனும் ஒரு சொல்லைச் சொல்லப் பெற்றவனும் அல்லேன். சொல்லால் சொல்லாது போனாலும் குறிப்பால் உணர்த்தப் பெற்றேன். ஆதலால் பெறாதவனும் அல்லேன். மிகவும் தவித்து அரற்றிப் பெண்மைக் குணம் போல் இரண்டு கண்களினின்றும் நீரைச் சிந்தி நான் பேயினைப் போன்று அலங்கோலமாய் இருக்க, அந்த நிலையைக் கண்டு உலகமானது சுற்றியிருந்து சிரிக்கும்படி (என்னை) விட்டாய் என்றால் நான் சொல்வதற்கு வாயும் உண்டோ?

83. நின் அடியாருடன் கூட்டு

அரும்பொனே மணியேயென் அன்பேயென் அன்பான
அறிவேஎன் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடிநாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்

மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி என எவ்னிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வன்ஆ னாலும்முனை
இடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ
ஏதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே!

83. தூய்மையான முக்குணங்களின் சார்பில்லாத மேலான கடவுளே!

'அருமையான பொன்னே! ஒளிமிக்க மாணிக்கமே! என் அன்பின் வடிவமே! என் அன்பில் விளையும் அறிவே! என் அறிவிடத்தில் சுரக்கின்ற ஆனந்த வெள்ளமே!' என்று நான் பல முறை பாடினேன். கூத்தாடினேன். தேடித் தேடி உன்னை விரும்பி அழைத்தேன். அழைத்து அழைத்து நாக்கு உலறப் பெற்றேன். நீ வாராததால் பொறுக்காது அழுதேன். உடல் புளகம் கொண்டு இரண்டு கைகளையும் கூப்பி மேகத்தினின்று பெய்யும் மழையைப் போல என் இருகண்கள் நீரைப் பொழிய யான் உள்ளம் நொந்து வாட்டம் அடைந்தேன். இரும்பைப் போன்ற உள்ளத்தையுடைய வஞ்சம் உடையேனாயினும் உன்னை மறந்திருந்தது உண்டோ? நீ எப்போது இருந்தாய், அன்றே நானும் இருந்தேன். ஆதலால் நான் நின் அடியவன் அல்லனோ! யாதொரு நற்செயலையும் அறியாத வெற்றுத் துரும்பைப் போன்றவன் என்றாலும் என்னைக் கைவிட்டு கூடுதல் உனக்கு நீதியாகுமோ? நின் அடியாருடன் என்னையும் கூட்டுவிப்பாயாக!

84. இன்ப நிலை பெற பல நாட்கள் ஆகுமோ

பாராதி அண்டங்கள் எத்தனையும் வைக்கின்ற
பரவெளியின் சூண்மைக்காட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னில்தோய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித்
தா ராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
சதாகால நிட்டையெனவே
சகசநிலை காட்டினை சுகாதீத நிலயத்
தனைக்காட்ட நாள்செல்லுமோ
காரார ஏண்ணரும் அனந்தகோ டிகள்நின்று
கா லூ ன்றி மழைபொழிதல்போன்ல்
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாம்
கம்மி ஆனந்தவெள்ளம்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

84. முக்குணங்களின் சார்பில்லாத தூய்மையமன மேலான தெய்வமே! பேரொளியே! பேரின்பக் கடலே!

மண்ணுலகம் முதலான அண்டங்கள் எல்லாவற்றையும் ஒரு கிழியில் எழுதி வைப்பதற்குரிய மேலான அருள் வெளியின் உண்மையை நிலை நாட்டி, அதைத் தொடர்ந் துள்ள மன வெளியைக் காட்டி, அந்த மன வெளியில் பொருந்திய பாவியேனின் தன்மையைக் காட்டி, தாராள மாக விரிந்து நிலைத்திருக்க மனம் இறந்து படுதலையும் காட்டி, எப்போதும் நிட்டை என்கின்ற சகச நிலையையும் காட்டியருளினாய்! இந்த நிட்டை இன்பத்துக்கு அப்பாற் பட்ட சுகாதீத நிலையை எனக்குக் காட்டுதற்குப் பல நாள் செல்லுமோ? எண்ணுதற்கு இயலாத முடிவில்லாத பல கோடிகளான மேகங்கள் நிறைந்து நின்று கால் ஊன்றி

மழையைப் பொழிவதைப் போல் காற்று வீசி மின்னிப் பரவிப் பரவெளி எங்கும் நிறைந்து பேரின்பப் பெருவெள்ளம் இடைவிடாது பொழிவதன் பொருட்டாய்க் கருணையுடன் முழங்கி அடியவரை அழைக்கின்ற மேகமே!

85. மாயையை ஏவினால் என் செய்வேன்?

பேதித்த சமயமோ ஒன்றுசொன படியொன்று
 பேசாது துறவாகியே
 பேசாத பெரியோர்கள் நிருவிகற் பத்தினால்
 பேசார்கள் பரமகுருவாய்ப்
போதிக்கும் முக்கண்இறை நேர் மையாய்க் கைக்
 போதிப்ப தாச்சறிவிலே கொண்டு
 போக்குவர வறவின்ப நீக்கமற வசனமாப்
 போதிப்ப தெவர் ஐயனே
சாதித்த சாதனமும் யோகியர்கள் நமதென்று
 சங்கிப்பர் ஆதலாலே
 தன்னிலே தானாய் அயர்ந்துவிடு வோமெனத்
 தனியிருந் திடின் அங்ஙனே
சோதிக்க மனமாயை தனைஏவி னால் அடிமை
 சுகமாவது எப்படிசொலாய்
 சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
 சோதியே சுகவாரியே!

85. முக்குணங்களின் சார்பில்லாத தூய மேலான இறைவனே! மேலான பேரொளியே! பேரின்பக் கடலே! ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டு நிற்கும் சமயங்களோ ஒன்று கூறியபடி மற்றொன்று இராது. ஆதலால், துறவு அடைந்து மௌன நிலையை மேற்கொண்டிருக்கும் சான்றோர், யோகப் பயிற்சியால் மனம் ஒடுங்கப் பெற்று, ஒன்றையே உணர்வதான நிருவிகற்பத்தினால் அவர்களும் பேசாது அமைந்திருப்பர். உபதேசம் செய்தருளிய மூன்று கண்களை யுடைய இறைவன் மேலான குருவாய் வந்து செவ்வனே

என்னைத் தன்வயப் படுத்திச் சின் முத்திரையினாலே போதித்தல் அமைந்தது. போக்கும் வரவும் இல்லாததாய்ப் பேரின்பம் இடைவிடாது உண்டாவதாய் இருக்கும் ஒன்றைச் சொல்லின் வாயிலாகக் கூறிப்போதிக்கும் தன்மையுடையவர் வேறு எவர்? இறைவனே! நான் இதுவரை பயின்று வந்த யோகப் பயிற்சியின் தன்மைகளை எல்லாம் யோகநிலையினர் தம்முடையன என்று உரைப்பர். ஆகவே நானே என்னை மறந்து என்னில் தனித்திருப்பேன் என்றால் அங்கு என் மனநிலையைச் சோதிக்கும் பொருட்டு மனத்தில் உண்டாகின்ற மாயையை ஏவிவிட்டால் உன்னடிமையான யான் நல் இன்பம் அடைவது எப்படி? கூறியருளுவாய்!

86. நீ எங்கே வீற்றிருக்கின்றாய்?

அண்டமுடி தன்னிலோ? பகிரண்ட மதனிலோ
அலரிமண் டலநடு விலோ
அனல்நடுவி லோ அமிர்த மதிநடுவி லோ அன்பர்
அகமுருகி மலர்கள் தூவித்
தெண்டனிட வரும்மூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்தி லோ வெளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ
கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்
கண்டசூ னியமதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ
கருவிகர ணங்களோய்ந்த
தொண்டர்க ளிடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற்கு உளவுபுகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

86. முக்குணங்களின் சார்பற்ற தூய மேலான இறைவனே! பேரொளியே! பேரின்பக் கடலே! நீ எழுந்தருளி

யிருப்பது அண்ட கோளங்களின் உச்சியிலோ? வெளி அண்டங்களிலோ? ஞாயிற்று மண்டிலத்தின் நடுவிலோ? அனல் மண்டிலத்தின் நடுவிலோ? அமிர்தத்தைப் பொழியும் சந்திர மண்டிலத்தின் நடுவிலோ? அன்பர்கள் உள்ளம் உருகி மலர்களைத் தூவி வணங்கிட எழுந்தருளியிருக்கும் வடிவங்களின் நிலையிலோ? திசைகளிலோ? அல்லது திசைகளின் எல்லைகளிலோ? மேலான ஒளியிலோ? விளங்கும் நாதவிந்து நிலைகளிலோ? மறை முடிவான வேதாந்தத்திலும் சித்தாந்தத்திலும் விளங்கும் நிலைகளிலோ? கண்ணால் காணப்படுகின்ற பல பொருள்களின் நிலைகளிலோ? கண்ணுக்குப் புலனாகாது கருத்துக்குப் புலனாகின்ற காணா நிலையில் நாடி யுணரப்படும் முப்பாழான சூனியத்திலோ? இறப்பு நிகழ்வு எதிர்வு என்று கூறப்படும் மூன்று காலங்களிலோ? பிறவி நிலையிலோ? கரணங்களின் சேட்டைகள் ஒடுங்கப் பெற்று விளங்கும் அடியார்களிடத்திலோ நின் அடியவனான எனக்கு உண்மையைச் சொல்வாயாக!

87. அடிமையை வருத்துவதேன்?

எந்தநாள் கருணைக் குரித்தாகு நாள் எனவும்
　　என்னிதயம் எனைவாட்டுதே
　ஏதென்று சொல்லுவேன் முன்னொடுபின் மலைவறவும்
　　இற்றைவரை யாதுபெற்றேன்
பந்தமா னதிலிட்ட மெழுகாகி உள்ளம்
　பதைத்துப் பதைத்துருகவோ
　பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப்
　　பலகாலும் மூர்ச்சிப்பதோ
சிந்தையா னதும்அறிவை என்னறிவில் அறிவான
　　தெய்வம்நீ யன்றியுளதோ
　தேகம்நிலை அல்லவே உடைகப்பல் கப்பலாய்த்
　　திரை யாழி யூடுசெலுமோ
சொந்தமாய் ஆண்டநீ அறியார்கள் போலவே

துன்பத்தில் ஆழ்த்தல் முறையோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

87. தூய்மையான முக்குணங்களின் சார்பற்றவனே! மேலான பேரொளியே! இன்பக்கடலே!' நான் உன் அருளுக்கு இலக்காகும் நாள் எந்நாளோ? என்று என் உள்ளம் என்னை வருத்துகின்றதே! நான் என்ன எனக் கூறுவேன்? முன்னுக்கும் பின்னுக்கும் பகை உண்டாகா திருக்கவும் இதுநாள் வரை எந்த நிலையை அடைந்தேன்? தீப்பந்தத்தில் வைத்த மெழுகைப் போல் ஆகி உள்ளம் துடித்து உருகினாலோ பேரின்பம் உண்டாகும்? அல்லது பொறுக்க முடியாத துன்பத்தை அடைந்து பலமுறை மூர்ச்சை அடைவதோ அந்த இன்பத்துக்குக் காரணமாவது? என் உள்ளத்தையும் அறிவாயாக. என் அறிவாய் விளங்கும் தெய்வம் நீயன்றி வேறுண்டோ? இந்தவுடல் நிலையான தில்லையே! உடைபட்ட கப்பலானது நல்ல கப்பலாகி அலையையுடைய கடலில் போகுமோ? சுதந்திரமாக வந்து என்னை ஆட்கொண்டாய் நீ. இத்தகைய நீ அறியார் போல் துன்பக் கடலில் என்னை ஆழ்த்துதல் உனக்கு முறையோ!

88. மனத்தின் பழிப்புரை!

எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல்
இருக்கவிலை யோமனம் எனும்
யானும் என் நட்பாம் பிராணனும் எமைச்சடமது
என்றுனைச் சித்தென்றுமே
அந்நாளில் எவனோ பிரித்தான் அதைக்கேட்ட
அன்றுமுதல் இன்றுவரையும்
அநியாய மாயெமை அடக்கிக் குறுக்கே
அடர்ந்தரசு பண்ணியெங்கள்
முன்னாக நீஎன்ன கோட்டைகொண் டாய்என்று
மூடமனம் மிகவும்ஏச

மூண்டெரியும் அனலிட்ட மெழுகாய் உளம்கருகல்
முறைமையோ பதினாயிரம்
சொன்னாலும் நின்னருள் இரங்கவிலை யேஇனிச்
சுகம் வருவதெப்படிச் சொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

88. முக்குணங்களின் சார்பற்ற மேலான இறைவா! பேரொளியே! இன்பக் கடலே! எப்போதும் உடலுள் உயிராய் இருக்கின்ற உன்னைப்போல் உள்ளம் என்ற நானும் என் நண்பனான உயிரும் உடலில் இருக்கவில்லையோ! எம்மை அறிவற்ற சடப் பொருள்கள் என்றும் உன்னைச் சித்து (அறிவுடையவன்) என்றும் அக்காலத்தில் எவனோ அமைத்து வைத்தான். அதைக் கேட்ட அன்று முதல் இன்று வரையும் அநியாயமாய் எம்மை அடக்கி ஒடுக்கிக் குறுக்கே வந்து ஆட்சி செய்து எம் விழிகளுக்கு எதிரில் நீஎந்தக் கோட்டையைப் பிடித்தாய் என்று என் மூட மனமானது வைகின்றது! ஆதலால் கொழுந்து விட்டு எரியும் தீயில் மெழுகுபோல் உருகி நான் எனக்குள் வருந்துவது முறையோ! பதினாயிரம் முறை நின்னிடம் கூறி வேண்டிக் கொண்டாலும் உன் அருள் மனம் இரங்கவில்லை! அங்ஙனம் இருக்க, எனக்கு இனி இன்பம் உண்டாவது எப்படி? உரைத்தருளுக!

10. எங்கும் நிறைகின்ற பொருள்

89. யாதும் உனையன்றி யுண்டோ?

அவனன்றி ஓர் அணுவும் அசையாதெனும் பெரிய
ஆப்தர்மொழி ஒன்றுகண்டால்

அறிவாவ தேது? சில அறியாமை யேதிவை
அறிந்தார்கள் அறியார்கள் யார்
மௌனமொ டிருந்ததார் என்போல் உடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றும் அவரார்
மனமெனவும் ஒருமாயை எங்கே இருந்துவரும்
வன்மையொடு இரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவியம் எவ்விடம்
பூதமே தங்களெவிடம்
பொய்மெய்இதம் அகிதமே வருநன்மை தீமையொடு
பொறைபொறா மையும் எவ்விடம்
எவர்சிறியர் எவர்பெரியர் எவருறவர் எவர்பகைஞர்
யாதுமுனை யன்றியுண்டோ
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

89. இம்மை மறுமை இரண்டிலும் உயிர்க்கு உயிராகி எங்கும் நிறைந்திருக்கின்ற மெய்ப்பொருளே!

'அவன் என்று கூறப்படும் இறைவன் அசைப்பித்தால் அன்றி ஓர் அணுவும் உலகத்தில் அசையாது' என்று கூறப்படுகின்ற பெரிய உறவினரான திருநாவுக்கரசு அடிகளாரின் மொழி ஒன்று உண்டு. அதனை ஆராயின் அறிவாவது எது? அதுபோல் அறியாமை ஆவது யாது? இவற்றை உணர்ந்தவர் யாவர்? பேச்சற்ற மௌனம் எனப்படும் நிலையில் உள்ளவர் யாவர்? என்னைப் போன்று (உடலில்) ஓரிடத்தில் அன்று உடல் முழுவதும் வாயாகக் கொண்டு பிதற்றிக் கொண்டிருப்பவர் யாவர்? எப்போதும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மனது என்று கூறப்படும் ஒரு மாயை எங்கிருந்து வந்தது? கல்லைப் போன்ற கடிய வலிமையும், உருகும் மென்மையும் எங்கே உள்ளன? உலகங்களைப் படைப்பது எது? வினை முதல் தன்மை எனப்படும் கருத்தாத் தன்மை

எங்கிருந்து ஏற்படுகின்றது? நிலம் நீர் முதலான பூத வேறுபாடுகள் எங்கிருந்து உண்டாகின்றன? பொய்மை, மெய்மை யாவை? அனுகூலமும் பிரதி கூலமும் யாவை? நன்மையும் தீமையும் எங்குள்ளன? பொறுத்துக் கொள்ளும் தன்மையும் பொறுத்துக்கொள்ளாத தன்மையும் எங்கு உள்ளன?

எவர் சிறியவர்? எவர் பெரியவர்? எவர் உறவினர்? எவர் பகைவர்? யாவும் நின் திருவருள் குறிப்பின்றி உண்டாகுமோ?

(ஆப்தர் - நாவுக்கரசர். அவர் உரைத்த மொழி 'ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே' என்பது. இதம்— அனுகூலம். அந்தம் - பிரதிகூலம்.)

90. சமய வாதங்கள்

அன்னே அனே எனும் சிலசமயம் நின்னையே
ஐயாஐ யாஎன்னவே
அலறிடும் சிலசமயம் அல்லாது பேய்போல
அலறியே ஒன்றும்இலவாய்ப்
பின்னேதும் அறியாமல் ஒன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடும் சிலசமயம் மேல்
பேசரிய ஒளியென்றும் வெளியென்றும் நாதாதி
பிறவுமே நிலயமென்றும்
தன்னே ரிலாததோர் அணுவென்றும் மூவிதத்
தன்மையாம் காலமென்றும்
சாற்றிடும் சிலசமயம் இவையாகி வேறதாய்ச்
சதாஞான ஆனந்தமாய்
என்னே எனேகருணை விளையாட் டிருந்தவாறு
எம்மனோர் புகலஎளிதோ
இபகரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

90. இம்மை மறுமை இரண்டிலும் உயிர்க்கு உயிராகி எங்கும் நிறைந்துள்ள மெய்ப்பொருளே!

உன்னைச் சில சமயங்கள் 'தாயே தாயே' என்று கூறும்! சில சமயங்கள் நின்னைத் 'தந்தையே தந்தையே' எனக் கூறும், அங்ஙனம் இல்லாது சில சமயங்கள் மனம் போன படி பேய் போல் 'கடவுள் என ஒரு பொருள் உண்டோ? என்று மயங்கிக் கூறும். இங்ஙனம் பயன் இல்லாது ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றிக் கூறிடும். மேலும் சிலசமயம் இறைவனான நின்னை அறிவுப் பேரொளி எனவுரைக்கும். சில 'வானவெளியே' என்னும். வேறு சில, ஒலியான நாதமும் பிறவும் தெய்வம் எனவுரைக்கும். சில தமக்கு நேரில்லாத நுட்பமான அணுவே தெய்வம் என்னும், சில இறப்பு நிகழ்வு எதிர்காலம் ஆகிய மூன்றும் தெய்வம் என்னும். இங்ஙனம் பலவும் பலவாய்ப் பேசும் இவைகளுமாகி இவற்றின் வேறாகவும் ஆகி என்றும் மாறாத பேரறிவாய்ப் பேரின்பமாய் விளங்குகின்ற நின் அருளின் விளையாடல் இருந்தவண்ணம் என்னே! என்னே! அஃது என் போன்றவரால் கூறல் எளிதில் இயலுமோ?

91. எனக்குக் குறையும் உண்டோ?

வேதமுடன் ஆகம புராணம்இதி காசமுதல்
    வேறுமுள கலைகளெல்லாம்
  மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
    விரிவா எடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
    உண்டுபணும் ஞானமாகும்
  ஊகம்அனு பவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வுமீது
    துபயவா திகள்சம்மதம்
ஆதலின் எனக்கினிச் சரியையா திகள்போதும்
    யாதொன்று பாவிக்கநான்
  அதுவாதலா லுன்னை நானென்று பாவிக்கின்
    அத்துவித மார்க்கம் உறலாம்
ஏதுபா வித்திடினும் அதுவாகி வந்தருள்செய்

எந்தைநீ குறையும் உண்டோ
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

91. இம்மை மறுமை இரண்டிலும் உயிருக்கு உயிராகி எவ்விடத்தும் நிறைந்து விளங்கும் மெய்ப்பொருளே!

வேதங்களுடன் ஆகமம் புராணம் இதிகாசம் முதலாக உள்ள கலை நூல்கள் யாவும் இரு பொருள் தன்மையான 'துவிதமும்' இரண்டற்று ஒன்றாய் விளங்கும் தன்மையான 'அத்துவிதமும்' ஆகும் என்று இவ்விரண்டையே விரிவாய் எடுத்துக் கூறும்.

சொல்வதற்கரிய துவித ஞானமே அத்துவித ஞானத்தை உண்டாக்குகின்ற ஞானம் ஆகும். இந்தச் சொல் யூகம், அனுபவம், நூல் என்ற மூன்றுக்கும் ஒக்கும். அன்றியும் இந்த இருதிறத்தார்க்கும் சம்மதமாகையால் இனி எனக்குச் சரியை கிரியை யோகம் ஞானம் போன்ற மார்க்கங்கள் போதுமானவை. நான் எந்த ஒரு பொருளை நினைக்கின்றேனோ அப்படியே ஆவது உறுதியாதலால் நின்னை யான் என்று பாவனை செய்தால் (நீ நானாய்) அத்துவித நெறியை அடையலாம். நான் எப்பொருளாய் நினைப்பினும் அப் பொருளாய் நீ வந்து அருள் செய்யும் தந்தையாதலால் நின்னை அடைந்த எனக்கு ஒரு குறையும் உள்ளதோ!

92. நின்னாலன்றி மனத்தை அடக்க இயலாது!

சொல்லா னதில்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டிஆட்டித்
துடையினைக் கிள்ளல்போல் சங்கற்பம் ஒன்றில்
தொடுக்கும் தொடுத்தழிக்கும்
பொல்லாத வாதனை எனும்சத்த பூமியிடை
போந்துதலை சுற்றியாடும்
புருடனில் அடங்காத பூவைபோல் தானே

புறம்போந்து சஞ்சரிக்கும்
கல்லோ டிரும்புக்கும் மிகவன்மை காட்டிடும்
காணாது கேட்டவெல்லாம்
கண்டதாக் காட்டியே அணுவாச் சுருக்கிடும்
கபடநா டகசாலமோ
எல்லாமும் வலதிந்த மனமாயை ஏழையாம்
என்னால் அடக்கவசமோ
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

92. இம்மை மறுமை இரண்டிலும் உயிர்க்கு உயிராகி எங்கும் நிறைந்திருக்கின்ற மெய்ப் பொருளே!

மனமாயை, தன் பிள்ளையை வழிப்படுத்த தாயானவள், தனது சொல்லின் வழி வாராத பிள்ளையைத் தொட்டிலில் இட்டுப் பாடி அசைத்துஅசைத்துத் துடையைக் கிள்ளி முயற்சியில் புகுத்தத் தூங்கி விடாதபடி எழுப்புவதைப் போன்று நினைவு ஒன்றில் புகுத்தும். மறுபடியும் புகுத்தியதினின்று வேறொன்றிலே செலுத்தி அழிக்கும். பொல்லாத வாதனை எனப்படுகின்ற அஞ்ஞான பூமிகள் ஏழனுள் வந்து தலை சுற்றி ஆடும். கணவனுக்கு அடங்காத மனைவியைப் போல் தானே வெளிவந்து திரியும். கல்லை விடவும் இரும்பை விடவும் தான் மிக்க வன்மையுடையதாய்க் காட்டிக் கொள்ளும். கண்ணால் காணாது செவியாற கேட்டனவெல்லாம் தான் கண்ணால் கண்டபடியாகக் காட்டி அணுவாய்ச் சுருக்கிடும். கபட நாடகங்களையெல்லாம் செய்ய வல்லது இந்த மனமான மாயை. நின் திருவருளால் அன்றி இதனை அடக்கியாளும் வன்மை அறிவற்ற அடியேனுக்கு உண்டோ?

93. வீடுபேற்று நிலையை உணர்த்த வேண்டும்

கண்ணார நீர்மல்கி உள்ளம்நெக் குருகாத
கள்ளனேன் ஆனாலுமோ

கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரைகாட்டி
அண்ணா பரஞ்சோதி அப்பா உனக்கடிமை
யானெனவும் மேலெழுந்த
அன்பாகி நாடகம் நடித்ததோ குறைவில்லை
அகிலமும் சிறிதறியுமேல்
தண்ணாரும் நின்னதருள் அறியாத தல்லவே
சற்றேனும் இனிதிரங்கிச்
சாசுவத முத்திநிலை ஈதென் றுணர்த்தியே
சகசநிலை தந்துவேறொன்று
எண்ணாமல் உள்ளபடி சுகமாய் இருக்கவே
ஏழையேற்கு அருள்செய்கண்டாய்
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

93. இம்மை மறுமை இரண்டிலும் உயிருக்கு உயிராய் எங்கும் நிறைகின்ற மெய்ப் பொருளே! கண்கள் நிறைய நீர் நிறைந்து ததும்பி உள்ளம் நெகிழ்ந்து உருகாத கள்ளன் ஆனாலும், கைகளைக் குவித்து ஆடுதலும் பாடுதலும் செய்து இடைவிடாமல் கண்ணினின்று நீர் ஒழுக்கைச் சொரியச் செய்து 'அண்ணா, பரஞ்சோதி, அப்பா, நான் உனக்கு அடிமை' என்றும் மேல்வாரியாய் எழுந்த அன்பு டையவன் போல் நாடகம் நடித்தற்கோ குறைவில்லை.

நான் இங்ஙனம் நடித்த நாடகத்தை உலகமும் சிறிது அறியும். அங்ஙனம் இருக்கக் குளிர்ந்த நின் திருவருள் இதனை அறியாததன்று. சிறிதேனும் மனம் இரங்கி அழியாத விடுபேற்று நிலை இது என்று அறிவுறுத்தித் தெரிவித்துச் சகச நிலையை அளித்து வேறொன்றையும் நினையாமல் உண்மையாய் ஆனந்தமாய் இருக்கும் தன்மையினை ஏழை யேனுக்கு அருள் செய்வாயாக!

94. நின்னுடன் கூடியிருக்கும் நாள் எந்நாள்?

காகமா னவைகோடி கூடிநின் றாலுமொரு
    கல்லின்முன் எதிர்நிற்குமோ
  கன்மமா னவைகோடி முன்னே செய் தாலும்நின்
    கருணைப்ர வாகஅருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்கவல்லவோ
    தமியனேற்கு அருள்தாகமோ
  சற்றுமிலை என்பதுவும் வெளியாச்சு வினையெலாம்
    சங்கேத மாய்க்கூடியே
தேகமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
    சேராமல் யோகமார்க்க
  சித்தியோ வரவில்லை சகசநிட் டைக்குமென
    சிந்தைக்கும் வெகுதூரம் நான்
ஏகமாய் நின்னோ டிருக்கும்நாள் எந்தநாள்
    இந்நாளின் முற்றுறாதோ
  இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
    எங்கும்நிறை கின்றபொருளே!

94. இம்மை மறுமை என்னும் இரண்டிலும் உயிர்க்கு உயிராகி எங்கும் நிறைகின்ற மெய்ப் பொருளே! கோடிக் கணக்கான காக்கைகள் ஒன்றாய்த் திரண்டு கூடினாலும் அவை ஒரு கல்லினை எதிர்த்து நிற்க வல்லவையோ? அது போன்று, முன்னே பல தீவினைகளைச் செய்திருப்பினும் அவையெல்லாம் நின் அருள் என்ற வெள்ளத்தை விரும்பி வேண்டியவர் முன் எதிர்த்து, நிற்க வல்லவையோ! எனக்கு அருள் தாகமானது சிறிதும் இல்லை என்பதும் வெளிப்பட்டு விட்டது! வினைகள் எல்லாம் கட்டுப் பாடாய்த் திரண்டு வந்து என் உடலை மிகவும் வாட்டுகின்றனவே! துன்பங்கள் வந்து சேராமல் யோக நெறி கைகூடுதல் சிறிதும் இல்லை. சகச நிட்டைக்கும் என் மனத்துக்கும் நீண்ட தொலைவு. நான் நின்னுடன் கூடி ஒன்றாய் (அத்து விதமாய்) இருப்பது என்று? அஃது இக்காலத்தில் முடிவு பெறாதோ!

95. உண்மை எது?

ஒருமைமன தாகியே அல்லலற நின்னருளில்
ஒருவன்நான் வந்திருக்கின்
உலகம் பொறாததோ மாயா விசித்ரமென
ஒயுமோ இடமில்லையோ
அருளுடைய நின்அன்பர் சங்கைசெய் திடுவரோ
அலநுகிர்த்திய கர்த்தராய்
அகிலம் படைத்தெம்மை ஆள்கின்ற பேர்சிலர்
அடாதென்ப ரேஅகன்ற
பெருமைபெறு பூரணம் குறையுமோ பூதங்கள்
பேய்க்கோலமாய் விதண்டை
பேசுமோ அலதுதான் பரிபாக காலம்
பிறக்கவிலை யோதொல்லையாம்
இருமைசெறி சடவினை யெதிர்த்துவாய் பேசுமோ
ஏதுளவு சிறிதுபுகலாய்
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

95. இம்மை மறுமை இரண்டிலும் உயிர்க்கு உயிராய் எங்கும் நிறைந்திருக்கின்ற மேலான பொருளே!

நான் ஒருவன் துன்பம் அடையாதபடி ஒருமைப்பட்ட மனத்தை உடையவனாய் உனது அருள் வெளிக்குள் வந்திருந்தால், அதை உயர்ந்தோர் பொறுத்துக் கொள்ள மாட்டாரோ! மாயா காரியமானது ஒய்ந்து விடுமோ? அதற்கு என்னை அல்லாது வேறிடம் இல்லையோ? உனது அருளைப் பெற்றிருக்கும் நின் மெய்யன்பர் தடை செய்திடுவாரோ! அல்லது படைத்தல் முதலிய தொழிலைச் செய்பவராய் உலகத்தைப்படைத்து எம்மைக் காக்கும் சிலர் இது தகாது என்று கூறுவாரோ? அகன்றுள்ள பெருமையுடைய நின் பரிபூரண நிலையானது குறைந்து விடுமோ? பூதங்கள் பேய் வடிவம் கொண்டு வீண் தருக்கம் பேசுமோ? அல்லது என் பரிபக்குவ காலம்தான் உண்டாக வில்லையோ? பழைய

இரண்டு என்ற எண்ணுடைய அறிவற்ற இருவினைகள் எதிரிட்டுப் பேசிடுமோ! இவற்றுள் உண்மையானது எது என்று சற்றுக் கூறிடல் வேண்டும்.

96. துறவியின் ஏவலை மேற்கொள்ள வேண்டும்

நில்லாது தேகமெனும் நினைவுண்டு தேகம்நிலை
　　நின்றிடவும் மௌனியாகி
　நேரே உபாயமொன்று அருளினைஐயோ இதனை
　　நின்றனுட் டிக்கஎன்றால்
கல்லாத மனமோ ஒடுங்கிஉப ரதிபெறக்
　　காணவிலை ஆகையாலே
　கையேற்று ணும்புசிப் பொவ்வாதெ நாளுமுன்
　　காட்சியில் இருந்துகொண்டு
வல்லாள ராய்இயம நியமாதி மேற்கொண்ட
　　மாதவர்க்கு ஏவல்செய்து
　மனதின் படிக்கெலாம் சித்திபெறலாம் ஞானம்
　　வாய்க்கும்ஒரு மனுஎனக்கிங்கு
இல்லாமை ஒன்றினையும் இல்லாமை யாக்கவே
　　இப்போது இரங்குகண்டாய்
　இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
　　எங்கும்நிறை கின்றபொருளே!

96. இம்மை மறுமை என்னும் இரண்டிலும் உயிருக்கு உயிராய் எங்கும் நிறைந்திருக்கின்ற மெய்ப்பொருளே!

உடலானது நிலைத்து நிற்காதது என்ற எண்ணம் உண்டு. இத்தகைய வுடல் நிலைத்திருக்கவும் மௌன குருவாய் வந்து தகுந்த உபாயம் ஒன்றை நீ அருளிச் செய்தாய். ஐயோ! இதனை உறுதியாக நின்று மேற்கொள்ளலாம் என்று எண்ணினால் கற்க வேண்டியவற்றைக் கற்காத மனமோ ஒடுங்கி உடலிடத்து வெறுப்புக் கொள்ளவில்லை.

ஆதலால் கையால் பிச்சை ஏற்று உண்ணும் உணவு மனத்துக்கு ஒவ்வாது. எந்த நாளும் நின் திருமுன்பு இருந்து

கொண்டு மனத்திண்மை உடையவராய் இயமம் நியமம் முதலியவற்றைச் செய்யத் தொடங்கிய துறவிகட்குப் பணி விடை செய்தால், மனத்தில் நினைத்தவாறே சித்தியை அடையலாம். ஞானமும் உண்டாகும். ஆனால் நான் வேண்டும் விண்ணப்பம் ஒன்றுண்டு, அது என்னவென்றால், இங்கு உன் திருவருள் பெறாமையான வறுமை ஒன்றை மட்டும் வறுமையாக்குதற்காக இப்போது இரக்கம் காட்டியருளல் வேண்டும்.

97. இன்பமே அனுபவிக்கும் யாம் எவ்வாறு உய்வது?

மரவுரி உடுத்தும் மலை வனநெல் கொறித்தும் உதிர்
வனசருகு வாயில்வந்தால்
வன்பசி தவிர்த்தும் அனல் வெயிலாதி மழையால்
வருந்தியும் மூலஅனலைச்
சிரமளவு எழுப்பியும் நீரினிடை மூழ்கியும்
தேகம்நம தல்லஎன்று
சிற்சுக அபேட்சையாய் நின்னன்பர் யோகம்
செலுத்தினார் யாம்பாவியேம்
விரவுமறு சுவையினோடு வேண்டுவ புசித் தரையில்
வேண்டுவ எலாமுடுத்து
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்தமின்றி
இரவுபகல் ஏழையர்கள் சையோக மாயினோம்
எப்படிப் பிழைப்பதுரையாய்
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

97. இம்மை மறுமை இரண்டிலும் உயிருக்கு உயிராய் எங்கும் நிறைந்திருக்கின்ற மெய்ப்பொருளே!

நின் அடியார், மரப்பட்டையை உரித்து ஆடையாக உடுத்தும், மலைநெல் வனநெல் ஆகியவற்றை உண்டும், உதிர்கின்ற இலைச் சருகுகள் தாம் இருக்கும் இடத்துக்கு வந்தால் அவற்றை யுண்டு வலிய பசியைப் போக்கியும், தீ வெயில் முதலிவையாலும் மழையினாலும் துன்பப்பட்டும், மூலாதாரத்தில் உள்ள தீயைத் தலைவரையில் எழும்படி யாய்ச் செய்தும், புண்ணிய நீரில் முழுகியும், 'உடலானது நம்முடையது அன்று' என்று முடிவு செய்து, ஞான இன்பத்தைப் பெற விரும்பியவராய், யோகத்தை மேற் கொண்டு வந்தார்கள். பாவியான யாம் பொருந்திய அறு சுவையுடன் வேண்டுமளவு உணவை உண்டு, இடையில் விரும்பும் ஆடைகளையெல்லாம் உடுத்து, மேடை மாட மாளிகை முதலியவற்றில் தங்கி, வேறு ஒரு துன்பமும் இல்லாது இரவும் பகலும் மங்கையருடன் கூடிக் கலந்து இன்பம் துய்த்தோம், இங்ஙனமானால் நாங்கள் எவ்வாறு உய்வது? உரைப்பாயாக!

98. இழிவான மங்கையர் உள்ளம்!

முத்தனைய மூரலும் பவளவாய் இன்சொலும்
முகத்திலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற இருகும்ப
முலையின்மணி மாலைநால
வைத்தெமை மயக்கியிரு கண்வலையை வீசியே
மாயா விலாசமோக
வாரிதியில் ஆழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம் புசித்துவிழி யிமையாத
பொன்னாட்டும் வந்ததென்றால்
போராட்டம் அல்லவோ பேரின்ப முத்தியிப்
பூமியில் இருந்துகாண
எத்தனை விகாதம்வரும் என்றுசுகர் சென்றநெறி
இவ்வுலகம் அறியாததோ

இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்றபொருளே!

98. இம்மை மறுமை என்னும் இரண்டிலும் உயிருக்கு உயிராய் எங்கும் நிறைந்துள்ள மெய்ப்பொருளே! முத்துப் போன்ற பற்களும் பவழம் போன்ற சிவந்த வாயின் இன் சொற்களும், முகத்தில் பூசப்பட்டு விளங்கும் பசுமையான மஞ்சளும் கொண்டு மூர்ச்சையாகுமாறு மினுக்கி அதனால் காம உணர்வு வெறி என்ற விரகசன்னதம் உண்டாகும்படி செய்ய இரண்டு குடங்களைப் போன்ற கொங்கைகளின் மீது மணிமாலைகள் தொங்க, எங்களை வயப்படுத்தி மயங்கச் செய்து, இருகண்களான வலையை வீசி, மாயையின் விளை யாட்டான காமக்கடலில் விழச் செய்கின்ற பாழான சிற்றி டையையுடைய மங்கையர் அளிக்கும் சிற்றின்பம், புதிய அமிழ்தத்தை அனுபவித்துக் கண் இமைக்காத பொன்னுல கத்து வாழும் தேவர்க்கும் வந்து, துன்புறுத்தும் என்றால் அது பெரும் போராட்டமாக முடியும் அன்றோ! பேரின் பத்தைத் தரும் வீடுபேற்றை இவ்வுலகத்தில் இருந்து அடைவதற்கு எத்தனை தடைகள் உண்டாகும் என்று சுகமுனிவர் மேற்கொண்ட துறவு நெறியை இந்தவுலகினர் அறியமாட்டாரோ?

(விரக சன்னதம் — காம வெறி. விலாசம் — விளை யாட்டு. விகாதம் — தடை. திருமால் பிருந்தை என்பவ ளிடம் மயங்கினான். நான்முகன் வித்தியாபரணையிடம் மயங்கினான். இப்படியே இந்திரன் முதலியவரும் பிறர் மனைவியரான மங்கையரிடம் மயங்கினர். சுக முனிவர் பிறந்தவுடனேயே துறவை மேற்கொண்டார்.)

99. எனக்கு அருளிய அருள்உரு வாழ்க!

உன்னிலையும் என்னிலையும் ஒருநிலை எனக்கிடந்
துளறிடும் அவத்தையாகி

உருவுதான் காட்டாத ஆணவமும் ஒளிகண்டு
ஒளிக்கின்ற இருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்கவிரு வினையினால்
தாவுசுக துக்க வேலை
தட்டழிய முற்றும்இல் லாமாயை யதனால்
தடித்தகில் பேதமான
முன்னிலை ஒழிந்திட அகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றும்ஆ னந்தநிறைவே
என்னிலைமை யாய்நிற்க இயல்புகூர் அருள்வடிவம்
எந்நாளும் வாழி வாழி
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நி றைகின்றபொருளே!

99. இம்மை மறுமை என்னும் இரண்டிலும் உயிர்க்கு உயிராய் எங்கும் நிறைந்திருக்கின்ற மெய்ப் பொருளே!

உனது நிலையும் எனது நிலையும் ஒரே நிலையாகும் என்று கொண்டு ஆணவ மேலீட்டால் உளறும் அவத்தையை அடைந்து, தன் வடிவத்தைக் காட்டாத ஆணவ மலமும், ஒளி தோன்றியபோது மறையும் இருளைப் போல் தன் நிலையைப் புலப்படுத்தாது அடங்க, இருவினைகளான அவைகளுடன் தாவும் இன்பம் துன்பம் என்ற கடல்கள் தடுமாற்றமான பிறப்பை அடைய, காரியப் பாட்டினால் முழுதும் இல்லாததான மாயையால் உருக்கொண்டு பலவேறு பாடான முன்னிலைச் சுட்டொழிய, பிரிக்கப்படாத வடிவு உடையதாய் முன் பின்னுடன் கீழ்மேல் நடுபக்கம் என்று சொல்லாத வண்ணம் முடிவைப் பெறும் இன்ப நிறைவே அடியேனின் நிலைமையாய் அதனுள் அடங்கி நிற்கும் இயல்பை எனக்கு அருளிய அருளுருவமானது (குருவடிவானது) எக்காலத்தும் வாழ்க! வாழ்க!

11. சச்சிதானந்த சிவம்

(சச்சிதானந்தம் - சத் + சித் + ஆனந்தம் + சிவம்; சத்- உண்மை. சித்து - அறிவு ஆனந்தம்-இன்பம். சிவம்- பரமசிவம். இறைவன், உண்மை அறிவின்பமாய் விளங்கும் இயல்பு.)

100. நிட்டையை அளித்தருள்வாய்!

பாராதி ககனப் பரப்புமுண் டோஎன்று
 படர்வெளிய தாகிஎழுநாப்
பரிதிமதி காணாச் சுயஞ்சோதி யாய் அண்ட
 பகிரண்ட உயிரெவைக்கும்
நேராக அறிவாய் அகண்டமாய் ஏகமாய்
 நித்தமாய் நிர்த்தொந்தமாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமனம் அணுகாத
 நின்மலா னந்தமயமாய்ப்
பேராது நிற்றிநீ சும்மா இருந்துநான்
 பேரின்பம் எய்திடாமல்
பேய்மனதை அண்டியே தாயிலாப் பிள்ளைபோல்
 பித்தாகவோ மனதைநான்
சாராத படிஅறிவில் நிருவிகற் பாங்கமாம்
 சாசுவத நிட்டைஅருளாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
 சச்சிதா னந்தசிவமே!

100 எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய் எல்லையற்றதாக உண்மைப் பொருளாய் உள்ள உண்மை அறிவு இன்ப வடிவாய் விளங்கும் மேலான சிவமே!

மண் முதல் வானப்பரப்பும் உள்ளனவோ என்று கூறுமாறு பரந்திருக்கின்ற அறிவுப் பெரு வெளியாகி உள்ளாய். அக்கினியும் கதிரவனும் சந்திரனும் காண

இயலாத சுய ஒளியாய் விளங்குகிறாய். இவ்வுலகமும் இதற்கு அப்பால் உள்ள உலகங்களிலுமுள்ள உயிர்கள் எல்லா வற்றிற்கும் செம்மையான அறிவுருவாய் ஆயினை. எல்லை உனக்கு இல்லை. ஒன்றாயும் அழிவிற்றியும் உள்ளாய். பிறிதின் தொடர்பு உனக்கில்லை. மூன்று குணங்களும் உனக்கு இல்லை. வாக்கையும் மனத்தையும் பொருந் தாத (கடந்த) தூய்மையான இன்ப வடிவாகி நீ அசையாதுள்ளாய். வாளா இருந்து பேரின்பத்தை அடையா மல் பேய் மனத்தை அடைந்து தாய் இல்லாத பிள்ளையைப் போன்று பிதற்றவோ? உள்ளத்தை நான் அணுகாதபடி அறிவுடன் கூடிய வேறுபாடற்ற உறுப்பை உடைய அழியாத நிலையான நிட்டையை எனக்குத் தருதல் வேண்டும்.

101. ஞானவடிவே மெய் என்றிருப்பது எக்காலம்?

குடக்கொடு குணக்காதி திக்கினை யுழக்கூடு
கொள்ளல்போல் ஐந்துபூதம்
கூடும் சுருங்கிலைச் சாலேகம் ஒன்பது
குலாவுநடை மனையை நாளும்
வடக்கயிறு வெண்ணரம் பாஎன்பு தசையினால்
மதவேள் விழாநடத்தி
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர்செநீர்கணீர்
மலநீர்புண் நீரிறைக்கும்
விடக்குத் துருத்தியைக் கருமருந் துக்கூட்டை
வெட்டவெட் டத்தளிர்க்கும்
வேட்கைமரம் உறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போ லிருந்துபொய்யாம்
சடக்கைச் சடக்கெனச் சதமென்று சின்மயம்
தானாகி நிற்பதென்றோ
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

'101. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய் எல்லையற்றதாய் உண்மைப் பொருளாய் உள்ள உண்மை அறிவு இன்ப வடிவாய்விளங்கும் மேலான சிவமே!

மேற்குடன் கிழக்கு முதலாகக் கூறப்படும் திக்குகளை உழக்கு அளவையில் கொள்வதைப் போன்று மண் முதலான ஐந்து பூதங்களால் கூடிய சிறிய உடலை, பலகணிகள் ஒன்பதுடன் கூடி விளங்கும் நடமாடுகின்ற தன்மை கொண்ட வீட்டை, வடக்கயிறு வெண்மையான நரம்பாகவும் எலும்பு இறைச்சிகளால் மன்மதன் விழா நடத்தி வைக்கின்ற சிறிய தேரை,

கோழை நீர் குருதி, கண்ணீர், மலத்துடன் வெளிப்படும் சிறுநீர், புண்ணினின்று வடியும் சீழ் நீர் என்ற இவற்றை விடாது இறைக்கும் ஊன் துருத்தியைப் பிறப்புக்குக் காரண மான கருவுக்குரிய மருந்து தங்கியுள்ள கூட்டினை.

வெட்ட வெட்டத் தளிர்க்கின்ற ஆசை என்ற மரங்கள் பொருந்திய சுடுகாட்டை. முடிவில் உண்மைபோல் இருந்து பொய்யாகும் உடலைப் பொய் என்று எண்ணி ஞான வடிவமே மெய் என்று நிற்பது எந்தக் காலம்?

(சாலேகம் - பலகணி; சடக்கு - உடல்; சடக்கென்று பொய் என்று. மல நீர் - சிறு நீர்; சின் மயம் - ஞானமயம்; சிவஞானம்; சதம் - மெய்.)

102. என் இயலாமை!

பாகத்தி னால்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி இல்லை வேத
பராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையுமில்லை
யோகத்தி லேசிறிது முயலஎன் றால்தேகம்

ஒவ்வா திவ் ஊன் வெறுத்தால்
உயிர்வெறுத் திடலொக்கும் அல்லாது கிரியைகள்
உபாயத்தி னால்செய்யவோ
மோகத்தி லேசிறிதும் ஒழியவிலை மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்கவென்றால்
முற்றாது பரிபாக சக்திகள் அனேகம் நின்
மூதறிவி லேயெழுந்த
தாகத்தி லேவாய்க்கும் அமிர்தப்பிர வாகமே
தன்னந் தனிப்பெருமையே
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

102. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய் உள்ள உண்மை அறிவுஇன்பவடிவாய் விளங்கும் மேலானபொருளே!

நன் முறையில் தமிழ்க் கவிகளைப் படிக்கலாம் என்றாலோ என்னிடம் பக்தி நெறி இல்லை. பாராயணத் துக்குரிய தமிழ் மறையான திருவாசகம் என்ற நூலையும், ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் இயற்றிய தேவாரம் என்ற 'அடங்கல் முறை' யான நூலையும் ஓதி உய்தி பெறலாம் என்றாலோ இசை யுணர்ச்சி சிறிதும் இல்லை. யோக நெறியில் சிறிது முயற்சி செய்யலாம் என்றால் அதற்கு உடலானது இடம் தராது. யோக முயற்சிக்கு ஏற்றபடி உணவை வெறுத்துக் குறைத்திடலாம் என்றால் அது உயிரை விடுவதைப் போன்றதாக விளங்கு கின்றது. கிரியைகளைத் தக்கவாறு செய்யலாம் என்றாலோ அனுபவிக்கும் பொருள்களிடத்தில் உள்ள வேட்கை சற்றும் நீங்கவில்லை. மெய்ஞ்ஞான வரம்பான மோன நிலையில் நிற்கலாம் என்றால் கைகூடுவதில்லை. அதற்குக் காரணம், என்னைத் தடை செய்யப் பரிபக்குவ சக்திகள் பலவாய் உள்ளன. நின் திருவடிவுணர்வு எனப்படும் மூதறிவில் முழுகி

வீடுபேற்றை அடையவேண்டும் என்ற வேட்கையால் கிடைக்கப் பெறுகின்ற அமுதப் பெருக்கே! தன்னந்தனியான ஒப்பில்லாத பெரும் பொருளே!

(பரிபாக சக்திகள் — ஆறுகோடி மாயா சக்திகள். அவை காமம், வெகுளி முதலியவை.)

103. மனமாயை

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணும்
இவ்வுலகம் எவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்கும் மாதர்சிற் றின்பமோ
என்னின்மக மேருவாக்கிச்
சுமைஎடுமின் என்றுதான் சும்மாடு மாய் எமைச்
சுமைஆளும் ஆக்கி நாளும்
துர்ப்புத்தி பண்ணி உள நற்புத்தி யாவையும்
சூறையிட்டு இந்த்ரசாலம்
அமையவொரு கூத்தும் சமைந்தாடும் மனமாயை
அம்மம்ம வெல்ல எளிதோ
அருள்பெற்ற பேர்க்கெலாம் ஒளிபெற்று நிற்குமீது
அருளோ அலாதுமருளோ!
சமயநெறி காணாத சாட்சிநீ சூட்சுமமாத்
தமியனேற்கு உளவுபுகலாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

103. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய்உள்ள உண்மை அறிவு இன்ப வடிவாய் விளங்கும் மேலான பொருளே!

மனமானது கண் இமைக்கும் நேரத்தை ஊழிக்காலம் போன்று பெரிதாய்க் காட்டும். முன்னர்ப் பழகிய உலகத்தை இஃது எந்த வுலகமோ என்று எண்ணுமாறு செய்யும்.

மங்கையர் இன்பத்தையோ என்றால் பொன்மலையான மேருமலையைப் போன்று பெரிதாகக் காட்டும். அதுமட்டு மன்றி அந்தப் பொன்மலை என்ற பெண் இன்ப சுமையைச் சுமந்து எடுங்கள் என்று அது சும்மாடாக்கி நம்மைச் சுமக்கும் ஆளாகச் செய்யும். தீய அறிவை உண்டாக்கி முன்புள்ள நல்ல அறிவையும் அழித்து இந்திரசாலம் போல் ஒரு கூத்தும் செய்யும்.

இத்தகைய இயல்புடைய மனமாயையை வெல்வது எளிதோ? அம்மம்ம! நின்னருள் பெற்ற அடியார்க்கு எல்லாம் அந்த மனம் ஒளி பெற்று விளங்கும். நின்னருள் பெறாதவர்க்கு மயக்கும் தன்மையுடையதாய் நிற்கும். சமய மார்க்கங்களால் காணப்படாத சாட்சி பூதன் நீ! எளியேனுக்கு மறைபொருளாய் நிற்கும் தன்மையைக் கூறிடுவாயாக!

104. மௌனநிலை மேற்கொள்ள எண்ணினேன்

இனியேதெமக்குனருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயோ
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பர்என்
றெண்ணவோ திடமில்லையே
அனியாய மாய்இந்த வுடலைநா னென்றுவரும்
அந்தகற் காளாகவோ
ஆடித் திரிந்து நான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல்நன்றோ
கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற்கு எண்ணினேன் எண்ணமிது
சாமிநீ அறியாததோ

சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

104. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய் உள்ள உண்மை அறிவு இன்பவடிவாய் விளங்கும் மேலான பொருளே!

இனி எங்கட்கு உன்னருளானது கிடைப்பது ஏது? ஒரு கால் உண்டாகுமோ என்று நினைத்து என் உள்ளம் ஏங்கு கின்றது. ஐயோ! 'இன்று உயிருடன் இருந்தவரை நாளைக்கு இருப்பர்' என்று நினைக்க வா உறுதியான நிலை இல்லையே! அநியாயமாய் இந்த வுடம்பை நான் என்று செருக்குக் கொண்டு வரும் இயமனுக்கு அடிமையாகவோ? நான் ஆடி அலைந்து வருந்திக் கற்றவையும் கேட்டவையும் வீணாய்ப் பயனின்று போவது நன்றோ? பசித் தீ என்பது வந்து வருத்தும்போது, பழமேயாயினும் வெறுமையான செங்காய் ஆயினும் உதிர்ந்த சருகு முதலான கந்த மூலங் களுள் ஒன்றையேனும் வாரி எடுத்து உண்டு, நான் கண் மூடி மௌன நிலையை மேற்கொண்டு தனித்திருக்க எண்ணினேன். இந்த என் எண்ணம் இறைவனான நீ அறியாததோ?

105. மோனநிலை பெற்றவர் உய்வர்

மத்தமத கரிமுகில் குலமென்ன நின்றிலகு
வாயிலுடன் மதியகடுதோய்
மாடகூ டச்சிகர மொய்த்தசந் திரகாந்த
மணிமேடை உச்சிமீது
முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு
முத்துமுத் தாய்க்குலாவி
மோகத் திருந்துமென் யோகத்தின் நிலைநின்று
மூச்சைப் பிடித்தடைத்துக்

கைத்தலம் நகப்படை விரித்தபுலிசிங்கமொடு
கரடிநுழை நூழைகொண்ட
கானமலை உச்சியில் குகையூ டிருந்துமென்
கரதலா மலகமென்னச்
சத்தமற மோனநிலை பெற்றவர்கள் உய்வர்காண்
சனகாதி துணிவிதன்றோ
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

105. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய் உள்ள உண்மை அறிவு இன்ப வடிவாய் விளங்கும் மேலான பொருளே!

மதம் உடைய யானைகள் மேகக் கூட்டங்கள் போல நின்று விளங்கும் முற்றத்துடன் கூடிய சந்திரனின் நடுவைத் தொடுகின்ற உயர்ந்த மாளிகைகள், வீடுகளின் உச்சிகள், ஆகியவை பொருந்திய சந்திர காந்தக் கல்லால் ஆன மேடையின் உச்சியின் மீது முத்தமிழ் முழக்கத்துடன் முத்துப் போன்ற பற்களை உடைய மங்கையருடன் அன்புடன் விளையாடிக் காதலில் மூழ்கிக் கிடந்தாலும் சிவனடி நினைவு இல்லாது போனால் என்ன பயன்? யோக நிலையில் நின்று வாயுவைத் தடுத்துக், கைகளிலே நகம் என்ற ஆயுதங்களையுடைய புலி சிங்கங்களுடன் கரடிகள் நுழைகின்ற அடர்ந்த காடுகளிலும் மலையுச்சியிலும்குகைகளிலும் இருந்தாலும் என்ன பயன்? கையில் உள்ள நெல்லிக் கனியைப் போல ஒலி அடங்கப் பெற்று மோன நிலையைப் பெற்றவர் உய்வார்கள். இஃது அறிவால் மிக்க சனகர் முதலானவர் துணிபாகும்.

106. வீடு பேற்றின் இயல்பு

கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியென
கண்டவே தாகமத்தின்

காட்சிபுரு டார்த்தம் அதின் மாட்சிபெறும் முத்தி
கருதின் அநு மானமாதி [அது
உத்திபல வாம்நிரு விகற்பமேல் இல்லையால்
ஒன்றோடு இரண்டென்னவோ
உரையுமிலை நீயுமிலை நானுமிலை என்பதும்
உபாயம்நீ யுண்டுநானும்
சித்தமுளன் நானில்லை எனும்வசனம் நீயறிவை
தெரியார்கள் தெரியவசமோ
செப்புகே வலநீதி ஒப்புவமை அல்லவே
சின்முத்தி ராங்கமரபில்
சத்தமற எனையாண்ட குருமௌனி கையினால்
தமியனேற்கு உதவுபொருளே
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே!

106. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய் உள்ள உண்மை அறிவு இன்ப வடிவாய் விளங்கும் மேலான பொருளே!

உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காணப்படும் வேதாகமங்களில் உள்ள பொருள்கள் நான்கு, அவை அறம், பொருள், இன்பம், வீடு. அவற்றுள் சிறப்புடையது வீடு என்பதாகும். அதனை எண்ணிப் பார்க்குமிடத்து அனுமானம் முதலான பிரமாணங்களால் உள்ள உத்திகள் பல. அவை நிர் விகற்ப சமாதி அனுபவத்தில் பயன்படாது ஒழியும். ஆதலால் அங்கு ஒன்று இரண்டு என்ற சொல்லும் இல்லை.

'முதல்வனான நீயும் இல்லை. நின் அடியவனான நானும் இல்லை' என்று கூறுவதும் சூழ்ச்சியே அன்றி உண்மை யாகாது! ஏனெனில், உண்மையாய் ஆராயின், வீடுபேற்றை அளிக்கும் நீயும் உண்டு. அந்த இன்பத்தை அனுபவிக்கும் நானும் உண்டு. அங்ஙனம் இருக்க நான்

என்னும் ஒரு பொருள் இல்லை என்ற சொற்பொருளை நீ நன்றாய் அறிவாய். இவ்வுண்மையை, அறிந்து கொள்ளும் அருள்பேறு இல்லாதவர் எவ்வாறு அறிந்துகொள்ள இயலும்? இயலாது.

வேதாகமங்களில் கூறப்படும் வீடுபேற்று நெறிமுறைகளை உவமை காட்டிக் கூற முடியுமோ? அங்ஙனம் கூறுதற்கு அது இயலாது! ஞான முத்திரையை உறுப்பாய்க் கொண்ட யோக மரபினால் ஒலியடங்க என்னை ஆட்கொண்ட மௌன குருவின் திருக்கையினால் எனக்கு அளிக்கப்பட்ட மேலான பொருளே!

[நிர் விகற்பம்-பகுப்பு இல்லாமை. பெயர் முதலியவற்றால் பகுத்து அறிதல் இன்றி, இஃது ஒன்று உள்ளது என்பதை மட்டும் அறியும் அறிவு.]

107. என் மனத்துன்பத்தை நீக்குவாய்

காயாத மரமீது கல்லேறு செல்லுமோ
கடவுள்நீ யாங்கள் அடியேம்
கன்மபந் தத்தினால் சன்மபந் தம்பெறக்
கற்பித்த துன்னதருளே
வாயார உண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர்
வைவதுவும் எங்களுலக
வாய்பாடு நிற்கநின் வைதிக ஒழுங்குநினை
வாழ்த்திவால் பெறுபேறுதான்
ஓயாது பெறுவார்என முறையிட்டதால் பின்னர்
உளறுவது கருமமன்றாம்
உபயநெறி ஈதென்னின் உசிதநெறி எந்தநெறி
உலகிலே பிழைபொறுக்கும்
தாயான கருணையும் உனக்குண் டெனக்கினிச்
சஞ்சலம் கெடவருள்செயாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே

107. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய் உள்ள உண்மைஅறிவு இன்பவடிவாய் விளங்கும் மேலானபொருளே!

காய்க்காத மரத்தின் மீது கல் எறிவது உண்டோ? நீ எம் இறைவன் ஆவாய். யாங்கள் உன் அடியவர்கள். வினையின் தொடர்பினால் பிறவியான பிணிப்பை அடையும்படி கற்பித்தது உன் அருளேயாகும். உணவை வாயார உண்டவர்கள் போற்றுவதும், நல்வினை இல்லாததால் உண்ண இயலாது போனவர் பழிப்பதும் எம் உலகத்தின் வழக்கமாகும். இது ஒருபுறம் நிற்க, நின் மறைநூலின் ஒழுங்கின்படி உன்னை வணங்கி வாழ்த்தினால் பெறுவதற்கரிய வீடுபேறு அடைவதைத் தவறாமல் அடைவர் என்று மறைநூல்கள் முழங்குகின்றன. அதனால், இதற்குமேல் கூறப்படுதல் நல்ல செயல் ஆகாது. இங்ஙனம் வாழ்த்துவதும் வைவதும் என்ற இரண்டு நெறிகள் உளது ஆயின், இவற்றுள் பயனுடைய நெறி எந்தநெறி? உலகத்தில் குற்றத்தைப் பொறுத்துக் கொள்கின்ற தாய் போன்ற கருணையும் உனக்கு உண்டு, இனி எனக்கு மனத்துன்பம் நீங்கிடச் செய்வாயாக!

108. வீட்டு நெறியை அடையச் செய்க

இன்னம் பிறப்பதற் கிடமென்னின் இவ்வுடலம்
  இறவா திருப்ப மூலத்
தெழும் அங்கி அமிர்தொழுகும் மதிமண்ட லத்திலுற
  என்னம்மை குண்டலினிபால்
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப்
  பேயேனை நல்கவேண்டும்
பிறவாத நெறிஎனக்கு உண்டென்னின் இம்மையே
  பேசுகார்ப் பூரதீபம்
மின்னும் படிக்ககன் டாகார அன்னைபால்

வினையேனை ஒப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவுநன்று இவையன்றி
விவகார முண்டென்னிலோ
தன்னந் தனிச்சிறியன் ஆற்றிலேன் போற்றிவளர்
சன்மார்க்க முத்திமுதலே
சர்வபரி பூரண அகண்டநத் துவமான
சச்சிதா னந்தசிவமே!

108. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய் உள்ள உண்மை அறிவு இன்ப வடிவாய் விளங்கும் மேலான பொருளே!

இன்னும் நான் பிறக்கின்றதற்கு இடம் உண்டானால், இந்தவுடலானது இறவாது இருக்கும்படி மூலாதாரத்தில் உண்டாகும் தீயானது அமிர்தம் ஒழுகும் சந்திர மண்டலத்தில் பொருந்தும்படி என் தாயான குண்டலி சக்தியினிடம் குற்றம் உண்டாகாதபடி குழந்தையைப் போன்று வளர்த்தற் பொருட்டுப் பேய் போன்ற என்னை அளித்திடல் வேண்டும். அங்ஙனம் இல்லாது பிறக்காத வழி எனக்கு உள்ளதாகுமானால் இப்பிறவியிலேயே, புகழப்படும் கற்பூர தீபம் போன்று ஒளிவிடுமாறு எங்கும் நிறைந்த நிறைவான அருள் அன்னையிடத்தில் என்னை ஒப்படைத்து வீட்டு நெறியை அடையும்படி செய்திடல் மிகவும் நன்மை தருவதாகும்.

இவையல்லாது வேறு வழக்கு ஏதேனும் உள்ளதாயின் தனியனான நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன். வணக்கம்! வளர்கின்ற நன்னெறியுடைய முத்தியை அளித்தருளும் முதல்வ!

109. யாவும் நீ!

வேதாவை இவ்வணம் விதித்ததே தென்னின்உன்
வினைப்பகுதி என்பன் அந்த

வினைபேச அறியாது நிற்க இவை மனதால்
விளைந்ததால் மனதைநாடில்
போதமே நிற்கும்அப் போதத்தை நாடிலோ
போதமும்நின் னால்விளக்கம்
பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று
போக்குவர வறநிகழ்த்தும்
ஆதார ஆதேயம் முழுதுநீ யாதலால்
அகிலமீது என்னையாட்டி
ஆடல்கண் டவனுப்நீ ஆடுகின் றவனும்நீ
அருளும்நீ மௌனஞான
தாதாவும் நீ பெற்ற தாய்தந்தை தாமும்நீ
தமரும்நீ யாவும்நீகாண்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே!

109. எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய் உண்மை அறிவு இன்ப வடிவாய் விளங்கும் மேலான பொருளே!

'அடியேனை இங்ஙனம் படைத்தது ஏன்?' என்று நான் முகனைப் பார்த்து வினவின், ''அவன் உன் வினைப் பகுதியே இதற்குக் காரணம்'' என்பான். அந்த வினையோ பேசுவதற்கு அறியாத ஒன்று, அது நிற்க, அவையெல்லாம் மனத்தால் உண்டானதால் அந்த மனத்தை நாடி வினவி னால், அந்த மனமும் பேச — அறியாத இயல்புடையது. ஆதவால் அந்த மனத்தில் உண்டாகும் அறிவை நாடி வினவின், அந்த அறிவோ நின்னால் விளக்க விளங்கும் இயல்புடையது. இது பொய்யன்று. தெய்வத் தன்மை யுடைய மறைகள் எல்லாம் நீயே என்று போக்குவரவு இல்லாது கூறும். தாங்குவதும் தாங்கப் படுவதும் நீயே யாதலால் இவ்வுலகத்தின் மீது என்னை ஆடுமாறு செய்து அந்த விளையாட்டைப் பார்த்தவனும் நீ! ஆடுபவனும் நீ!

எல்லா அருளும் நீ! மௌனக் கொடையாளனும் நீ! பெற்ற தாய் தந்தையும் நீ! சுற்றமும் நீ! மற்றும் எனக்குள்ள யாவும் நீ!

110. நின்னருளை மறவா வரம் தரல் வேண்டும்

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்
குளிர்தீம் புனற்கைஅள்ளிக்
கொள்ளுகினும் அந்நீ ரிடைத்திளைத் தாடினும்
குளிர்சந்த வாடைமடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை உலவவே
வசதிபெறு போதும் வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலைஅமுதம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும்
வேளையிலும் மாலைகந்தம்
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டிய வண்ணம்
விளையாடி விழிதுயிலினும்
சந்ததமும் நின் அருளை மறவா வரம்தந்து
தமியேனை ரட்சைபுரிவாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே!

110. எல்லாப் பொருள்களிலும் நிறைவாய், எல்லை இல்லாததாய், உண்மைப் பொருளாய், உண்மை அறிவு இன்ப வடிவாய் விளங்கும் மேலான பொருளே!

கொத்தாய் அரும்புகள் மலர்வதற்கு இடமான மலர்ச் சோலைகளின் நல்ல நிழலில் தங்கியிருந்தாலும், குளிர்ந்த இனிய நீரை அள்ளி அருந்தினாலும், அந்த நீரில் முழுகி ஆடினாலும் குளிர்ந்த சந்தன மணமுள்ள காற்று மங்கையர் வந்து உலாவுவதைப் போல முற்றத்தில் உலவும்படி பெரிய வீடுகளை உடையவனாகும் போதும், வெண்மையான

வட்ட வடிவான சந்திரன், நண்பகலைப் போன்று நிலவு ஒளியை வீசுதலால் மகிழ்ச்சி அடையும் போதும், பாற் கடலில் தோன்றிய அமிழ்தமானது வியப்புக் கொள்ளுமாறு அறுசுவை உணவுப் பொருள்களில் வந்து சேர்ந்தது என்னும் படியான சுவை உணவை உண்ணும் போதும், பூமாலை சந்தனம் வெற்றிலை பாக்கு என்ற இவற்றை விரும்பி யுண்டு வேண்டியபடி விளையாடி கண் உறங்கினாலும் எப்போதும் உன்னருளை மறவாத வரத்தைத் தந்து தனிய னான என்னைக் காத்தருளுவாய்!

12. தேசோ மயானந்தம்

(பேரொளியாயும் இன்பமாயும் விளங்கும் இறைவன் இயல்பை விளக்குவது. இதில் உள்ள செய்யுட்கள் பதினொன்று.)

111. வீடுபேற்று வேட்கை

மருமலர்ச் சோலைசெறி நன்னிழல் மலையாதி
மன்னுமுனி வர்க்கேவலாய்
மந்த்ரமா லிகைசொல்லும் இயமநிய மாதியாம்
மார்க்கத்தில் நின்றுகொண்டு
கருமருவு காயத்தை நிருமலம தாகவே
கமலாச னாதிசேர்த்துக்
காலைப் பிடித்தனலை அம்மைகுண் டலிஅடிக்
கலைமதியி னூடுதாக்கி
உருகிவரும் அமிர்தத்தை உண்டுண் டுறங்காமல்
உணர்வான விழியைநாடி
ஒன்றோ டிரண்டெனாச் சமரச சொரூபசுகம்
உற்றிடவென் மனதின்வண்ணம்
திருவருள் முடிக்கஇத் தேகமொடு காண்பனோ 1
தேடரிய சத்தாகிஎன்

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

'111. தேடுதற்கு அருமையான உண்மையாய் என் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் அறிவான தெய்வமே! பேரொளி மயமான இன்பப் பொருளே!

நல்ல மணத்தையுடைய சோலைகள் சூழ்ந்த நல்ல நிழலையுடைய மலை முதலானவற்றில் பொருந்தியிருக்கும் முனிவர்க்கு அன்பின் அடிமையாதல் வேண்டும். 'மந்திர மாலை' என்று அழைக்கப்படும் திருமூலர் இயற்றியருளிய தனித் தமிழாகமத்தில் கூறியவண்ணம், இயமம் நியமம் முதலான நெறிகளில் நிற்றல் வேண்டும். கருவில் தோன்றித் துன்பத்தை அனுபவிக்கின்ற இந்தவுடலைத் தூய்மையாகும் படி தாமரை இருக்கை முதலான ஆசனங்களை மேற்கொண்டு, உயிர்வளியைத் தடுத்து மூலாதாரத்தில் உள்ள தீயினை எழுப்பித் தாயான குண்டலி சத்தியின் திருவடியில் உள்ள திங்களிடத்துத் தாக்கச் செய்து, அதிலிருந்து ஒழுகி வரும் அமிர்தத்தை இடைவிடாது உண்ணவேண்டும். உண்டு உறங்காது உணர்வுடனிருந்து ஞானக்கண்ணால் கண்டு இறைவனும் உயிரும் புணர்ப்பு நிலையாய் ஒன்று என்று சொல்லாமலும், இரண்டு என்று சொல்லாமலும், சமரச சுவரூப இன்பத்தை அடைதல் வேண்டும். இங்ஙனம் என் மனத்தில் உள்ள எண்ணத்தின்படி முடித்துக் கொடுக்க இந்தவுடலுடன் இருக்கும்போதே நிறைவேற நான் காண்பேனோ!

112. பிறவிக் கடலைக் கடக்க அருள்வாய்

இப்பிறவி என்னும்ஓர் இருட்கடலின் மூழ்கி நா
னென்னும்ஒரு மகரவாய்ப்பட்டு
இருவினை யெனுந்திரையின் எற்றுண்டு புற்புதம்
எனக்கொங்கை வரிசைகாட்டும்

துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்தடிப்பச்
சோராத ஆசையாம் கானாறு வான்நதி
சுரந்ததென மேலும் ஆர்ப்பக்
கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமும்
கைவிட்டு மதிமயங்கிக்
கள்ளவங் கக்காலர் வருவர்என் றஞ்சியே
கண்ணருவி காட்டும்எளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேரவும் கருணை
செய்வையோ சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

112. உண்மையாகி என் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் அறிவான இறைவனே! பேரொளி மயமான இன்பப் பொருளே!

இந்தப்பிறவி என்ற ஒரு கரிய கடலில் முழுகி 'நான்' 'எனது' என்ற செருக்கு என்ற முதலையின் வாயில் அகப்பட்டு, இருவினைகள் என்ற அலைகளால் எறியப்பட்டு, நீர்க்குமிழியைப் போல் காணப்படும் கொங்கை ஒழுங்கைக் காட்டும் பவழம் போன்ற சிவந்த வாய் இதழ்களையுடைய மங்கையரின் காம மயக்கமான பெரிய சூறைக்காற்றானது இடைவிடாது வந்து வீசிக் கொண்டிருப்ப, நீங்காத ஆசை என்ற காட்டாறானது ஆறு பெருக்கெடுத்ததைப் போன்று, மேலும் மேலும் வந்து பெருகி ஆரவாரம் செய்ய, தோணி ஓட்டுபவரைப் போல் மூதறிவான மரக்கலமும் கைவிட்டிட, அறிவு கலங்கிக் கள்ள மரக்கலத்தைப் போன்ற இயமனின் ஏவலர்கள் வருவர் என்று அஞ்சிக் கண்களினின்று நீரைவிடும் நான் செல்வதற்கரிய வீடுபேறு என்ற கரையை அடையவும் அருள்வாயோ?

113. என் சிந்தை தெளியாதது ஏன்?

தந்தை தாய் தமர் தாரம் மகவென்னும் இவையெலாம்
சந்தையிற் கூட்டம் இதிலோ

சந்தேக மில்லை மணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வும் ஓர்இந்த்ரசா லக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே
எந்தநா ளும்சரி எனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபகல் இல்லாவிடத்
தேகமாய் நின்றநின் அருள்வெள்ள மீதிலே
யான்என்பது அறமூழ்கியும்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை என்கொலோ
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோம யானந்தமே.

113. தேடுவதற்கு அரிய உண்மையாகி என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்ற அறிவுக் கடவுளே! பேரொளி மயமான இன்பப் பொருளே!

தந்தை தாய் உறவினர் மனைவி குழந்தை எனக் கூறப்படுகின்ற இப்பொருள்கள் எல்லாம் சந்தையில் கூடுகின்ற கூட்டத்தைப் போன்றவையாகும். இதில் ஐயம் இல்லை. மணிகள் இழைத்த இல்லங்கள், மாளிகைகள், மேடைகள், நான்கு வகைப்படைகள் ஆகிய இவற்றுடன் கூடிய நிகர் இல்லாத வாழ்க்கையும் ஓர் இந்திரசாலத்தின் அழகைப் போன்றவையாகும். வஞ்சனை, பொறாமை, உலோபகுணம் என்ற இவை தன்னிடம் வைக்கப் பெற்ற மனம் என்ற புழுச் சேர்ந்த மலப் பாண்டமான உடலோ விருப்பம் கொள்வதற்கு இயலாத கனவேயாகும். இவற்றை வாழ்வு தாழ்வு என்ற எக்காலமும் தக்கதென்று ஆராய்ந்து தெளிந்து இரவு பகல் என்பது இல்லாத இடத்தில் ஒரு பொருளாய் நின்ற நின் திருவருள் வெள்ளத்தில் 'யான்' என்னும் செருக்கு ஒழிந்து முழுக, உள்ளம் தெளியாமல் சுழலுவது எதனால்?

114. ஏழைக் குடும்பன் ஆயினேன்!

ஆடாமல் ஒய்ந்திட்ட பம்பரம் போல்விசை
அடங்கிமனம் வீழநேரே
அறியாமை யாகின்ற இருளகல இருள்ஒளியும்
அல்லா திருந்தவெளிபோல்
கோடா தெனைக்கண் டெனக்குள்நிறை சாந்தவெளி
கூடிஇன் பாதீதமும்
கூடினே னோ சரியை கிரியையின் முயன்றுநெறி
கூடினே னோஅல்லன்யான்
ஈடாக வேஆறு வீட்டினில் புரம்பியே
இலகிவளர் ப்ராணன் என்னும்
இருநிதி யினைக்கட்டி யோகபர னாகாமல்
ஏழைக் குடும்பனாகித்
தேடா தழிக்கஒரு மதிவந்தது என்கொலோ
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

114. தேடுவதற்கு அருமையான உண்மையாகி என் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற அறிவான இறையே! பேரொளி மயமான இன்பப் பொருளே!

சுழலாமல் நின்று விட்ட பம்பரத்தைப் போன்று உள்ளமானது விசை ஒடிந்து விழவும், நேராய் அஞ்ஞானமான இருள் நீங்கவும், 'இருள், ஒளி' என்னும் இரண்டும் இல்லாமல் இருந்த வெளியைப் போன்று தவறாது என்னை அருளால் கண்டு, என்னுள்ளே நிறைந்து நிற்கும் அருள் அமைதிப் பெருவெளியைச் சார்ந்து மேலான இன்பத்தையும் நான் கூடினேனோ!

சரியை கிரியை என்பனவற்றில் முயற்சி செய்து நல்ல நெறியைச் சேர்ந்தேனோ? அப்படிச் செய்யாதவன் நான். பெருமை பொருந்த உடலில் காணப்படும் ஆறு ஆதாரங்கள்

என்ற வீடுகளில் விளங்கி வளர்கின்ற உயிர்வளி என்ற பெரிய செல்வத்தை உள்ளடக்கி, யோகி ஆகாமல் ஏழைக் குடும்பன் ஆகித், தேடவேண்டிய பொருளைப் பாடுபட்டுத் தேடாமல் செலவைச் செய்ய ஓர் எண்ணம் உண்டாயிற்று. இதன் காரணம் யாது?

(இருநிதி-இறைவன். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றை மேற்கொண்டவர்க்கு முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் வாய்க்கும். இவற்றுள் ஒன்றனையும் மேற்கொள்ளாமல் ஏழையானேனே என்றார்.)

115. வன்மையை வளர்த்தவர் எவர்?

பாடாது பாடிப் படித்தளவில் சமயமும்
பஞ்சுபடு சொல்லன் இவனைப்
பார்மினோ பார்மினோ என்றுசபை கூடவும்
பரமார்த்தம் இதுவென்னவே
ஆடாதும் ஆடிநெஞ் சுருகிநெக் காடவே
அமலமே ஏகமே எம்
ஆதியே சோதியே எங்கும்நிறை கடவுளே
அரசே என்க்கூவிநான்
வாடாது வாடும்என் முகவாட்ட முங்கண்டு
வாடா எனக்கருணைநீ
வைத்திடா வண்ணமே சங்கேத மாஇந்த
வன்மையை வளர்ப்பித்ததார்
தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

115. இடைவிடாது வேறொன்றையும் தேடாது உன்னையே தேடும் அறிஞர்க்கும் தேட இயலாத செல்வமே!

தேடுவதற்கு அரிய உண்மையாகி என் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் அறிவான இறையே! பேரொளி வடிவான பேரின்பமே!

பாடுவதற்குத் தகுதியில்லாத பாடல்களைப் பாடிப் பயின்று அளவில்லாத சமயங்களும் 'பஞ்சைப்போல் பறக்கும் நொய்மையான சொற்களைக் கொண்ட இவனைக் காணுங்கள் காணுங்கள்' என்று கூறிக் கொண்டு கூட்டம், கூடவும், நான் 'இதுவே மேலானது' என்று ஆடாத வகையாய் மனம் உருகிக் கூத்தாடினேன். ஆட, 'தூயபொருளே, ஒரு பொருளே, எமக்குக் காரணனனே, ஒளியே, எங்கும் நிறைந்திருக்கும் பொருளே, மன்னனே!' என்று பலபட அழைத்து நான் எவரும் வாடாத வகையாய் வாடினேன். வாடும் என் முகவாட்டத்தையும் கண்டும், நீ 'வா'! என்று நீ அருள் செய்யாதவகையில் உனக்கு இந்தக் கடினத் தன்மையை வளரச் செய்தவர் யார்?

116. அசபா நலனை உணர்த்துதல்

பிரியாத தண்ணருள் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசியாலே
பேரின்ப உண்மையை அளித்தனை என் மனமறப்
பேரம பலக்கடவுளாய்
அறிவாய் இருந்திடும் நாதஒலி காட்டியே
அமிர்தப்ர வாகசித்தி
அருளினை அலாது திருவம்பலமு மாகிஎனை
ஆண்டனை பின் எய்திநெறியாய்க்
குறிதான் அளித்தனை நன் மரவுரிகொள் அந்தணக்
கோலமாய் அசபா நலங்
கூடினபின் மௌனியாய்ச் சும்மா இருக்கநெறி
கூட்டினை எலாம்இருக்கச்
சிறியேன் மயங்கிமிக அறிவின்மை ஆவனோ
தேடரிய சத்தாகிஎன்

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே!

116. தேடுவதற்கு அரிய உண்மைப் பொருளாகி என் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற அறிவான இறைவ! பேரொளி மயமான இன்பப் பொருளே!

நீங்காத குளிர்ந்த அருளையுடைய சிவ ஞானியாய் வந்து சொல்வதற்கு அரிய மூச்சினை அடக்கும் யோகப் பயிற்சியால் பேரின்ப உண்மையை எனக்கு அருள் செய்தாய். என் மனம் அடங்குமாறு பேரம்பலக்கடவுளாகி அறிவுருவாய் உள்ள நாத ஒலியைக் காட்டி அமிழ்தப் பெருக்கை அடைகின்ற பேற்றை அளித்து அருள் செய்தாய். அன்றியும் அம்பல வடிவாகி என்னை ஆட்கொண்டாய்! பின்பு வந்து நெறியாய்ப் பெறுவதற்கரிய குறிக்கோளையும் அருள் செய்தாய். நல்ல மரவுரி ஆடையை உடுத்துக் கொண்ட அந்தணக் கோலமாக வந்து அசபாக்கினியை எனக்குக் கூறியருளிச் செய்தாய்! பின் பேச்சற்ற மௌனியாய்ச் சும்மா இருக்கும் படி நல்ல நெறியில் சேர்த்தாய். இவையெல்லாம் இருக்கச் சிறியவனான நான் மயக்கம் கொண்டு மிகுதியும் அறியாமை உடையவனாய் இருப்பேனோ!

(அசபா நலம்: அசபா- செபிக்கப்படாமல் உணரப்படுவது. நலம்-நன்மை; இயல்பு. அது ஓர் எழுத்து ஒரு மொழி. எல்லா மந்திரங்களுக்கும் அடிப்படையானது. சிவனைக் குறித்தது. வரிவடிவத்தில் எழுதிக் காட்ட இயலாதது. ஒலி முதலான விந்துவின் முதல் ஒலியான நாதத்தை இயக்குவது. இஃது உடலினின்று நீங்கிய உயிரை மீண்டும் வருவித்து, உடலை எழுப்புவது.

117. நின்னைவிட்டு நீங்கேன்

ஆரார் எனக்கென்ன போதித்தும் என்னஎன்
அறிவினை மயக்க வசமோ

அண்டகோ டிகளெல்லாம் கர்ப்பஅறை போலவும்
அடுக்கடுக்கா அமைத்துப்
பேராமல் நின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவத லாதொன்றினும்
பின்னமுற மருவாது நன்னயத் தால்இனிப்
பேரின்ப முத்திநிலையும்
தராது தள்ளவும் போகா துன்னால்அது
தள்ளினும் போகேனியான்
தடையேதும் இல்லை ஆண்டவன் அடிமை
தன்மையிலும் என்வழக்குத் [என்னுமிரு
தீராது விடுவதிலை நடுவான கடவுளே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

117. தேடுவதற்கு அரிய உண்மைப் பொருளாகி என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அறிவான இறைவ! பேரொளிப் பிழம்பான பேரின்பமே!

எத்தகைய அறிவு நலம் வாய்க்கப் பெற்றவரும், எத்தகையவற்றை எனக்குக் கற்பித்தாலும் என்ன பயன்? என் உள்ளத்தை மாற்றிவிட இயலுமோ? பல உலகங்களை யெல்லாம் கருப்ப அறைபோல அடுக்கடுக்காக அமைத்து நிலைபெறாது நின்ற பரவெளியிலே என் மனம் விளங்குவதன்றிப் பிறவற்றில் ஒன்றிலும் அழியுமாறு பொருந்தாது. நல்ல விருப்பத்தினால் இனிப் பேரின்ப வீடுபேற்று நிலையும் அளிக்காமல் தள்ளிவிடவும் இயலாது. நின் திருவருளால் தள்ளப்படினும் நான் உன்னை விட்டுப் போகமாட்டேன். தடை சிறிதும் இல்லை. நின்னை ஆண்டவன் என்பதற்கும் என்னை அடியவன் என்பதற்குமான இரு தன்மையாலும் அடியேன் வழக்குத் தீராது. நானும் விட்டு விடுதற்கு இல்லை. நீயோ ஒரு நிலைமையுடைய இறைவன் ஆவாய்!

(கதிரவன் ஒளியும் கண்ணின் ஒளியும் வேறுபாடின்றிக் கலந்து உலகத்தைக் காண்பதுபோல் அறிவுப் பெருவெளியில் தம் மனம் கலந்து இறையின்பத்தை அனுபவிக்கும் பாக்கியம் தமக்குக் கிட்டியதாகத் தாயுமானவர் குறித்துள்ளார்.)

118. சும்மா இருத்தல் அரிது

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

118. உண்மைப் பொருளாகி என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்ற அறிவுத் தெய்வமே! பேரொளி மயமான பேரின்பமே!

கட்டுத்தறியை முறிக்கும் மதம் மிக்க யானையையும் நம் வயப்படுமாறு செய்து நடத்தலாம். கரடி வாயையும் கொடிய புலி வாயையும் திறக்கவொட்டாது கட்டக்கூடும். சிங்கமொன்றின் முதுகில் அமர்ந்து செல்லலாம். நஞ்சினை யுடைய பாம்புகளைப் புற்றினின்று எடுத்து ஆட்டவும்

செய்யலாம். கொடிய நெருப்பில் பாதரசத்தை விட்டு ஐந்து வகைப்பட்ட உலோகங்களையும், உயர்ந்த பொன்னாய் மாற்றி விற்று உண்ணவும் செய்யலாம். வேறொருவர் காணாதவகையில் உலகத்தில் உலாவலாம். தேவர்கள் நம் ஏவலைச் செய்யுமாறு செய்யலாம். எப்போதும் இளமையுடனே இருக்கலாம். வேறொரு உடலிலும் புகலாம். நீரின் மீது நடக்கலாம். தீயின் மீது தங்கியிருக்கலாம். தமக்கு ஒப்பில்லாத சித்திகளையெல்லாம் பெறலாம். ஆனால் உள்ளத்தை அடக்கி நல்வழிப்படுத்தி வாளா இருக்கும் திறத்தைச் செய்ய இயலாது.

119. என்ன கைம்மாறு செய்வேன்!

எல்லாம் அறிந்தவரும் ஏதுமறியாதவரும்
இல்லை எனும் இவ்வுலகமீது
ஏதும்அறி யாதவன் எனப்பெயர் தரித்துமிக
ஏழைக்குள் ஏழையாகிக்
கல்லாத அறிவில் கடைப்பட்டநான் அன்று
கையினால் உண்மைஞானம்
கற்பித்த நின் அருளி னுக்கென்ன கைம்மாறு
காட்டுவேன் குற்றேவல்நான்
அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறைஎயிற்று
ஆபாச வடிவமான
அந்தகா நீஒரு பகட்டால் பகட்டுவ
தடாதடா காசுநம்பால்
செல்லாதடா என்று பேசுவா யதுதந்
செல்வமே சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே

119. உண்மைப் பொருளாகி என் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற அறிவான தெய்வமே! பேரொளி மயமான பேரின்பமே!

'எல்லாவற்றையும் அறிந்தவரும் எதையும் அறியாதவரும் எவரும் இல்லை!' என்று கூறுவதற்குரியது இவ்வுலகம். இதில் நான் எதையும் அறியாதவன் என்று பெயர் பூண்டு ஏழைக்குள் ஏழையாகிக் கற்க வேண்டியனவற்றைக் கல்லாத அறிவினால் கீழான எளியேன் என்று அந்த நாளில் நின் திருக்கை அடையாளத்தினால் மெய்ஞ்ஞானத்தைக் கற்பித்தாய், இத்தகைய நின் திருவருளுக்கு நான் என்ன கைம்மாறு செய்ப வல்லேன்?

இருள் மிக்க வுடலுடன் ஆழ்ந்த கண்களையும் பிறை போன்ற கோரப் பற்களையுடைய பார்ப்பவர்க்கு விகாரமாகத் தோன்றுகின்ற வடிவத்துடன் கூடிய இயமனே! நீ ஒரு வெளிவேடமான ஆடம்பரத்தால் மருட்டுவது உனக்குத் தகாது அடா! உன் முயற்சி என்ற காசு என்னிடம் பயன் அளிக்காது என்று பேசுவதற்கு வாய் தந்தருளிய செல்வமே!

120. நான் செய்த பாவம்

மின்போலும் இடையொடியும் ஒடியும் என மொழிதல்
மென்சிலம்பு ஒலிகளார்ப்ப [போல்
வீங்கிப் புடைத்துவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள் பின் ஆவலாய்
என்போல் அலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள்
இருவர்களில் ஒருவர் உண்டோ
என்செய்கேன் அம்மம்ம என்பாவம் என்கொடுமை
ஏதென்று எடுத்துமொழிவேன்
அன்பால் வியந்துருகி அடியற்ற மரமென்ன
அடியிலே வீழ்ந்துவீழ்ந்தெம்
அடிகளே உமதடிமை யாங்களெனும் நால்வருக்கு
அறமாதி பொருள் உரைப்பத்
தென்பாலின் முகமாகி வடபால் இருக்கின்ற
செல்வமே சத்தாகிஎன்

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

120. உண்மைப் பொருளாகி என் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற அறிவான இறையே! பேரொளி மயமான பேரின்பமே!

மின்னல் கொடியைப் போன்ற இடையானது ஒடியும் ஒடியும் எனக் கூறுவதைப் போல் மென்மையான காற்சிலம்புகள் ஒலித்து ஆரவாரம் செய்யப், பருத்துப் பக்கத்தில் புடை கொண்டு சில நாட்களில் தளர்ந்து ஒழிகின்ற சுமை போன்ற கொங்கைகளையுடைய இளமையுடைய மங்கையரின் பின் என்னைப் போன்று திரிந்த கற்றவர் கல்லாதவர் என்ற இருதிறத்தாருள் ஒருவரேனும் உண்டோ? நான் என்ன செய்வேன்? என் பாவத்தையும் என் கொடுமைகளையும் என்னவென்று நான் எடுத்துக் கூறுவேன்! அன்பால் துதித்து உள்ளம் உருகி வேர் அற்ற மரத்தைப் போல் நின் திருப் பொன்னடிகளிலே விழுந்து ''எம் இறைவ! யாம் உன் அடிமை!'' என்று கூறி வேண்டிக் கொள்ளச், சனகர் முதலான முனிவர் நால்வருக்கும், அறம் முதலிய நான்கு பொருள்களை உரைத்தருளுவதற்காகத் தென் திசை முகமாகிக் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்த செல்வமே!

121. இறைவன் மௌன குருவாய் வந்தமை!

புத்தமிர்த போகமும் கற்பகநன் னிழலில்
பொலிவுற இருக்கும் இயல்பும்
பொன்னுலகில் அயிரா வதத்தேறு வரிசையும்
பூமண்ட லாதிக்கமும்
மத்தவெறி யினர்வேண்டும் மால்என்று தள்ளவும் எம்
மாலும்ஒரு சுட்டும்அறவே
வைக்கின்ற வைப்பாளன் மௌனதே சிகன்என்ன
வந்தநின அருள்வாழிகாண

சுத்தபரி பூரண அகண்டமே ஏகமே
சுருதிமுடி வானபொருளே
சொல்லரிய உயிரினிடை அங்கங்கு நின்றருள்
சுரந்துபொழி கருணைமுகிலே
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

121. தேடுவதற்கு அருமையான உண்மைப் பொருளாகி என் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற அறிவான தெய்வமே! பேரொளி மயமான பேரின்பமே!

தூய்மையும் நிறைவும் எல்லையில்லாத தன்மையும் உடைய ஒரு பொருளே! மறைமுடிவான மெய்ப்பொருளே! கூறுவதற்கு அரிய உயிர்களிடையே அங்கங்கு நிலைபெற்று அருள் என்ற மழையைப் பொழியும் அருள் மேகமே! சித்தி நிலை முத்தி நிலை விளையும் நிலமே!

பாற்கடலில் தோன்றிய புதிய அமிழ்தத்தை உண்ணும் அனுபவமும், கற்பக மரத்தின் நிழலில் வீற்றிருக்கின்ற தன்மையும், பொன் உலகத்தில் உள்ள ஐராவதம் என்ற யானையின்மீது ஏறுகின்ற சிறப்பும், பூவலகத்தின் ஆட்சியும் ஆகியவை உன்மத்தம் கொண்ட வெறியாளரால் விரும்பப் படுகின்ற பெரு மயக்கம் என்று தள்ளிவிடவும், எங்களாலும் சுட்டுதல் அற்று அகலவும், பேச்சற்ற நிலையில் எம்மை வைத்துள்ள பெருமையுடையவன், கூறாமல் கூறியருளும் 'மௌன குரு' என்று எனக்குக் கிடைத்த நின் அருள் வாழ்க!

13. சிற்சுகோதய விலாசம்

(இறைவனின் அறிவு இன்ப ஊற்றாக விளங்கும் தன்மையை இப்பகுதி விளக்கும். இதில் உள்ள செய்யுட்கள்

பத்தாகும். சித் - அறிவு. சுகம் - இன்பம். உதயம் - தோற்றம். விலாசம் - அழகு)

122. உடலின் இழிவு

காக மோடுகழுகு அலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காமவேள் நடன சாலையை
மோக ஆசைமுறி இட்ட பெட்டியை மும்
மலமி குந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
முடங்கல் ஆர்கிடை சரக்கினை
மாக இந்த்ரதனு மின்னை ஒத்திலக
வேத மோதிய குலாலனார்
வனைய வெய்யதடி கார னானயமன்
வந்தடிக்குமொரு மட்கலத்
தேக மானபொய்யை மெய்யெ னக்கருதி
ஐய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

122. அறிவதற்கரிய பெரும் பொருளே! மும்மலமாகிய குற்றம் அற்ற அறிவு இன்ப ஊற்றுத் தோன்றும் அருளின் இருப்பிடமே!

உடலானது காக்கைகளுடன் கழுகுகளும் நாய்களும் நரிகளும் தம் தம் இரை என்று எண்ணிச் சுற்றுகின்ற இயல்புடைய சோற்றால் அடைக்கப்பட்ட தோலால் ஆன துருத்தி; இரண்டு கால்களையும் ஒன்பது வாயில்களையும் பெற்று வளர்ந்துள்ள மன்மதனின் நாடக சாலை; யோகம் ஆசை என்பவை தமக்கு அடிமை என எழுதிய அடிமைச்

சீட்டு வைக்கப்பட்டுள்ள பெட்டி; ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களும் மிகுந்து நிரம்பி வழிகின்ற கிணறு; கொடிய புழு முதலியவை மொய்த்து நெளியும் நரகம்; குற்றமுள்ள கடைச்சரக்கு; வானத்தில் காணப்படுகின்ற இந்திர வில்லையும் மின்னலையும் போல் விளங்கும் படியாய் மறைகளை ஓதும் நான்முகனான குயவன் படைக்க, கொடிய தடியுடைய இயமன் சினந்து உடைத்து அழிக்கின்ற ஒரு மட்பாத்திரம் போன்றது. பொய்யான இந்த உடலை மெய்யானது என்று எண்ணி, ஐய, இவ்வுலகத்தில் நான் வாடவோ?

(அலகை - பேய். துருத்தி - தோல்பை. முறி - சீட்டு; அடிமைச் சீட்டு. குலாலனார் - குயவர்; நான்முகன். பிரமம் - பெரும்பொருள்; இறைவன்)

123. நின்னில் கலந்து இன்பம் எய்துவது எப்போது?

குறிக ளோடுகுணம் ஏதும் இன்றி யனல்
ஒழுக நின்றிடும் இரும்பனல்
கூடல் இன்றியது வாய் இருந்தபடி
கொடிய ஆணவ அறைக்குளே
அறிவ தேதுமற அறிவி லாமைமய
மாய் இருக்குமெனை அருளினால்
அளவி லாததனு கரணமாதியை
அளித்த போதுனை அறிந்துநான்
பிறிவி லாதவணம் நின்றி டாதபடி
பலநிறம் கவரும் உபலமாய்ப்
பெரிய மாயையில் அழுந்தி நின்னதுப்ர
சாத நல்லருள் மறந்திடும்
சிறிய னேனும்உனை வந்தணை ந்துசுக
மாய் இருப்பதினி என்றுகாண்
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

123. அறிவதற்கரிய பரம்பொருளே! மும்மலமான குற்றங்கள் நீங்கிய அறிவின்ப ஊற்றுத் தோன்றும் இடமான அருளின் இருப்பிடமே!

இரும்பானது அடையாளத்துடன் குணம் ஒரு சிறிதும் இல்லாமல் தீயினைச் சார்ந்து தீயாகவே தோன்றும். அத்தகைய இயல்பு கொண்ட அந்த இரும்பு தீயுடனே சேராது இருக்கும்போது இரும்பாகவே இருப்பதைப் போன்று கொடிய ஆணவம் என்ற வலிய இருள் மூடிய அறையுள் அறியும் தன்மை சிறிதும் இன்றி அறியாமையே வடிவாய் உள்ளேன். இத்தகைய என்னை, உன் திருவருளால் எண்ணில்லாத உடல் உறுப்பு முதலியவற்றை அளித்தபோது உன்னை அறிந்தேன். அறிந்து கொண்டு நான் பிரியாதபடி நிலைத்திராமல் பல நிறங்களைக் கவரும் தன்மை கொண்ட பளிங்குக் கல்லைப் போன்று பெரிய மாயை என்ற கடலுள் ஆழ்ந்து நின் கொடையான அருளை மறந்து விடுகின்ற அற்பவான யானும், உன்னை வந்து அடைந்து இன்பமாய் இருப்பது எப்போது?

124. நின்னருளைப் பெற்று உய்வேனோ?

ஐந்து பூதம்ஒரு கானல் நீர்என
　　அடங்க வந்தபெரு வானமே
ஆதி அந்தம் நடு ஏதும் இன்றியரு
　　ளாய்நி றைந்திலகு சோதியே
தொந்த ரூபமுடன் அருப மாதிகுறி
　　குணம் இறந்துவளர் வத்துவே
துரியமே துரிய உயிரி னுக்குணர்வு
　　தோன்ற நின்றருள்சு பாவமே
எந்த நாளும்நடு வாகி நின்றொளிரும்
　　ஆதியே கருணை நீதியே
எந்தையே என இடைந்து இடைந்துருகும்
　　எளிய னேன்கவலை தீரவும்

சிந்தை யானதை அறிந்து நீயுன்அருள்
செய்ய நானும் இனி உய்வனோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

124. அறிவதற்கரிய பெரும் பொருளே! மும்மலக்குற்றங்கள் அற்ற அறிவின்ப ஊற்றுத் தோன்றும் இடமான அருளின் இருப்பிடமே!

(இறைவ, நின்) அறிவுப் பெருவெளியில் நீர் முதலான ஐந்து பூதங்களும் கானல் நீரைப் போன்று அடங்கும். அவ்வாறு அடங்கச் செய்யும் பெருவெளியே!

முதல் இறுதி நடு என்று எந்த எல்லையும் இன்றி அருளாய் நிறைந்து விளங்கும் பேரொளியே!

தொடர்புடைய வடிவத்துடன் அருவம் முதலான அடையாளம் குணம் என்ற இவற்றைக் கடந்து வளர்கின்ற பொருளே! நாலாம் நிலையான துரியமே! அந்த நிலையில் உள்ள துரிய உயிருக்கு அறிவு உண்டாகும்படி நின்றருளும் இயற்கையே! எக்காலமும் நடுவுநிலைமையாய் நின்று விளங்கும் முதலே! அருளுடன் கூடியநீதியே! எம் தந்தையே! என்று மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகும் எளியேனின் மனக் கவலை நீங்கிடவும், என் மனக்கருத்தை அறிந்து நீ நின்னருளைச் செய்ய, நான் அதைப் பெற்று உய்வேனோ!

125. நின் அடியாருடன் கூடி வாழ வேண்டும்

ஐவர் என்றபுல வேடர் கொட்டமது
அடங்க மர்க்கடவன் முட்டியாய்
அடவி நின்றுமலை அருகில் நின்றுசரு
காதி தின்றுபனி வெயிலினால்
மெய்வ ருந்துதவம் இல்லை நற் சரியை
கிரியை யோகம்என மூன்றதாய்

மேவு கின்றசவு பான நன்னெறி
விரும்ப இல்லை உல கத்திலே
பொய்மு டங்கு தொழில் யாத தற்குநல
சார தித்தொழில் நடத்திடும்
புத்தி யூகம் அறிவற்ற மூகம்இவை
பொருள்ள னக்கருதும் மருளன்யான்
தெய்வ நல்லருள் படைத்த அன்பரொடு
சேர வும்கருணை கூர்வையோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

125. அறிவதற்கு அரிய பெரும் பொருளே! மும்மலக் குற்றங்கள் சேராத அறிவு இன்ப ஊற்றுத் தோன்றும் இடமான அருளின் இருப்பிடமே!

'ஐவர்' என்று அழைக்கப்படுகின்ற பொறிகளான கொடிய வேடர்களின் தீமைகள் அடங்கிடக் குரங்குப்பிடி யாய் விளங்கி, எந்தவகைத் துன்பத்திலும் விட்டு விடாமல், கொடிய காட்டில் தங்கியும், மலையின் அண்மையில் நின்றும், சருகு, காய், கனி முதலியவற்றை உண்டும், பனி வெயில் என்னும் இவற்றினால் உடல் வருந்தும் தவத்தை நான் செய்ததும் இல்லை. சரியை கிரியை யோகம் என்ற மூன்றாய் அமைந்த படிகளான நன்னெறியை நான் விரும்ப வில்லை. உலகத்தில் பிறப்புக்குக் காரணமான பொய்யான தொழில் யாதோ அதற்கு முன்னின்று நடத்தும் அறிவும், யுக்தியும், அறிவு சிறிதும் இல்லாத பித்துத் தன்மையும் என்ற இவற்றையே மெய்ப்பொருள்கள் என்று நினைக்கின்ற அறியாமையான மயக்கமுடைய யான், தெய்விகமான நல்ல அருளைப் பெற்ற நின் அடியாருடன் கூடி வாழவும் அருள் செய்வாயோ?

(மார்க்கடவன் முட்டி - குரங்குப்பிடி. சவுபாநம் - படிகள், சாரதித் தொழில் - முன் நின்று நடத்துதல்)

126. யான் இன்ப வெள்ளத்தில் மூழ்க வேண்டும்!

ஏக மானவுரு வான நீஅருளி
னால்அ னேகவுரு வாகியே
எந்த நாள் அகில கோடி சிட்டிசெய
இசையும் நாள்வரை அந்நாள் முத
லாக நாளிது வரைக்கும் உன்னடிமை
கூட வேசனன மானதோ
அனந்தம் உண்டு நல சனனமீ திதனுள்
அறிய வேண்டுவன அறியலாம்
மோக மாதிதரு பாச மானதை
அறிந்து விட்டுனையும் எனையுமே
முழுது ணர்ந்துபர மான இன்பவெளம்
மூழ்க வேண்டும் இது வின்றியே
தேக மோநழுவி நானு மோநழுவின்
பின்னை உய்யும்வகை உள்ளதோ
தெரிவதற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

126. அறிவதற்கு அரிய பெரும் பொருளே! இயல்பாகவே மும்மலக் குற்றங்களினின்று நீங்கிய அறிவின் ஊற்றுத் தோன்றுதற்கு அருளிடமே!

தனக்கு நிகர் அற்ற ஒரு பொருளான நீ, அருளால் பல கோலங்களைக் கொண்டு அளவில்லாத அண்டங்களைப் படைத்திட இசைந்த நாள் எந்த நாளோ, அந்த நாள் முதலாக இந்த நாள் வரையும், கூடவே பிறந்த பிறவிகள் அளவற்றவை. இது நல்ல பிறவி. இதில் அறிந்து கொள்ள வேண்டியவற்றையெல்லாம் அறிந்து கொள்ளலாம். மோகம் முதலியவற்றை அளிக்கின்ற பாசத்தை உள்ளபடி அறிந்து (அஞ்சி) அதைக் கைவிட்டு, இறைவனான நின்னையும் அடியவனான என்னையும் முற்றும் அறிந்து, மேலான இன்ப வெள்ளத்தில் முழுக வேண்டும். இதைச் செய்

தலின்றி உடல் என்னைவிட்டு நழுவி, யானும் இந்தவுடலை விட்டு நழுவுவேனானால் பின் பிழைக்கும் வகையும் எனக்கு உண்டோ?

127. ஞானநெறியை அடைவேனோ?

நியம லட்சணமும் இயம லட்சணமும்
ஆச னாதிவித பேதமும்
நெடிதுணர்ந்திதய பத்ம பீடமிசை
நின்றி லங்குமச பாநலத்
தியலறிந்து வளர்மூல குண்டலியை
இனிதி றைஞ்சி அவன் அருளினால்
எல்லை யற்றுவளர் சோதி மூலவனல்
எங்கள் மோனமனு முறையிலே
வயமி குந்துவரும் அமிர்த மண்டல
மதிக்கு ளேமதியை லவத்து நான்
வாய்ம டுத்தமிர்த வாரி யைப்பருகி
மன்னும ஆரமிர்த வடிவமாய்ச்
செயமி குந்துவரு சித்த யோகநிலை
பெற்ற ஞானநெறி யடைவனோ
தெரிவ தறகரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

127. அறிவதற்கு அரிய இறைவனே! இயல்பாகவே மும்மலக் குற்றங்கள் நீங்கிய அறிவு இன்ப ஊற்றுத் தோன்றும அருள் இருப்பிடமே!

நியமத்தின் இயல்பையும் இயமத்தின் இயல்பையும் ஆசனம முதலானவற்றின் வேறுபாடுகளையும் நன்கு அறிந்து உள்ளமான தாமரை இருப்பிடத்தின்மீது நிலை பெற்று விளங்கும் 'அசபா' என்ற மந்திரத்தின் நன்மையான இயல்பையும் அறிந்து, வளரும் மூலாதாரத்தில் உள்ள குண்டலி ஆற்றலை இனிதாய் வணங்கி, அக்குண்டலி சத்தியின் அருளால், எலலை இல்லாமல் வளரும் சோதியை

யுடைய மூலத்தியுடன் எங்களின் மௌனமான மந்திரமுறையால், வெற்றி மிக்க வரும் அமிழ்தத்தையுடைய திங்கள் மண்டிலத்துள் என் அறிவைச் செலுத்தி, நான் வாய் வைத்து அமிழ்த வெள்ளத்தைப் பருகி, சுவையான அந்த, அமிழ்த வடிவாய், வெற்றி மிக்குவரும் சித்தரின் யோக நிலையை அடைந்து ஞான நெறியை அடைவேனோ!

இயமம்: பிரமசரியம், தயை, பொறுமை, தியானம், சத்தியம், சரியாயிருத்தல், துன்பம் செய்யாமை, கள்ளாமை, யாவர்க்கும் விரும்பத்தக்கவனாய் இருத்தல், இந்திரிய அடக்கம் என்ற இவற்றை மேற் கொள்ளல்.

நியமம்: நீராடல், மௌனம், உண்ணா நோன்பு, தேவ பூசை, வேதம் ஓதல், புணராமை, குருவுக்குத் தொண்டு செய்தல், தூய்மை, சினம் இன்மை, விழிப்புடைமை என்ம் இவற்றை மேற் கொள்ளல். இவற்றை வேறு வகையாகவுற உரைப்பர்.

128. என்னை ஆட்கொண்ட அருள்!

எறிதி ரைக்கடல் நிகர்த்த செல்வம்மிக
அல்லல் என்றொருவர் பின்செலாது
இல்லை என்னுமுரை பேசிடாது உலகில்
எவரும் ஆம்என மதிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வமு முதவி
நோய்கள் அற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிட்டை கூடவுமெந் நாளுமே
அறிவில் நின்றுகுரு வாய் உணர்த்தியதும்
அன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீரருளை
ஐய ஐயஇனி என் சொல்கேன்

சிறியன் ஏழை நம தடிமை என்றுனது
திருவு ளத்தினில் இருந்ததோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

128. அறிவதற்கு அரிய பிரமமே! இயல்பாகவே மும்மலம் என்ற குற்றங்களினின்று நீங்கிய அறிவு இன்ப ஊற்றுத் தோற்றம் அருள் இருப்பிடமே!

அலை வீசுகின்ற கடலைப் போன்ற பெருஞ் செல்வம் எல்லாருக்கும் எப்போதும் துன்பத்தையே அளிக்கும். (அதனால் செல்வத்தை முழுவதும் ஒதுக்குவதும் இயலாது). ஆதலால் ஒருவரிடம் செல்வத்தின் பொருட்டாய்ச் செல்லாமலும், தன்னிடம் வந்து இரந்தவர்க்கு இல்லை என்ற சொல்லைக் கூறாமலும், உலகத்தில் உள்ள யாவரும் ஆம் என்று மதிக்குமாறு நல்ல நெறியிலே தங்கி, வளர்தற்குக் காரணமான செல்வத்தையும் தந்து, நோய் இல்லாத வாழ்வை அடைந்தோமாகி, நியமம் முதலான நிலைகளில் நின்று, ஞான நெறியை அடைந்து, நிட்டை கூடிடவும், எந்நாளும் எனது அறிவில் நின்று குருவாய் அறிவுறுத்தியதே அல்லாது, மௌன குருவாகி இவ்வுலகத்தின் மீது வரும்படியாக இறங்கின சிறந்த நின் திருவருளை, ஐயனே, ஐயனே என்னவென்று சொல்வேன்? இதற்குக் காரணம், சிறியவனான நான் 'இவன் நம் அடியவன்' என்று நின் திருவுள்ளத்தில் இத்தகைய ஓர் எண்ணம் கிடந்ததோ?

129: வீடுபேறு கிட்டுமோ?

எவ்வுயிர்த் திரளும் உலகில் என்னுயிர்
எனக்கு ழைந்துருகி நன்மையாம்
இதமு ரைப்ப என தென்ற யாவையும்
எடுத்தெ றிந்துமத யானைபோல்
கவ்வை யற்றநடை பயில அன்பர்அடி

கண்ட தேஅருளின் வடிவமாக்
கண்ட யாவையும் அகண்டம் என்னவிரு
கைகு வித்துமலர் தூவியே
பவ்வ வெண்டிரை கொடுத்த தண்டரளம்
விழியு திர்ப்ப மொழி குளறியே
பாடி ஆடியுள் ளுடைந்து டைந்தெழுது
பாவையொத் தசைதல் இன்றியே
திவ்ய அன்புருவ மாகி அன்பரொடும்
இன்ப வீட்டினில் இருப்பனோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

129. அறிவதற்கு அரிய பிரமமே! இயல்பாகவே முக்குணங்களினின்று நீங்கிய குற்றம் இல்லா அறிவின்ப ஊற்றுத் தோற்றும் அருளின் இருப்பிடமே! நான் இவ்வுலகத்தில் உள்ள எவ்வகைப்பட்ட உயிர்களும் என் உயிர் என்றே கருதி, உள்ளம் நெகிழ்ந்து உருகி, நன்மையான இனியவற்றை உரைக்க வேண்டும்! 'எனது' என்று சொல்லப் படுகின்ற எல்லாப் பொருள்களையும் மதயானை ஒன்றைப் போல் எடுத்து எறிந்து, துன்பம் அகல்வதற்குக் காரணமான நல்ல நடையைப் பயில வேண்டும்.

நின் அடியாரின் திருவடியினைக் காண நேர்ந்தபோதே நின் திருவருளைக் கண்டதாய்ப் பாவித்துக் கண்ட எல்லாப் பொருள்களையும் நின் பெருவடிவம் என மெய்ம்மையாய் (எண்ண வேண்டும்.) எண்ணி, அன்பால் உச்சி மீது கை குவித்துப், பூக்களைத் தூவிக், கடலின் வெண்மையான அலைகளால் எடுத்து வீசப்பட்ட குளிர்ந்த முத்துப் போன்ற நீர்த்துளிகளை விழிகள் சிந்தவும், சொல் தடுமாறிப் பாடியும் ஆடியும், உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து எழுதப் பட்ட ஓவியத்தைப் போன்று அசைவில்லாது தெய்விகமான அன்பு வடிவாகி, நின் அடியாருடன் இன்பம் மிக்க வீட்டில் இருக்கப் பெறுவேனோ?

130. நம்பியவர் பெறும் பேறு இதுவோ?

மத்தர் பேயரோடு பாலர் தன்மையது
மருவி யேதுரிய வடிவமாய்
மன்னு தேசமொடு காலம் ஆதியை
மறந்த நின்னடியர் அடியிலே
பத்தி யாய்நெடிது நம்பும் என்னையொரு
மையல்தந் தகில மாயையைப்
பாரு பார்என நடத்த வந்ததென
பாரதத் தினுமி துள்ளதோ
சுத்த நித்தவியல் பாகுமோ உனது
விசுவ மாயைநடு வாகவே
சொல்ல வேணும்வகை நல்ல காதிகதை
சொல்லும் மாயையினும் இல்லை என்
சித்தம் இப்படி மயங்குமோ அருளை
நம்பி னோர்கள்பெறு பேறிதோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதைய விலாசமே.

130. அறிவதற்கு அரிய பரம் பொருளே! இயல்பாக மும்மலத்தின் தொடர்பின்றி நீங்கிய குற்றம் இல்லாத ஊற்றுத் தோற்றும் இருப்பிடமே!

மயக்கம் கொண்டவர், பேய்த் தன்மை உடையவர் சிறுவர் என்னும் இவர்களுடைய குணத்தைப் பொருந்தித் துரிய வடிவமாய் நிலை பெற்று இடம் காலம் முதலிய வற்றை முழுவதும் துறந்து நின் உண்மை அடியார்களின் திருவடிகளில் அன்பு உள்ளவனாய் மிகுதியும் நம்பும் என்னை ஒப்பில்லாத மயக்கத்தை அளித்து உலக மாயையைப் 'பார், பார்' என்று செலுத்தி நடத்தி வந்தது யாது? இத்தகைய நிகழ்ச்சி பாரதக் கதையிலும் உண்டோ? இஃது உன் தூய்மை யான இயற்கையாகுமோ? உன் உலக மாயையின் மெய்ம் மையைநடுநிலையாகச் சொல்லியருளுதல் வேண்டும். நன்மை

போல் கற்டனையாய்க் கூறப்படும் மாயை உண்மையினைத் தெரிவிக்க எழுந்த காதி கதை சொல்லும் மாயையியல்பிலும் இங்ஙனம் இல்லை! என் மனமானது இவ்வாறு மயங்கலாமோ? நின் திருவருளை நம்பியவர் பெறும் பேறு இதுவோ?

[காதி கதை — மாயையின் இயல்பைப் புலப்படுத்தத் தோன்றிய கற்பனைக் கதை. இதை ஆதாரமாகக் கொண்டு மாயையைப் பொய் என்று ஏகான்ம வாதிகள் சாதிப்பர்]

131. நின்னை எல்லாத் திசைகளிலும் தொழுவேன்!

பன்மு கச்சமய நெறிப டைத்தவரும்
யாங்க ளேகடவுள் என்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்தில்உயிர் வரவ ழைக்கும்எம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனி இருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்கள்தம்
சொன்ம யக்கமது தீர அங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்தஅருள் இயல்ப தாகஉள
சோம சேகரக்ரு பாளுவாய்த்
தென்மு கத்தின்முக மாய்இருந்த கொலு
எம்மு கத்தினும் வணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே!

'131. அறிவதற்கரிய இறைவ! இயற்கையாகவே மும்மலக் குற்றங்களினின்று நீங்கிய அறிவின்ப ஊற்றுத் தோன்றும் இருப்பிடமே!

பலவகையான கொள்கைகளைக் கொண்ட சமய நெறிகளைப் படைத்தவரும், நாங்களே கடவுள் என்று கூறிடும்

பாவியரும், தருக்க வாதம் செய்கின்ற வஞ்சரும் தலை வணங்கிடச் செய்தாய்.

தன்னிடம் உயிர்க் கூட்டங்களை வரும்படியாக அழைத்துக் கொள்கின்ற இயமனும் தன் தொழில் நடவாமை யால் வாளா எருமையை மேய்ப்பவனாய்த் தனியே இருக்கச் செய்தாய். கல்லால மரத்தின் கீழ் வளரும் அறிவுடைய சனகர் முதலான முனிவர் நால்வர்களுக்கும் மெய்ம்மையை உணர்த்த எழுந்தருளி அவர்களுக்குச் சொல்லில் உண்டாகும் மயக்கம் நீங்கிடத், தன் அழகிய கைகளைக் கொண்டு மோன நிலையான ஞானத்தை யுணர்த்தினாய். இத்தகைய தூய நித்தியமான அருளானது திங்களை அணிந்த அருள் வடிவாய்த் தென் திரு முகமாக வீற்றிருந்தருளும் நின் காட்சியை யான் எல்லாத் திசைகளிலும் வணங்குவேன்.

14. ஆகார புவனம் — சிதம்பர ரகசியம்

(ஆகாரம் — உடல் வடிவம். இப்பகுதியில் உள்ள செய்யுட்கள் முப்பத்து மூன்று)

132. வணக்கம்

ஆகார புவனம் இன்பா கார மாக
அங்ஙனே ஒருமொழியால் அகண்டா கார
யோகானு பூதிபெற்ற அன்பர் ஆவிக்கு
வுறுதுணையே! என்னளவும் உகந்த நட்பே
வாகாரும் படிக்கிசைகின் கிளிவாய்என்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோல்
தேகாதி உலகமெங்கும் கலந்து தானே
திகழ்அனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே!

132. வடிவமாகக் காணப்படுகின்ற இந்தவுலகமானது இன்ப வடிவாகத் தோன்றுதற்கு ஒரு சொல்லால் எல்லையில்லாத வடிவாய் விளங்கும் யோகானுபவம் பெற்ற அன்பரின் உயிர்க்குப் பொருந்திய துணையே! என்னளவிலும் விருப்பம் வைத்த நட்பே! அழகு பொருந்த ஒலிக்கின்ற கிண்கிணி என்ற அணியின் வாயினைப் போல் மலர்ந்த மலரில் பொருந்தும் மணத்தைப் போல் உடல் உலகம் முதலிய இடங்களில் எல்லாம் தானேயாய் விளங்குகின்ற எல்லையற்ற இன்பவடிவான தெய்வத் தன்மையுள்ள மலையே! எனக்கு அருள் செய்தாய்!

(புவனம் — உலகம்; யோகப்பேறு — யோக அனுபூதி. ஆனந்தம் — இன்பம்)

133 ஆனந்தப் பேறே!

அனந்தபத உயிர்கள்தொறும் உயிராய் என்றும்
ஆனந்த நிலையாகி அளவைக் கெட்டாத்
தனந்தனிச்சின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச்
சதசத்தாய் அருட்கோயில் தழைத்த தேவே
இனம்பிரிந்த மான்போல்நான் இடையா வண்ணம்
இன்பமுற்ற அன்பர்பக்கல் இருத்தி வைத்துக்
கனம்தருமா கனமே தண் ணருளின் தானே
கனிபலித்த ஆனந்தக் கட்டிப்பேறே!

133. எல்லை இல்லாத நிலைகளைக் கொண்ட உயிர்கள் தோறும் உயிராகிக் காட்சி முதலான அளவைகளாலும் எட்ட இயலாத மிகத் தனியான சிற்சொருபமாகக் கீழ் மேல் எல்லைகளை நாட்டாத சத்தும் அசத்துமாகித் திருவருட் கோயிலில் வீற்றிருக்கும் தெய்வமே! நான் தன் இனத்தை விட்டுப் பிரிந்த மானைப் போல் வருந்தாதபடி இன்பத்தை அடைய உன் தொண்டரிடத்து இருக்குமாறு செய்த சிறப்பை அளிக்கும் பெருஞ்சிறப்பே! குளிர்ச்சியுடைய கனியாகக் கனிந்த பேரின்பமான மிக்க இனிமையுடைய கட்டி என்று சொல்லப்படும் ஊதியமே!

134. ஆதி நட்பே!

பேறனைத்தும் அணுவெனவே உதறித் தள்ளப்
பேரின்ப மாகவந்த பெருக்கே பேசா
விறனைத்தும் இந்நெறிக்கே என்ன என்னை
மேவென்ற வரத்தே பாழ் வெய்ய மாயைக்
கூறனைத்தும் கடந்தவெல்லைச் சேட மாகிக்
குறைவறநின் றிடுநிறைவே குலவா நின்ற
ஆறனைத்தும் புகுங்கடல்போற் சமயகோடி
அத்தனையும் தொடர்ந்துபுகும் ஆதி நட்பே!

134. பேறுகள் எல்லாவற்றையும் கீழ்மையானவை என்று உதறித் தள்ளுமாறு பேரின் பமாய் வந்த வெள்ளமே! பேசாதிருக்கும் மௌன நிலையான பெருமை அனைத்தும் இந்த நெறியில் வந்து பொருந்துதற் பொருட்டே என்று கூறி என்னை இதில் வந்து சேர்வாயாக என்று அருளிய பெரிய வரதியமே! சூனியமான கொடிய மாயா பாசங்கள் எல்லா வற்றையும் கடந்த எல்லையில் எஞ்சியுள்ளதாய் விளங்கும் குறைவு இல்லாத நிலைபெற்றுள்ள நிறைவே! விளங்கும் ஆறுகள் யாவும் சென்று புகுகின்ற கடல் போல் சமய கோடிகள் எல்லாம் தொடர்ந்து புகுகின்றதற்கு இடமான முதன்மையான உறவே!

(சேடம் — மிஞ்சியிருப்பது)

135. குற்றமற்ற வாழ்வே!

ஆதியந்தம் எனும் எழுவாய் ஈறற் றோங்கி
அருமறைஇன் னமுங்காணா தரற்ற நானா
பேதமதங் களும் அலைய மலைபோல் வாதப்
பெற்றியரும் வாய்வாதப் பேய ராகச்
சாதகம்மோ னத்திலென்ன வடவால் நீழல்
தண்ணருட்சந் திரமௌளி தடக்கைக் கேற்ற

வேதகசின் மாத்திரமாய் எம்ம னோர்க்கும்
வெளியாக வந்தஒன்றே விமல வாழ்வே!

135. அடி முடிகள் என்று கூறப்படும் உற்பத்தி அழிவு இல்லாமல் உயர்ந்து, அரிய வேதங்கள் இன்னமும் காணப் பெறாமையால் அரற்றின; பலவகைப்பட்ட வேறுபாடுள்ள மதங்களும் ஒன்றுடன் ஒன்று போரிட்டன; மலை போன்று வாதிக்கும் தன்மை உடையவரும் வாக்கு வாதத்தையுடைய ராய் விளங்கினர். இத்தகைய நிலையில் வீடுபேறு அடை வதற்குரிய பழக்கம் மௌன நிலையில் உண்டென்று எமக்கு வெளியிட்டருளும் பொருட்டுக் கல்லால மரநிழலில் வீற் றிருந்தருளிய குளிர்ந்த அருளையுடைய பிறைச்சந்திரனை அணிந்தவனே! பெருந் திருக்கை அடையாளமான முத்திரை யளவாய் வேறுபடுத்திக் காட்டும் தன்மை பொருந்திய அறிவுக் குறியாகி எம்மைப் போன்றவர்க்கும் வெளிப்பட வந்த ஒரு பொருளே! குற்றம் அற்ற வாழ்வே!

136. குணக்கடலே!

விமலமுதல் குணமாகி நூற்றெட் டாதி
வேதம்எடுத் தெடுத்துரைத்த விருத்திக் கேற்க
அமையும் இலக் கணவடிவாய் அதுவும் போதாது
அப்பாலுக் கப்பாலாய் அருட்கண் ணாகிச்
சமமும் உடன் கலப்பும் அவிழ் தலும்யாம் காணத்
தண்ணருள் தந்து எமைக்காக்கும் சாட்சிப்பேறே
இமையளவும் உபகாரம் அல்லால் வேறொன்று
இயக்காநிர்க் குணக்கடலாய் இருந்த ஒன்றே!

136. மறைகள் நூற்றெட்டு முதலாய் எடுத்துக் கூறிய விரிவுகளுக்கு ஏற்ப மலம் இன்மை முதலான குணங்களை உடையதாகி, அமையும் இலக்கண வடிவாய், அதுவும் போதாமல், அப்புறத்துக்கும் அப்புறமாய், அருளில் விளங்கும் பொருளாகி ஒப்பும், உடன் கூட்டமும், பிரிவும்

அடியேம் காணும் பொருட்டுக் குளிர்ந்து விளங்கும் திருவருளை அளித்து எம்மைக் காக்கின்ற பொருளே! இமையளவாயினும் மற்றவர்க்கு இன்பம் செய்தலன்றி வேறொன்றைச் செய்யாத முக்குணமற்ற கடலாய் இருந்த ஒன்றே!

137. அருள் வடிவே!

ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
ஒளியாகி வெளியாகி உருவுமாகி
நன்றாகித் தீதாகி மற்று மாகி
நாசமுடன் உற்பத்தி நண்ணா தாகி
இன்றாகி நாளையுமாய், மேலு மான
எந்தையே எம்மானே என்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா ஆகிக்
கடிதினில்வந் தருள்கூரும் கருணை விண்ணே!

137. ஒரு பொருளாகி, பல பொருளாகிப் பலவாய்க் காணப்பட்ட ஒளியுடைய பொருள்களாகி, அவ்வொளிகள் இருத்தற்கு ஏற்ற வானமாகி, வடிவமாகி, நன்மையாகி, தீமையாகி, வேறு உள்ளளவுமாகி, இறப்பும் பிறப்பும் இல்லாததாகி, இன்றாகி நாளையுமாகி, அவற்றுக்கு மேலான காலமும் ஆகிய எம் தந்தையே! எம் பெருமானே! என்று பல முறை கூறி ஏங்கிப் பசுவின் கன்றைப் போல் கதறியவர்க்கு, (கன்றை ஈன்ற) அணியையுடைய பசுவைப் போன்று விரைந்து வந்து அருள் செய்த அருள் வடிவான வானமே!

138. எனது விண்ணப்பம்

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என்கண்ணே அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்

பூரணமாய் நின்ற ஒன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவிக்
காலமும்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையும் கூட்டியுயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பம்
சேளே.

'138. அருள் வடிவாய்ப் பழுத்த கனியின் சுவையே, கரும்பின் சாறே! தேனே! அரிய அமிழ்தமே! என் கண்ணே! அரிய பொருள்கள் எல்லாவற்றையும் தருகின்ற பொருளே! அருள் நீங்காத நிறைவாய் நின்ற ஒப்பில்லாத பொருளே! தூய வாழ்வே! நினைப்பதற்கு அரிய நினைவிற்குள் நினைவாகிப் பொருந்திக் காலமும் தேசமும் உண்டாக்கிக் கருவிகள் முதலான விரிவையும் படைத்து, உயிர்க் கூட்டங்களை ஆடச் செய்கின்ற மேலான பொருளே! நான் கூறும் வேண்டுகோளைக் கேட்பாயாக!

139. சைவச் சான்றோர்

விண்ணவர்இந் திரன்முதலோர் நாரதாதி
விளங்கு சத்த இருடிகள் நல்வீணை வல்லோர்
எண்ணரிய சித்தர் மனுவாதி வேந்தர்
இருக்காதி மறைமுனிவர் எல்லாம் இந்தக்
கண்ணகன்ஞா லம்மதிக்கத் தானே உள்ளம்
கையில்நெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்,
திண்ணியநல் லறிவாலிச் சமயத்தன்றோ
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தார்என்றும்.

'138. தேவர்களான இந்திரன் முதலியவர், விளங்கும் நாரதர் முதலானவர், முனிவர் எழுவர், பெரிய வீணையில் வல்லவரான தும்புரு முதலானவர், நினைத்தற்கரிய சித்தர், மனு முதலான மன்னர்கள், இருக்குமுதலான மறைகளைக் கற்ற முனிவர் என்னும் இவர்கள் யாவரும், இந்

இடம் அகன்ற உலகம் மதிக்குமாறு உள்ளங்கை நெல்லிக் கனியைப் போன்று, நேரே காணும்படி கலங்காத திண்ணிய ஞானத்தைக் கொண்டு இந்தச் சைவநெறியில் இருந்தன்றோ உலகியல் இன்பத்தையும் முத்தியையும் அடைந்தனர்?

(சித்தி - உலகியல் இன்பம். முத்தி - வீடு பேற்றின்பம்)

140. சமய வாதங்கள்

செப்பரிய சமயநெறி எல்லாம் தம்தம்
    தெய்வமே தெய்வம் எனும் செயற்கை யான
அப்பரிசா ளரும் அஃதே பிடித்தால் இப்பால்
    அடுத்த அந்நூல் களும்விரித்தே அனுமா னாதி
ஒப்பவிரித் துரைப்பர் இங்ஙன் பொய்மெய் என்ன
    ஒன்றிலைஒன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாம் சமயமுமாய் அல்ல வாகி
    யாதுசம யமும்வணங்கும் இயல்ப தாகி,

140. சொல்லுதற்கு அருமையான சமயநெறிகள் யாவும் தம் தம் தெய்வமே சிறந்த தெய்வம் என்று நிலை நாட்ட முயலும். அத்தகைய செயலையுடைய அந்தச் சமய நெறியினரும் அதையே பிடித்து ஆரவாரத்துடன் தமக்குப் பொருந்திய அந்தச் சமய நூல்களையும் விரிவாய் எடுத்துக் கூறியும் அனுமானம் (கருதலளவை) முதலியவற்றை எடுத்துரைத்தும் விளக்குவர். இவ்வாறு ஒன்று பொய் என்றும் ஒன்று மெய் என்றும் ஒன்று இல்லை என்றும் ஒன்று உண்டு என்றும் நோக்குவது யாருக்கும் பொருந்தாது. இத்தகைய சமயங்களாகியும் அவை அல்லாதவை ஆகியும் எந்தச் சமயமும் வணங்கும்படியான (இயல்புடையதாகும்). அத்தகைய இயல்புடையதாகிய,

141. சைவ சமயத்தின் சிறப்பு

இயல்பென்றும் திரியாமல் இயம மாதி
    எண்குணமும்காட்டி அன்பால் இன்ப மாகிப்

பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங் காட்டி
மயல்அறுமந் திரம்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகி தந்தோ!

141. சைவ சமயம் என்றும் தன்மை கெடாதது; இயமம் முதலான எட்டுக் குணங்களையும் விரிவாக விளங்க எடுத்து விளக்குவது. அன்பால் இன்பமாய்ப் பயன் அளிக்கப் பொருள்களும் பரிவாரங்களுமாய் ஆவது; மேலான குணத்தையுடையது; சௌபான பட்சத்தைக் காட்டி மயக்கத்தைப் போக்குதற்குக் காரணமான மந்திரமும் சிட்சையும் சோதிடம் முதலிய உறுப்பு நூல்களும் வணங்கப் பெறுவது. மௌன நிலையான முடியைத் தலையில் சூடி அரசு வீற்றிருப்பது ஆகும். மறை மதாடர்பான இச்சைவ சமயம் அழகியது அன்றோ!

(மந்திரம் சிட்சை சோதிடாதி - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசம், நிருத்தம், சோதிடம்)

142. இதுவே சன்மார்க்கம்

அந்தோ ஈ ததிசயம் இச் சமயம் போலின்று
அறிஞர்எல்லாம் நடுவறிய அணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே றில்லை இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம்!

142. ஆ! இச்சைவச் சமயம் வியக்கத்தக்கது! இதைப் போல் வேறொரு சமயம் இல்லை! ஞானியர் எல்லாம் நடு

நிலையிலிருந்து உணருமிடத்து அணிமா, லகிமா முதலியவை கை கூடிடப் பெற்று விளையாடித் திரிபவர்க்கும் வாய் பேசாத மௌன நிலையினைத் தமக்குப் பற்றுக் கோடாய் வைத்திருந்த துறவிகட்கும் மேலும் மேலும் இந்திரன் முதலானவரின் பதவியை அடைந்தவர்க்கும் இதுவே அல்லாது தாயகம் வேறில்லை. சந்தானம் முதலான வான் உலக மரங்களைப் போல் செம்மையான திருவருளைக் காட்டுதற்குத் தக்க நெறி இந்தச் சைவநெறியேயாகும். இதுவே நல்ல நெறி எனப்படும்.

(அணிமாவாதி - (1) அணிமா (2) மகிமா (3) கரிமா, (4) இலகிமா. (5) பிராப்தி, (6) பிராகாமியம் (7) ஈசத்துவம், (8) வசித்துவம். (1) அணிமா (நுண்ணியதாதல்) (2) மகிமா (பெருமையுடையதாதல்) (3) கரிமா (கனம் உடையதாதல்) (4) இலகிமா (இலகுவாதல்) (5) பிராப்தி (வேண்டியவற்றை அடைதல்) (6) பிராகாமியம் (நினைத்த இன்பத்தை அடைதல்) (7) ஈசத்துவம் (யாவருக்கும் மேம்பட்டிருத்தல் (8) வசித்துவம் (அனைத்தும் தன் வயமாக்கும் தன்மை பெற்றிருத்தல்)

143. கிரியையும் ஞானமேயாகும்

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளும் தான்ஒன்றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்த போதங்கு
என்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள எனக்கும் தானே
கண்ட வுடன் ஆனந்தம் காண்ட லாகும்.

143. நல்ல நெறி என்ற சைவ சமய ஞானப்பொருளும் தாம் தாம் மேலானவை என்று இறுமாந்துள்ள சமய நூல்

களால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் பொருளும் ஒன்று பட்டிருக்கப் பல வழிகளிலும் கண்டதில்லை. கூறுவதற்கு அருமையான தில்லை அம்பலத்தில் பார்த்தபோது அவ்விடத்தில் என்ன வழி இருக்கின்றது? யாவும் வெளியே என்று எச்சமயத்தவரும் வணங்கி நிற்பர். கல்லினது தன்மை கொண்ட உள்ளத்தையுடைய எனக்கும் பார்த்தவுடனே இன்பத்தைக் காண்பது போல இருக்கும்.

144. பதியின் இயல்பு

காண்டல்பெறப் புறத்தின்உள்ளபடியே உள்ளும்
காட்சிமெய்ந்நூல் சொலும்பதியாம் கடவுளே நீ
நீண்டநெடு மையும் அகலக் குறுக்கும் காட்டா
நிறைபரிபூ ரணஅறிவாய் நித்தமாகி
வேண்டுவிருப் பொடுவெறுப்புச் சமீபம் தூரம்
விலகல்அணு குதல்முதலாம் விவகா ரங்கள்
பூண்டஅள வைகள்மனவாக் காதி எல்லாம்
பொருந்தாமல் அகம்புறமும் புணர்க்கை யாகி.

144. கண்ணாகக் காணும் படியாய்ப் புறத்தில் இருக்கும் வண்ணமே, உள்ளிடத்தும் உள்ளதாகவும் உள்ளது என்று உண்மையான அறிவு நூல்கள் உரைக்கும். இத்தகைய யாவர்க்கும் இறையான தெய்வமே! நீ நீண்ட நீளமும் அகலக் குறுக்கங்களும் காட்டாத முழுமையான ஞானமாகி யுள்ளாய்; சாசுவதமாகியுள்ளாய். விரும்பும் விருப்புடன் வெறுப்பும் அண்மை தொலைவுகளும் நீங்குதல் சேர்தல் என்பவையும் இவை முதலியவையும் பொருந்திய சான்றுகள் மனம் வாக்கு முதலான எல்லாம் அடையப் பெறாமல் உள்ளும் புறமும் பொருந்துவனவாய் உள்ளாய். அவ்வாறாகி,

145. பாசம் பசுவிற் கலந்தது எப்படி?

ஆகியசற் காரியவூ கத்துக்கேற்ற
அமலமாய் நடுவாகி அனந்தசத்தி
யோகமுறும் ஆனந்த மயமதாகி
உயிர்க்குயிராய் எந்நாளும் ஓங்கா நிற்ப
மோகவிருள் மாயைவினை உயிர்கட் கெல்லாம்
மொய்த்ததென்கொல் உபகார முயற்சி யாகப்
பாகமிக அருளஒரு சத்தி வந்து
பதிந்ததென் கொல் நானெனும் அப்பான்மை
என்கொல்!

145. உண்டாகிய சற்காரிய வாத யுக்திக்கு இணங்கின குற்றமற்றவன். நடுவுநிலைமையினின்று நீங்காத தலைவனாய் உள்ளவன். முடிவில்லாத சக்தியின் சேர்க்கையைப் பொருந்திய இன்ப வடிவாகி, உயிர்க்கு உயிராகி, எக்காலத்தும் உயர்ந்து நிற்கும் இயல்புடையவன் ஆவாய். அவ்வாறு விளங்கவும் மாயையும் அதனால் உண்டாகும் வினைகளும் எல்லா உயிர்களுக்கும் வந்து சேர்வதற்குக் காரணம் யாது? தன்னால் செய்யப்படும் உயிர்களின் முயற்சியாகப் பரிபக்குவத்தை மிகவும் அளிப்பதற் பொருட்டாய் ஒரு சத்தி வந்து பதித்தற்குக் காரணம் யாது? நான் என்று கூறுவதற்குரிய தன்மை யாது?

146. பாசத்தால் தோன்றும் துன்பம்

நானென்னும் ஓர் அகந்தை எவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானாவாகித்
தான்வந்து தொடரும் இத்தால்வளரும் துன்பச்
சாகரத்தின் பெருமைஎவர் சாற்ற வல்லார்
ஊனென்றும் உடல்என்றும் கரணம் என்றும்
உள்என்றும் புறம்என்றும் மொழியா நின்ற

வானென்றும் கால்என்றும் தீநீர் என்றும்
மண்என்றும் மலையென்றும் வனமதென்றும்

146. நான் என்ற செருக்கானது எல்லாரிடத்தும் உண்டாகி அவர்களை வருத்தியவுடன் உலக மாயையானது பலவகையாகி வந்து பற்றும். அவ்வாறு பற்றுவதால் துன்பக் கடல் பெருகும். அந்தத் துன்பக் கடலின் பெருமையை எடுத்துக் கூறவல்லவர் எவர்? ஊன் எனவும் அதனால் ஆன உடல் எனவும் அந்த வுடலுக்கு அந்தக்கரணங்கள் எனவும், அகம் எனவும், புறம் எனவும், நீங்காமல் நின்ற வானம் எனவும், காற்று எனவும், தீ, நீர் எனவும், மண் எனவும், மலைகள் எனவும், காடு எனவும்,

147

மலைஅலையாம் காட்சிகண்கா ணாமை ஆதி
மறப்பென்றும் நினைப்பென்றும் மாயா வாரி
அலைஅலையாய் அடிக்கும் இன்பத் துன்பம் என்றும்
அவைவிளைக்கும் வினைகள் என்றும் அதனைத்
தலைபலவாம்சமயம்என்றும் தெய்வமென்றும் [தீர்க்கத்
சாதகர்என் றும்அவர்க்குச் சாட்சியாகக்
கலைபலவாம் நெறிஎன்றும் தர்க்கம் என்றும்
கடலுறுநுண்மணல் எண்ணிக் காணும்போது.

147. மலை மலையாய் நேரில் காணப்படும் காட்சி களும் கண்ணுக்குக் காணப்படாத பொருள்களும் மறதி எனவும், நினைவு எனவும் அலை அலையாக மோதும் இன்ப துன்பம் எனவும், அவற்றை உண்டாக்குகின்ற வினைகள் எனவும் அவற்றை நீக்கப் பல காரணங்களால் உண்டான சமயங்கள் எனவும், அவற்றுக் கேற்ற தெய்வங்கள் எனவும், பயிற்சியாளர் எனவும், அந்தப் பயிற்சிக்குச் சான்றாகப் பல நூல்களால் சொல்லப்பட்ட நெறிகள் எனவும், தருக்கக்

கலை எனவும், கடலில் பொருந்திய நுண்மையான மணலை எண்ணிக் காணுமிடத்து மிகுதியாய் விளங்கும்.

148. துன்பம் விலகல்

காணரிய அல்லலெல்லாம் தானேகட்டுக்
கட்டாக விளையும் அதைக் கட்டோடே தான்
வீணினில்கர்ப் பூரமாலை படுதீப் பட்ட
விந்தைஎனக் காண ஒரு விவேகம் காட்ட
ஊணுறக்கம் இன்பதுன்பம் பேர்ஊர் ஆதி
ஒவ்விடமும் எனைப்போல உருவம்காட்டிக்
கோணறவோர் மான்காட்டி மானை ஈர்க்கும்
கொள்கையென அருள்மௌன குருவாய் வந்து.

148. காண்பதற்கு அரிய அத்துன்பங்கள் எல்லாம் தாமே கூட்டம் கூட்டமாக வந்து துன்பப் படுத்தும். அந்த வினைகள் எல்லாம் பயன் இல்லாது கழியும்படி கருப்பூர மாலையில் தீயானது பட்ட விடத்து எஞ்சாது முழுவதும் அழியும் வியப்பான தன்மையைப் போன்று காணும்படி ஒப்பற்ற மெய் உணர்வை எனக்குக் காட்டுவதன் பொருட்டாக, ஊணும் உறக்கமும் இன்பமும் துன்பமும் பேரும் ஊரும் முதலியவை ஒரு சிறிதும் ஒவ்வா என்றாலும்,

மானைக் காட்டி மானைப் பிடிப்பதைப் போன்று மனித வுருவத்தை நிலைக்களமாகக் கொண்டு எழுந்தருளி வந்து என் மலக் களங்கத்தை நீக்க மௌன குருவாய் வந்தாய்.

149. மௌனகுரு உபதேசம்

வந்தென்உடல் பொருள்ஆ விமூன்றும் தன்கை
வசமெனவே அத்துவா மார்க்கம் நோக்கி
ஐந்துபுலன் ஐம்பூதம் கரண மாதி

அடுத்தகுணம் அத்தனையும் அல்லை அல்லை
இந்தஉடல் அறிவறியா மையும்நீ அல்லை
யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீ உன்
பக்குவம் கண்டறிவிக்கும் பான்மை யேம்யாம்

149. அங்ஙனம் (மௌன குருவாய்) வந்து, என் உடலும் பொருள்களும் உயிரும் என்ற மூன்றும் தன் கை வயப்பட்டவை என்று ஏற்றுக் கொண்டு, அத்தருபம் சத்த ரூபமான மந்திரம் முதலான நெறிகள் ஆறினையும் நோக்கி, சுவை ஒளி முதலிய ஐந்து புலன்களும் ஐந்து பூதங்களும் அந்தக்கரணங்கள் முதலாகப் பொருந்திய குணங்கள் யாவும் 'நீ அல்லை, அல்லை' எனவும், இந்த வுடலும் அறிவு அறியாமையும் நீ அல்லை எனவும், ஆனால் நீ யாதொரு பொருளையும் பற்றுவாயானால் அதன் மயமாகி நின்றும் அதன் தொடர்பு தனக்கு இல்லாத பளிங்கைப் போன்ற அறிவுப் பொருள் ஆவாய்! உன் செவ்விப் பருவம் நோக்கி அறிவிக்கும் தன்மையை உடையம் ஆவோம்.

150

அறிவாகி ஆனந்தமயமாய் என்றும்
அழியாத நிலையாகி யாதின் பாலும்
பிரியாமல் தண்ணருளே கோயி லான
பெரியபரம் பதி அதனைப் பெறவே வேண்டின்
நெறியாகக் கூறுவன கேள் எந் நாளும்
நிர்க்குணம் நிற்குஉளம்வாய்த்து நீடு வாழ்க
செறிவான அறியாமை எல்லாம் நீங்கச்
சிற்சுகம்பெற் றிடுகபந்தம் தீர்க என்றே.

150. அறிவாகி இன்ப வடிவாகி என்றும் அழியாத தன்மை உடையதாகி எதனிடத்தும் நீங்காது குளிர்ந்த அருளே கோயிலாகப் பெற்ற பெரிய மேன்மையுடைய பதிப்

பொருளைப் பெறுவதையே விரும்புவாயானால் முறையாய்ச் சொல்வேன், கேட்பாயாக! எந்நாளும் நிர்க்குணப் பொருள் உனக்கு உள்ளத்தில் பொருந்தப் பெற்று நீண்ட காலம் வாழக் கடவை! மிகுதியான அஞ்ஞானம் முழுதும் நீங்க அறிவு இன்பத்தைப் பெறுவாயாக! பிறவிப் பிணிப்பு முழுதும் நீங்குக என்று கூறுக.

151. மெய்ப் பொருளின் தன்மை

பந்தமறும் மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை அருளி அந்தப்பண்புக் கேதான்
சிந்தைஇல்லை நானென்னும் பான்மை இல்லை
தேகம்இல்லை காலம்இல்லை திக்கும்இல்லை
தொந்தம்இல்லை நீக்கம்இல்லை பிறிதும் இல்லை
சொல்லும்இல்லை இராப்பகலாம் தோற்றம்இல்லை
அந்தம்இல்லை ஆதிஇல்லை நடுவும் இல்லை
அகமும் இல்லை புறமும் இல்லை அனைத்தும்
இல்லை.

151. மூன்று மலப் பிணிப்பான பந்தம் நீங்கும் பொருட்டு உண்மை அறிவான மோன நிலையான ஒப்பில் லாத பொருளை மௌனகுரு அருளிய போது, அந்த நிலைக்கு மனம் இல்லை; நான் என்ற தன்மை இல்லை; நாடு என்பது இல்லை; காலம் என்பது இல்லை; பிரிவு இல்லை; இவற்றுக்கு அப்பாற்பட்ட தன்மையும் இல்லை; சொல்லும் இல்லை; இரவு பகல் காட்சி இல்லை; முடிவு இல்லை; முதல் இல்லை; நடுவும் இல்லை; வெளிப் பகுதியும் இல்லை; அனைத்தும் இல்லை!

152

இல்லைஇல்லை யென்னின் ஒன்றும் இல்லா தல்ல
இயல்பாகி என்றுமுள்ள இயற்கையாகிச்

சொல்லரிய தன்மையதாய் யான்தான் என்னத்
தோன்றாதெல் லாம்விழுங்கும் சொரூப மாகி
அல்லையுண்ட பகல்போல அவித்தை யெல்லாம்
அடையவுண்டு தடையறவுன் அறிவைத் தானே
வெல்லஉண்டிங் குன்னையும்தா னாகக்கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளங்குந் தானே.

152. இங்ஙனம் இல்லை இல்லை என்பது எல்லாம் பாழ் என்பதன்று. எக்காலத்தும் உள்ள பொருளாகிக் கூறு வதற்கரிய தன்மையுடையதாய் யான், தான் என்று காணப் படாமல் எல்லாவற்றையும் விழுங்கி விடும் பேருருவாகி, இருளை விழுங்கும் கதிரவனைப் போல் அஞ்ஞானத்தை யெல்லாம் முழுதும் கெடுத்துத் தடைகள் இல்லாமல் உன் அறிவை வென்று விழுங்கி இங்கு ஆன்மாவான நின்னையும் பரமான்மாவான தனக்கு உரிமையாகக் கொண்டு மோன நிலையானது உன் நிலையை வேறுபடுத்துவதாய் உனக்கு விளக்கிக் காட்டும்.

153

தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க ஒட்டாது தலைப்பட் டாங்கே
போனாலும் கர்ப்பூர தீபம் போலப்
போய்யொளிப்ப தல்லாது புலம்வே றின்றாம்
ஞானாகா ரத்தினொடு ஞேயம் அற்ற
ஞாதிருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலும் இதன் பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவார் அதுவே சொல்லும்,

153. (பரம் பொருள்) எங்கும் உள்ள எல்லாப் பொருள்களும் தானே ஆன தன்மயமே அல்லாது வேறொன் றையும் தலையெடுக்க விடாது. தலையெடுத்து அங்கே

போனாலும் கர்ப்பூர ஒளியைப் போன்று சென்று மறைந்து விடுவதே அல்லாமல் உன் அறிவானது வேறொன்றாய் இல்லை. அதுவே அன்றிப் பேரறிவு வடிவத்துடன் காணப் படும் பொருளும் காண்பவனும் நீங்காது நீங்கி நிற்கும். என்றாலும் இதன் பெருமையை எவர்க்கு எவர் எடுத்து விளக்குதற்கு வல்லமை உடையவர்? அதுவாகி விட்டால் தாம் முன் இருந்த தன்மை இல்லாது அதுவாகவே விளங் குவர். அந்தப் பொருளே அதன் சிறப்பினை உணர்வுக்குள் உணர்வாய்த் தெரிவித்து விளங்கும்.

(ஞாதுரு — காண்பவன்; ஞேயம் — காணப்படு பொருள்)

154. நின் அருள்

அதுஎன்றால் எதுஎன ஒன்று அடுக்குஞ்சங்கை
ஆதலினால் அதுவெனலும் அறவேவிட்டு,
மதுவுண்ட வண்டெனவும் சனக னாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார் என்றும்
பதியிந்த நிலைஎனவும் என்னை ஆண்ட
படிக்குநிரு விகற்பத்தால் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவும்நின் அருள்கூர் இந்தக்
கதியன்றி உறங்கேன் மேற் கருமம் பாரேன்.

154. 'அது' என்று கூறினால் அது, எது?' என ஐயம் உண்டாகும். ஆகையால் அது என்பதை அறவே விட்டு மதுவை உண்ட வண்டைப் போன்றும் சனகன் முதலிய அரசர்களும் சுகர் முதலான முனிவர்களும் வாழ்ந்தார் எனவும், இந்த நிலையில் நில் என்று நியமித்தும் என்னை ஆட்கொண்ட வண்ணமே நிர்விகற்ப சமாதியால் மேன்மை யான இன்பகதியைக் கண்டு கொள்ளும்படியாகவும் நின் னருள் எனக்கு பாலித்திட வேண்டும். இத்தகைய இயல்பு

கொண்ட கதியை அடைந்தன்றி உறங்கேன். மேற்கொண்டு செய்யத் தக்க செயல்களையும் செய்ய மாட்டேன்.

155. பேரின்ப வேட்கை

பாராதி விண்ணனைத்தும் நீயாச் சிந்தை
பரியமட லாஎழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ என்ப்ராண நாதா என்பேன்
வளைத்துவளைத் தெனைநீயா வைத்துக்கொண்டு
பூராய மாமேல்ஒன் றறியா வண்ணம்
புண்ணாளர் போல்நெஞ்சம் புலம்பியுள்ளே
நீராள மாய்உருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய்
நிற்பேன்.

155. மண் முதலாக விண் வரையுள்ள ஐந்து பூதங்களும் நீயாகவே எண்ணி என் உள்ளத்தைப் பெரிய ஏடாய்க் கொண்டு, அந்த ஏட்டிலே இதை எழுதிப் பல முறையும் பார்த்து, 'என் உயிர்த்தலைவ வாராயோ!' எனக்கூறுவேன். என்னைத் தடுத்துத் தடுத்து நீயாகவே வைத்துக் கொண்டு மேலே ஒரு செயலையும் ஆதியந்தமாக அறியாதபடி. புண் பட்டவர் போல் உள்ளமானது வருந்தி உள்ளே நீர் மயமாய் உருகித் தண்ணீராக ஒழுகப் பெருமூச்சு விட்டு உடலை மறந்து ஒருநிலைப் பட்டு நிற்பேன்.

156

ஆயுமறி வாகிஉன்னைப் பிரியா வண்ணம்
அணைந்துசுகம் பெற்றஅன்பர் ஐயோ என்னத்
தீயகொலைச் சமயத்தும் செல்லச் சிந்தை
தெளிந்திடவும் சமாதானம் செய்வேன் வாழ்வான்
காயிலைபுன் சருகாதி அருந்தக் கானம்

கடல்மலைஎங் கேஎனவும் கவலையாவேன்
வாயில்கும்பம் போல்கிடந்து புரள்வேன் வானின்
மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே.

156. உன்னை ஆராயும் அறிவை யுடையவராகிப் பிரியாதபடி சேர்ந்து இன்பம் அடைந்த தொண்டர் அனைவரும் என்னை நோக்கி 'ஐயோ' என்று இரக்கம் கொள்ளத் தீய கொலை செய்யும் நெறிகளிலும் உள்ளம் செல்ல, அந்த உள்ளம் அத்தகைய சமயங்களில் செல்லாது தெளிவடையவும், அமைதி அடைவேன். இத்தகைய நான் உயிர் வாழும் பொருட்டுக் காடும் கடலும் மலையும் எங்கே உள்ளன என்றும் கவலை கொள்வேன்! வானத்தில் சந்திர சூரியர்களை முன்னிலையாய் வைத்துக் கொண்டு அவர்களின் எதிரே வாய் அற்ற குடம் உருளுவதைப் போல் விழுந்து புரள்வேன்.

157

நேரேதான் இரவுபகல் கோடாவண்ணம்
நித்தம்வர உங்களைஇந் நிலைக்கே வைத்தார்
ஆரே அங் கவர்பெருமை யென்னே என்பேன்
அடிக்கின்ற காற்றேநீ ஆரா லேதான்
பேராதே சுழல்கின்றாய் என்பேன் வந்து
பெய்கின்ற முகில்காள் எம்பெருமான் உம்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யும்
சாதகமென்னே கருதிச்சாற்றும் என்பேன்.

157. "இரவு பகல்கள் தவறாதபடி நாள் தோறும் வரும்படி சூரிய சந்திரராகிய உங்களை இந்நிலையில் நிறுத்தியவர் யார்? அவ்விதம் அமைத்தவரின் பெருமை என்னே? என்று சொல்வேன். வீசுகின்ற காற்றே! நீ யாரால் இடையறாது உழல்கின்றாய்? வந்து மழை பெய்யும் மேகங்களே! எம் தலைவன் இறைவன் உங்களைப் போல் மிகுதியாய்

அருள் மழை பொழியுமாறு செய்யக்கூடிய பயிற்சி யாது? நீவிர் ஆராய்ந்து சொல்லுங்கள்! என்பேன்.

158

கருதரிய விண்ணே நீ எங்கு மாகிக்
கலந்தனையே உன் முடிவின் காட்சி யடை
வருபொருள்எப் படிஇருக்கும் சொல்லாய் என்பேன்
மண்ணே உன் முடிவில்எது வயங்கும் ஆங்கே
துரியஅறி வுடைச்சேடன் ஈற்றின் உண்மை
சொல்லானோ சொல் என்பேன் சுருதியே நீ
ஒருவரைப்போல் அனைவருக்கும் உண்மையாமுன்
உரையன்றோ உன்முடிவை உரை நீ என்பேன்.

158. ''நினைப்பதற்கு அரியவானே! நீ எங்கும் பரவிக் கலந்துள்ளாய்! உன் முடிவான எல்லையில் காணப்படுவதாக வரும் பொருளானது எத்தகைய இயல்புடையனவாய் இருக்கும்? கூறுவாயாக!'' என்று இயம்புவேன். ''பூமியே! உன் எல்லை முடிவில் எப்பொருள் விளங்கும்? அங்குள்ள மேலான அறிவை உடைய ஆதிசேடன் முடிவான பொருளின் உண்மையைக் கூற மாட்டானா? கூறுவாய்!'' என்று இயம்புவேன். ''மறையே! நீ ஒருவரைப் போல் அனைவருக்கும் மெய்யாய் விளங்கும் முதல் நூலாய் இருக்கின்றாய் அன்றோ! நீ உன் முடிவான பொருளைச் சொல்வாய்!'' என்று இயம்புவேன்.

159

உரைஇறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலேஇவ் வுலகம் சூழக்
கரையின்றி உன்னைவைத்தார் யாரே என்பேன்.
கானகத்தில் பைங்கிளிகாள் கமலம் மேவும்

வரிசிறைவண் டினங்காள் ஓதிமங்காள் தூது
மார்க்கமன்றோ நீங்கள்இது வரையி லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண் டோ ஒருகால் பேசும் என்பேன்.

159. "சொல்லும் சொல்லைக் கடந்து பெருமை பெற்று அலையான கையை நீட்டி ஒலித்துக் கொண்டிருக்கின்ற கடலே! இவ்வுலகம் முழுவதும் சூழ உன்னை அமைத்து வைத்தவர் யார்?" என்று கூறுவேன் "காட்டில் வாழும்பைங்கிளியே! தாமரை மலரில் தங்குகின்ற வரிகளைக் கொண்ட இறகுகளையுடைய வண்டுகளே! அன்னப் பறவைகளே! நீங்கள் தூது செல்லும் வழியை உடையவர் அல்லரோ! நீங்கள் இதுவரைக்கும் பெரிப பரிபூரணம் என்ற பொருளை கண்டு பேசியது உண்டோ? ஒரு முறை எனக்குச் சொல்லுங்கள்!" என்று இயம்புவேன்.

160

ஒருவனவன் யானைகெடக் குடத்துள் செங்கை
ஒட்டுதல்போல் நான்பேதை உப்போ டப்பை
மருவஇட்டும் கர்ப்பூர மதனில் தீபம்
வயங்கவிட்டும் ஐக்யம்உன்னி வருந்தி நிற்பேன்
அருளுடைய பரம்என்றோ அன்று தானே
யான்உளன்என்றும் எனக்கே ஆண வாதி
பெருகுவினைக் கட்டென்றும் என்னாற் கட்டிப்
பேசியதன்றே அருள்நூல் பேசிற் றன்றே.

160. காட்டில் வாழும் வாழ்வை உடைய ஒருவன் தான் கண்ணால் பார்த்த யானை மறைந்துவிட அதைத் தேடும் பொருட்டுக் குடத்துக்குள் தன் சிவந்த கையை விட்டுத் தேடுதல் போல், அறிவற்ற நான் உப்புடன் நீரைப் பொருந்தும்படி — கலக்கும்படி செய்தும், கருப்பூரத்தில்

விளக்கை ஒளிரச் செய்தும் நின் திருவடியில் நான் கலந்து நிற்குப் ஒற்றுமையை நினைந்து வருந்தி நிற்பேன். அருளை யுடைய பரம்பொருள் என்று உள்ளதோ அன்றே நானும் உள்ளேன் என்றும், எனக்கே ஆணவம் முதலானவை அதிகரிப்பதற்குக் காரணமான வினைப்பிணிப்பு உள்ளது என்றும் முற்காலத்திலேயே அருள் நூல்கள் கூறின. என்னால் கற்பித்துச் சொல்லப்பட்டது அன்று.

161

அன்றுமுதல் இன்றைவரை சனன கோடி
அடைந்தடைந்திங்கியாதனையால் அழிந்ததல்லால்
இன்றைவரை முத்திஇன்றே எடுத்த தேகம்
எப்போதோ தெரியாதே இப்போ தேதான்
துன்றுமனக் கவலைகெடப் புலைநா யேனைத்
தொழும்புகொளச் சீகாழித் துரையே தூது
சென்றிடவே பொருளைவைத்த நாவ லோய் நம்
சிவனப்பா என்றஅருட் செல்வத் தேவே!

161. படைப்புக் காலத்திலிருந்து இன்று வரை கோடிக் கணக்கான பிறவிகள் பலவற்றை அடைந்து இந்தப் பொய் விளங்கும் உலகத்தில் துன்பத்தால் அழிந்ததே அல்லாது இன்றுவரை வீடுபேறு அடையாது, கழிந்ததே! வினைக்கு ஏற்றவாறு எடுத்த வுடல் விடுப்பது எப்போதோ! அறியேன். ஆகவே, இப்போதே மிகுந்த உள்ளக் கவலைகள் நீங்கிட இழிந்த தன்மையுள்ள நாயேனைத் தொண்டு செய்யுமாறு ஆணை அளித்தருளச் சீகாழிக்குத் தலைவனே! சிவ பெருமான் தூதாய்ப் பரவை நங்கையிடம் செல்லவும் (அம்மங் கைக்கு இறைவனிடமிருந்து) செல்வக் குவியலைப் பெறவும் செய்த 'திருநாவலூரனே', நம் சிவபெருமான் கைலாயத்தில் 'தந்தையே!' என்று அழைத்த திருவருளான செல்வத்தை யுடைய 'திருநாவுக்கரசரான தெய்வமே! வந்தருளுக!'

162

தேவர்தொழும் வாதவூர்த் தேவே என்பேன்
திருமூலத் தேவே இச் செகத்தோர் முத்திக்
காவலுறச் சிவஎன்வாக் குடனே வந்த
அரசே சும் மாஇருந்துன் அருளைச் சாரப்
பூவுலகில் வளர்அருண கிரியே மற்றைப்
புண்ணியர்கா ளோ என்பேன் புரையொன் றில்லா
ஓவியம்போல் அசைவறவும் தானே நிற்பேன்
ஓதரிய துயர்கெடவே உரைக்கும் முன்னே.

162. "வானவர் வணங்கும் திருவாதவூரில் தோன்றிய மாணிக்க வாசகரே!" என்று சொல்வேன். திருமூலர் என்ற பெயரையுடைய தெய்வமே! இவ்வுலகத்தவர் வீடு பேறு அடைய வேண்டும் என்று ஆசை மிக, சிவ என்ற வாக்கியத் துடன் தோன்றிய (சிவ வாக்கியவர்) இறைவ! இவ்வுல கத்தில் சும்மா இருந்து உன் திருவருளைச் சேர்வதற்காக இம் மண்ணுலகத்தில் புகழ் வளர்கின்ற அருணகிரி நாதரே! மற்றுமுள்ள சிவனடியார்களே! ஓ என்று முறையிடுவேன்! குற்றம் சிறிதும் இல்லாத ஓவியம் போன்று அசைவில்லாது நிற்பேன். கூறுவதற்கரிய துயரம் கெடும்படி இப் பெயர்களை எல்லாம் நான் ஓதிக் கொண்டிருப்பேன்.

163

ஓதரிய சுகர்போல என்என் என்ன
ஒருவர் இலையோ எனவும் உரைப்பேன் தானே
பேதம்அபே தம்கெடவும் ஒருபே சாமை
பிறவாதோ ஆலடியில் பெரிய மோன
நாதனொரு தரம்உலகம் பார்க்க இச்சை
நண்ணானோ என்றென்றே நானா வாகிக்
காதல்மிகும் அணியிழையார் எனவா டுற்றேன்
கருத்தறிந்து புரப்ப துன்மேல் கடன்முக் காலும்.

163. கூறுவதற்கு அரிய தவச்சிறப்புடைய சுகமுனிவர் போன்று 'ஏன், ஏன்?! என்று எதிர் ஒலி கொடுக்க, ஒருவர் இல்லையோ!' என்றும் சொல்வேன். தானே வேற்றுமை எனவும் ஒற்றுமை எனவும் நினைக்கும் நினைவு நீங்கி ஒப்பில்லாத பேசாமை என்ற மோன நிலை தோன்றாதோ?

"கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்தருளிய பெரிய மௌன நிலையுடைய இறைவன் ஒருமுறை உலகத்தைக் கடைக்கணிக்க, விருப்பம் கொள்ளானோ?" என்று பல முறை கூறிப் பலவகையாய்க் கலங்கி, பிரிந்து சென்ற தம் தலைவர் வாராததால் அவர்கள் மீது ஆசை மிகுந்த மங்கையரைப் போன்று வாடினேன். என்கருத்தை யுணர்ந்து காத்தருளுவது முக்காலும் உனக்குக் கடமையாகும்.

(வியாசரின் மகன் சுகர். அவர் பிறந்ததும் மாயைக்கு அஞ்சி ஓட, அப்போது வியாசர் அவரைப் பின் தொடர்ந்து மகனே!' என்று சொன்னவண்ணம் ஓட, அங்கிருந்த மரங்கள் எல்லாம் எதிரொலி செய்தன)

164. வாழ்க

காலமொடு தேசவர்த்த மான மாகி
　　கலந்து நின்ற நிலைவாழி கருணைவாழி
மாலறவும் சைவமுதல் மதங்க ளாகி
　　மதாதீத மானஅருள் மரபு வாழி
சாலமிகும் எளியேன்இவ் வழக்குப் பேசத்
　　தயவுவைத்து வளர்த்த அருள் தன்மை வாழி
ஆலடியில் பரமகுரு வாழி வாழி
　　அகண்டிதா காரஅருள் அடியார் வாழி!

164. காலமும் இடமும் செய்தியும் எங்கும் பிரிவில்லாது கலந்து நின்ற நிலையான பொருள் வாழ்க! அப் பொருளில் பிரிவில்லாது நிற்கும் திருவருள் வாழ்க! மயக்கம்

ஒழியவும் சைவம் முதலான பல வேறு வகைப்பட்ட மதங் களாய் நின்றும் அம்மதங்களுக்கு எட்டாத திருவருள் மரபு வாழ்க! மாயா காரியம் மிக்க எளியேன் இதனைப் பேசும்படி அருள் வைத்த திருவருட் குணம் வாழ்க! கல்லால மரத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவகுரு வாழ்க! வாழ்க! துண்டு செய்யப் படாத வடிவத்தையுடைய நின் திருவருளுக்கு தொண்டு பூண்டவர் வாழ்க!

15. தேன் முகம்

(முதற் செய்யுள் 'தேன் முகம்' எனத் தொடங்குவதால் இப்பகுதி 'தேன் முகம்' எனப்படுகிறது. இப்பகுதியில் உள்ள செய்யுட்கள் பத்து)

165. உலகம் இல்பொருளா?

தேன்முகம் பிலிற்றும் பைந்தாள்
செய்யபங் கயத்தின் மேவும்
நான்முகத் தேவே நின்னால்
நாட்டிய அகில மாயை
கான்முயல் கொம்பே என்கோ
கானலம் புனலே என்கோ
வான்முக முளரி என்கோ
மற்றென்கோ விளம்பல் வேண்டும்.

165. தன்னிடத்தினின்று தேனைச் சிந்தும் பசுமை யான காம்பையுடைய சிவந்த தாமரை மலரில் வீற்றிருக் கின்ற நான்முகத் தேவனே! உன்னால் படைக்கப்பட்ட உலகத்தைப் பிடித்த மாயையைக் காட்டில் வாழ்கின்ற முயற்கொம்பு என்று சொல்வேனோ? அல்லது கானல் நீர் என்று சொல்வேனோ? இவற்றின் வேறான பொருள் என்று சொல்வேனோ? என்ன சொல்ல வேண்டும் என்பதை நீயே கூறியருளல் வேண்டும்.

166. முதல்வர் யார்?

வேண்டுவ படைத்தாய் நுந்தை
விதிப்படி புரந்தான் அத்தைக்
காண்டக அழித்தான் முக்கண்
கடவுள்தான் இனைய வாற்றால்
ஆண்டவன் எவனோ என்ன
அறிகிலா தகிலம் நீயே
ஈண்டிய அல்லல் தீர
எம்மனோர்க் கியம்பு கண்டாய்!

'166. நான்முகனே! உலகத்தவர்க்கு வேண்டியவற்றை யெல்லாம் படைத்தாய். நின் தந்தையான திருமால் அவற்றைக் காக்க வேண்டிய முறைப்படி பாதுகாத்தான். முக்கண்களையுடைய உருத்திர மூர்த்தி யாவரும் காணும் படி அவற்றை அழித்தான். ஆகையால் இவ்வாறு நிகழ்வன வற்றால் முழுமுதலான இறைவன்யாவன்?' என்று உலகம் அறிய மாட்டாது. எனவே, மிக்க அல்லல் நீங்க எம்போன்ற வர்க்கு நீயே கூறியருளுவாய்.

167. படைத்தலும் காத்தலும் மாயையாம்

கண்டன அல்ல என்றே
கழித்திடும் இறுதிக் கண்ணே
கொண்டது பரமா னந்தக்
கோதிலா முத்தி அத்தால்
ண்டையிற் படைப்பும் காப்பும்
பறந்தன மாயை யோடே
வெண்தலை விழிகை காலில்
விளங்கிட நின்றான் யாவன்?

167. காணப்படுகின்ற பொருள்கள் எல்லாம் இறைவன் அல்லன் என்று கழித்துக் கொண்டே சென்ற

போது முடிவில் பரம் பொருள் என்று கூறப்படுவது யாது? அப்பொருளே பேரின்பம் நிறைந்த குற்றம் சிறிதும் இல்லாத தானவீடுபேறாகும். (அப்பொருளே முழுமுதல் இறைவனான சிவ பெருமான்)

அதனால் முதலாவதான படைப்புத் தொழிலும் படைத் தவற்றைக் காக்கும் தொழிலும் மாயையுடன் அழிந்தன. (எனவே நான்முகனும் திருமாலும் முழுமுதல் இறைவர் ஆகார். சிவபெருமானே முழுமுதல் இறைவன்) திருக்கையில் நான்முகனின் தலையும் திருவடியில் திருமாலின் கண்ணும் பொருந்தி விளங்க நின்றான். அவன் யாவன்? அவனே சிவபெருமான்.

(வெண்டலை — நான்முகனின் தலையோடு. தானே 'பிரமம்' என்ற செருக்கால் நான்முகனின் தலையை இறைவன் கிள்ளினான். விழி — திருமாலின் கண். அவன் சிவபெருமானைத் தன் கண்ணைப் பிடுங்கி அருச்சித்தான். எனவே, கையில் விழியும் திருவடியில் கண்ணும் விளங்கு வதாய் உரைத்தார்.)

168

விளங்கவெண் ணீறு பூசி
　　விரிசடைக் கங்கை தாங்கித்
துளங்குநன் னுதற்கண் தோன்றச்
　　சுழல்வளி நெடுமூச் சாகக்
களங்கமில் உருவம்தானே
　　ககனமாய்ப் பொலியப் பூமி
வளர்ந்ததாள் என்ன உள்ளம்
　　மன்றென மறையொன்று இன்றி.

168. திருமேனியில் விளங்குமாறு வெண்ணீற்றை அணிந்து, பரவிய திருச்சடையில் கங்கையைச் சுமந்து, ஒளி விளங்கும் நல்ல நெற்றியில் கண் காணப்படவும், சுழல்

கின்ற காற்றானது பெருமூச்சாகவும் வானமே குற்றம் இல்லாத வடிவாய் விளங்கவும், பூமியே நீண்ட திருவடி யாகவும், தில்லைச் சிற்றம்பலமே இதயமாகவும் சிறிதும் மறைவின்றி (இறைவன் வீற்றிருக்கின்றான்).

169. சிவபெருமானே முதல்வர்

மறைமுழக் கொலிப்பத் தானே
    வரதமோடு அபயக் கைகள்
முறைமையின் ஓங்க நாதம்
    முரசெனக் கறங்க எங்கும்
குறைவிலா வணம்நி றைந்து
    கோதிலா நடனம் செய்வான்
இறையவன் எனலாம் யார்க்கும்
    இதயசம் மதம் ஈ தல்லால்,

169. மறையொலியானது ஒலிக்க, வரமளிக்கும் திருக் கை, அஞ்சற்க என அபயம் அளிக்கும் திருக் கை ஆகியவை முறைமைப்படி விளங்க, நாத தத்துவமானது பேரிகை போல் ஒலிக்க, எங்கும் குறைவில்லாதவாறு நிரம்பிக் குற்றம் இல்லாது திருக்கூத்து இயற்றுபவன் யார்? அவனே முழுதல் இறைவன் என்று சொல்லலாம். இஃது எல்லார்க்கும் உள்ளத்து ஏற்கும் உண்மையாகும். இதுவன்றி,

170. மாயையின் இயல்பு

அல்லலாம் தொழில் படைத்தே
    அடிக்கடி உருவெ டுத்தே
மல்லல்மா ஞாலம் காக்க
    வருபவர் கடவுள் என்னில்
தொல்லையாம் பிறவி வேலை

தொலைந்திடாது இருள்நீங் காது
நல்லது மாயை தானும்
நான்என வந்து நிற்கும்.

170. துன்பவடிவான தொழிலைப் பெற்று அடிக்கடி உடலைப் பெற்று வளமுடைய பெரிய வுலகத்தைப் படைத்து பாதுகாக்க வருபவன் (நான்முகனும், திருமாலும்) இறைவர் என்றால், பழைய பிறவிக் கடல் நீங்காது; அறியாமை விலகாது நல்லதாக விளங்கும் மாயையும் நான் என்று முன் வந்து நிற்கும்.

(படைப்புத் தொழிலையுடைய நான்முகனும் காக்கும் தொழிலையுடைய திருமாலும் இறைவர் ஆகார் என்பது கருத்து.)

171. மயக்கம் நீங்கினால் ஞானம்; ஞானம் மிகுந்தால் பேரின்பம்

நானெனை நிற்கும் ஞானம்
ஞானமன்று அந்த ஞானம்
மோனமா இருக்க வொட்டா
மோனம்இன் றாக வேதான்
தேனென ருசிக்கும் அன்பால்
சிந்தைநைந் துருகும் வண்ணம்
வானென நிறைந்தா னந்த
மாகடல் வளைவ தின்றே.

171. 'நான்' என்று முனைந்து நிற்கும் அறிவு உண்மை அறிவாகாது. ஏனென்றால் அந்த அறிவானது மோனமாய் இருக்க விடாது. எனவே, மோன நிலை இல்லாது போதலால் தேன் போன்று சுவைக்கும் அன்பால் உள்ளமானது நெகிழ்ந்து உருகும்படி பேரின்பக் கடலானது

வான் போன்று நிறைந்து உயிர்களைத் தன்னுள் அடக்கிக் கொள்வதில்லை.

172. பந்தத்தால் இன்பம் இல்லை

இன்றென இருப்போம் என்னின்
 என்றும்சூ னியமாம் முத்தி
நன்றொடு தீதும் அன்றி
 நாம்முன்னே பெறும வித்தை
நின்றது பெத்தம் தானே
 நிரந்தர முத்தி யென்னின்
ஒன்றொரு வரைநான் கேட்க
 உணர்வில்லை குருவுமில்லை.

172. வீடுபேறு என்ற ஒன்றில்லை என்று நினைத்திருப்போமென்றால், எக்காலத்தும் முத்தி என்பது சூனியமாக முடியும். அப்போது நன்மையுடன் தீமையும் அல்லாது நாம் முன்னே பெற்றிருந்த அறியாமையே நிலைபெற்றிருப்பதாகும். அவ்வாறு அறியாமை நிலை பெற்றிருக்க எக்காலமும் முத்தி என்று சொன்னால், நான் ஒருவரைச் சேர்ந்து வினவி ஒன்றை அறிந்து கொள்ள வேண்டியதில்லை. அங்ஙனம் வினவி அறிந்து கொள்ளத் தக்க ஆசானும் இல்லை.

(அவிச்சை — அஞ்ஞானம்; அறியாமை. பெத்தம் — கட்டு; பிறப்பியல்)

173. பந்தந்தான் இன்பம் என்பர் உலகாயதர்

இல்லையென் றிடின்இப் பூமி
 இருந்தவா றிருப்போம் என்னில்
நல்லவன் சாரு வாகன்
 நான்சொலும் நெறிக்கு வீணில்

தொல்லையேன் ஆக மாதி
    தொடுப்பதேன் மயக்க மேதிங்கு
ஒல்லைவந் திருமின் என்ன
    உறவுசெய் திடுவன் அந்தோ!

173. அவ்வாறு அறிவும், அறிவிக்கும் குருவும் இல்லை என்று கொள்ளின், இந்த வுலகம் இருந்தவாறு இருப்போம் என்றால், உலகாயத மதமுடைய சாருவாகன் வந்து, "நான் கூறும் வழியைப் பின்பற்றுதற்கு வீணான தொல்லை ஏன்? ஆகமம் முதலான பொய்ந் நூல்களைக் கற்று வாதிடத் தொடங்குவது ஏன்? மயக்கம் எதற்கு? இங்கு விரைவில் வந்து என்னுடன் கூடியிருங்கள்!" என்று நட்புக் கொண்டிடுவான்.

(சாருவாகன் — உலகாயதக் கொள்கையுடையவருள் ஒருவன்)

174. அருள் தருவாய்

அந்தணர் நால்வர் காண
    அருட்குரு வாகி வந்த
எந்தையே எல்லாம் தானென்று
    இயம்பினன் எமைப் படைத்த
தந்தைநீ எம்மைக் காக்கும்
    தலைவனே நுந்தை யன்றோ
பந்தமில் சித்தி முத்தி
    படைக்கநின் அருள்பா லிப்பாய்!

174. முனிவரான சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் என்ற நால்வரும் காணும்படி அருட் குருவாய்த் தோன்றிய எம் தந்தையே உலகத்துள்ள மாயா காரியப் பொருளும் நீயும் ஒன்றாய்க் கலந்திருப்பதனால் எல்லாம் தானே என்று கூறியருளினான். என்றாலும் எம்மைப்

படைத்த தந்தையும் நீ. எம்மைக் காக்கின்றவன் படைக்கும் தொழிலுடைய நான்முகனுக்குத் தந்தை உறவுடையவன்! அல்லனோ? இனிப் பிணிப்பு இல்லாத சித்தி முத்திகளைப் பெற்று வாழ்வதற்கு நின்னருள் சுரந்து அளிப்பாயாக!

(சித்தி — இம்மையில் அமையும் பலன். அட்டமாசித்திகள். முத்தி — மறுமையில் பெறும் பலன்; வீடுபேறு)

16. பன்மாலை

('பன்மாலை' என்ற தொடக்கம் முதல் செய்யுளில் உள்ளதால் இப்பகுதி 'பன்மாலை' என்ற பெயர் பெற்றது. இதில் உள்ளவை பத்துச் செய்யுட்கள்)

175. எந்நாளும் துதித்து நிற்பேன்

பன்மாலைத் திரள் இருக்கத் தமையு ணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பட்சம் என்று
நன்மாலை யாஎடுத்துச் சொன்னார் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானும் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்
என்மாலை அறிந் திங்கே வாவா என்றே
எனைக்கலப்பாய் திருக்கருணை எம்பிரானே!

175. சிறந்த அருளையுடைய எம் தலைவ! பலவகையான மலர் மாலைகள் இருக்கவும், அவற்றைநீ விரும்பாமல், தம்மை உணர்ந்த பேரறிவாளர்களின் பாமாலையிடத்தே நீ விருப்பம் கொண்டவன் என்று எண்ணி நல்லவர் பாமாலையை நினக்குச் சூட்டினர். இதுவே நன்மையாவது என்று எண்ணி நன்மையை அளிக்கும் வீடுபேற்று நூல்களைக் கல்லாத யான், நினக்குப் பாமாலையைச் சூட்டினேன். தாரை தாரையாய்க் கண்ணீர் ஒழுக உன் அடிமை

யான யானும் இன்று போலவே என்றும் வணங்கி நிற்பேன். என் விருப்பத்தை யுணர்ந்து 'இங்கே வாவா' என்று கூறிக் கொண்டு என்னுடன் கலந்தருள வேண்டுகின்றேன்.

176. துன்ப உடம்பு

கருணைமொழி சிறிதில்லேன் ஈதல் இல்லேன்
கண்ணீர்கம் பலைஎன்றன் கருத்துக் கேற்க
ஒருபொழுதும் பெற்றறியேன் என்னை யாளும்
ஒருவா உன் அடிமைநான் ஒருத்த னுக்கோ
இருவினையும் முக்குணமும் கரணம் நான்கும்
இடர்செயுமைம் புலனும்கா மாதி ஆறும்
வரவரவும் ஏழைக்கோர் எட்ட தான
மதத்தொடும்வந் தெதிர்த்தநவ வடிவ மன்றே!

176. ஒன்பது வடிவாய் இறைவன் கூத்தாடுகின்ற அறிவுப் பெருவெளியே! என்னை ஆண்டருளும் ஒப்பற்ற இறைவ! என்னிடம் அருளுடன் கூடியஇனிய மொழி சிறிதும் இல்லை. ஈகைத் தன்மை இல்லை. என் எண்ணத்துக்கு ஏற்ப ஒருகாலத்தும் கண்ணீர் கம்பலைகளை நான் பெற்றதில்லை. நான் நின் அடிமை. இத்தகைய என் ஒருவனுக்குத் தானோ நல்வினை தீவினை என்ற இரு வினைகளும், சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற நான்கு அந்தக்கரணங்களும், துன்பத்தை உண்டாக்கும் ஐந்து புலன்களும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாச்சரியம் என்னும் ஆறும் வரவர, அறிவற்ற எனக்கு ஓர் எட்டாகிய மதமான குலம், ருபம், யௌவனம், வித்தை. தனம், பிரபுத்துவம், சகாயம், சகசம் என்பனவற்றுடன் வந்து சேர்ந்தன.

(நவவடிவம் — இறைவனின் ஒன்பது வகையான வடிவங்கள். அவை; பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுரன், சாதசிவன், சத்தி, சிவம், நாதம், விந்து)

177. திருவடி சூட்டி அருள்க!

வடிவனைத்தும் தந்தவடி வில்லாச் சுத்த
வான்பொருளே எளியனேன் மனமாம் மாயைக்
குடிகெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோன
குருவே என் தெய்வமே கோதி லாத்
படியெனக்கா னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படியெனக்குன் அருட்கருணை பற்று மாறே
அடியெடுத்தென் முடியில் இன்னம் வைக்க வேண்டும்
அடி முடியொன் றில்லாத அகண்ட வாழ்வே!

177. வடிவங்கள் எல்லாவற்றையும் படைத்த வடிவம் இல்லாத தூய்மையான மேலான பொருளே! எளியவனான என் உள்ளத்தில் உள்ள மாயை, அடியுடன் அழிக்கக் கொடி கட்டி எழுந்தருளியுள்ள மௌன குருவே! என் இறைவ! முதலும் இறுதியும் இல்லாத அகண்ட பெருவாழ்வே! எனக்குக் குற்றம் இல்லாதபடி இன்ப வெள்ளமானது வந்து நிறைந்திடவும், எனக்கு நின் சிறந்த அருள் பதியவும் முன்னர் வைத்ததைப்போல் இன்னும் நின் திருவடியைத் தூக்கி எடுத்து என் தலையின் மீது வைத்தருளல் வேண்டும்'

178. இனியும் தாங்க முடியாது

வாழ்வனைத்தும் மயக்கம்எனத் தேர்ந்தேன் தேர்ந்த
வாறேநான் அப்பால் ஓர் வழிபா ராமல்
தாழ்வுபெற்றிங் கிருந்தேன் ஈதென்ன மாயம்
தடையுற்றால் மேற்கதியும் தடைய தாமே
ஊழ்வலியோ அல்லதுன்றன் திருக்கூத்தோ இங்கு
ஒருதமியேன் மேற்குறையோ உணர்த்தாய்
பாழ் அவதிப் படஎனக்கு முடியாதெல்லாம் [இன்னம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே!

178. எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்க வல்ல இயல்பையுடையவனே! இவ்வுலக வாழ்வு அனைத்தும்

மீண்டும் பிறப்பதற்குக் காரணமானவையே என்று நான் தெளிந்தேன். தெளிந்த வண்ணமே, நான் அப்பால் ஒரு வழியைப் பாராது காலம் தாழ்த்தி இவ்வுலகத்தில் இருந்தேன். இது என்ன மயக்கம்! நான் இங்ஙனம் தடைப்பட்டு நின்றால் அடைய வேண்டிய வீடுபேறும் தடைப்படுமே! இதற்குக் காரணம் யாது? ஊழ் வலியோ! அல்லது நின் திருக் கூத்தோ? அல்லாது இங்கு என்னிடத்தில் உள்ள குறை பாடோ? அறியேன்! எனக்கு இதனை அறிவிப்பாய்; இன்னமும் பாழான துன்பப்பட என்னால் இயலாது!

179. அகந்தை எனக்கு ஏன் வைத்தாய்?

நானான்இங் கெனும் அகந்தை எனக்கேன் வைத்தாய்
நல்வினைதீ வினையெனவே நடுவே நாட்டி
ஊனாரும் உடற்சுமைஎன் மீதேன் வைத்தாய்
உயிர்எனவும் என்னையொன்றா உள்ஏன் வைத்தாய்

ஆனாமை யாய் அகில நிகில பேதம்
அனைத்தினுள்ளும் தானாகி அறிவா னந்தத்
தேனாகிப் பாலாகிக் கனியாய்க் கன்னல்
செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்த ஒன்றே!

179. ஒப்பில்லாத இறைவ! எல்லாப் பொருள்களிடத்தும் நீங்காமல் உள்ளாய்! உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களினுள்ளும் நீயேயாகி நிறைந்துள்ளாய். இன்பத் தேனாகியுள்ளாய். பாலாகி யுள்ளாய்; கனியாகி யுள்ளாய். செழுமையான சர்க்கரைப் பாகாகி யுள்ளாய்; கற்கண்டாய் உள்ளாய். இறைவ! நான் என்ற செருக்கை எனக்கு ஏன் வைத்தாய்? நல்வினை தீவினை என்று இடையில் நிறுத்தி ஊன் நிறைந்துள்ள உடல் சுமையை என்மீது ஏன் வைத்தாய்? என்னை உயிர் என்று சொல்லவும் உடலுக்குள் ஒரு பொருளாக ஏன் அமைத்து வைத்தாய்?

(நிகிலம் - எல்லாம்)

180. ஆதரிக்க வேண்டும்

ஒன்றிஒன்றி நின்றும்நின்றும் என்னை என்னை
உன்னியுன்னும் பொருளலை நீ உன்பால் அன்பால்
நின்றதன்மைக் கிரங்கும்வயி ராக்கியன் அல்லேன்
நிவர்த்தியவை வேண்டும்இந்த நீலனுக்கே
என்றும்என்றும் இந்நெறிஓர் குணமும் இல்லை
இடுக்குவார் கைப்பிள்ளை ஏதோ ஏதோ
கன்றுமனத் துடன்ஆடு தழைதின் றால்போல்
கல்வியும்கேள் வியுமாகிக் கலக்குற் றேனே.

180. உலகில் உள்ள ஒவ்வொரு நூலிலும் அழுந்தி அழுந்தி, அந்நூல்களில் கூறியபடி இருந்து பார்த்தும் பயன் என்ன? நீ என்னை முன்னிட்டு (என் அறிவாய்) நினைக்கப் படுகின்ற பொருளாய் இல்லை. ஆதலால் நின்னிடம் அன்பு கொண்டு ஒழுகி நின்ற தன்மைக்கு மற்றவர் எனக்காக இரங்கிடும் மனவுறுதி உடையவன் ஆகேன். இப்பொய் யனான எனக்கு அந்தப் பொய்ந்நெறிகள் நீங்குதல் வேண்டும். எக்காலத்தும் இந்த நல்ல நெறியை அடைவ தற்குச் சிறிது நற்குணமும் இல்லை. எடுப்பார் கைப் பிள்ளையாதற்குக் காரணம் யாதோ? வருந்துகின்ற மனத் துடன் ஆடானது தழையை மேய்ந்தாற் போல் நிரம்பாத குறைபாடுடைய பலவகைக் கல்வியும் கேள்வியும் உடை யவன் ஆகிக் கலக்கம் அடைந்தேன்.

181. நினக்கே சரண்!

உற்றதுணை நீயல்லால் பற்று வேறொன்று
உன்னேன் பன் னாள்உலகத் தோடிஆடிக்
கற்றதும் கேட்டதும் இதனுக் கேதுவாகும்

கற்பதும்கேட் பதும்அமையும் காணா நீத
நற்றுணையே அருள்தாயே இன்பமான
நாதாந்த பரம்பொருளே நார ணாதி
சுற்றமுமாய் நல்லன்பர் தமைச்சே யாகத்
தொழும்பு கொள்ளும் கனகனமே சோதிக்
குன்றே!

181. யாவரும் காணக் கூடாத சிறந்த நல்ல துணையே! அருளையுடைய தாயே! இன்பமான நாத தத்துவத்தின் முடிவில் உள்ள மேலான பொருளே! நாராயணன் முதலான தேவர் உறவினராயும் நல்ல உண்மை அன்பரை மக்களாகவும் அடிமை கொள்கின்ற மிக்க கனமுடைய பொருளே! பேரொளி மலையே! சிறந்த துணை நீயே அல்லாமல் ஆதாரமாய் வேறொன்றையும் எண்ணேன். பல நாளும் உலகில் ஓடியும் ஆடியும் கற்ற கல்வியும் கேட்ட கேள்வியும் ஆகியவையே இதற்குக் காரணமாகும். இனிக் கற்கப்படுவதும் கேட்கப்படுவதும் ஏதும் இல்லை; ஆதலால் இவையே போதும்.

182. நின்னை யார் அறிய வல்லார்?

குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி அறுசமயக் கூத்தும் ஆடி
நின்றாயே மாயையெனும் திரையை நீக்கி
நின்னையார் அறியவல்லார் நினைப்போர் [நெஞ்சம்
மன்றாக இன்பக்கூத் தாடவல்ல
மணியே என் கண்ணே மா மருந்தே நால்வர்க்கு
அன்றாலின் கீழ்இருந்து மோன ஞானம்
அமைத்த சின்முத் திரைக்கடலே அமரர்ஏறே!

182. உள்ளத்து அன்புடன் நினைப்பவரின் நெஞ்சினைச் சிற்றம்பலமாகக் கொண்டு திருக்கூத்தியற்றும்

மாணிக்க மணியே! என் கண் போன்றவனே! அமிழ்து போன்றவனே! சனகர் முதலான முனிவர் நால்வர்க்கும் முற்காலத்தில் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்து மோன ஞானத்தினை உணர்த்தின அறிவடையாள திருக்கையை யுடைய பெருங்கடலே! தேவர்களின் தலைவனே! குறை பாடில்லாத நான்முகன் திருமால் உருத்திரன் என்ற மூன்று வடிவங்களானாய்; அருவமானாய்; ஞானவடிவானாய்; அறு சமய கூத்தாடி நின்றாய்! இத்தகைய நின்னை, மாயை என்ற திரையை விலக்கி உணர வல்லவர் யார்?

183. சலனம் அகற்றிடு

திரையில்லாக் கடல்போலச் சலனம் தீர்ந்து
தெளிந்துருகும் பொன்போலச் செகத்தையெல்லாம்
கரையவே கனிந்துருக்கும் முகத்தி லேநீ
கனிந்தபர மானந்தக் கட்டி இந்நாள்
வரையிலே வரக்காணேன் என்னால் கட்டி
வார்த்தைசொன்னால் சுகம் வருமோ வஞ்சனேனை
இரையிலே இருத்தி நிருவிகற்ப மான
இன்பநிட்டை கொடுப்பதையா எந்த நாளோ.

183. அலை இல்லாத கடலைப் போன்று உலகியலில் மன அசைவு நீங்கித், தெளிவாய் உருகும் பொன்னைப் போன்று, உலகத்தையெல்லாம் இளகிக் கரைய உருக்கும் இடத்தே நன்கு உருகுகின்ற மேலான இன்பத்தைத் தரும் பொன் கட்டியாய் நீ விளங்குகின்றாய். ஆயின் இந்நாள் வரையும் என்பால் அருள் செய்ய வந்தாயல்லை! 'நானே உன்னைப்பற்றி ஏதேனும் ஒன்று கற்பித்துச் சொன்னால் எனக்கு இன்பம் வருமா? வஞ்சமுடைய என்னைச் சோற்றுத் துருத்தியான உடலில் இருத்தி விகற்பமில்லாத இன்பத்தைத் தருகின்ற நிட்டையை அளிப்பது எந்தக் காலமோ? ஐய, யான் அறியேன்!

184. நற்கதி எப்போது?

எந்தநாள் உனக்கடிமை யாகும் நாளோ
எந்நாளோ கதிவரும்நாள் எளிய னேன்றன்
சிந்தைநா ளிதுவரைக்கும் மயங்கிற் றல்லால்
தெளிந்ததுண்டோ மௌனியாய்த் தெளியஓர்
தந்தநாள் முதல்இன்பக் கால்சற் றல்லால் [சொல்
தடையறவா னந்தவெள்ளம் தானே பொங்கி
வந்தநாள் இல்லை மெத்த அலைந்தேன் உன்னை
மறவாவின் பத்தாலே வாழ்கின்றேனே.

184. இறைவ, உனக்கு அடிமையாகும் காலம் எந்தக் காலமோ? மேலான கதியானது வரும் காலம் எந்தக் காலமோ? எளியேனின் உள்ளமானது இதுவரை மயங்கி யதே அல்லாமல் தெளிவடைந்ததில்லை. மௌன குருவாய் வந்து என் உள்ளம் தெளிவடையும்படி ஒரு சொல்லைக் கூறியருளிய நாள் முதல் நின் திருவடி இன்பம் சிறிது உண் டானதேயல்லால், இன்பக் கடலானது தடையின்றித் தானே பெருகி வந்ததில்லை! ஆகவே, நான் மிகவும் வருந்தி னேன். அதனால் இறந்துமிருப்பேன். ஆயின், நின்னை மறவாத இன்பம் காரணமாக உயிருடன் வாழ்ந்து வரு கின்றேன்.

17. நினைவொன்று

('நினைவொன்று' என்ற தொடக்கத்துடன் இப்பகுதி யின் முதற் செய்யுள் தொடங்குவதால் இப்பெயர் பெற்றது. இப்பகுதியில் உள்ளவை ஒன்பது செய்யுட்கள்)

185. நெஞ்சே பற்றினை அகற்று!

நினைவொன்று நினையாமல் நிற்கினகம் என்பார்
நிற்குமிடமே அருளாம் நிட்டையருள் ஓட்டும்

தனைஎன்றும் மறந்திருப்ப அருள்வடிவா னதுமேல்
தட்டியெழுந் திருக்கும் இன்பம் தன்மயமே
அதுவாம்
பினையொன்றும் இலை அந்த இன்பமெனும் நிலையம்
பெற்றாரே பிறவாமை பெற்றார் மற்றுந்தான்
மனையென்றும் மகவென்றுஞ் சுற்றம்என்றும் அசுத்த
வாதனையாம் ஆசையொழி மன்ஒருசொல்
கொண்டே

185. சிவனை நினைப்பதன்றிப் பிற நினைவு ஒன்றும் இன்றி நிற்பின் அருளகமான இடம் என்பர். அந்நிலையில் மேலான நிட்டையானது வந்து கூடும். ஒருவன் என்றும் தன்னை மறந்திருப்பின் அங்கு அருள் வடிவானது மேல் தட்டி எழுந்திருக்கும். தன்மயமாய் இருப்பதே இன்பமாகும். வேறொன்றும் இல்லை. அந்த இன்ப நிலையை அடைந்தவரே பிறவாமை என்ற பெருஞ் செல்வத்தைப் பெற்றவர் ஆவார். மீண்டும் வீடு என்றும் மகவு என்றும் உறவினர் என்றும் கூறப்படும் அசுத்தவாசனை என்கின்ற பற்றை ஞானாசிரியனின் ஒரு சொல்லால் நீக்கிவிடுக.

186. ஒருமொழியே அனைத்தையும் ஒழிக்கும்

ஒருமொழியே பலமொழிக்கும் இடம்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலம்ஒழிக்கும் ஒழிக்கும் எனமொ
[ழிந்த
குருமொழியே மலைஇலக்கு மற்றைமொழி எல்லாம்
கோடின்றி வட்டாடல்கொள்வதொக்கும்கண்டாய்
கருமொழிஇங்கு உனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவும்
கண்டனை மேல்
தருமொழிஇங்கு உனக்கில்லை உன்னை விட்டு நீங்காத்
தற்பரமாய் ஆனந்தப் பொற்பொதுவாய் நில்லே.

186. "ஒப்பற்ற உறுதிச் சொல்லான 'சிவ சிவ' என்பதே ஒரு மொழியாகும். அந்த ஒரு மொழியே பல மொழிகளுக்கும் இடம் தரும். அந்த மொழியே மலப்பிணிப்பை ஒழிக்கும்; ஒழிக்கும்!" என்னும் குருவின் மொழியே மலைக் குறி போன்றதாகும். மற்ற மொழிகள் எல்லாம் அமைத்துக் கொள்ளப்பட்ட இடம் இல்லாது வட்டு என்ற ஆட்டத்தை ஆடியதைப் போன்றனவாகும். அந்த ஒரு மொழியை ஓதினால் இன்னும் ஓர் அன்னையின் கருப்பை உண்டாகாது. கணுவுக்குக் கணு இன்சுவை அளிக்கக்கூடிய கரும்பைப் போன்ற சொற்களைக் கொண்டு உன்னைக் காண்பிக்கவும் நீயும் கண்டு கொண்டனை! இங்ஙனம் ஆனபின் உனக்குப் போதிக்கக் கூடிய சொற்கள் இல்லை. எனவே, இனி உன்னைவிட்டு நீங்காத தற்பரமாகவும் இன்பப் பொன்னம் பலமாகவும் விளங்கும் சிவனடிக் கீழ் நிற்பாயாக!

187. கற்றதெல்லாம் மூடம்

நில்லாத ஆக்கைநிலை யன்றெனவே கண்டாய்
நேயவருள் மெய்யன்றோ நிலயமதா நிற்கக்
கல்லாதே ஏன்படித்தாய் கற்றதெல்லாம் மூடம்
கற்றதெல்லாம் மூடம்என்றே கண்டனையும் அல்லை.
சொல்லாலே பயனில்லை சொல்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி மர்க்கடம்போல் தொட்டதுபற் றாநில்.
எல்லாரும் அறிந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ
இராப்பகல்இல் லாஇடமே எமக்கிடம் என்று அறிந்தே.

187. நிலையாய் நில்லாத உடல் நிலையானதன்று என்று அறிந்தாய். எல்லா உயிர்களிடத்தும் திருவருள் நிலைத்து நிற்பது உண்மையன்றோ! அத்திருவருளே

இடமாகக் கொண்டு அதில் படிந்து நிற்கக் கல்லாது வேறான கல்விகளை ஏன் கற்றாய்? நீ கற்றவையெல்லாம் மூடத் தனத்துக்கே காரணமாகும். ஆயின் நீ கற்றவையெல்லாம் மூடத்தனமானவை என்று நீ அறிந்து கொள்ளவில்லை! சொற்களினால் பயன் இல்லை. சொற்களின் முடிவையே தொடர்ந்து பற்றி குரங்கின் பிடியினைப் போன்று பிடித் ததையே பற்றாகக் கொண்டு நிலைத்திடுக. அதன் பின்பு இரவு பகலற்ற இடமே எமக்கு இடமாவது என்று அறிந்து கொண்டு, அவ்வாறு அறிந்து கொண்ட அனுபவத்தை அனைவரும் அறிய நீ வாயான பறையைச் சாற்றித் தெரி விப்பாயாக!

188. பற்றின்மையின் மேன்மை

இடம்பொருள் ஏவலைக்குறித்து மடம்புகும் நாய்எனவே
எங்கேநீ அகப்பட்டாய் இங்கே நீ வாடா
மடம்பெறு பாழ் நெஞ்சாலே அஞ்சாதே நிராசை
மன்இடமே இடம் அந்த மாநிலத்தேபொருளும்
திடம்பெறவே நிற்கின்எல்லா உலகமும்வந் தேவல்
செய்யும் இந்த நிலைநின்றோர் செனகன்முதல் [முனிவர்
கடம் பெறுமா மதயானை என்னவும்நீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டவிழப் பாரே!

188. இடம் பொருள் ஏவல்களை அடைய விரும்பி மடத்துக்குள் புகும் நாயைப் போன்று நீ எங்கே சிக்கிக் கொண்டாய்! இங்கு வருவாயாக! அறியாமை மிக்கு ஆசை வயப்பட்டுத் துன்பப்பட்டு அலையும் பாழான நெஞ்சினால் சிறிதும் அஞ்சாதே! அவா இல்லாது நிலைத்த இடமே இடமாவது. அந்தப் பெரிய இடத்தில் சிவனடிப் பேறு எனப்படும் அழியாப் பெருஞ் செல்வமான பொருள் உள்ளது. அங்கு உறுதி பெற நிற்பாயாயின் எல்லா வுலகமும் வலிய

வந்து ஏவல் செய்யும். இந்நிலையில் வழுவாது நின்றவர் சனகர் முதலிய முனிவர் பலர் ஆவர். மதம் சொரியும் பெரிய யானையைப் போன்று நீ பாசப்பிணிப்பான விலங் கினுள் அகப்பட்டுள்ளாய். அப்பிணிப்பான கட்டு அவிழத் திருவருள் பார்த்தருளுக!

189. சஞ்சலம் வேண்டாம்

பாராதி அண்டமெலாம் படர்கானல் சலம்போல்
பார்த்தனையே முடிவில் நின்றுபார்எதுதான் நின்ற
தாராலும் அறியாத சத்தன்றோ அதுவாய்
அங்கிருநீஎங்கிருந்தும் அதுவாவை கண்டாய்
பூராய மாகவும்நீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியைநாட் டாதே
ஓராதே யொன்றையும்நீ முன்னிலைவை யாதே
உள்ளபடி முடியும்எலாம் உள்ளபடி காணே.

189. மண் முதலிய அண்டங்கள் எல்லாம் பரந்த கானல் நீரைப் போன்று பொய்யாக ஒழிவதைப் பார்த்தாய் அல்லையோ! எனவே உலகத்துப் பொருளை ஒவ்வொன் றாய்க் கழித்துப் பின் முடிவில் நின்று பார். அந்த இடத்தில் நின்றது எது? அது எவராலும் உணரப்படாத உண்மை பொருள் அன்றோ! நீ அந்தப் பொருளாகி அங்கு இருப் பாயாக!, அங்ஙனம் நீ இருந்தால், எங்கு இருந்தாலும் அந்தப் பொருளாய் விளங்குவாய். நீ ஆதி அந்தமாகவும் வேறொன்றை விவரித்துப் புலம்புதல் வேண்டா! பேரறிவைச் சலனத்தில் அழுத்தாதே! ஒன்றையும் நீ எதிரிட்டு உணராதே! ஒன்றையும் சான்றாய், வைக்காதே! எல்லாம் உள்ளவாறே முடியும். இஃது உண்மை!

190. சகம் பொய் எனக் கூறு!

உள்ளபடி என்னவும்நீ மற்றொன்றைத்
தொடர்ந்திட்டு
உளங்கருத வேண்டா நிட் களங்கமதி யாகிக்
கள்ளமனத் துறவைவிட் டெல் லாம்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பகல் அற்ற
வெள்ளவெளிக் கடல்மூழ்கி இன்பமயப் பொருளாய்
விரவி எடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வாய்
இன்றிக்
கொள்ளைகொண்ட கண்ணீரும் கம்பலையு மாகிக்
கும்பிட்டுச் சகம்பொய்யெனத் தம்பட்டம் அடியே!

190. உள்ளபடி முடியும் என்று நான் சொல்லவும் நீ அதை விடுத்து மற்றொன்றைப் பற்றிக் கொண்டு, உள்ளமே, நீ அதை எண்ணிக் கலக்கம் கொள்ளாதே! குற்றம் அற்ற அறிவை உடைத்தாகி, வஞ்ச மனத்துடன் கூடிய பொய்யான துறவைத் துறந்து உண்மையில் எல்லாவற்றையும் துறந்த உண்மையான துறவினர் கற்பித்த சொல்லின்படியே, இரவு பகல் இல்லாத திருவருள் வெளிக் கடலில் முழுகிப் பேரின்ப மயமான அம்மெய்ப்பொருளுள் அடங்கி அப்பொருளாகி நிற்றல் வேண்டும் என்று பலகால் எடுத்து எடுத்துக் கூறுதலுக்கும் வாயின்றி மிக்க கண்ணீரும் கம்பலையுமாகி இரண்டு கைகளையும் குவித்து உலகம் பொய் என்று பறையறைவாயாக!

191. ஒரு குறையும் இல்லை!

அடிமுடியும் நடுவும்அற்ற பரவெளிமேல் கொண்டால்
அத்துவித ஆனந்த சித்தமுண்டாம் நமது
குடிமுழுதும் பிழைக்கும்ஒரு குறையும் இல்லை எடுத்த

கோலம்எல்லாம் நன்றாகும் குறைவுநிறை வறவே
விடியும்உத யம்போல அருளுதயம் பெற்ற
வித்தகரோ டும்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதும் தந்தாலும் களியாப்
பாலருடன் உன்மத்தர் பசாசர்குணம் வருமே.

191. அடியும் முடியும் நடுவும் இல்லாத திருவருள் வெளியை மேற் கொண்டால் இறைவனுடன் இரண்டறக் கலந்து அனுபவித்தற்குரிய இன்பத்தையுடைய உள்ளம் உண்டாகும். அதனால் நம் குலம் முழுதும் நன்னெறி அடைதற்கு வழி யுண்டாகும். ஒரு குறை பாடும் உண்டா காது. மேற்கொண்ட கோலம் எல்லாம் நல்லதாகவே அமையும், தாழ்வு மிகுதிகள் நீங்க, விடியும் விடியற்காலை உதயத்தைப் போல் அருள் தோற்றத்தைத் தம்மிடம் கொண்ட ஞானியரோடும் சேர்ந்து மெய்ம்மையான இன்பத்தை அனுபவிக்கக் கூடும். மண் உலகம் முழுவதையும் விண்ணுலகம் முழுவதையும் அளித்தாலும் மகிழ்ச்சியடையாத சிறுவருடன், பித்தர், பேயால் பிடிக்கப்பட்டோர் ஆகியவர்க்கு உண்டாகும் குணங்கள் ஏற்படும்.

(சிறுவர் இயல்பு: பசித்த நேரத்தில் உண்பது; இனி உண்பதற்கு வேண்டுவன தேடாதிருத்தல்; பெற்றோர்க்கு உண்டாகும் நன்மையினால் தாம் மகிழாதிருத்தல்; இழப்பில் வருந்தாதிருத்தல். பித்தர் பண்பு: வைதவரையும் வாழ்த்தியவரையும் பிரித்து வேறுபடுத்தி நோக்காதிருத்தல், தம் உடலுக்கு வேண்டும் நலங்களை விரும்பாமை. பேய்பிடிக்கப் பட்டவர் பண்பு; பேயால் பிடிக்கப்பட்டவர் உடம்பில் காணப்படும் செயல்களும் சொற்களும் பேயின் செயலாவ தன்றி அவர் செயலாகாமை. இறைவன் திருவடிப் பேறு பெற்றவர் இம்மூன்று பண்புடன் விளங்குவர்.)

192. இன்ப வெள்ளம்

வரும் போம்என் பனவும்இன்றி என்றும்ஒருபடித்தாய்
வானாதி தத்துவத்தை வளைந்தருந்தி வெளியாம்
இரும்போ கல்லோ மரமோ என்னும்நெஞ்சைக்
கனல்மேல்
இட்டமெழு காஉருக்கும் இன்பவெள்ள மாகிக்
கரும்போ கண்டோ சீனி சருக்கரையோ தேனோ
கனிஅமிர்தோ எனருசிக்கும் கருத்தவிழ்ந்தோர்
உணர்வார்
அரும்போநன் மணம்காட்டும் காமரசம் கன்னி
அறிவாளோ அபக்குவர்க்கோ அந்நலந்தான்
விளங்கும்!

192. வருதலும் போதலும் ஆகியவை இல்லாமல் எக்காலத்தும் ஒரு வடிவான வான் முதலான தத்துவங்களையெல்லாம் வளைத்து உட்கொண்டு தான் மேலாகப் புறப்படும் மனம், வன்மை காரணமாய், இரும்போ கல்லோ பட்ட மரமோ என்று கூறும்படியாய் இளகாது உள்ளது. இத்தகைய மனத்தைத் தீயில் இட்ட மெழுகாக உருக்கும் இன்ப வெள்ளமாகி, இனிமையால் கரும்பின் சாறோ, கற்கண்டோ, சீனிச் சருக்கரையோ, தேனோ, முக்கனிகளோ, அமிழ்தமோ என்று கூறுமாறு சுவைக்கும். அதை மனமாரப் பெற்றவர் அறிவர்; மலர் அரும்போ நல்ல மணத்தைத் தரும்? கன்னியானவள் காமச்சுவையின்பத்தை அறிவாளோ? அந்தத் திருவடிப் பேரின்பம் பக்குவம் அற்றவர்க்கோ விளங்கிடும்!

193. குரு அருளே அருள்

தானேயும் இவ்வுலகம் ஒருமுதலு மாகாத்
தன்மையினால் படைத்தளிக்கும் தலைமையது
வான

கோனாக ஒருமுதல்இங் குண்டெனவும் யூகம்
கூட்டியதும் சகமுடிவில் குலவுறுமெய்ஞ் ஞான
வானாக அம்முதலே நிற்கும்நிலை நம்மால்
மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததும்உன் மனமே
ஆனாலும் மனம்சடம் என்று அழுங்காதே உண்மை
அறிவித்த இடம்குருவாம் அருள்அலதொன்
றிலையே.

193. இந்தவுலகம் தானே ஒரு முதற்பொருள் ஆகாத தன்மையினால் இதைப் படைத்துக் காக்கின்ற தலைமைத் தன்மையுடைய இறைவனாக ஒரு முதற்பொருள் இங்கு உண்டு என்னும் அறிவை உண்டாக்கினதும், உலக முடிவில் விளங்கும் உண்மையான அறிவு வெளியாக அந்த முதற் பொருள் நிற்கும் நிலையானது நம்மால் மதிப்பிட்டுக் கூறுவது அரிதாகும். எனவே, இவ்வாறு எண்ணி மௌன நிலையை அமைத்ததும் உன் உள்ளமே! ஆயினும் அந்த உள்ளமானது சடம் (அறிவற்றது) என்று வருத்தம் கொள் ளாதே! உண்மையை உணர்த்திட இடமாய் நின்ற அதுவே ஆசானாகும்! அருள் இல்லாதது ஒரு பொருளும் இல்லை!

18. பொன்னை மாதரை

(இப்பகுதியின் முதற் செய்யுளின் தொடக்கம் பொன்னை மாதரை' எனத் தொடங்குகிறது. ஆதலால், இப்பகுதி 'பொன்னை மாதரை' எனப் பெயர் பெற்றது. இப்பகுதியில் உள்ளவை எழுபத்தெட்டு செய்யுட்கள்.)

194. மூவாசை வேண்டேன்

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய என்உயிர் நாதனே
உன்னை நாடுவன் உன்னருள் தூவெளி
தன்னை நாடுவன் தன்னந் தனியனே.

194. பொருளையும் மங்கையரையும் நிலத்தையும் விரும்ப மாட்டேன். என்னை விரும்பிய உயிர்த்தலைவ! நான் நின்னை விரும்புவேன். நினது அருளான தூய வெளியினை தனியனான நான் விரும்புவேன்.

195. எல்லாம் நினக்கே

தன்ன தென்றுரை சாற்று வனஎலாம்
நின்னது என்றனை நின்னிடத் தேதந்தேன்
இன்னம் என்னை இடருற கூட்டினால்
பின்னை உய்கிலன் பேதையன் ஆவியே.

195. உலகத்தவர் ஒவ்வொருவராலும் தம்முடையவை என்று சொல்லால் சொல்லப்பட்டவை எல்லாம், ஆசானாய் வந்து அவை நின்னுடையவை என்று எனக்கு அறிவுறுத்தினாய். அதன் பின்பு அவையெல்லாம் நின்னுடையவை என்பதால் அவற்றை நின்னிடமே ஒப்படைத்தேன். இன்னமும் என்னைப் பிறவிக் கடலில் வீழ்த்தித் துன்பம் அடையச் செய்தால், அறிவற்றவனான நான் உயிர் பிழைக்க மாட்டேன்.

196. பாவியை ஆட்கொள்க!

ஆவி யே உனை யான்அறி வாய்நின்று
சேவி யேன் கள்ளச் சிந்தை திறைகொடேன்
பாவி யேனுளப் பான்மையைக் கண்டுநீ
கூவி ஆவி எனை ஆட்கொண்ட கோலமே!

196. என்னை அடிமையாய்க் கொண்ட எம் இறையே! என் உயிரே! அறிவிற்கு அறிவாய் விளங்கும் நின்னை நான் அறிவு வடிவாய் நின்று வணங்கேன். வஞ்சமுடைய என் உள்ளத்தை நின் திருவடிகளுக்குத் திறைப் பொருளாகவும் ஒப்படைக்க மாட்டேன். பாவியேனான என்னை அழைத்து ஆட்கொள்ளுதல் வேண்டும்.

197. சீலம் இன்றி உய்தி இல்லை!

கோலம்இன்றிக் குணம்இன்றி நின்அருள்
சீல மின்றிச் சிறியன் பிழைப்பனோ
ஆலம் உண்டும் அமிர்துரு வாய்வந்த
காலம் எந்தை கதிநிலை காண்பதே.

197. என் தந்தையே! நீ ஆலகால நஞ்சினை உண்டாலும் அமிழ்து வடிவாய் விளங்கினை! அக்காலத்தில் நின் பெருநிலையைக் கண்டபின்பும் நின்னுடைய வெண்ணீறு உருத்திராக்கம் முதலான சின்னங்களை அணியாமலும், அவற்றை அணியத்தக்க குணங்கள் இல்லாமலும், நின்னை அடைவதற்குரிய நல்லொழுக்கம் இல்லாமலும் சிறியவனான நான் உயிர் பிழைப்பது எங்ஙனம்?

198. கண்ணிற் கலந்த கண்ணே!

காணும் கண்ணிற் கலந்தகண் ணே உனைச்
சேணும் பாரும் திரிபவர் காண்பரோ
ஆணும் பெண்ணும் அதுஎனும் பான்மையும்
பூணும் கோலம் பொருந்தியுள் நிற்கவே.

198. பார்த்தற்குரிய அறிவுக் கண்ணினுள் கலந்துள்ள என் கண்மணியே! நீ 'ஆண், பெண், அது' என்ற பொருள்களுடன் கலப்பால் ஒன்றாய் அக் கோலங்களுடன் உள்முகமாக நின்றாய். அத்தகைய உன்னை தொலைவான வானில் ;நான்முகனும் நிலத்தில் திருமாலும் வெளியில் தேடித் திரிந்து காணும் வல்லமை உடையவரோ?

199. எக்குணம் கண்டு என்ன பெயர் வைப்பது?

நிற்கும் நன்னிலை நிற்கப்பெற் றார் அருள்
வர்க்க மன்றி மனிதர்அன் றே ஐயா

துர்க்கு ணக்கடல் சோங்கன்ன பாவியேற்கு
எக்கு ணங்கள்கண் டென்பெயர் சொல்வதே?

199. நிற்றற்குரிய திருவருள் நிலையில் அமைந்து நின்றவர்கள் அருள் இனத்தவர் என்று சொல்லப்படுபவர். அவர் மனிதர் அல்லரே! தீய குணம் என்ற கடலில் சிக்கிய மரக்கலத்தைப் போன்ற பாவியேனுக்கு என்ன குணத்தைப் பார்த்து என்ன பெயரை இட்டு, அழைப்பது?

(சோங்கு — மரக்கலம்)

200. விரைவாக அழைத்திடுக!

சொல்லை உன்னித் துடித்தல லால் அருள்
எல்லை யன்னி எனை யங்கு வைத்திலேன்
வல்லை நீஎன்னை வாஎன் றிடாவிடின்
கல்லை யாம்இக் கருமி நடக்கையே.

200. நீ கூறிய சொல்லை எண்ணிப் பதைத்ததே அல்லாது உன் அருளின் எல்லையை நினைத்து என்னை அங்கு அமைத்திலேன். விரைவில் நீ என்னை வா என்று அழைக்காது போனால், இந்தத் தீயவனின் நடைமுறைகள் பிணக்கமாய்ப் பொய்யாய் விடும். (கல்லை — பிணக்கு; பொய்)

201. மெய் இன்பம்

கையும் மெய்யும் கருத்துக் கிசையவே
ஐய தந்ததற் கையம் இனியுண்டோ
பொய்யன் என்சிந்தைப் பொய்கெடப் பூரண
மெய்ய தாம்இன்பம் என்று விளைவதே?

201. ஐயனே! என் நினைவிற்கு ஏற்பவே கைகளையும் உடலையும் எனக்கு நீ அளித்தாய். இதில் ஐயம் கொள்வதற்குச் சிறிதும் இடம் இல்லை. பொய்யனான என்

மனத்தில் உள்ள பொய்யானது அழிந்திட நிறைவான உண்மையான இன்பம் என் மனத்தில் எக்காலத்தில் உண்டாவது?

202. இதய வெளிக்குள் சிக்கெனப் பிடித்தேன்!

என்றும் உன்னை யிதய வெளிக்குளே
துன்ற வைத்தன னே அருட் சோதிநீ
நின்ற தன்மை நிலைக்கென்னை நேர்மையாம்
நன்று தீதற வைத்த நடுவதே!

202. அருள் பேரொளியே! நன்மை தீமைகள் இல்லாது நீங்கிட என்னை நின் திருவருள் நிலையில் அமைத்து வைத்த ஐந்தொழிலுக்குப் பொதுவாய் நிற்கும் பொருளே! எக்காலத்தும் உன்னை என் உள்ளம் என்ற வெளிக்குள் பொருந்த வைத்தேன். நீ என் உள்ளத்தில் நின்ற தன்மையான நிலைக்கு எது ஒப்பாகும்?

203. திடம் இலேன்!

வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்தன் நானருள் பெற்றும் திடமிலேன்
சித்த மோன சிவ சின்ம யானந்தம்
வைத்த ஐய அருட்செம்பொன் சோதியே!

203. கைகூடிய மோன நிலையை அருளிய மங்கலமான அறிவின்பத்தை எனக்கு அருளிய ஐயனே! அருள் செம்பொன் பேரொளியே! எனக்கு நின்னால் வைக்கப்பட்ட உடல் வருந்துவதனால் நான் வருந்துகின்றேன். இத்தகைய பித்தனான நான் நின் திருவருளைப் பெற்றும் உறுதியில் லாதவனாக உள்ளேன்.

(உயிர், உடல் வருந்த வருந்தும். ஆயின் உண்மை உணர்ந்தார் வருந்தார். நான் வருந் துகின்றேன். நின் திருவருள் பெற்ற பின்னும் வருந்துவதால் நான் திடமற் றவன் என்றார்.)

204. இம்பர் வாழ்வை விரும்பினேன்!

செம்பொன் மேனிச் செழுஞ்சுட ரே முழு
வம்ப னேன்உனை வாழ்த்தும் மதியின்றி
இம்பர் வாழ்வினுக்கு இச்சைவைத் தேன்மனம்
'நம்பி வா' எனில் நான்என்கொல் செய்வதே?

204. செம்பொன்னால் ஆன மேனியையுடைய செழுமையான ஒளியே! முற்றும் தீயவனான யான் உன்னை வணங்குதற்குரிய அறிவு இல்லாது, இவ்வுலக வாழ்க்கையின் பொருட்டு உள்ளம் கொண்டேன். என்னை நீ, "நம்பியே, வா!" என்று அழைக்காது போனால் நான் செய்வது யாது?

(என்னை வலிய வந்து ஆட்கொண்டால், உன்னை அப்போது வாழ்த்தாமல் உரிமை பாராட்டி வருவனோ என்பது உள்ளக்கிடக்கை)

205. பொய்யிலே சுழன்றேன்!

செய்யும் செய்கையும் சிந்திக்கும் சிந்தையும்
ஐய நின்னஎன்று எண்ணும் அறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யி லேசுழன் றேன் என்ன புன்மையே!

205. ஐயனே! செய்யும் செயலும் எண்ணும் எண்ணமும் உன்னுடையவை என நினைக்கின்ற பேரறி வின்றிக் கொடிய காம வெகுளி மயக்கம் என்ற பொய் நடையிலே உழன்றேன். இஃது என்ன இழிவான செயல்!

206. துன்பமே அன்றிச் சுகம் இல்லை!

புன்பு லால்நரம் பென்புடைப் பொய்யுடல்
அன்பர் யார்க்கும் அருவருப்பு அல்லவோ
என்பொ லாமணியே இறையே இத்தால்
துன்ப மன்றிச் சுகம்ஒன்றும் இல்லையே?

206. என் தொளை செய்யப்படாத மணியே! இறையே! அற்பமான ஊனையும் நரம்பையும் எலும்பையும் உடைய பொய்யுடல், இறைவன் அடியார்க்கெல்லாம் அருவருப்புத் தரக்கூடியதன்றோ! இத்தகைய இந்த உடலால் துன்பமே அல்லாமல் இன்பம் சிறிதும் இல்லை.

(பொலா — தொளைக்கப்படாத)

207. வாதிட மாட்டேன்

இல்லை உண்டென்று எவர்பக்க மாயினும்
சொல்ல வோஅறி யாத தொழும்பன்யான்
சொல்ல வேறொரு திக்கறி யேன் எலாம்
வல்ல நீஎனை வாழ்விக்க வேண்டுமே.

207. இல்லை என்றும் உண்டு என்றும் எவரிடத்தும் போய்ச் சொல்ல அறியாத அடியவன் நான்; செல்ல வேறு ஒரு கதியை அறிய மாட்டேன்; எல்லாம் செய்ய வல்ல வனான நீ என்னை வாழ்வித்தருள வேண்டும்.

208. அன்பர்க்கு அன்பன்

வேண்டும் சீர்அருள் மெய்யன்பர்க் கேஅன்பு
பூண்ட நான்என் புலமறி யாததோ
ஆண்டநீஉன் அடியவன் நான்என்று
தூண்டு வேனன்றித் தொண்டன்என் சொல்வதே?

208. இறைவ! சிறந்த உன் அருளானது என்னால் விரும்பப்படும். உன் உண்மை யடியார்க்கு அடிமை

பூண்டவன் நான். என் உள்ளம் அறியாமல் புகுந்து என்னை ஆட்கொண்டாய்.யான் நின் தொண்டன் என்று தூண்டுவது ஒன்றன்றி வேறு என்ன செய்வது?

20). மனத்துயரை மாற்றுக

எனக்கு ளேஉயிர் என்ன இருந்தநீ
மனக்கி லேசத்தை மாற்றல் வழக்கன்றோ
கனத்த சீரருள் காட்சிஅ லால்ஒன்றை
நினைக்க வோஅறி யாதென்றன் நெஞ்சமே.

209. என் உள்ளத்தில் உயிர் என்று கூறும் படியாய் இருந்த நீ, இந்த உள்ளத்தில் உண்டாகும் துன்பத்தை மாற்ற வேண்டியது நின் கடமையன்றோ! மேலான சிறப்புப் பொருந்திய திருவருள் காட்சியை யல்லாமல் வேறொன்றை எண்ணவோ என் உள்ளமானது அறியாது.

210. சரண்

நெஞ்சு கந்துனை நேசித்த மார்க்கண்டர்க்கு
அஞ்சல் என்ற அருளறிந்தே ஐயா
தஞ்சம் என்றுன் சரணடைந் தேன் எங்கும்
செஞ்செ வேநின்ற சிற்சுக வாரியே!

210. எங்கும் நன்கு நீக்கம் இல்லாத நிறைந்த அறிவின்பக் கடலே! ஐயா! உள்ளம் விரும்பி உன்னை விரும்பி அன்பு பூண்ட மார்க்கண்டேய முனிவர்க்கு அஞ்சாதே என்று திருவருளைத் தேர்ந்து அருளினாய். அவ்வாறு அருளிய நின்னை அடைக்கலம் என்று நின் திருவடிகளில் சரண் அடைந்தேன்.

211. எனை ஆண்ட ஒருவனே!

வாரி ஏழும் மலையும் பிறவுந்தான்
சீரி தானநின் சின்மயத் தேஎன்றால்

ஆரிலே உளது ஆவித்திரள் அதை
ஓரிலேன் எனை ஆண்ட ஒருவனே!

211. என்னை ஆட்கொண்ட ஒப்பற்றவனே! ஏழு கடல்களும் எட்டு மலைகளும் மற்றும் உள்ளவையும் நின் திருவருள் வெளியில் நிலைத்திருப்பன. அங்ஙனமாயின் அரிய உயிர்க் கூட்டம் ஒன்றை யல்லாது எவரிடத்து நிலைத்து நிற்கும்? இந்த வுண்மையை நான் அறியேன்.

212. நீரே அருள்வீர்

ஒருவர் என்உளத் துள்குங் குறிப்பறிந்து
அருள்வ ரோஎனை ஆளுடை அண்ணலே
மருள னேன்பட்ட வாதை விரிக்கினோ
பெருகும் நாள் இனிப் பேச விதியின்றே.

212. என்னை ஆட்கொண்டஅண்ணலே! உன்னையே அல்லாது வேறொருவர் என் உள்ளத்தில் நினைப்பனவற்றை அறிந்து அதற்குத் தக்கவாறு அருள் செய்வாரோ? மயக்குடைய யான் அந்த மயக்கத்தால் படும் துன்பத்தை விரிவாகக் கூறப் புகுந்தால் ஒரு நாள் இருநாள் அல்ல; பல நாட்களாகும். அதனால் அதைப் பற்றிப்பேச விதியில்லை.

213. நின்னை வேண்டுகிறேன்

இன்று னக்கன்பு இழைத்திலன் நான்என்றே
அன்று தொட்டெனை ஆளர சேஎன்று
நின்ற ரற்றிய நீலனைக் கைவிட்டால்
மன்றம் எப்படி நின்னருள் வாழ்த்துமே?

213. இப்போது மட்டும் நான் நினக்கு அன்பு செலுத்திலேன்; அன்று (பண்டு) தொடங்கி, 'இறைவ, என்னை ஆள்வாய்!' என்று நின்று அழுத வஞ்சகனான என்னைக் கைநெகிழ விடுவாயாயின், இவ்வுலகமானது நின்னருளை எவ்வாறு வாழ்த்தித் துதிக்கும்?

214. உன்னையன்றி கதியில்லை!

வாழ்த்தும் நின்னருள் வாரம்வைத் தாலன்றிப்
பாழ்த்த சிந்தைப் பதகனும் உய்வனோ
சூழ்த்து நின்ற தொழும்பரை ஆனந்தத்து
ஆழ்த்தும் முக்கண் அருட்செம்பொன் சோதியே!

214. (நின்னைக்) கூடி நின்ற அடியவரை இன்பத்தில் முழுகச் செய்கின்ற மூன்று கண்களையும் அருளையும் உடைய செம்பொன் போன்ற ஒளியுடையவனே! எல்லாரும் வாழ்த்துவதற்குரிய நின் திருவருளானது என் மீது அன்பு வைத்தால் அன்றிப் பாழான மனமுடைய பாவியான யானும் பிழைப்பேனோ!

215. உன்னை அடைந்தேன்

சோதியே சுடரே சுகமே துணை
நீதியே நிசமே நிறைவே நிலை
ஆதியே உனை யான்அடைந் தேன் அகம்
வாதி யாதருள் வாய்அருள் வானையே.

215. பேரொளியே! நிறைந்த சுடரே! இன்பமே! துணையாக நிற்கின்ற அறமே! உண்மைப் பொருளே! எங்கும் பிரிவின்றி நிறைந்துள்ள பொருளே! உலகமெல்லாம் நிலைத்திருப்பதற்குக் காரணமான பழம் பொருளே! நின் திருவடியை யான் அடைந்தேன். என் உள்ளம் வருத்தம் அடையாத வண்ணம் நின் திருவருட் பெருவெளியை அருள்வாயாக!

216. ஞானத் தெய்வம் துணை செய்யும்

வானைப் போல வளைந்துகொண்டு ஆனந்தத்
தேனைத் தந்தெனைச் சேர்ந்துக லந்தமெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவன் நான்என்னும்
ஈனப் பாழ்கெட என்றும் இருப்பனே.

216. மேகத்தைப் போன்று என்னை முழுவதும் வளைந்து கொண்டு இன்பமயமான தேனைச் சொரிந்து என்னைப் பிரிவின்றிக் கலந்து உண்மையான ஞானத்தை அளிக்கின்ற இறைவனை நான் நாடித் துதிப்பேன். அதனால் 'யான்' என்று எண்ணும் இழிவான பாழ்நெறியழிய எக்காலத்தும் நான் வாழ்ந்திருப்பேன்.

217. அருள் செய்வாயாக!

இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமல் திருவடிக்
கரும்பைத் தந்து கண் ணீர்கம் பலையெலாம்
அரும்பச் செய் என தன்னையொப் பாமனே!

217. என் தாய் போன்ற இறைவனே! உலகத்தில் காந்தக் கல்லானது இரும்பினைக் கவர்வதைப் போன்று என்னை மீண்டும் பிறவியினைத் திரும்பிப் பார்க்க ஒட்டாது நின் திருவடியான கரும்பைத் தந்து கண்ணீரும் உடல் நடுக்கமும் ஆகிய அடியார்க்குரிய இலக்கணம் எல்லாம் என்னிடத்தே உண்டாகிடச் செய்வாய்!

218. என்னை இன்பத்துள் ஆழ்த்திய ஞானச்சுடர்

அன்னை அப்பன்என் ஆவித் துணையெனும்
தன்னை ஒப்பற்ற சற்குரு என்பதேன்
என்னைப் பூரண இன்ப வெளிக்குளே
துன்ன வைத்த சுடரெனத் தக்கதே.

218. என்னை ஆட்கொண்ட இறைவனை, தாய், தந்தை, தங்கும் உயிர்த்துணை, தனக்குத் தானே நிகரான தனிக்குரு என்று கூறுவது ஏன்? என்னை எங்கும் நிறைந்த பேரின்ப வெளிக்குள்ளே பொருந்துமாறு செய்தருளிய பெருஞ்சுடராம் என்று கூறுவதே தக்கதாகும்.

219. எங்கும் நிறைவானது!

தக்க வேள்வியில் சார்ந்தநற் பூமியின்
மிக்க தாக விளங்கு முதல் ஒன்றே
எக்க ணும்தொழ யாவையும் பூத்துக்காய்த்து
ஒக்க நின்றும்ஒன் றாய்நிறை வானதே.

219. தகுந்த கேள்வி என்னும் பெயரினால் பொருந்திய நல்ல பூமியில், மேம்பட்டு விளங்கும் விதை ஒன்று மட்டுமே, எத்திசையும் வணங்க எல்லாவற்றையும் பூத்துக் காய்த்து, (அவற்றுடன் தனித்தனியே) கூடி நின்றும், ஒரு பொருளாகி எல்லாவற்றிலும் அகம் புறம் என்று கூறாத படி நிறைவாய் விளங்கியது.

220. ஞான நாதனை நாடுவேன்

ஆன மான சமயங்கள் ஆறுக்கும்
தான மாய்நின்று தன்மயம் காட்டிய
ஞான பூரண நாதனை நாடியே
தீன னேன்இன்பம் தேக்கித் திளைப்பனே.

220. இவ்வுலகத்தில் உண்டாகிய பெருமையுடைய ஆறு சமயங்களுக்கும் இடமாய் நின்று, தன் மெய்ம்மை நிலையைக் காட்டியருளிய ஞான நிறைவுள்ள இறைவனை நாடி எளியேன் பேரின்பம் நிறையப் பெற்றுப் பூரணமாய் அனுபவிப்பேன்.

221. இன்பம் திளைக்க!

தேக்கி இன்பம் திளைக்கத் திளைக்கவே
ஆக்க மாய்எனக்கு ஆனந்த மாகியே
போக்கி னோடு வரவற்ற பூரணம்
தாக்கி நின்றவா தன்மய மாமதே.

221. இன்பத்தை முழுமையாய் அடைந்து அனுபவிக்குந்தோறும் பெருகி விருத்தியடைந்து எனக்குப் பேரின்பமாய்ப், போக்கும் வரவும் அற்ற பொருளானது வந்து, மேலிட்டு நின்ற நிலையை என்னென்பேன்! அதுவே இறைவனின் மெய்ம்மை நிலையாகும்.

222. என் என்றென்று இறைஞ்சுவேன்!

அதுஎன்று உன்னும் அதுவும் அறநின்ற
முதிய ஞானிகள் மோனப் பொருளது
எதுஎன் றெண்ணி யிறைஞ்சுவன் ஏழையேன்
மதியுள் நின்றின்ப வாரி வழங்குமே.

222. 'அது' என்று நினைக்கும் நினைவும் இல்லாமல் நின்ற முதிர்ந்த ஞானிகளின் மோன நிலையினால் கிட்டும் பொருளான அது எது என்று கருதி வணங்குவேன்?'' அது எளியேனின் மனத்துள் நின்று இன்பவெள்ளத்தை வழங்கும்.

223. ஊமன் கண்ட கனவு

வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்
பாரில் கண்டவை யாவும் பருகினை
ஓரிற் கண்டிடும் ஊமன் கனவென
யாருக் கும்சொல வாயிலை ஐயனே!

223. இறைவனே! என்னை வாரி எடுத்துத் தன்னுள் அடக்கிக் கொண்டனை! பேரின்பமாய் இவ்வுலகத்தில் காணப்படும் பொருள் யாவும் தனக்குள் அடங்க விழுங்கி விட்டாய், ஆராயுமிடத்து ஊமன் காணும் கனவைப்போல் எவருடனும் கூறுவதற்கு வாய் இல்லை.

224. வேறு புகலிடம் ஏது?

ஐயம் அற்ற அதிவரு ணர்க்கெலாம்
கையில் ஆமல கக்கனி ஆகிய

மெய்ய னே இந்த மேநிலி மீதுழல்
பொய்ய னேற்குப் புகலிடம் எங்ஙனே?

224. ஐயம் நீங்கிய சாதிகுலம் என்பனவற்றுக்கு அப்பாற்பட்ட ஞானியர்க்கு எல்லாம் கையில் உள்ள நெல்லிக் கனியைப் போன்ற மெய்ம்மையானவனே! இந்த வுலகத்தின் மீது உழல்கின்ற பொய்யான எனக்கு அடைக் கலமாய் அடையும் இடம் எங்கு?

225. எங்ஙனம் உய்வேன்?

எங்ங னேஉய்ய யான்எனது என்பதற்று
அங்ங னேஉன் அருள்மய மாகிலேன்
திங்கள் பாதி திகழப் பணியணி
கங்கை வார்சடைக் கண்ணுதல் எந்தையே!

225. பிறைச்சந்திரன் விளங்கப் பாம்பை அணிந்த கங்கையாறு தங்கப் பெற்ற சடையையுடைய நெற்றிக் கண்ணையுடைய என் தந்தையே! யான் என்பதும் எனது என்பதும் ஆகிய அகங்கார மமகாரங்கள் என்னைவிட்டு நீங்கவில்லை. இங்ஙனம் நீங்கிய அவ்விடத்தில் உன் திருவருள் மயமாகவில்லை! இனி எவ்வாறு நான் உய்வேன்?

226. யாவும் நின் அருள்!

கண்ணில் காண்பதுன் காட்சி கையால் தொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொடு ஐந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேஉன் அருள்வடி வாகுமே.

226. மண் முதலான ஐந்து பூதங்களும் வழங்கும் உயிர் யாவும், பெரியோனே, உன் அருள் வடிவமாகும். நான்

கண்ணால் பார்ப்பது உன் தோற்றத்தையே! என் கைகளால் செயல் செய்வது நின் பூசையையேயாகும். என் நாவால் கூறுவது உன் திருவைந்தெழுத்தான மந்திரத்தையேயாகும்.

227. தந்தையே காண வல்லேனோ?

வடிவெ லாம்நின் வடிவென வாழ்த்திடாக்
கடிய னேனும்உன் காரணம் காண்பனோ?
நெடிய வானென எங்கும் நிறைந்தொளிர்
அடிகளே அரசே அருள் அத்தனே!

227. பெரிய வானத்தைப் போல எங்கும் நிறைந்து விளங்கும் தலைவ! இறைவ! அருளுடைய தந்தையே! காணப்படும் வடிவங்கள் யாவும் நின் வடிவம் என்று வாழ்த்தி வழிபடாத கொடிய யானும் நின் முதன்மையைக் காணவல்லேனோ!

228. உன்னை அறிவதே கல்வி

அத்த னே அகண் டானந்த னே அருள்
சுத்த னே என உன்னைத் தொடர்ந்திலேன்
மத்த னேன்பெறு மாமலம் மாயவான்
கத்த னேகல்வியாதது கற்கவே.

228. 'தந்தையே' எங்கும் பரந்த இன்பமானவனே! அருளுடைய தூய்மையானவனே!' என்று நின்னைப் புகழ்ந்து தொடர்ந்திலேன். உன்மத்தனான (பெரும்பித்தனான) நான் பெற்றிருக்கும் பெரிய மலங்கள் அழியும்படி முடிவிலாற்றலையுடைய முழுமுதல்வனே! நான் கற்றற்குரிய கல்வி யாது?

(கத்தன் — கருத்தன்)

229. கற்றதன் பயன் நின்னைத் தொழுவதே!

கற்றும் என்பலன் கற்றிடும் நூன்முறை
சொற்ற சொற்கள் சுகாரம்ப மோநெறி
நிற்றல் வேண்டும் நிருவிகற் பச்சுகம்
பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே!

229. வேறுபாடு நீங்கிய சமாதி இன்பத்தைப் பெற்றவர் அனுபவித்த பேசுதற்கு இயலாத பெரும் பொருளே! கற்க வேண்டிய பல நூல்களைக் கற்றும் என்ன பயன்? அந்த நூல்களில் சொன்ன சொற்களால் பேரின்பத் தோற்றம் உண்டாகுமோ? அவை உரைக்கும் நெறியில் உறுதியாய் நிற்றல் வேண்டும்.

230. பேரொளியே, அருள்க!

பெருமைக் கேஇறு மாந்து பிதற்றிய
கருமிக்குஐய கதியும்உண் டாம்கொலோ
அருமைச் சீர்அன்பர்க்கு அன்னைஒப் பாகவே
வருமப் பேரொளியே உன்ம னாந்தமே.

230 அரிய சிறப்புடைய அன்பர்களுக்கு, அன்னைக்கு நிகராய் வருகின்ற அந்தப் பெரிய ஒளியே! 'உன்மனை ஆற்றலின்" முடிவான இடமே! பெருமையின் பொருட்டே இறுமாந்து பிதற்றிய தீவினையேனுக்கு, ஐயனே! நல்ல கதி ஒன்றும் உண்டாகுமோ?

[உன்மனை (சத்தி) — இது சாந்தியதீதை எனப்படும். இது ஒடுங்கும் இடம் சிவதாக்கியம். இது கருவி காரணங்களின் செயல் ஒடுங்கிய நுட்பமான அளவுக்கடங்காத பேரொளிப் பிழம்பாய் நினைக்கும் உணர்வின் அளவாக எங்கும் விளங்குவது.]

231. கல் மனத்தைக் கரைத்திடுக!

உன்ம னிக்குள் ஒளிர்பரஞ் சோதியாம்
சின்ம யப்பொரு ளேபழஞ் செல்வமே
புன்ம லத்துப் புழுவன்ன பாவியேன்
கன்ம னத்தைக் கரைக்கக் கடவையே.

வி

231. உன்மனி ஆற்றலுக்குள் விளங்குகின்ற பேரொ யான அறிவு வடிவப் பொருளே! தொன்மையான அழிவில் லாத செல்வமே! இழிவான மலத்தில் உள்ள புழுவினைப் போன்ற தீவினையேனின் கல்லை விடக் கடுமையான உள்ளத்தை உருக்குவது நின் கடமையாகும்.

(உன்மனி — நிராதாரத்தால் துதிக் கப்படும் சத்தி)

232. உண்மையாகத் தொழ வேண்டும்

கரையில் இன்பக் கடல்அமு தேயிது
வரையில் நானுனை வந்து கலந்திலேன்
உரையி லாஇன்பம் உள்ளவர் போலவித்
தரையி லேநடித் தேன்என் ன தன்மையே!

232. அளவில்லாத இன்பக் கடலில் உண்டான அமிழ்தமே! இந்நாள் வரை நின்னை வந்து நான் சேர வில்லை. பேச்சிறந்த இன்பத்தை அடைந்தவரைப் போன்று இவ் வுலகத்தில் நடித்தேன். இஃது என்ன தன்மையுடை குணம்?

233. ஐயனே! என்னை ஆட்கொள்வாய்

மையு லாம்விழி மாதர்கள் தோதகப்
பொய்யில் ஆழும் புலையினிப் பூரைகாண்
கைபல் ஆமல கக்கனி போன்ற என்
ஐயனே எனை யாளுடை அண்ணலே!

233. மை பூசப்பட்ட கண்களையுடைய மங்கையரின் வஞ்சத்துடன் கூடிய பொய்யான இன்பத்தில் ஆழுகின்ற நீசத் தன்மை இனிப்போதும். உள்ளங்கை நெல்லிக் கனியைப் போன்ற எம் தந்தையே! என்னை ஆட்கொண்ட பெரிய வனே!

(பூரை — நிறைவு; போதும். தோதகம் — வஞ்சனை)

234. உய்தி பெறுவேன்

அண்ண லேயுன் அடியவர் போல்அருள்
கண்ணி னால் உனைக் காணவும் வாஎனப்
பண்ணி னால்என் பசுத்துவம் போய்உய்யும்
வண்ண மாக மனோலயம் வாய்க்குமே.

234. பெருமையுடையவனே! என்னை நின் மெய்யடி யாரைப் போன்று பாவித்து நின் திருவருளான கண்ணினால் நின் திருவடிகளைக் காணும்படி 'வருவாயாக' என்று பணித் தாயானால், எளியேனின் பசுத்தன்மை (உயிர்த் தன்மை) என்பது நீங்கிவிடும். உய்யும்படியாக உள்ளத்தின் ஒடுக்கம் எனக்கு வந்து வாய்க்கும்.

235. பயனில பேசேன்

வாய்க்கும் கைக்கும் மௌனம் மௌனம்என்று
ஏய்க்குஞ் சொற்கொண் டிராப்பகல் அற்றிடா
நாய்க்கும் இன்பம்உண் டோநல் லடியரைத்
தோய்க்கும் ஆனந்தத் தூவெளி வெள்ளமே!

235. நல்ல அடியவரை முழுகுவிக்கும் இன்பமான தூய வானத்தினின்றும் ஒழுகும் வெள்ளமே! கைகட்டி வாய்மூடி அடங்கியிருப்பதனாலே செயல் அற்று, சொல் இல்லாது அமைந்திருக்கும் 'மோனம் மோனம்", என்று ஏமாற்றும்

சொல்லைச் சொல்லிக் கொண்டு, இரவுபகல் நீங்காத நாயினும் தாழ்வான எனக்கும் இன்பம் உண்டாகுமோ?

(தூவெளி — சிதம்பரம்)

236. தாயும் நீ, தந்தையும் நீ!

தூய தான துரிய அறிவெனும்
தாயும்நீ யின்பத் தந்தையு நீயென்றால்
சேயதாம் இந்தச் சீவத் திரளன்றோ
ஆயும் பேரொளி யான அகண்டமே!

236. அறிவாளிகளால் ஆராயப்படுகின்ற பேரொளி யான வியாபகமே! தூய 'துரிய ஞானம்' என்ற தாயும் நீயே! இன்பத்தைத் தரும் தந்தையும் நீயே! என்று இவ்வாறு கூறினால் இவ்வுலகத்து உயிர்க் கூட்டங்கள் எல்லாம் உன் சேய்கள் அல்லரோ!

237. நீ தந்த ஆகமம்!

அகண்ட மென்ன அருமறை யாகமம்
புகன்ற நின்தன்மை போதத் தடங்குமோ
செகங்கள் எங்கும் திரிந்துநன் மோனத்தை
உகந்த பேருனை ஒன்றுவர் ஐயனே!

237. ஐயனே! அகண்டம் (எல்லை இல்லாதது) என்று அரிய மறைகளும் ஆகமங்களும் கூறிய உன் இயல்பானது என் சிற்றறிவுக்குள் அடங்குவதோ? உலகம் முழுதும் உலவிச் சிறந்த மோன நிலையை எய்தியவர் நின்னை அடைவர்.

238. மறந்தும் பிற தெய்வத்தைத் தொழேன்!

ஐயனே உனை யன்றி ஒருதெய்வம்
கையி னால்தொழ வும்கரு தேன்கண்டாய்

பொய்ய னாகிலும் பொய்யுரை யேன் சுத்த
மெய்ய னாமுனக் கேவெளி யாகுமே.

238. ஐயனே! உன்னையே அல்லாமல் வேறொரு தெய்வத்தை நான்கையால் வணங்கவும் நினைக்கமாட்டேன். நான் பொய்யனே! ஆயினும் பொய் சொல்ல மாட்டேன். தூய மெய்யனான உனக்கே இவ்வுண்மை தெரியும்!

239. தெளிவு தந்த தெய்வமே

வெளியில் நின்ற வெளியாய் விளங்கிய
ஒளியில் நின்ற ஒளியாமுன் தன்னைநான்
தெளிவு தந்தகல் லாலடித் தேவென்று
களிபொ ருந்தஅன் றோகற்ற கல்வியே.

239. இறைவ, நீ அறிவு வெளியில் நிலை பெற்று நிற்கும்பேரின்பப் பெருவெளியாய் விளங்குபவன். உலகத்தில் ஒளி தந்து கொண்டிருக்கும் கதிரவன் முதலியவற்றுக்கு ஒளி தருபவன் நீ. இத்தகைய உன்னை எனக்குத் தெளிவைத் தந்த கல்லால மரத்தின் அடியில் வீற்றிருக்கும் தெய்வம் என்று எண்ணியும் கூறியும் மகிழ்ச்சி அடைவதற்கன்றோ நான் கற்ற கல்வி!

240. தில்லை நாயகர், தொல்லை அகற்றுவாய்!

கல்லை யுற்ற கருத்தினர் கார்நிறத்து
அல்லை யொத்த குழலினர் ஆசையால்
எல்லையற்ற மயல்கொள வோஎழில்
தில்லை யில்திக ழுந்திருப் பாதனே!

240. அழகு பொருந்திய தில்லைப் பொன்னம்பலத்தில் விளங்கும் திருவடிகளை உடையவனே! கல்லின் கடினத்

தன்மையைப் பெற்ற மனத்தை உடையவர்களும் கரிய மேகத்தின் கரிய நிறத்தைத் தன்னிடத்துக் கொண்டிருத்தலால் இரவின் இருளைப் போன்ற கூந்தலை உடையவர்களுமான மங்கையரின் மீது கொண்ட ஆசையால் அளவற்ற மயக்கம் கொண்டு அழியவோ நான் பிறந்தது?

241. வினை கெடுவது எப்படி?

திருவ ருள்தெய்வச் செல்வி மலைமகள்
உருவி ருக்கின்ற மேனி ஒருபரங்
குருவை முக்கண்எம் கோவைப்பணி நெஞ்சே
கருஇ ருக்கின்ற கன்மம் இங்கு இல்லையே.

241. என் மனமே! திருவருள் என்கின்ற தெய்வச் செல்வத்தையுடைய பார்வதி அம்மையின் வடிவானது அமைந்திருக்கும் திருமேனியையுடைய ஒப்பில்லாத மேலான குருவை, மூன்று கண்களையுடைய இறைவனை வணங்குவாயாக! வணங்கினால், கருப்பம் உண்டாதற்குரிய தீவினையானது இவ்வுலகத்தில் நமக்கு ஏற்படுவதில்லை!

242. நீயிருக்கப் பயமேன் எனக்கு?

கன்மம்ஏது கடுநர கேது மேல்
சென்ம மேதெனைத் தீண்டக் கடவதோ
என்ம னோரதம் எய்தும் படிக்கருள்
நன்மை கூர்முக்கண் நாதன் இருக்கவே.

242. என் உள்ளத்தில் உள்ள விருப்பத்தையெல்லாம் நான் அடையுமாறு அருள்கின்ற மூன்று கண்களையுடைய இறைவன் எனக்கு உள்ளீடாய் இருக்கும்போது, பிறப்பை அளிக்கும் இருவினை ஏது? கொடிய நரகம் ஏது? மேல் உண்டாக இருக்கும் பிறப்பு ஏது? இவற்றுள் எவையேனும் ஒன்று என்னைத் தீண்டுமோ? தீண்டா.

243. நின் அடியே சரண்

நாதகீதன் என்நாதன் முக் கண்பிரான்
வேதவேதியன் வெள்விடை யூர்திமெய்ப்
போத மாய்நின்ற புண்ணியன் பூந்திருப்
பாத மேகதி மற்றிலை பாழ்நெஞ்சே!

243. பாழான என் மனமே! எம் இறைவன் இனிய ஓசையுடைய இசைக்குரியவன். எளியேனுக்குத் தலைவன். முக்கண்களையுடைய இறைவன். மறைகளை அருளிய மறையவன். வெண்மையான ஆனேற்றினை ஊர்பவன்; உண்மை அறிவாகி நின்ற புண்ணியன். அத்தகையவனின் திருவடியே எனக்குப் புகலிடமாகும். வேறு புகலிடம் எனக்கு இல்லை.

244. நின்னருள் பெற்றவர்!

மற்று னக்கு மயக்கமென் வன்னெஞ்சே
கற்றை வார்சடைக் கண்ணுத லோன்அருள்
பெற்ற பேரவ ரேபெரி யோர்எலாம்
முற்றும் ஓர்ந்தவர் மூதுரை அத்தமே.

244. வன்மையான என் மனமே! உனக்கு இன்னமும் மயக்கம் ஏன் உண்டாகின்றது? திரண்ட நீண்ட சடையை யுடைய நெற்றிக் கண்ணையுடையவனின் அருளைப் பெற்ற வர்களே ஞானியரும் மறைகளின் பொருளை எல்லாம் முழுதும் உணர்ந்தவரும் ஆவர்.

245. இன்பத்தில் திளைப்பேன்

உரை யிறந்துளத்து உள்ள விகாரமாம்
திரைக டந்தவர் தேடுமுக் கட்பிரான்
பரைநி றைந்த பரப்பெங்ஙன் அங்ஙனே
கரைக டந்தின்ப மாகக் கலப்பனே.

245. பேச்சற்று உள்ளத்துள் அலைபோலத் தோன்றும் வெளி நினைவான வேறுபாட்டைக் கடந்து அருள் நிலையில் நின்றவர் தேடுகின்ற மூன்று கண்களையுடைய இறைவனின் திருவருள் சத்தி நிறைந்த நிலம் எங்கே உள்ளது, அங்கே வரம்பு கடந்து பேரின்ப வெள்ளத்தில் நானும் கலந்து இன்பத்தை அடைவேன்.

246. அருமறை பயந்த சோதியே

கலந்த முத்தி கருதினும் கேட்பினும்
நிலங்கள் ஆதியும் நின்றெமைப் போலவே
அலந்து போயினம் என்னும் அருமறை
மலர்ந்த வாய்முக்கண் மாணிக்கச் சோதியே!

246. அரிய மறைகளை அருளிய மூன்று கண்களையுடைய மாணிக்கச் சுடரே! நின் திருவடியில் வேறுபாடு அற்றுக் கலந்து நின்ற முத்தி நிலையினை நினைத்தாலும் கேட்டாலும் நிலம் முதலான பூதங்களும் என்னைப்போன்றே திகைத்து நின்று சொல்லக் கூடாத துன்பம் அடைந்தோம் என்று கூறும்.

247. என்ன மா தவம் செய்தேன் எந்தையே!

சோதி யாதெனைத் தொண்டருள் கூட்டியே
கோதி யாதஎல் லாமெள்ளப் போதிக்க
ஆதி காலத்தில் உன்னடிக் காம்தவம்
ஏது நான்முயன் றேன்முக்கண் எந்தையே!

247. மூன்று விழிகளையுடைய என் தந்தையே! என்னைச் சோதிக்காது நின் அடியாருடன் கூட்டிக் கற்பிக்கக் கூடாத அரிய பொருள்களை எல்லாம் மெல்லக் கற்பித்தாய். இங்ஙனம், கற்பித்தற்கு; முன் காலத்தில் நின் திருவடிக்குரிய

தொண்டுக்கு ஆகுமாறு என்ன தவத்தை நான் முயன்று செய்தேன்?

248. வாழ்க நின்அருள்!

எந்த நாளைக்கும் ஈன்றருள் தாய்என
வந்த சீரருள் வாழ்கஎன்று உன்னுவேன்
சிந்தை நோக்கந் தெரிந்து குறிப்பெலாம்
தந்து காக்கும் தயாமுக்கண் ஆதியே!

248. அன்பால் நினைவாரின் உள்ளத்தில் உள்ள நோக்கத்தை உணர்ந்து அவர்கள் எண்ணியவற்றை எல்லாம் தந்து, காக்கின்ற அருளையுடைய மூன்று கண்களையுடைய முதல்வனே! எந்நாளும் பெற்றெடுத்த தாயைப்போல வந்து என்னைக் காத்த சிறப்பையுடைய நின் திருவருளானது வாழ்க என்று வாழ்த்தி எண்ணுவேன்.

249. எத்தனை பிறவி எடுத்துள்ளேன்!

கண்ண கன்றஇக் காசினி யூடெங்கும்
பெண்ணொடு ஆண்முத லாமஎன் பிறவியை
எண்ண வோஅரி தேழை கதிபெறும்
வண்ணம் முக்கண் மணிவந்து காக்குமே.

249. இடம் அகன்ற இந்த நிலவுலகத்தில் எங்கும் பெண்ணுடன் ஆண் கூடிப் பிறந்த என் பிறவிகளை அளவிட லாம் என்றாலோ அஃது அரியதாகும். ஆதலால், அறிவற்ற நான் வீடுபேற்றை அடையுமாறு மூன்று கண்களையுடைய மாணிக்கம் வந்தருளி என்னைக் காத்தருளும்.

250. என்னைக் காப்பது உன் கடமை

காக்கும் நின்னருள் காட்சியல் லாலொரு
போக்கும் இல்லை என்புந்திக் கிலேசத்தை

நீச்சி ஆளுகை நின்பரம் அன்பினர்
ஆக்க மேமுக்கண் ஆனந்த மூர்த்தியே!

250. அடியார்க்குச் செல்வமாய் விளங்குபவனே! மூன்று விழிகளையுடைய பேரின்ப வடிவினனே! என்றும் காத்தருளும் நின் திருவருள் காட்சியல்லாது, எனக்கு நிலையான புகலிடம் வேறு இல்லை. என் மனவருத்தத்தைப் போக்கி ஆள்வது நின் கடமையாகும்.

251. எல்லாம் திருவருட் செய்கையே

ஆனம் தங்கதி என்னவென் ஆனந்த
மோனம் சொன்ன முறைபெற முக்கண்எம்
கோனிங் கீந்த குறிப்பத னால்வெறுந்
தீனன் செய்கை திருவருள் செய்கையே.

251. அழிவற்ற பேரின்பமே அடைக்கலம் என்னத் தெரியவும், எனக்குப் பேரின்பப் பெரு வாயிலான பேச்சற்ற மௌனத்தை அருளிய முறையினால் அடையவும் மூன்று விழிகளையுடைய எம் இறைவன், இங்கு அருளிய குறிப்பினால் மிகவும் எளியவனான என் செயல் திருவருள் செயலேயாகும். (என் செயல் அன்று)

252. உமை ஒரு பாகனே!

கையி னால்தொழு தேத்திக் கசிந்துய்ய
மெய்யி னாலுனைக்காண விரும்பினேன்
ஐயனே அரசே அருளே அருள்
தையல் ஓர்புறம் வாழ்சக நாதனே!

252. ஐயனே! அரசே! அருள் உடையவனே! திருவருள் சத்தியான உமையம்மை திருமேனியின் ஒரு பகுதியில் வாழ்வதற்குரிய உலகத் தலைவனே! என் கைகளால் வணங்கி

வாயால் துதித்து, உள்ளம் கசிந்து, மெய்யன்பால் உன்னைக் காண விரும்பினேன்.

253. நான் உன்னோடு கலத்தல் எப்போது?

சகத்தின் வாழ்வை சதம்என எண்ணியே
மிகுந்த தீமைவிளைய விளைக்கின்றேன்
அகத்துள் ஆரமுதாம் ஐய நின்முத்திச்
சுகத்தில் நான்வந்து தோய்வதெக் காலமே!

253. நிலைபேறில்லாத இந்த வுலகத்தின் வாழ்வை நிலைத்தது என்று எண்ணி, மிக்க தீமைகள் உண்டாகும்படி செயலைச் செய்தேன். அன்பால் நினையும் அடியவரின் உள்ளத்தில் அரிய அமிழ்தம் போன்று இனிக்கின்ற ஐயனே, நின் வீடுபேறு என்ற இன்பக் கடலில் நான் வந்து மூழ்குவது எக்காலம்?

254. உன்னை நினைப்பது எப்போது?

காலமூன்றும் கடந்தொளி ராநின்ற
சீலமே நின் திருவரு ளால் இந்த்ர
சால மாமிச் சகம்என எண்ணிநின
கோலம் நாடுதல் என்று கொடியனே.

254. இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற மூன்று காலங்களையும் கடந்து விளங்கும் பேரொளிப் பண்பே! நின் திருவருளால் இந்த உலகமானது இந்திர சாலமாகும் (நிலையற்றது) என எண்ணி நின் திருக்கோலத்தை நாடுவது எப்போது?

255. நல்வினை இல்லை!

கொடிய வெவ்வினைக் கூற்றைத் துரந்திடும்
அடிக ளாம்பொரு ளேநினக் கன்பின்றிப்

பதியில் ஏழைமை பற்றுகின் றேன்வெறும்
மிடிய னேன்கதி மேவும் விதியின்றே.

255. கொடிய தீவினை என்கின்ற கூற்றுவனை விரட்டும் கடவுள் எனக் கூறப்படும் மெய்ப் பொருளே, மிகவும் வறியவனான யான் நல்ல கதியை அடைவதற்குரிய நல்லூழ் இல்லாததால் நின்னிடம் அன்பு இல்லாது, இந்த வுலகத்தில் அறிவில்லாமையையே ஆதரவாகக் கொண்டு நிற்கின்றேன்.

256. எல்லாவற்றையும் விதித்தவன் நீ!

விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட
மதியை யும்விதித் தம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்அருள்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே?

256. விதியையும் வகுத்து அந்த விதிக்கு ஏற்ப நடந்து கொள்ளும்படி என் உடலையும் வகுத்து, எனக்கு என அறிவையும் வகுத்து, அந்த அறிவையும் மாயையில் அழுந்தும்படி வகுத்து அமைத்த பசுபதியே! நின்னருளால் இடைக்கும் பெருநிலையைக் கண்டு மகிழ்வது எங்ஙனம்?

257. என் பொய்ம்மை போக்கிடு!

கண்ட கண்ணுக்குக் காட்டும் கதிரெனப்
பண்டும் இன்றுமென் பால்நின் றுணர்த்திடும்
அண்டனே உனக்கோர் பதினாயிரம்
தெண்டன் என்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே.

257. பார்க்கும் கண்களுக்கு பொருள்களை விளக்கிக் காட்டுகின்ற கதிரவனைப் போல முன் காலத்தும் இக்

காலத்தும் என்னிடத்தினின்று உள்ளபடி உணர்த்துகின்ற இறைவனே! நினக்குப் பல ஆயிரம் வணக்கங்கள் செய்கின்றேன். என் பொய்ம்மையான ஒழுக்கத்தை நீக்கியருளல் வேண்டும்.

258. அன்பர் பணி வேண்டும்

வேண்டும் யாவும் இருந்து வெளியிடைத்
தாண்டு வாரற்ற சோதிப் பிரான் நின்பால்
பூண்ட அன்பர்தம் பொற்பணி வாய்க்குமேல்
ஈண்டு கன்மம் எடுப்பன் அனந்தமே.

258. விரும்பப்படுகின்ற எல்லாப் பொருள்களையும் கடந்து அறிவுப் பெருவெளியில் தூண்டுவார் இல்லாத பேரொளி வடிவான இறைவனே! என்னிடம் அன்பு கொண்ட அடியார் திருப்பணி எனக்குக் கிடைப்பதாயின் நெருங்கிய முடிவற்ற பிறவிகளை எடுப்பேன்.

259. இந்தப் பிறவியே இறுதிப் பிறவி!

எடுத்த தேகம் இறக்கும்முன் னேயெனைக்
கொடுத்து நின்னையும் கூடவும் காண் பனோ
அடுத்த பேரறி வாய்அறி யாமையைக்
கெடுத்த இன்பக் கிளர்மணிக் குன்றமே!

259. தன்னை அடைந்தவரின் அறிவு உருவாய் அவரின் அறியாமையை அழித்த இன்பத்தை அளிக்கின்ற விளங்கும் மாணிக்க மலையே! நான் எடுத்துள்ள இந்த வுடல் அழிவதற்கு முன்னம் என்னை நினக்குத் தந்து நின்னைக் கூடப் பெறவும் காண்பேனோ!

260. எப்போது அருளுவாய்!

குன்றி டாத கொழுஞ்சுடரே யணி
மன்று ளாடிய மாணிக்கமே உனை
அன்றி யார்துணை யார்உறவு ஆர்கதி
என்று நீஎனக் கின்னருள் செய்வதே?

260. அழிவில்லாத செழுமையான பேரொளியே! அழகிய தில்லைச் சிற்றம்பலத்துள் திருக்கூத்து இயற்றும் மாணிக்கமே! உன்னை யல்லாது எனக்கு யார் துணை? உறவினர் யாவர்? புகலிடமானவர் யாவர்? எவரும் இல்லை. இத்தகைய எனக்கு நீ அருள் செய்வது எக்காலம்?

261. மயக்கம் தெளிந்தது!

அருளெ லாம்திரண் டோர்வடி வாகிய
பொருளெ லாம்வல்ல பொற்பொது நாதஎன்
மருளெ லாம்கெடுத் தேஉளம் மன்னலால்
இருளெ லாம்இரிந் தெங்கொளித் திட்டதே?

261. திருவருள் முழுவதும் ஒன்றாய்த் திரண்டு ஒரு வடிவாகி, உலகத்துப் பொருள்கள் யாவும் தானாய் விளங்கும் எல்லாப் பொருள்களையும் காத்து அழிக்க வல்லமையுடைய பொன்னம்பலத்தில் வீற்றிருந்து நடனமிடும் இறைவ! அடியேனின் அறியாமை முழுவதையும் ஒழித்து, என் மனத்தில் நீ நிலைபெற்றிருப்பதால் ஆணவமான இருள் முழுவதும் எங்கு ஓடி ஒளிந்து கொண்டது?

262. நின் திருவடியே அடைக்கலம்!

எங்கும் என்னை இகலுற வாட்டியே
பங்கம் செய்த பழவினை பற்றற்றால்
அங்க ணாயுன் அடியிணை யன்றியே
தங்க வேறிடம் உண்டோ சகத்திலே?

262. எங்கும் என்னை விடாது பற்றிப் பகைவரைப் போன்று துன்பப்படுத்திக் கீழ்மைப்படுத்திய பழைய வினையின் தொடர்பு நின்னால் நீங்கப் பெற்றால், அழகிய நெற்றிக் கண்ணை யுடையவனே! நின் இரண்டு திருவடிகளே அல்லாது இந்த உலகத்தில் யான் போய்த் தங்கியிருக்க வேறு இடமும் உள்ளதோ?

262. அடியார்க்கு எளியன் நீ!

உண்ட வர்க்கன்றி உள்பசி ஓயுமோ?
கண்ட வர்க்கன்றிக் காதல் அடங்குமோ
தொண்டருக்கெளி யான்என்று தோன்றுவான்
வண்ட மிழ்க்கிசை வாக மதிக்கவே.

263. உணவை உண்டவர்க்கே அல்லாமல் மற்றவர்க்குப் பசி நீங்குமோ? நேரிலே பார்த்தவர்க்கே அல்லாமல் மற்றவர்க்கு ஆசை நீங்குமோ? தன்னைப் பாடிய செந்தமிழ்ப் பாடலுக்குப் பொருத்தமாக எல்லாரும் மதிக்கும் பொருட்டு அடியார்க்கு எளியவனாவான் என்று கூறுமாறு எம் தலைவன் வெளிப்பட்டுப் பெருங் கருணை செய்வான்.

264. விதியை எண்ணிக் கலங்குகிறேன்!

மதியும் கங்கையும் கொன்றையும் மத்தமும்
பொதியும் சென்னிப் புனிதநின் பொன்னடிக்
கதியை விட்டிந்தக் காமத்தில் ஆழ்ந்தவென்
விதியை எண்ணி விழிதுயி லாதன்றே.

264. பிறைச் சந்திரனும் கங்கையும் கொன்றை மலர் மாலையும் ஊமத்தைப் பூவும் பொதிந்த தலையையுடைய தூயவனே! நின் அழகிய திருவடி அடைக்கலத்தை விட்டு

இவ்வுலகத்தின் காமத்தில் அழுந்திய என் ஊழை எண்ணி எண்ணி என் கண்கள் உறங்கவில்லை.

265. இன்று எனக்கு அருள்வாய்!

அன்றெ னச்சொல ஆம்என அற்புதம்
நன்றெ னச்சொல நண்ணியந ன்மையை
ஒன்றெ னச்சொன்ன ஒண்பொரு ளேஒளி
இன்றெ னக்கருள வாய்இருளேகவே.

265. 'அன்று' என்று கூறவும், 'ஆம்' என்று கூறவும், 'அற்புதம்', 'நன்று' என்று கூறவும் பொருந்தியுள்ள நல்ல பொருளை (இறைவனை) ஆசான் கோலம் கொண்டு வந்து, ஒன்று என்று கூறியருளிய மேலான பொருளே! அறியாமை நீங்கும்படி இப்போது அடியேனுக்கு அறிவொளியை அருள்வாயாக!

266. நீரே துணை!

இருவ ரேபுகழ்ந் தேத்தற் கினியராம்
ஒருவ ரேதுணை என்றுண ராய் நெஞ்சே
வருவ ரேகொடுங் காலர்கள் வந்தெதிர்
பொருவ ரேஅவர்க்கு என்கொல் புகல்வதே?

266. என் மனமே! நான்முகன் திருமால் என்னும் இருவரும் புகழ்ந்து துதித்தற்கு இனியராய் இருந்த ஒப்பில்லாதவரே நமக்குத் துணையாவார் என்று அறிவாயாக! கொடிய இயம தூதர்கள் வருவார்களே! எதிரே வந்து போரிடுவார்களே! அவர்கட்கு என்ன சமாதானம் சொல்வது?

267. நின்னைக் காணும் பேறு பெற்றன கண்கள்!

புகழும் கல்வியும் போதமும் பொய்யிலா
அகமும் வாய்மையும் அன்பும் அளித்தவே
சுகவி லாசத் துணைப்பொருள் தோற்றமாம்
ககன மேனியைக் கண்டன கண்களே.

267. சிவபெருமான் பேரின்ப விளையாடல் செய்யும் உயிரின் துணைப் பொருளானவன்; சிவந்த மேனியையுடையவன். அவனது செவ்வானம் போன்ற திருமேனியைத் திருவருள் துணையினால் கண்டு வணங்கும் பேறு பெற்றன கண்கள். அவை புகழும் மெய்யறிவுக் கல்வியும், அறிவும் பொய்யில்லாத உள்ளமும் வாய்மையும் அன்பும் ஆகியவற்றைத் தந்தன.

268. அடியார்களே தெய்வங்கள்

கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை
எண்ணி யெண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்தொழும் தெய்வமே.

268. விழிக்குள் நிலைத்த பேரொளியை, என் உள்ளத்தில் உண்மைக் கருத்தாய் உள்ளதை, வானில் நிலைபெற்று விளங்கிய உண்மைப் பொருளை, பலமுறையும் எண்ணி எண்ணி, இரவு பகலும் இடை விடாது அடைபவர் நான் வணங்கித் துதிக்கும் அடியவர் ஆவர்.

269. நின்னைச் சேர்ந்தவர் உய்வது உறுதி!

தெய்வம் வேறுளது என்பவர் சிந்தனை
நைவர் என்பதும் நற்பர தற்பர

சைவ சிற்சிவ னேஉனைச் சார்ந்தவர்
உய்வர் என்பதும் யான்உணர்ந் தேன்உற்றே.

269. சிவபெருமானே அல்லாது வேறு இறைவன் உளன் என்று மயங்கிக் கூறுபவர் உள்ளத்தால் பெரிதும் வருந்துவர் என்பதையும், சிறந்த மேலான தற்பரனே! சைவ சமயத்தினால் எடுத்துக் கூறப்படுகின்ற அறிவின்பத்தினை அளிக்கின்ற மங்கலமானவனே! நின்னை அடைந்தவர் கடைத்தேறுவர் என்பதையும் ஆராய்ந்து நான் அறிந்து கொண்டேன்.

270. நின்னை அல்லால் சுற்றம் இல்லை!

உற்ற வேளைக் குறுதுணை யாயிந்தச்
சுற்றமோ நமைக்காக்கும் சொலாய் நெஞ்சே
கற்றை வார்சடைக் கண்ணுதல் பாதமே
பற்ற தாயிற் பரசுகம் பற்றுமே.

270. மனமே, இடுக்கண் ஒன்று வந்து அடைந்த நேரத்தில் நமக்கு உறவாக உள்ள உறவோ நம்மைக் காக்கும்? கூறுவாய்! திரண்ட நீண்ட சடையையும், நெற்றிக் கண்ணையும் உடைய முதல்வனின் திருவடியையே நமக்கு ஆதரவாகக் கொள்வோமானால், மேலான பேரின்பம் உண்டாகும்.

271. நீயே கதி

பற்ற லாம்பொரு ளேபரம் பற்றினால்
உற்ற மாதவர்க் குண்மையை நல்குமே
மற்றும் வேறுள மார்க்க மெலாமெடுத்து
எற்று வாய்மன மேகதி எய்தவே.

271. அன்பு மிகப் பற்றினால் மிக்க மாதவர்க்கு உண்மையான வீடுபேறு கிட்டப் பெறும். ஆகவே, மனமே, பரம் பொருளானது பற்றக் கூடிய பொருளே ஆகும். வீடு பேறு அடைவதற்கு இதையன்றி வேறாக உள்ள வழிகளை எல்லாம் எடுத்தெறிவாயாக!

19. ஆரணம்

(இப் பகுதியில் முதல் செய்யுளின் முதல் 'ஆரணம்' என்பதாகும். ஆதலால் இப்பெயர் பெற்றது. இதில் உள்ளவை பத்துச் செய்யுட்கள். ஆரணம் — மறை; வேதம்)

272. கண்கள் மூன்றுடைய என் கண்ணே போற்றி

ஆரண மார்க்கத் தாகம வாசி
அற்புத மாய்நடந் தருளும்
காரண முணர்த்தும் கையும் நின் மெய்யும்
கண்கள்மூன் றுடையஎன் கண்ணே!
பூரண அறிவிற் கண்டிலம் அதனால்
போற்றியிப் புந்தியோ டிருந்து
தாரணி உள்ள மட்டுமே வணங்கத்
தமியனேன் வேண்டிடத் தகுமே.

272. மூன்று கண்களையுடைய என் கண்ணே! மறை என்ற வழியில் ஆகமம் என்ற குதிரையை நடத்துகின்ற காரணத்தைத் தெரிவிக்கின்ற நின் திருக் கையையும் திரு மேனியையும் பூரண அறிவில் யாம் கண்டதில்லை; அதனால் இவ்வுலகத்தில் உள்ளவரைப் போற்றி இம்மன நிலையுடன் இருந்து உடலால் வணங்க யான் விரும்புவது தக்கதேயாகும்.

273. என்னைக் காப்பது உன் கடன்!

இடமொரு மடவாள் உலகனைக் கீந்திட்டு
எவ்வுல கத்தையு மீன்றும்

தடம்உறும் அகிலம் அடங்குநாள் அம்மை
 தன்னையும் ஒழித்து விண் ணெனவே
படருறு சோதிக் கருணையங் கடலே
 பாய்இருள் படுகரிற் கிடக்கக்
கடவனோ நினைப்பு மறப்பெனும் திரையைக்
 கவர்ந்தெனை வளர்ப்பதுன் கடனே.

273. இடப் பக்கத்தை ஒப்பில்லாத இளமையுடைய உமையம்மையார்க்கு அளித்து எல்லா வுலகங்களையும் படைத்தும், பெரிய இந்த வுலகம் அழிகின்ற காலத்தில். உமையம்மையையும் தன்னுள் அடக்கிக் கொண்டு விளங்கும் வானத்தைப் போன்று எங்கும் பரந்துள்ள அருள் கடலே! பரவிய அறியாமை இருள் பொருந்திய பிறவிக் கடலில் ஆழ்ந்து கிடக்கத் தக்கவனோ நான்? நினைவு மறதி என்னும் பெரிய அலையை நின் அருளால் விலக்கி என்னை எடுத்து வளர்ப்பது நின் கடமையாகும்.

274. வஞ்ச நெஞ்சினர் நின்னை அறியார்!

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
 மண்ணையும் விண்ணையும் தெரியா
தளப்பெறுந் துரும்பொத் தாவியோடு ஆக்கை
 ஆனந்த மாகவே அலந்தேன்
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணாக்
 காட்சியே சாட்சியே அறிஞர்
உளம்பெறும் துணையே பொதுவினில் நடிக்கும்
 உண்மையே உள்ளவா றிதுவே.

274. வளம் வாய்க்கப் பெற்ற ஞானக் கடலை வாயினால் பருகி மண்ணையும் வானையும் அறியாமல் கடலில் பட்ட துரும்பைப் போன்று உயிருடன் உடம்புகள் இன்ப வடிவாய் விளங்கிப்பின் வருந்தினேன். வஞ்சம் கொண்ட வஞ்ச நெஞ்சினர் காண இயலாத (அடியார்க்குக் காட்சி

தரும்) காட்சியே! மெய்யறிவினர் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்ட உயிர்த் துணையே! தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்து இயற்றும் மெய்ப் பொருளே! அடியேனின் உண்மையான நிலைமை இதுவாகும்!

275. துன்பக் கடலிலிருந்து காப்பாய்!

உள்ளமே நீங்கா என்னை வா வா என்று
உலப்பிலா ஆனந்த மான
வெள்ளமே பொழியும் கருணைவான் முகிலே
வெப்பிலாத் தண்ணருள் விளக்கே
கள்ளமே துரக்குந் தூவெளிப் பரப்பே
கருவெனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப்
பாலிப்ப துன்னருள் பரமே!

275. எளியவனான என் உள்ளத்தை விட்டுப் பிரியா திருந்து, என்னை 'வா, வா' என்று அழைத்துக் கேடில்லாத இன்பமான மழையைப் பெய்யும் அருளையுடைய சிறந்த மேகமே! நிகர் இல்லாத குளிர்ந்த அருளான விளக்கே! வஞ்சனையான இருளை நீக்கும் தூய்மை பொருந்திய வானமே! கருப்பம் என்று கூறுமாறு அமைந்து கிடந்த சூனிய மான மாயை என்ற கடலில் வீழாதபடி என்னை ஏற்றிக் காப்பது நின் திருவருள் கடனாகும்.

276. நின் கண்ணால் துயில் பெறுவேன்!

பரம்பர மாகிப் பக்குவம் பழுத்த
பழஅடி யார்க்கருள் பழுத்துச்
சுரந்தினி திரங்கும் தானகற் பகமே
சோதியே தொண்டனேன் நின்னை
இரந்து நெஞ்சுடைந்து கண்துயில் பெறாமல்
இருந்ததும் என்கணில் இருட்டைக்

கரந்துநின் கண்ணால் துயில்பெறல் வேண்டிக்
கருதினேன் கருத்திது தானே.

276. வழிவழியாய்ப் பக்குவம் முதிர்ந்த பழைமையான தொண்டர்க்குத் திருவருட் கனி பழுத்துத் தேன் சுரந்து இனிதாய் இரங்கும் கொடைத் தன்மையுடைய கற்பக மரமே! பேரொளியே! தொண்டனான யான் நின்னை வேண்டியிரந்து (நீ இரங்காததால்) உள்ளம் உடைந்து வருந்தி உறக்கம் கொள்ளாமல் இருந்தேன். இதை நீ அறிவாய். ஆதலால் என் கண்ணில் உள்ள இருளை நீக்கி நின் திருவருள் கண்ணால் உறக்கம் கொள்வதை நின்னிடம் பெற்றிட விரும்பித் துதித்தேன். என் உள்ளக் கருத்து இதுவே!

277. எல்லாரும் போலவா நான்?

கருத்தினுள் கருத்தாய் இருந்தும்நீ உணர்த்தும்
காரணங் கண்டுசும் மாதான்
வருத்தமற் றிருந்து சுசம்பெறா வண்ணம்
வருந்தினேன் மதியின்மை தீர்ப்பார்
ஒருத்தர்ஆர் உளப்பா டுணர்பவர் யாவர்
உலகவர் பன்னெறி எனக்குப்
பொருத்தமோ சொல்லாய் மௌனசற் குருவே
போற்றிநின் பொன்னடிப் போதே.

277. அறிவினுள் அறிவாய் உள் நின்று விளங்கியிருந்து நீ உணர்த்தும் காரணத்தை நோக்கியும் வாளா விருந்து இன்பம் அடையாது வருந்தினேன். என் அறியாமையை நீக்குபவரான ஒப்பற்றவர் யார்? அடியேன் உள்ளத்து வருத்தத்தை அறிபவர் யார்? உலகத்தவரின் பல வழிகள் எனக்குப் பொருத்தமோ? கூறுவாயாக! மௌன குருவே! நின் அழகிய திருவடித் தாமரைக்கு வணக்கம்!

278. என்ன பாக்கியம் செய்தேன் பரனே!

அடியெனும் அதுவும் அருளெனும் அதுவும்
அறிந்திடில் நிர்க்குண நிறைவும்
முடியெனும் அதுவும் பொருளெனும் அதுவும்
மொழிந்திடில் சுகமன மாயைக்
குடிகெட வேண்டிற் பணியற நிற்றல்
குணம் எனப் புன்னகை காட்டிப்
படிமிசை மௌனி யாகிநீ ஆளப்
பாக்கியம் என்செய்தேன் பரனே!

278. மேலானவனே! முழுமுதற் பொருள் என்று கூறப்படும் அப்பொருளும் அதன் குணமாய்க் காணப்படும் அருள் என்ற அந்தப் பொருளும் அறியுமிடத்து நிர்க்குண மாகும். நிறைவான அந்தம் என்று கூறப்படுகின்ற அந்தப் பொருளும், பரம் பொருள் எனக் கூறப்படுகின்ற அந்தப் பொருளும் கூறுமிடத்து இன்பமாகும். மனத்தில் உள்ள மாயை குடிவிட்டு ஓட விரும்பினால் அடியேன் செயலற நிற்பதே நல்ல குணமாகும் என்று கூறிப் புன்னகை செய்து இவ்வுலகத்திலே மௌன குருவாக வந்து என்னை ஆட் கொள்ள என்ன தவப்பேற்றை யான் முன்னம் செய்தேன்?

279. நன்னிலை பெற வேண்டும்

என்செய லின்றி யாவும்நின் செயல்என்று
எண்ணுவேன் ஒவ்வொரு காலம்
புன்செயல் மாயை மயக்கின்என் செயலாப்
பொருந்துவேன் அஃதொரு காலம்
பின்செயல் யாதும் நினைவின்றிக் கிடப்பேன்
பித்தனேன் நன்னிலை பெறல்நின்
தன்செய லாக முடித்திடல் வேண்டும்
சச்சிதா னந்தசற் குருவே!

279. உண்மை அறிவு இன்பவடிவான மேலான குருவே! ஒவ்வொரு வேளையில் யான் செய்யும் செயலாய்க் காணப்படுவன நின் செயலாம் என்று மனமாரஎண்ணுவேன் அவ்வாறு எண்ணும் அதனை ஒரு காலத்தில் புன்செயலான. மாயையின் மயக்கத்தினால் என் செயலாக எண்ணி இறுமாப்பு அடைவேன். பின்பு எந்தச் செயலையும் எவர் செய்வதையும் எண்ணாமல் வாளா இருப்பேன். எனவே இவற்றால் யான் பித்தன் என்று கூறப்படுவேன். எனவே இத்தகைய தடுமாற்றம் இல்லாத மேலான நிலையை அடைய நின் செயலால் முடித்திட வேண்டும்.

280. ஆவலோ அதிகம்!

குருவுரு வாகி மௌனியாய் மௌனக்
 கொள்கையை உணர்த்தினை அதனால்
கருவுரு வாவ தெனக்கிலை இந்தக்
 காயமோ பொய்யெனக் கண்ட
திருவுரு வாளர் அனுபவ நிலையும்
 சேருமோ ஆவலோ மெத்த
அருவுரு வாகி அல்லவாய்ச் சமயம்
 அளவிடா ஆனந்த வடிவே!

280. பெரிய உருவமாகி அவை அல்லவாகிச் சமய நூல்களால் அளவுபடுத்தி உரைக்கப்படாத இன்பவடிவே! குருவின் வடிவம் பூண்டு மௌனியாய் மோன நிலையின் உண்மையை எனக்கு உணர்த்தி யருளினாய். அதனால் எனக்குக் கருவில் உருக் கொள்வது இனி உண்டாகாது! என்றாலும் இந்த வுடலோ நிலையற்றது எனக் கண்ட சிவஞானச் செல்வர் அனுபவ நிலையும் எனக்குக்கிட்டுமோ? அந்த நிலை பற்றி ஏற்பட்டுள்ள ஆசையோ எனக்கு மிகுதியாக உள்ளது.

281. மோனம் அல்லால் வழி உண்டோ?

வடிவிலா வடிவாய், மனநினைவு அணுகா
மார்க்கமாய் நீக்கருஞ் சுகமாய்
முடிவிலா வீட்டின் வாழ்க்கைவேண் டினர்க்குன்
மோனமல் லால்வழி யுண்டோ
படியிருள் அகலச் சின்மயம் பூத்த
பசுங்கொம்பை அடக்கி ஓர் கல்லால்
அடியிலே இருந்த ஆனந்த அரசே
அன்பரைப் பருகும் ஆ ரமுதே!

281. உலகத்தில் உள்ள அறியாமை இருள் நீங்கப் பேரறிவு மயமான மலர்களைப் பூத்த பசுமையான கொடியை உள்ளடக்கிக் கொண்டு நிகரில்லாத கல்லால மரத்தின் நிழலில் வீற்றிருந்து இன்பத்தை அளித்தருளும் அரசே! அன்புசெய்யும் அடியவரைப் பருகும் அரிய அமிழ்தே! கை கால் முதலான உறுப்புகள் இல்லாத வடிவமாகி, உள்ளத்தில் உள்ள நினைவு அணுக இயலாத நெறியாகி, இடையீடு இல்லாத இன்பமாகி, கேடில்லாத வீடுபேற்றின் வாழ்க்கையை விரும்பியவர்க்கு மௌன நிலையே அல்லாது வேறு வழியுண்டோ?

20. சொல்லற்கரிய

(இப்பகுதியின் முதற் செய்யுள் 'சொல்லற்கரிய' என்ற தொடக்கம் கொண்டது. ஆதலால் இப் பெயரைப் பெற்றது. இதில் பத்துச் செய்யுட்கள் உள்ளன.)

282. என்னை விட்டு எங்குச் சென்றாய்?

சொல்லற்கு அரிய பரம்பொருளே
சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற் கரிய மயலில்எனை

விட்டெங் கொளித்தாய் ஆகெட்டேன்
கல்லிற் பசிய நார்உரித்துக்
கடுகில் பெரிய கடலடைக்கும்
அல்லிற் கரிய அந்தகனார்க்கு
ஆளாக் கினையோ அறியேனே.

282. சொல்வதற்கு அரிய மேலான பொருளே! பேரின்பக் கடலே! பேரொளிக் கொழுந்தே! நீங்குதற்கு அரிய மயக்கத்தில் என்னை ஆழ்த்திவிட்டு நீ எங்கு ஒளித்தாய்! கல்லிலிருந்து பசுமையான நாரை உரித்துக் கடுகிலே பெரிய கடலை அடைப்பதில் வல்லவனான இருளை விடக்கரிய இயமனார்க்கு இரையாகும்படிச் செய்தாயோ! யான் அறியேன்.

283. நின்னைப் பிரியாதிருக்க வேண்டும்

அறிவிற் கறிவு தாரகம் என்று
அறிந்தே அறிவோ டறியாமை
நெறியிற் புகுதா தோர்படித்தாய்
நின்ற நிலையும் தெரியாது
குறியற் றகண்டா தீதமயக்
கோதில் அமுதே நினைக்குறுகிப்
பிரிவற் றிருக்க வேண்டாவோ
பேயேற் கினிநீ பேசாயே?

283. அரிய உயிர்களின் அறிவிற்கு நிலைக் களமாய்ச் சிவபெருமானின் பேரறிவு விளங்குகின்றது. இதனை உணர்ந்து அறிவு அறியாமையான நெறியில் புகாமல் ஒரு தன்மையுடையதாய் நின்ற நிலையையும் உணராமல், எத்தகைய அடையாளமும் இல்லாமல் எல்லாவற்றிற்கும் அப்பாலாய் குற்றம் இல்லா த பேரின்ப அமிழ்தே! உன்னை அடைந்து பிரிவில்லாது நான் இருக்கவேண்டாவோ? இனிப் பேய்த்தன்மையுடைய எனக்கு உரைத்தருளுவாய்!

284. பேசா நிலை அருள்வாய்

பேசா அனுபூ தியைஅடியேன்
பெற்றுப் பிழைக்கப் பேரருளால்
தேசோ மயந்தந் தினிஒருகால்
சித்தத் திருளும் தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்த அன்பர்
பற்றும் அகண்டப் பரப்பான
ஈசா பொதுவில் நடமாடும்
இறைவா குறையா இன்னமுதே!

284. ஆசை என்ற காட்டைக் கடந்து அடியார்கள் பற்றும் எல்லையிட முடியாத பெருநிறையை உடையவனே! தில்லைச் சிற்றம்பலத்தில் ஐந்தொழில் கூத்து இயற்றும் இறைவனே! குறைவில்லாத இனிய அமிழ்தே! பேசாமைக்குக் காரணமான திருவடிப் பேற்றினை அடியேன் அடைந்து உய்யுமாறு பெரிய அருளால் நின் பேரறிவுப் பேரொளியைத் தந்து இனி ஒரு முறை உள்ளத்தில் உள்ள ஆணவமாகிய இருளையும் நீக்கி விடுவாயோ!

285. துன்பக் கடல் விட்டு அகல்வேனோ?

இன்பக் கடலில் புகுந்திடுவான்
இரவும் பகலும் தோற்றாமல்
அன்பில் கரைந்து கரைந்துருகி
அண்ணா அரசே எனக்கூவிப்
பின்புற் றழுஞ்சேய் எனவிழிநீர்
பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட்டு அகல்வேனோ
சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே!

285. பேரின்ப வடிவான ஒளியையுடைய கொழுந்தே! நின் திருவடிப் பேரின்பப் பெருங்கடலில் நின் அருளாலே

புகுந்து இன்பம் அடையும் பொருட்டாய் இரவு என்றும் பகல் என்றும் தோன்றாது அன்பால் கரைந்து உருகி, 'அண்ணலே! அரசே!' என்று அழைத்து அழும்படியான குழந்தையைப் போன்று கண்ணீர் விட்டுப் பெருக்கிப் பித்துக் கொண்டவனாய்ப் புலம்புகிறேன். நான் பிறவியான துன்பக் கடலை விட்டு நீங்குவேனோ!

286. அனைத்தும் நீ

கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக்
கோவே மன்றிற் கூத்தாடற்கு
எழுந்த சுடரே இமயவரை
என்தாய் கண்ணுக் கினியானே
தொழும்தெய் வமும்நீ குருவும்நீ
துணைநீ தந்தை தாயும்நீ
அழுந்தும் பவம்நீ நன்மையும்நீ
ஆவி யாக்கை நீதானே.

286. கதிர்க் கொழுந்து விளங்குகின்ற வெண்மையான பிறைச் சந்திரனை அணிந்த சடையை உடைய மன்னா! தில்லைச் சிற்றம்பலத்தில் கூத்தாடுவதற்கு எழுந்த சுடரே! இமய மலையில் பிறந்த என் தாயான உமையம்மையின் கண்களுக்கு இனியவனே! அடியேன் வணங்கும் கடவுளும் நீயே! என் தந்தையும் நீயே! நான் அழுந்தும் பிறவியும் நீயே! நன்மையும் நீயே! உயிரும் நீயே! என் உடலும் நீயே!

287. என் சொல்லைக் கேளாதது ஏன்?

தானே அகண்டா காரமயந்
தன்னில் எழுந்து பொதுநடம்செய்
வானே மாயப் பிறப்பறுப்பான்

வந்துன் னடிக்கே கரம்கூப்பித்
தேனே என்னைப் பருகவல்ல
தெள்ளா ரமுதே சிவலோகக்
கோனே எனுஞ்சொல் நினதுசெவி
கொள்ளா தென்னோ கூறாயே.

287. தானாகவே எங்கும் பரந்து பெருநிறைவாய் விளங்கும் தன்மையினின்று நீர்க்குமிழி போன்று எழுந்து ஐந்தொழிலுக்கும் பொதுவான கூத்தைச் செய்பவனே! மாயை தொடர்பான பிறவியை நீக்கிக் கொள்வதற்கு நின் திரு முன்பு வந்து நின் திருவடிகளுக்கே கை கூப்பித் ''தேனே, என்னைப் பருக வல்லதான தெளிவான அரிய அமிழ்தமே, சிவவுலகத்துக்கு இறைவனே'' என்று நான் அழைக்கின்ற சொல்லை நின் திருச்செவியில் ஏற்றுக் கொள்ளாதிருப்பது ஏன்? கூறுவாயாக!

288. 'நீ வா!' என்று அழை!

கூறா நின்ற இடர்க்கவலைக்
குடும்பக் கூத்துள் துளைந்துதடு
மாறா நின்ற பாவியைநீ
வாஎன் றழைத்தால் ஆகாதோ?
நீறார் மேனி முக்கணுடை
நிமலா அடியார் நினைவினிடை
ஆறாய்ப் பெருகும் பெருங்கருணை
அரசே என்னை யாள்வானே?

288. வெண்ணீறு விளங்கும் மேனியையும் முக்கண் களையு முடைய குற்றம் அற்றவனே! அன்பரின் உள்ளத்து நினைவில் ஆற்றைப் போன்று பெருகும் பெருங் கருணை யுடைய அரசே! என்னை அடிமையாய்க் கொண்டவனே! கூறப்படும் துன்பத்துக்குக் காரணமான கவலையைத்

தருகின்ற குடும்பம் என்ற கூத்தாட்டில் பொருந்தித் தடுமாறும் பாவியை நீ 'என்னிடம் வா!' என்று அழைத்தால் உனக்கு ஆகாதோ?

289. என்னைப் படைத்து என்ன கண்டாய்?

வானே முதலாம் பெரும்பூதம்
வகுத்துப் புரந்து மாற்றவல்ல
கோனே என்னைப் புரக்குநெறி
குறித்தா யிலையே கொடியேனைத்
தானே படைத்திங் கென்னபலன்
றன்னைப் படைத்தாய் உன்கருத்தை
நானே தென்றிங் கறியேனே
நம்பி னேன் கண் டருள்வாயே.

289. வானம் முதலான ஐந்து பூதங்களையும் படைத்துக் காத்து அவற்றை அழித்திட வல்ல அரசே! என்னைப் பாதுகாக்கும் நெறியினை நின் உள்ளத்தில் பற்றினாயில்லையே! கொடியேனை மட்டும் படைத்து இங்கு என்ன பயனை நீ அடைந்தாய்? நின் திருவுள்ளத்தின் எண்ணத்தை நான் ஏதென்று அறிய மாட்டேன். நின்னையே நம்பினேன். இவ்வுண்மையைத் திருவுளம் கொண்டு எனக்கு அருள் செய்யவேண்டும்.

290. நினக்கு எவ்வாறு பணி செய்வேன்!

கண்டார் கண்ட காட்சியும்நீ
காணார் காணாக் கள்வனும்நீ
பண்டா ருயிர்நீ யாக்கையும்நீ
பலவாம் சமயப் பகுதியும் நீ
எண்டோள் முக்கண் செம்மேனி

எந்தாய் நினக்கே எவ்வாறு
தொண்டாய்ப் பணிவர் அவர்பணிநீ
சூட்டிக் கொள்வது எவ்வாறே?

290. உண்மையைக் கண்ட ஞானியர் கண்ணாரக் கண்ட காட்சியும் நீ! உன்னை அறியாத அறிவிலிகள் காண மாட்டாது மறைந்திருப்பவனும் நீ! பழைமையுடைய உயிரும் நீ! அவ்வுயிர்க்குரிய உடலும் நீ! பலவகைப்பட்ட சமயப் பகுதிகளும் நீ! எனவே எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் சிவந்த மேனியையும் கொண்ட எம் தந்தையே! நினக்கு எவ்விதம் தொண்டராய் வணங்குவர்? அவருடைய தொண்டினை நீதான் ஏற்றுக் கொள்வது எப்படி?

291. உலக வியப்பை என் சொல்வேன்?

சூட்டி எனதென் றிடுஞ்சுமையைச்
சுமத்தி எனையும் சுமையாளாக்
கூட்டிப் பிடித்து வினைவழியே
கூத்தாட் டினையே நினதருளால்
வீட்டைக் கருதும் அப்போது
வெளியாம் உலக வியப்பனைத்தும்
ஏட்டுக் கடங்காச் சொப்பனம்போல்
எந்தாய் இருந்த தென்சொல்வேன்!

291. என் தந்தையே! எனது என எண்ணப்படுகின்ற உடல் சுமையைப் பெற்றுக் கொண்டு சுமக்கச் செய்து என்னையும் சுமையெடுக்கும் ஆளாய்ச் சேர்த்துக் கொண்டு இருவினை வழியே கூத்தாடச் செய்தாய்! நின் திருவருளால் வீடுபேற்றை விரும்பும் அப்போது வெளிப்படையாய்த் தோன்றும் உலகத்தினது வியப்புகள் எல்லாம் ஏட்டிலே

எழுதுவதற்கு அடங்காத கனவைப் போன்று விளங்கிய தன்மையை என்ன என்று கூறுவேன்?

21. வம்பனேன்

(இப்பகுதியின் முதற்செய்யுளின் தொடக்கம் 'வம்பனேன்' என்பது. ஆதலால் இப்பெயர் பெற்றது. இதில் அடங்கியவை பத்துச் செய்யுட்கள்.)

292. கைம்மாறு உண்டோ?

வம்பனேன் கள்ளம் கண்டும்
மன்னருள் வெள்ள ராய
உம்பர்பால் ஏவல் செய் யென்று
உணர்த்தினை ஓகோ வானோர்
தம்பிரா னே நீ செய்த
தயவுக்கும் கைம்மாறுண்டோ
எம்பிரான் உய்ந்தேன் உய்ந்தேன்
இனியொன்றும் குறைவி லேனே.

292. தீயவனான என் வஞ்சத்தைப் பார்த்தும் நிலை பெற்றுள்ள நின் திருவருள் வெள்ளத்து ஆழ்ந்த அடியாரிடத்துப் பணியைச் செய்க என்று எனக்கு உணர்த்தியருளினாய்! ஓ வானவர் தலைவனே! நீ யருளிய அருளுக்கும் நான் செய்யக் கூடிய கைம்மாறும் உண்டோ? எம் இறைவ! நான் கடைத் தேறினேன்! கடைத் தேறினேன்! இனிச் சற்றும் குறைவில்லாதவன் ஆனேன்!

293. உனைப் பிரியேன்!

குறைவிலா நிறைவாய் ஞானக்
கோதிலா னந்த வெள்ளத்
துறையிலே படிந்து மூழ்கித்

துளைந்துநான் தோன்றா வாறுள்
ளுறையிலே யுணர்த்தி மோன
ஒண்சுடர் வைவாள் தந்த
இறைவனே உனைப் பிரிந்திங்கு
இருக்கிலேன் இருக்கி லேனே.

293. குறைவில்லாது நிறைந்த பொருளாகிக் குற்ற மற்ற ஞானம் என்ற இன்ப வெள்ளத்தின் துறையில் முழுகிப் படிந்து ஆழ்ந்து நான் என்றமுனைப்புத் தோன்றாதவகையில் மறைவாய் அறிவுறுத்தி, சுடரை யுடைய கூரிய மோன நிலையில் என்ற வாளைத் தந்தஇறைவனே! தலைவனே! நின்னைப் பிரிந்து இந்த வுலகத்தில் தங்கியிருக்க மாட்டேன், தங்கியிருக்க மாட்டேன்!

294. அழைத்தாலன்றி வாழ்வுண்டோ?

இருநில மாதி நாதம்
ஈறதாம் இவை கடந்த
பெருநில மாய தூய
பேரொளிப் பிழம்பாய் நின்றும்
கருதரும் அகண்டா னந்தக்
கடவுள் நின் காட்சி காண
வருக என்று அழைத்தா லன்றி
வாழ்வுண்டோ வஞ்ச னேற்கே!

294. பெரிய இவ்வுலக தத்துவம் முதலாக நாத தத்துவம் இறுதியாய் உள்ளவற்றைக் கடந்து விளங்கும் பெருநிலம் எனக் கூறப்படும் தூய பேரொளிப் பிடிப்பாக விளங்கினும், நினைத்தற்கு அரிய சிறந்த பேரின்பத்தை அளிக்கின்ற இறைவா! நின் திருவருள் தோற்றத்தைக் கண்டு உய்வதற்கு வருக என்று நீ என்னை அழைத்தாலன்றி வஞ்சனான எனக்கு இன்பம் உண்டாகுமோ?

295. உனக்கே அடிமை!

வஞ்சனை அழுக்கா றாதி
வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை வலிதின் மேன்மேல்
நெக்குநெக் குருகப் பண்ணி
அஞ்சலி செய்யும் கையும்
அருவிநீர் விழியு மாகத்
தஞ்சம் என்று இரங்கிக் காக்கத்
தற்பரா பரமு னக்கே.

295. மேலானவனே! கள்ளம் பொறாமை முதலான குணங்கள் சேர்த்து வைக்கப் பட்டிருக்கும் கலமான மனத்தை உடையவன் நான். இத்தகைய என்னை, வலிய வந்து மேலும் மேலும் உள்ளத்தை உருகச் செய்து, தலை மீது இருகைகளையும் குவித்து வணங்கவும், கண்ணீர் சிந்தி அழவும், செய்தனை! நின் திருவடிகளே நிலையான புகல் என்ற என்னை இரக்கம் கொண்டு காக்க வேண்டியது நின் கடமையாகும்.

296. 'அஞ்சேல்' என அருள்வது எப்போது?

உனக்குநான் அடித்தொண் டாகி
உன்னடிக்கு அன்பு செய்ய
எனக்குநீ தோற்றி அஞ்சேல்
என்னும்நாள் எந்த நாளோ
மனக்கிலே சங்கள் தீர்ந்த
மாதவர்க் கிரண்டற் றோங்கும்
தனக்குநேர் இல்லா ஒன்றே
சச்சிதா னந்த வாழ்வே!

296. மனத்தில் உள்ள கவலைகள் எல்லாம் நீங்கப் பெற்ற துறவியர்க்கு இரண்டு என்ற தன்மையில்லாது

ஒன்றாய் விளங்கும் தனக்கு ஒப்பில்லாத ஒரு பொருளே! உண்மை அறிவின்ப வாழ்வே! நினக்கு அடியேன் அடிமையாகி, நின் திருவடிகளுக்கு அன்பினைச் செய்திட, எனக்கு நின் திருவருள் தோற்றத்தைத் தந்து 'அஞ்சவேண்டா' என்று கூறும் நாள் எந்த நாளோ!

297. ஊழ்வினை நீங்குமோ? உன்னை அடைவேனோ?

வாழ்வென வயங்கி என்னை
    வசம்செய்து மருட்டும் பாழ்த்த
ஊழ்வினைப் பகுதி கெட்டிங்கு
    உன்னையும் கிட்டு வேனோ
தாழ்வெனும் சமயம் நீங்கித்
    தமையுணர்ந் தோர்கட் கெல்லாம்
சூழ்வெளிப் பொருளே முக்கண்
    சோதியே அமரர் ஏறே!

297. பயனற்றது என்று சான்றோர் கருதும் சமயத்தை ஒழித்துத் தம்மைத் தாமே உணர்ந்தவர்க்கு எல்லா வகையானும் ஆராயப்படுகின்ற கண்கூடாகக் காணப்படும் பொருளே! மூன்று கண்களையுடைய பேரொளியே! வானவரின் தலைவ! உலகவாழ்க்கை என விளங்கி என்னைத் தன்வயப்படுத்தி மயக்கும் பாழான ஊழ்வினையின் கூறு அழிந்து ஒழிந்து நின்னையும் நான் அடைவேனோ!

298. தாபம் அகலுமோ?

ஏறுவாம் பரியா ஆடை
    இருங்கலை யுரியா என்றும்
நாறுநற் சாந்தம் நீறா
    நஞ்சமே அமுதாக் கொண்ட

கூறருங் குணத்தோய் உன்தன்
குரைகழல் குறுகின் அல்லால்
ஆறுமோ தாப சோபம்
அகலுமோ அல்லல் தானே?

298. காளையானது தாவிச் செல்கின்ற குதிரையாகவும், பெரிய மானின் தோலானது உடையாகவும், திருநீறு எக்காலத்தும் மணம் கமழும் நல்ல சந்தனமாகவும், கொடிய ஆலகால நஞ்சு உணவாகவும், விரும்பிக் கொண்ட கூறுவதற்கரிய மங்கல குணங்களையுடையவனே! நின் ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடிகளை அடைந்தால் அல்லாமல் பிறவி வெப்பம் நீங்குமோ? வேட்கை தணியுமோ? இருவினைத் துன்பங்கள் அகலுமோ?

299. எனக்கு நன்மை தருவாயோ?

தானமும் தவமும் யோகத்
தன்மையும் உணரா என்பால்
ஞானமும தெவிட்டா இன்ப
நன்மையும் நல்கு வாயோ
பானலங் கவர்ந்த தீஞ்சொல்
பச்சிளங் கிள்ளை காண
வானவர் இறைஞ்ச மன்றுள்
வயங்கிய நடத்தி னானே!

299. பாலின் இனிய சுவையையுடைய இனிய சொல்லைப் பேசுகின்ற பசுமையான கிளிபோன்ற உமையம்மையார் காண, தேவர்கள் வணங்கித் துதிக்க, மன்றிலே விளங்கும் கூத்து இயற்றுபவனே! கொடையும் நல்ல தவமும் யோகத்தின் இயல்பும் ஆகியவற்றை அறியாத என்னிடத்தில் ஞானத்தையும் தெவிட்டாத இன்பத்தையும் அருள்வாயோ!

300. தளர்வேனோ நான்?

நடத்தியிவ் வுலகை எல்லாம்
நாத நீ நிறைந்த தன்மை
திடத்துடன் அறிந்தா னந்தத்
தெள்ளமுது அருந்தி டாதே
விடத்திர ளனைய காம
வேட்கையில் அழுந்தி மாயைச்
சடத்தினை மெய்யென் றெண்ணித்
தளரவோ தனிய னேனே?

300. எம் தலைவ! இந்த வுலகத்தை யெல்லாம் இயக்கி நீ எங்கும் நிறைந்திருக்கும் தன்மையினை உறுதி யுடனே அறிந்து பேரின்பம் என்ற தெளிவான அமுதத்தை உண்ணாமல் நஞ்சின் கூட்டத்தைப் போன்ற மாதர்மீது கொள்ளும் ஆசையில் முழுகி மாயையின் காரியமான உடலை நிலையானது என்று கருதித் தனியனான நான் தளர்ச்சி யடையவோ?

301. வனிதையர் மயக்கத்தில் வருந்துவேனோ?

தனிவளர் பொருளே மாறாத்
தண்ணருங் கருணை பூத்த
இனியகற் பகமே முக்கண்
எந்தையே நினக்கன் பின்றி
நனிபெருங் குடிலங் காட்டும்
நயனவேல் கரிய கூந்தல்
வனிதையர் மயக்கில் ஆழ்ந்து
வருந்தவோ வம்ப னேனே!

301. தனக்கு நிகர் இல்லாது வளர்ந்த பொருளே! மாறாத குளிர்ச்சியுடைய கிடைத்தற்கு அரிய கருணையான மலர் மலர்ந்த இனிய கற்பக மரமே! மூன்று கண்களை

யுடைய எம் தந்தையே! தீயவனான நான் நின்னிடத்து அன்பு இல்லாது மிகவும் பெரிய கொடுமையைச் செய்கின்ற கண்களான வேல்களையும், கரிய கூந்தலையுமுடைய மங்கையர்மீது கொள்ளும் ஆசையான குழியில் முழுகி வருத்தம் அடையவோ!

22. சிவன் செயல்

(இப்பகுதியின் தொடக்கச் செய்யுள் 'சிவன் செயல்' என்னும் தொடக்கத்தை உடையது. எனவே இப்பெயர் பெற்றது. இப்பகுதியில் பத்துச் செய்யுட்கள் உள்ளன. அந்தாதி வகையில் இஃது அமைந்துள்ளது.)

302. பதைக்கின்றேன் பாவி நான்!

சிவன்செய லாலே யாதும்
வருமெனத் தேறேன் நாளும்
அவம்வரும் நினைவை யெல்லாம்
அகற்றிலேன் ஆசை வெள்ளம்
கவர்ந்து கொண் டிழுப்ப அந்தக்
கட்டிலே அகப்பட் டையோ
பவந்தனை ஈட்டி ஈட்டிப்
பதைக்கின்றேன் பாவி யேனே.

302. 'சிவபெருமானின் செயலால் எதுவும் வரும்' என்று நான் தெளியேன். எந்த நாளும் பயன் அளிக்காத எண்ணங்களை எல்லாம் நான் ஒழித்திடவில்லை. ஆசை எனப்படும் வெள்ளமானது கவர்ந்து இழுக்க அந்தப் பிணிப்பில் நான் சிக்கி, ஐயோ, பாவத்தைத் திரட்டித் திரட்டிப் பாவியேன் பதைக்கின்றேன்.

303. அமுதமே என்னாது அலைகின்றேன்!

பாவியேன் இனியென் செய்கேன்
பரமனே பணிந்துன் பாதம்
சேவியேன் விழிநீர் மல்கச்
சிவசிவ என்று தேம்பி
ஆவியே நிறைய வந்த
அமுதமே என்னேன் அந்தோ
சாவிபோம் சமயத் தாழ்ந்து
சகத்திடைத் தவிக்கின் றேனே.

303. தீவினையனான நான் இனி என்ன செய்வேன்? மேலானவனே! நின் திருவடிகளை வணங்கித் தொழ மாட்டேன். கண்களில் நீரானது பெருகப் பெற்றுச் "சிவ சிவ" என்று கூறி வாடி, "உயிரே பூரணமான அமுதமே!" என்று கூறித் துதிக்க மாட்டேன். ஐயோ, பாழாய்ப் போகும் அயல் சமயங்களில் அழுந்தி உலகத்தில் தவிக்கின்றேன்.

304. என்னைக் கைவிடாதே!

இடைந்திடைந் தேங்கி மெய்புள கிப்ப
எழுந்தெழுந் தைய நின் சரணம்
அடைந்தனன் இனிநீ கைவிடல் உனக்கே
அபயம்என்று அஞ்சலி செய்துள்
உடைந்துடைந் தெழுது சித்திரப் பாவை
ஒத்துநான் அசைவற நிற்பத்
தொடர்ந்துநீ எனையாட் கொள்ளும்நாள் என்றோ
சோதியே ஆதிநா யகனே!

304. பேரொளியே! ஆதி முதல்வனே! விலகி விலகி அழுது உடல் புளகம் கொள்ளப் பலமுறை வணங்கி எழுந்து "ஐயனே, நின் அடிகளை யான் அடைந்தேன், இனி

என்னைக் கைவிடாதே! நினக்கே யான் அடைக்கலம் ஆகின்றேன்'' என்று விண்ணப்பம் செய்து, வணங்கி, மனம் உடைந்து உடைந்து, எழுதப்பட்ட ஓவிய உருவத்தைப் போன்று யான் அசையாதபடி நிற்க, நீ அடியேனை விடாமல் வலியவந்து பற்றி ஆட்கொள்ளும் நல்ல நாளானது எந்நாள்?

305. புலன் ஐந்தும் தீயினும் கொடிதே!

ஆதியாய் நடுவாய் அந்தமாய்ப் பந்தம்
யாவுமற் றகம்புறம் நிறைந்த
சோதியாய்ச் சுகமாய் இருந்தஎம் பெருமான்
தொண்டனேன் சுகத்திலே யிருக்கப்
போதியா வண்ணம் கைவிடல் முறையோ
புன்மையேன் என்செய்கேன் மனமோ
வாதியா நின்ற தன்றியும் புலன்சேர்
வாயிலோ தீயினுங் கொடிதே.

305. முதலாகி நடுவாகி இறுதியாகப் பற்றுக்கள் எல்லாம் நீங்கி உள்ளேயும் வெளியேயும் நிறைந்து விளங்கிய ஒளிப்பிழம்பாய் இன்பமாய் வீற்றிருக்கின்ற எம் தலைவ! அடியவனான நான் இன்ப நிலையில் இருக்கும்படி உணர்த்தியருளாத வகையில் கைவிடுவது முறையோ! அற்பனான நான் என் செய்வேன்! என் உள்ளமோ என்னைத் துன்புறுத்துகின்றது! ஐம்புலன்களும் உண்டாவதற்குரிய ஐம்பொறிகளோ தீயைவிட மிகவும் கொடியவையாகும்!

306. தாயிலாப் பிள்ளைப்போல் தவிக்கின்றேன்!

வாயில்ஓர் ஐந்திற் புலன்எனும் வேடர்
வந்தெனை ஈர்த்து வெங் காமத்
தீயிலே வெதுப்பி உயிரொடும் தின்னச்
சிந்தைநைந் துருகி மெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்

தாயினும் கருணையாய் மன்றுள்
நாயக மாகி ஒளிவிடு மணியே
நாதனே ஞானவா ரிதியே!

306. பெற்ற தாயைவிட அன்பு காட்டும் பொன்னம்பலத்தில் தலைவனாகி ஒளிர்கின்ற மாணிக்கமே! முதல்வனே! ஞானக்கடலே! பொறிகளான ஓர் ஐந்து வழிகளில் ஐந்து புலன்கள் என்ற வேடர்கள் வந்து என்னை இழுத்துக் கொடிய காமத்தீயிலே இட்டுச் சுட்டு உயிருடன் தின்கின்றனர். அதனால் உள்ளம் வருந்தி இளகி உடலை மறந்து தாய் இல்லாத குழந்தையைப் போல் திரிந்து வருத்தம் அடைந்தேன்,

307. உன்னை நினைந்தேன்! உய்தி பெற்றேன்!

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடும்
நாட்டமே நாட்டத்துள் நிறைந்த
வானமே எனக்கு வந்துவந் தோங்கும்
மார்க்கமே மருளர்தாம் அறியா
மோனமே முதலே மூத்திநல் வித்தே
முடிவிலா இன்பமே செய்யும்
தானமே தவமே நின்னைநான் நினைந்தேன்
தமியனேன் தனைமறப் பதற்கே

307. ஞானமே வடிவாகித் தேடுவார் தேடும் பொருளே! அப்பொருள்கள் யாவற்றிலும் தங்கும் வெளியே! எனக்கு அண்மையில் வந்து வந்து உயர்ந்து தோன்றும் நெறியே! மயக்கத்தை உடையவர் அறிந்திடாத மௌனமே! தலைவ! வீடுபேற்றை விளக்கத்தக்க நல்ல விதையே! முடிவு இல்லாத இன்பத்தை அளிக்கின்ற கொடையே! தவமே! எளியேன் என்னை மறந்து விடுவதற்கு நான் நின்னை நினைந்தேன்.

308. உன்னை வணங்கப் பிறவி வேண்டும்

மறமலி உலக வாழ்க்கையே வேண்டும்
வந்துநின் அன்பர்தம் பணியாம்
அறமது கிடைக்கின் அன்றியா னந்த
அற்புத நிட்டையின் நிமித்தம்
துறவது வேண்டும் மௌனியாய் எனக்குத்
தூயநல் லருள்தரின் இன்னம்
பிறவியும் வேண்டும் யானென திறக்கப்
பெற்றவர் பெற்றிடும் பேறே!

308. 'யான்' என்ற அகங்காரமும் 'எனது' என்ற மமகாரமும் நீங்கப் பெற்றவர் அடையும் பேறே! நின் அடியார்களின் தொண்டான அறமானது எனக்குக் கிடைக்கப் பெற்றால், பாவமே மிக்க இவ்வுலக வாழ்வே எனக்கு வேண்டும். அங்ஙனம் அடியாரின் தொண்டு கிடைக்காதபோது இன்பத்தை உண்டாக்குகின்ற வியக்கத் தக்க நிட்டை கூடும் பொருட்டு எனக்குத் துறவு வேண்டும். நீ மௌன குருவாய் வந்து எனக்கு நல்ல தூய அருளைத் தருவதாயின் இனி எனக்குப் பிறவியும் வேண்டும்.

309. கற்றதனால் ஆய பயன் என்?

பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே
பெருகிய கருணைவா ரிதியே
நற்றவத் துணையே ஆனந்தக் கடலே
ஞாதுரு ஞானஞே யங்கள்
அற்றவர்க் கறாத நட்புடைக் கலப்பே
அனேகமாய் நின்னடிக்கு அன்பு
கற்றதும் கேள்வி கேட்டதும் நின்னைக்
கண்டிடும் பொருட்டன்றோ காணே.

309. மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே! பெருகிய அருள்வெள்ளமே! நல்ல தவத்துக்கு உதவி செய்பவனே! இன்பக்கடலே! காண்பவன், காட்சி, காணப்படும் பொருள் என்னும் இந்த மூன்றும் நீங்கியவர்க்கு நீங்காத நட்புடைய கூட்டுறவே! பலவாய்க் கற்றதும் கேள்வியாய்க் கேட்டதும் நின் திருவடிகளுக்கு அன்பு செய்து நின்னைக் காணும் பொருட்டல்லவோ!

310. என் மன இருளைப் போக்கும் மதியே!

அன்றுநால் வருக்கும் ஒளிநெறி காட்டும்
அன்புடைச் சோதியே செம்பொன்
மன்றுள்முக் கண்ணும் காளகண் டமுமாய்
வயங்கிய வானமே என்னுள்
துன்றுகூர் இருளைத் துரந்திடும் மதியே
துன்பமும் இன்பமும் ஆகி
நின்ற வா தனையைக் கடந்தவர் நினைவே
நேசமே நின்பரம் யானே.

310. முற்காலத்தில் சனகர் முதலிய முனிவர் நால்வர்க்கும் அருள் ஒளியுடன் கூடிய வழியைக் காட்டிய அன்புடைய ஒளிப் பிழம்பே! பொன்னம்பலத்தில் மூன்று கண்களும் கரிய கழுத்துமாய் விளங்கிய அறிவு வெளியே! (இரகசியமே!) என்னிடம் பொருந்திய மிக்க அறியாமை இருளை ஒட்டும் ஞான சந்திரனே! துன்பமும் இன்பமும் ஆகி நிலையான வேதனைகளை விட்ட அறிஞரின் எண்ணமே! அன்பே! நான் நின் சுமையாவேன்.

311. யாதினும் நிறைந்த பேரொளியே

யானெனல் காணேன் பூரண நிறைவில்
யாதினும் இருந்தபே ரொளிநீ
தானென நிற்கும் சமத்துற என்னைத்

தன்னவ னாக்கவும் தகுங்காண்
வானென வயங்கி ஒன்றிரண் டென்னா
மார்க்கமாம் நெறிதந்து மாறாத்
தேனென ருசித்துள் அன்பரைக் கலந்த
செல்வமே சிற்பர சிவமே!

311. மேகத்தைப் போல விளங்கி ஒன்று என்றும் இரண்டு என்றும் கூறப்படாத நல்ல நெறியான வழியை அளித்த மாறாத தேனைப் போன்று சுவையைத் தந்து அன்பர்களை உள்ளே கலந்து நின்ற செல்வமே! ஞானமான மங்கலமே! முழுமையான நிறைவில் 'யான்' என்பதை யான் அறியேன். எப்பொருளிலும், தங்கிய பேரொளி நீ தான் என்று நிற்கும் சமய நிலையில் பொருந்துமாறு என்னை உன்னுடையவனாய் ஆக்கிக் கொள்ளவும்.

23. தன்னை யொருவர்

(இப்பகுதியின் முதற் செய்யுளினது தொடக்கம் 'தன்னை ஒருவர்' என்பதாகும். ஆதலால் இப்பெயர் பெற்றது. இதில் பத்துச் செய்யுட்கள் உள்ளன. இப்பகுதி அந்தாதியாய் அமைந்துள்ளது.)

312. இனியேனும் நின்னை அடைவேனோ?

தன்னை ஒருவர்க்கு அறிவரிதாய்த்
தானே தானாய் எங்கும் நிறைந்
துன்னற் கரிய பரவெளியாய்
உலவா அமுதாய் ஒளிவிளக்காய்
என்னுள் கலந்தாய் யான் அறியா
திருந்தாய் இறைவா இனியேனும்
நின்னைப் பெறுமா றெனக்கருளாம்
நிலையைக் கொடுக்க நினையாயோ?

312. இறைவ, முழுமுதற் பொருளான நீ மற்றொருவர்க்கு, அறிதற்கு அரிதாகியுள்ளாய்; தனக்குத்தானே ஒப்பாகியுள்ளாய்; எங்கும் நிறைந்து உள்ளத்தால் நினைப்பதற்கரிய மேலான அறிவு வெளியாகியுள்ளாய்; கேடில்லாத அமிழ்தமாகி, ஒளியுடைய விளக்காகி, என்னுள் கலந்து இருந்தாய். அவ்வாறு நீ இருந்தும் யான் நின்னை அறியாதபடி மறைந்திருந்தாய், இனியேனும் உன்னை நான் அடையும்படி எனக்குத் திருவருள் நிலையை அளித்தருள நினைக்க மாட்டாயோ?

313. உனை மறவாது இருப்பேனோ?

நினையும் நினைவுக் கெட்டாத
 நெறிபெற் றுணர்ந்த நெறியாளர்
வினையைக் கரைக்கும் பரமவின்ப
 வெள்ளப் பெருக்கே நினதருளால்
மனைவி புதல்வர் அன்னைபிதா
 மாடு வீடென் றிடும்மயக்கந்
தனையும் மறந்திங் குனைமறவாத்
 தன்மை வருமோ தமியேற்கே.

313. எண்ணும் எண்ணத்துக்கும் எட்டாத மௌன நெறியை அடைந்து அந்த நெறியால் உன்னை அறிந்து கொண்ட மேலான நெறியினரின் வினைகளை நாள்தோறும் அழிக்கும் மேலான வெள்ளப் பெருக்கே! உன் திருவருளால் மனைவி, மக்கள், தாய், தந்தை, செல்வம், வீடு எனக் கூறிடும் மயக்கத்தையும் மறந்து, இங்கு நின்னை மறவாத குணம் ஆதரவற்ற எனக்கு உண்டாகுமோ?

314. என் இதயம் என்ன கல்லா?

வரும்போம் என்னும் இருநிலைமை
 மன்னாது ஒருதன் மைத்தாகிக்

கரும்போ தேனோ முக்கனியோ
என்ன என்னுட் கலந்துநலம்
தரும்பே ரின்பப் பொருளே நின்
தன்னை நினைந்து நெக்குருகேன்
இரும்போ கல்லோ மரமோஎன்
இதயம் யாதென் றறியேனே

314. வருதலும் போதலும் ஆகின்ற இரண்டு வகைப் பட்ட நிலையை எய்தாது, ஒருவழிப்பட்ட நிலைமையை அடைந்து 'கரும்பின் சாறோ, தேனோ, முப்பழங்களோ!' எனக் கூறும் வண்ணம் என்னிடத்தில் கலந்து எனக்கு நன்மையை அளிக்கும் பேரின்பப் பொருளே! நான் நின்னை எண்ணி நெகிழ்ந்து மனம் உருக வில்லை! இத்தகைய என் இதயமானது இரும்போ, கருங்கல்லோ, மரமோ, இவற்றுள் எந்த ஒன்று? யான் இதனை அறியேன்.

315. நின்னை அறிவேனோ நான்?

அறியும் தரமோ நான்உன்னை
அறிவுக் கறிவாய் நிற்கையினால்
பிறியுந் தரமோ நீயென்னைப்
பெம்மா னேபே ரின்பமதாய்ச்
செறியும் பொருள்நீ நின்னையன்றிச்
செறியாப் பொருள்நான் பெரும்பேற்றை
நெறிநின் றொழுக விசாரித்தால்
நினக்கோ இல்லை எனக்காமே.

315. பெருமானே! உயிரின் அறிவுக்கு அறிவாகி நிற்பதால்ஒருவன் பிறபொருள் ஒன்றை அறிவதைப் போல் யான் நின்னைத் தெரிந்து கொள்ளும் தன்மையுண்டோ? பேரின்பமாக ஆகி எல்லாவற்றிலும் கலந்திருக்கும் பொருள் நீ. அதனால் என்னை நீ பிரிந்திருக்க இயலுமோ? உன்னை யல்லாது அமையாத பொருள் யான் அடையும் பயனை,

நன்னெறியினின்று ஆராய்ந்தால், அப்பயன் நினக்கு இல்லை எனக்கே யாகும்.

316. என் விருப்பம்?

எனதென் பதும்பொய் யான்எனல்பொய்
எல்லாம் இறந்த இடங்காட்டும்
நினதென் பதும்பொய் நீஎனல்பொய்
நிற்கும் நிலைக்கே நேசித்தேன்
மனதென் பதுமோ என்வசமாய்
வாரா தைய நின்அருளோ
தனதென் பதுக்கும் இடம் காணேன்
தமியேன் எவ்வாறு உய்வேனே!

316. என் பொருள் என்று எதனையும் கூறுவதும் பொய். யான் என்று கூறுவதும் பொய். எல்லாவற்றையும் கடந்த இடத்தைக் காட்டும் நினது என்பதும் பொய், நின் காலங்களை நீ என்பதும் பொய். ஆதலால் நிலையான பேற்றிற்கே நான் விருப்பம் கொண்டேன். மனம் எனக் கூறப்படும் பொருளோ என் வசமாக இருப்பதில்லை! உன் திருவருளோ தன்னுடையது என்று சொல்வதற்கும் இடம் இல்லை. எளியேன் எங்ஙனம் பிழைப்பேன்?

317. அது போதும்!

உய்யும் படிக்குன் திருக்கருணை
ஒன்றைக் கொடுத்தால் உடையாய் பாழ்ம்
பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடைபட் டோடும் நன்னெறியாம்
மெய்யும் அறிவு பெறும்பேறும்
விளங்கும் எனக்குன் அடியார்பால்

செய்யும் பணியும் கைகூடும்
சிந்தைத் துயரம் தீர்ந்திடும்.

317. எல்லா வுலகங்களையும் உடையவனே! நல்ல கதியை அடையும் பொருட்டு நின் திருவருள் ஒன்றை அளித்தால் பாழான பொய்யும் ஆசையும் பொறாமையும் புடை பெயர்ந்து ஓடிவிடும். நன்னெறிக்குக் காரணமான உண்மையும் அறிவால் பெறும் பயனும் நன்கு சிறந்து விளங்கும். அடியவரிடத்துச் செய்யக் கூடிய தொண்டும எனக்குக் கை கூடும். உள்ளத்தின் துன்பமும் நீங்கிவிடும்.

318. எனக்கு எப்படி அருள்வாய்?

சிந்தைத் துயர்என் றொருபாவி
சினந்து சினந்து போர்முயங்க
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை
நிலையென்று உணர்ந்தே நிற்கின்றேன்
எந்தப் படிஉன் அருள் வாய்க்கும்
எனக்கெப் படிநீ அருள்செய்வாய்
பந்தத் துயரற் றவர்க்கெளிய
பரமா னந்தப் பழம்பொருளே!

318. பிறப்பினால் வந்த துன்பத்தை விட்டவர்க்கு எளியவனான மேலான இன்பத்தை அளிக்கின்ற பழைமை யுடைய பொருளே! உள்ளத்துத் துன்பம் என்கின்ற ஒரு பாவி சினந்து சினந்து போரைச் செய்ய, நிந்தனைக்கு இடமாகி, இவ்வுலக வாழ்வை நிலையானது என்று அறிந்தே நிற்கின்றேன். இத்தகைய எனக்கு நின் திருவருள் எப்படிக் கிட்டும்? எனக்கு எவ்வாறு நீ அருள்செய்வாய்?

319. அருளைப் பொழியும் முகிலே!

பொருளைப் பூவைப் பூவையரைப்
பொருளென்று எண்ணும் ஒருபாவி

இருளைத் துரந்திட் டொளிநெறியை
என்னுள் பதிப்ப தென்றுகொலோ
தெருளத் தெருள அன்பர் நெஞ்சம்
தித்தித் துருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குணமுகிலே
அறிவா னந்தத் தாரமுதே!

319. உள்ளமானது தெளிவைக் கொள்ளக் கொள்ள அடியாரின் உள்ளத்தில் இனித்து உருகும்படி தெவிட்டாத அருள் என்னும் மழையைப் பெய்கின்ற நல்ல குணம் வாய்ந்த மேகமே! அறிவு வடிவான ஆனந்த மயமான அரிய அமிழ்தமே! செல்வத்தையும் நிலத்தையும் மங்கையரையும் உண்மைப் பொருள்கள் என்று மதிக்கின்ற ஒரு பாவி யான். அறியாமை இருளை நீக்கிவிட்டு ஒளியுடைய நல்ல நெறியை என் உள்ளத்தில் பதியச் செய்வது எந்நாளோ?

320. என் பந்தம் அற்றொழியும்!

ஆரா அமிர்தம் விரும்பினர்கள்
அறிய விடத்தை அமிர்தாக்கும்
பேரா னந்தச் சித்தன்எனும்
பெரியோய் ஆவிக் குரியோய் கேள்
காரார் கிரக வலையினிடைக்
கட்டுண் டிருந்த களைகளெல்லாம்
ஊரால் ஒருநாள் கையுணவேற்
றுண்டால் எனக்கிங் கொழிந்திடுமே

320. தெவிட்டாத அமிழ்தத்தை உண்ண விரும்பிய தேவர்கள் அறிய, நஞ்சையுண்டு அமிழ்தமாக்கிய பேரின்பச் சித்தன் என்ற பெரியவனே! என் உயிர்க்கு உரியவனே! கேட்பாய்! கருமையுடைய இல்லற வலையில் கட்டுப்பட்டிருந்ததால் உண்டான துன்பங்கள், ஒவ்வொரு நாளும்

ஊர்தோறும் போய் கைப்பிச்சை பெற்று உண்பேனாயின் எனக்கு ஒழிந்து விடும்.

(கனைகள் - துன்பங்கள்)

321. மதியில் தோன்றிய மாசு!

எனக்கென் றிருந்த உடல்பொருளும்
யானும் நினஎன்று ஈந்தவண்ணம்
அனைத்தும் இருந்தும் இலவாகா
அருளாய் நில்லா தழிவழக்காய்
மனத்துட் புகுந்து மயங்கவும் என்
மதிக்குள் களங்கம் வந்ததென்னோ
தனக்கொன் றுவமை யறநிறைந்த
தனியே தன்னந் தனிமுதலே!

321. தனக்கு உவமை ஒன்று இல்லாத எங்கும் நிறைந்த தனிப் பொருளே! ஒப்பில்வாத முதல்வனே! 'நின்னால் அளிக்கப்பட்டு என்னிடம் உள்ள உடல் பொருள் ஆவி மூன்றும் நின்னுடையவை; என்னிடம் இல்லாதவை' எனக் கொண்டு, நின் திருவருள் வழி நில்லாமல், அழி வழக்காக,என்னுடையவை என என் உள்ளத்துள் தோன்றி மயங்கினேன். இங்ஙனம் மயங்குமாறு என் உள்ளத்தில் உண்டான குற்றம் யாது?

24. ஆசையெனும்

(இப்பகுதியின் முதற்செய்யுள் 'ஆசையெனும்' என்ற தொடக்கத்தையுடையது. ஆதலால் இப்பகுதி இப்பெயர் பெற்றது. இதில் நாற்பது செய்யுட்கள் உள்ளன)

322. ஆசையின்றேல் அருள் உண்டு

ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவுமனம்
அலையும் காலம்
மோசம்வரும் இதனாலே கற்றதும்கேட் டதும்தூர்ந்து
முத்திக் கான
நேசமும்நல் வாசமும்போய்ப் புலனாயிற் கொடுமைபற்றி
நிற்பர் அந்தோ
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே நிராசைஇன்றேல்
தெய்வ முண்டோ?

322. ஆசை என்று கூறப்படும் பெருங்காற்றில் இலவம்பஞ்சு அலைவதைப் போன்று உள்ளம் அலையும் காலத்தில் அழிவு உண்டாகும். இதனால் கற்றவையும் கேட்டவையும் வீணாகிப் பயன் தாராது போகும்; வீடு பேற்றுக்குரிய விருப்பமும் நல்ல சிவ தலத்தில் உறையும் உறைவும் நீங்கிடும். ஐம்புலன் வழியாகிக் கொடிய கடலில் அழுந்தி ஆசை என்ற வலையினால் அவர்கள் கட்டப்படுவர். ஆதலால் ஒளி மிக்கு அருள் பழுத்த மேலான பொருளே! ஆசையின் அழிவு இல்லையானால் ஒருவனுக்குத் தெய்வம் உளதாகுமோ?

323. அருள் நிறைவில் இருப்பது எது?

இரப்பானங் கொருவனவன் வேண்டுவகேட் டருள்செய்என
ஏசற் றேதான்
புரப்பான்தன் அருள் நாடியிருப்பதுபோல் எங்கும்நிறை
பொருளே கேளாய்
மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்டிரங்கெனவே
மௌனத் தோடந்
தரப்பான்மை அருள்நிறைவில் இருப்பதுவோ பராபரமே
சுகச நிட்டை.

323. எங்கும் நிறைந்த மேலான பொருளே! இரக்கும் ஒருவன் தனக்கு வேண்டியவற்றை, செவியால் கேட்டு அருள் செய்ய வேண்டும் என்று பழிப்பற்றுப் புரவலனின் அருளை நாடியிருப்பதைப் போன்று, மரத்தைப் போன்ற தன்மை யுடைய மனத்தையுடைய யான் வேண்டியவற்றைத் திருச் செவியில் கேட்டுஇரங்கியருள்வாய்என்றுவிண்ணப்பித்தேன். மோன நிலையுடன் விண்ணின் தன்மையை ஒத்த மேலான பொருளே! நிட்டை என்பது நின்னை நாடி நிற்பது தானே?

324. நல்லறத்தின் மேன்மை

சாட்டையிற் பம்பர சாலம் போலெலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறஅருட் செயல் நிற்றியேல்
விட்டறந் துறவறம் இரண்டும் மேன்மையே.

324. என் உள்ளமே! கயிற்றால் சுழற்றப்படுகின்ற பம்பரக் கூட்டங்கள் போல் எல்லா உயிர்களையும் இறைவன் ஆட்டுவிப்பான் என்று தெரிந்து கவலை சிறிதும் இல்லாமல், திருவருள் செய்கைக்கு உட்பட்டு நிற்பாயானால், இல்லறம் துறவறம் என்ற இரண்டும் மேன்மை உடையனவே யாகும்!

(சாட்டை - பாசம். பம்பர சாலம் - பம்பரக் கூட்டம்! உயிர்கள்)

325. என்ன நெஞ்சமோ, என் நெஞ்சம்?

தன்னெஞ்சம் நினைப்பொழியாது அறிவிலிநான் ஞான
தன்மை பேச [மெனும்
உன்னெஞ்சம் மகிழ்ந்தொருசொல் லுரைத்தனையே
உருகேன் ஐயா [அதனைஉன்னி
வன்னெஞ்சோ இரங்காத மரநெஞ்சோ இரும்பு
வயிர மான [நெஞ்சோ

கன்னெஞ்சோ அலதுமண்ணாங் கட்டிநெஞ்சோ
        கருதிற் றானே. [எனது நெஞ்சம்

325. இறைவனே! உள்ளமானது தன்னிடம் உள்ள பயனற்ற எண்ணங்கள் நீங்கப் பெறாத அறிவிலியான். இத்தகைய யான், 'ஞானம் என்று சொல்லப்படும் தன்மையை எடுத்துப் பேசிட நின் உள்ளம் மகிழ்ந்து ஒரு சொல் கூறினாயே! அச்சொல்லை நினைத்து நினைத்து நான் உருகேன். ஆதலால் ஆராயுமிடத்து என் மனமானது வலிய மனமோ? இரக்கம் இல்லாத மரமனமோ? இரும்பு மனமோ? அல்லது மண்ணாங்கட்டி மனமோ? அறியேன்!

326. இன்ப சோபனம்

வாழி சோபனம் வாழிநல் லன்பர்கள்
சூழ வந்தருள் தோற்றமும் சோபனம்
ஆழி போல் அருளையன் மவுனத்தால்
ஏழை யேன்பெற்ற இன்பமும் சோபனம்!

326. நான் பாடும் வாழ்த்தானது வாழி! நன்மையைச் செய்கின்ற அன்பர்கள் வாழி; அடியேனைச் சூழ்ந்து வந்து அருள் செய்த திருவருள் தோற்றமும் வாழி! கடல் போன்று அருளையுடைய மௌன குருவின் மவுன அறிவுரையால் யான் அடைந்த இன்பமும் வாழி!

(சோபனம் — வாழ்த்து)

327. பரஞ்சோதியின் தன்மை

கொடுக்கின் றோர்கள்பால் குறைவையா
        தியானெனும் குதர்க்கம்
விடுக்கின் றோர்கள்பாற் பிரிகிலா
        துள்ளன்பு விடாதே

அடுக்கின் றோர்களுக்கு இரங்கிடும்
    தண்டமிழ் அலங்கல்
தொடுக்கின் றோர்களைச் சோதியா
    ததுபரஞ் சோதி.

327. குளிர்ந்த தமிழால் ஆன மாலைகளைத் தொடுப்பவர்களைச் சோதிக்காததான மேலான பேரொளி, கொடையாளரிடம் குற்றம் காணாது; யான் என்ற செருக்கை விட்டவரிடத்தை நீங்கியிராது; மனத்தில் அன்பு நீங்காமல் தம்மை அடைபவர்க்கு இரங்கும்.

328. மாயையில் ஆழ்த்தாதே!

உலக மாயையி லேஎளி யேன்தனை
    உழல விட்டனையே உடையாய் அருள்
இலகு பேரின்ப வீட்டினில் என்னையும்
    இருத்தி வைப்பதெக்காலம் சொலாய் எழில்
திலக வாணுதல் பைந்தொடி கண்ணிணை
    தேக்க நாடகம் செய்தடி யார்க்கெலாம்
அலகி லாவினை தீர்க்கத் துசங்கட்டும்
    அப்பனே அருளானந்தச் சோதியே!

328. அழகுடைய பொட்டினை அணிந்த நெற்றியும் பசிய வளையலும் உடைய உமையம்மையாரின் இருவிழிகள் நிறையுமாறு கூத்தையாடி, அடியார்களுக்கெல்லாம் அளவு இல்லாத வினைகளைத் தீர்ப்பதற்காகக் கொடி கட்டிய தந்தையே! அருளையும் இன்பத்தையும் உடைய பேரொளியே! என்னை உலக மாயையில் அலையவிட்டாயே! என்னை ஆளாய் உடையவனே! நின் திருவருள் விளங்கும் பேரின்ப வீட்டில் என்னையும் இருக்கும்படி செய்வது எக் காலம்?

329. நன்னிலை ஈதன்றி வேறில்லை

முன்னிலைச் சுட்டொழிதி யெனப் பல்காலும்
மொழிந்தேனே நின் [நெஞ்சே நான்
தன்னிலையைக் காட்டாதே என்னைஒன்றாக் சுட்டாதே
சரண்நான் போந்த
அந்நிலையே நிலை அந்த நிலையிலே சித்திமுத்தி
அனைத்தும் தோன்றும்
நன்னிலைஈ தன்றியில்லை சுகம் என்றே சுகர்முதலோர்
நாடி னாரே.

329. என் உள்ளமே! முன்னிலையாகச் சுட்டிக் கூறுவதை ஒழிப்பாயாக என்று பல முறையும் நான் சொன்னேனே! நின்னுடைய நிலைமையினைக் காட்டாமலும் என்னை ஒரு பொருளாக வைக்காமலும் நான் அடைக்கலமாய் அடைந்த அந்நிலையே நன்னிலையாகும், அந்த நிலையிலே சித்திகளும் வீடுபேறும் மற்றும் உள்ளவையும் உண்டாகும். இதுவன்றி வேறு நல்ல நிலை ஒன்றில்லை. இதுவே இன்பம் என்று சுக முனிவர் முதலியவர் இதனை விரும்பினர்.

330. யான் எனும் பேய் கெடுக!

அத்துவிதம் பெறும்பேறென்று அறியாமல் யான்எனும்
அகந்தை யோடு [பேய்
மத்தமதி யினர்போல மனங்கிடப்ப இன்னம் இன்னம்
வருந்து வேனோ
சுத்த பரிபூரணமாய் நின்மலமாய் அகண்டிதமாய்ச்
சொரூபா னந்தச்
சத்திகள்நீங் காதவணம் தன்மயமால் அருள்பழுத்துத்
தழைத்த ஒன்றே!

330. தூய்மையாய் நிலையான முழுநிறைவாய்க் குற்றமற்றதாகி அளவு இல்லாததாய்ப் பேரின்பப் பெருவடிவாய்த் திகழும் அருளாற்றல்கள் விட்டு நீங்காத வண்ணம், தன் வயமாய்த் திருவருட் கனிந்து செழித்த ஒப்பில்லாத மெய்ப் பொருளே! அடையக் கூடிய பயன் அத்துவிதம் என்று ஆராய்ந்து உணராமல் யான் என்ற பேய்த்தன்மை பொருந்திய செருக்குடன் கூடிப் பித்துக் கொண்டவர் போல் மனம் அழுந்திக் கிடக்க, மேலும் மேலும் வருத்தம் அடைவேனோ?

331. வேறு துணை ஏது?

தந்தை தாயும்நீ என்னுயிர்த் துணையும்நீ
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும்நீ உனைஅலால்
மற்றொரு துணைகாணேன்
அந்தம் ஆதியும் அளப்பெருஞ் சோதியே
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவன்எனும்
சிரகிரிப் பெருமானே!

331, முடிவும் முதலும் அளப்பதற்கு அரிய பேரொளியே! முதல்வனே! அடியார் உள்ளத்தில் பொருந்திய 'தாயுமானவன்' என்று கூறப்படுகின்ற திரிசிர மலையில் எழுந்தருளியுள்ள பெருமானே! தந்தை தாயும் நீ! என் உயிர்த்துணைவனும் நீ! உள்ளத் துன்பம் நீக்குவதற்காக எழுந்தருளிவந்த குருவடிவும் நீ! நின்னையல்லாமல் வேறொரு துணையை நான் அறியேன்.

332. மடநெஞ்சே! மயங்காதே!

காதில் ஓலையை வரைந்துமேற் குமிழையும்
கறுவிவேள் கருநீலப்

போது போன்றிடுங் கண்ணியர் மயக்கில்எப்
போதுமே தளராமல்
மாது காதலி பங்கனை அபங்கனை
மாடமா ளிகைசூழும்
சேது மேவிய இராமநா யகன்றனைச்
சிந்தைசெய் மடநெஞ்சே!

332. அறிவற்ற என் உள்ளமே! காதில் அணிந்த பொன் ஓலையைத் தொலைத்துப் பின்பு குமிழம் பூப் போன்ற நாசியையும் சினந்து, காமவேளின் கரிய நீல மலரை ஒத்திருக்கின்ற கண்களையுடைய மங்கையரின் மயக்கத்தில் சிக்கி எப்போதும் தளர்ச்சி அடையாமல், அன்புக்குரிய தலைவியான உமையம்மையை இடப்பாகத்தில் உடையவனை, அழிவில்லாதவனை, மாட மாளிகைகள் சூழ்ந்திருக்கின்ற சேதுவில் வீற்றிருக்கின்ற இராமநாதனைத் துதிப்பாயாக!

333. உன்னருளால் உன்னைக் காண்பேன்!

அண்டமுமாய்ப் பிண்டமுமாய் அளவிலாத
ஆருயிருக் கோருயிராய் அமர்ந்தா யானால்
கண்டவர்ஆர் கேட்டவர்ஆர் உன்னால் உன்னைக்
காண்பதல்லால் என்னறிவால் காணப்போமோ
வண்துளப மணிமார்பன் புதல்வனோடும்
மனைவியொடுங் குடியிருந்து வணங்கிப் போற்றும்
புண்டரிக புரத்தினில்நா தாந்தமௌன
போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே!

333. வளமான துளசி மாலையையும் கௌஸ்துவ மணியையும் அணிந்த மார்பையுடைய திருமால், தன் மகனான நான்முகனோடும், மனைவி இலக்குமியோடும் தங்கியிருந்து, வணங்கிப் போற்றும் புண்டரிக புரமான

சிதம்பரத்தில், நாத தத்துவத்தின் முடிவில் உள்ள மௌன நிலையில் உணர்வுக்கு எட்டாத கூத்து இயற்றி யருளும் தூய வாழ்வே! உலகங்கள் ஆகியும் அவற்றின் பகுதியான உடல்கள் ஆகியும் அளவில்லாத உடல்களில் தங்கும் உயிர்களுக்கு ஓர் உயிராகியும் பொருந்தியிருப்பா யானால் நின்னைக் கண்டவர் யார்? கேட்டவர் யார்? நின் திருவருளால் நின்னைக் காண்பதல்லால் என் சிற்றறிவால் காண முடியுமோ?

334. மனமெனும் குரங்கு

பொறியிற் செறியைம் புலக்கனியைப்
புந்திக் கவரால் புகுந்திழுத்து
மறுகிச் சுழலும் மனக்குரங்கு
மாள வாளா இருப்பேனோ
அறிவுக் கறிவாய்ப் பூரணமாய்
அகண்டானந்த மயமாகிப்
பிறிவற் றிருக்கும் பெருங்கருணைப்
பெம்மானே எம் பெருமானே!

334. உணர்விற்கு உணர்வாகி நிறைவாய் எல்லை யில்லாத இன்ப வடிவாகி நீக்கம் அற்று இருக்கும் பொருளை யுடைய பெருமானே! ஐம்பொறிகளான கிளைகளில் தொங்குகின்ற ஐம்புலன்களான கனிகளை அறிவு என்ற கிளை வழியே ஏறி இழுத்து மயங்கிச் சுழல்கின்ற மனம் என்ற குரங்கு மாயும்படி செய்கின்றது. நான் வீணே இருப்பேனோ?

335. எனது சித்தம் தெளியுமா?

உரையுணர் விறந்து தம்மையுணர்பவர் உணர்வினூடே
கரையிலா இன்ப வெள்ளம் காட்டிடும் முகிலே மாறாப்

பரையெனுங் கிரணஞ் சூழ்ந்த பானுவே நின்னைப்
பற்றித்
திரையிலா நீர்போற் சித்தந் தெளிவனோ சிறிய
னேனே

335. சொல்லும் உணர்ச்சியும் மடியப்பெற்றுத் தம்மை யுணர்பவரான ஞானியரின் அறிவினூடே எல்லை யில்லாத இன்ப வெள்ளத்தைப் பெருகச் செய்யும் முகிலே! மாறாத 'பரை' என்று கூறப்படுகின்ற கதிர்களால் சூழப் பெற்ற சிவக் 'கதிரவனே! நின்னைப் பற்றி அலை இல்லாத கடல் போல் சிறியேன் மனம் தெளிவேனோ!

(பரை—பார்வதி)

336. குருவின் அருட்செயல்

கேவல சகலம் இன்றிக் கீழொடு மேலாய் எங்கும்
மேவிய அருளின் கண்ணாய் மேவிட மேலாய் இன்பம்
தாவிட இன்பா தீலத் தனியிடை யிருத்தி வைத்த
தேவெனும் மௌனி செம்பொற் சேவடி சிந்தை
செய்வாம்.

336. மறதியும் நினைப்பும் இன்றிக் கீழுடன் மேலாய் எவ்விடத்தும் பொருந்திய அருட்கண்ணாகிப் பொருந்தி யிருக்கவும் இன்பம் மேலிட்டுச் சிறக்கவும், அந்த இன்பத்துக்கு மேலாய் உள்ள தனியிடத்தில் என்னை இருக்கச் செய்த தெய்வம் என்கின்ற மௌன குருவின் பொன் கழல் அணிந்த அடிகளைத் துதிப்போம்.

(கேவலம்-மறதி; சகலம்-நினைப்பு)

337. மாயையில் இன்னும் இருப்பேனா?

நேற்றுளர் இன்று மாளா நின்றனர் அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ போக்கினேன்
வீணே காலம்

ஆற்றிலேன் அகண்டானந்த அண்ணலே அளவில் மாயைச்
சேற்றிலே இன்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே!

337. நேற்று இருந்தவர் இன்று இல்லை என்று மடிந்தார். அத்தகைய நிலையைக் கண்டும் நின்னை நான் வணங்கிலேன், ஐயோ, காலத்தை வீணாய்க் கழித்தேன். ஆதலால் இனிப் பொறுக்க மாட்டேன். எல்லையில்லாத இன்பத்தை விளைவிக்கும் அண்ணலே! சிறியேன் அளவில்லாத மாயையான சேற்றில் விழுந்து இன்னும் துன்பத்தை அனுபவிக்கவோ?

338. அறிவாய் நின்ற இடத்தில் அறியாமை இல்லை

போத மென்பதே விளக்கொவ்வும் அவித்தைபொய்
தீதி லாவிளக் கெடுத்திருள் தேடவும் சிக்கா [இருளாம்
தாதலால் அறி வாய்நின்ற விடத்தறி யாமை
ஏது மில்லை என் றெம்பிரான் சுருதியே யியம்பும்

338. பேரறிவு எனப்படுவது விளக்கைப் போன்றதாகும். அறியாமையானது பொய்யான இருளைப் போன்றதாகும். குற்றமற்ற விளக்கை எடுத்துக்கொண்டு இருளைத் தேடினாலும் கிடைக்காது, ஆதலால் பேரறிவாய் நின்ற இடத்தில் அறியாமையானது சிறிதும் இல்லை என்று எம் கடவுள் வெளியிட்ட மறைகளே கூறும்.

339. நிறை பொருளை உணர்ந்தார் யார்?

சுருதியே சிவா கமங்களே உங்களால் சொல்லும்
ஒருத னிப்பொருள் அளவைஈ தென்னவாய்உண்டோ

பொருதி ரைக்கடல் நுண்மணல் எண்ணினும் புகலக்
கருத எட்டிடா நிறைபொருள் அளவையார்
காண்பார்?

339. மறைகளே! சைவ ஆகமங்களே! உங்களால் புகழ்ந்து பேசப்படும் ஒப்பில்லாத பொருளின் அளவையை இன்னதுதான் என்று எடுத்துச் சொல்ல முடியுமோ? அலைகளையுடைய கடலில் உள்ள நுட்பமான மணலை எண்ணினாலும் சொல்லவும் நினைக்கவும் எட்டாத பரிபூரணப் பொருளின் அளவை அறிபவர் எவர்?

340. உன்னைப் போன்ற பரம்பொருள் வேறு இல்லை!

மின்னைப் போன்றன அகிலம்என்று அறிந்து மெய்ப்
பொருளாம்
உன்னைப் போன்றநற் பரம்பொருள் இல்லைஎன்
றோர்ந்து
பொன்னைப் போன்றநின் போதங்கொண் டுன்பணி
பொருந்தா
என்னைப் போன்றுள ஏழையர் ஐயஇங் கெவரே?

340. ஐயனே! உலகங்கள் எல்லாம் மின்னலைப் போன்றவையாகும் என்று அறிந்து உன்னைப் போன்ற நன்மையைத் தருகின்ற மேலான பொருள் இல்லை என்று ஆராய்ந்து பொன் போன்று சிறந்த உன் ஞானத்தைக் கொண்டு உன் பணியைச் செய்யாத அடியேனைப் போன்ற அறிவற்றவர்கள் இவ்வுலகத்தில் யார்?

341. நீயே சுற்றம்

தாயும் தந்தையும் எனக்குறவு ஆவதும் சாற்றின்
ஆயும் நீயும்நின் அருளும்நின் அடியரும் அன்றோ

பேயனேன்திரு வடியிணைத் தாமரை பிடித்தேன்
நாயனே எனை யாளுடை முக்கண்நா யகனே!

341. தலைவனே! அடியேனை அடிமையாக உடைய வனே! மூன்று கண்களையுடைய இறைவனே! அன்னையும் தந்தையும் அடியேனுக்கு உறவாக ஆவதும் கூறுமிடத்துத் தக்கவரால் ஆராய்கின்ற நீயும் உன் திருவருளும் நின் அடியாரும் அல்லரோ? பேய்த் தன்மையுடைய நான் நின் இரு திருவடியான தாமரை மலர்களைப் பிடித்தேன்.

342. மௌன நிலை

காந்தமதை எதிர்காணிற் கருந்தாது செல்லும் அந்தக்
காந்தத் தொன்றாது
ஏய்ந்தவிடம் எங்கேதான் அங்கேதான் சலிப்பறவும்
இருக்கு மாபோல்
சாந்தபதப் பரம்பொருளே பற்றுபொருள் இருக்கும்
சலிக்கும் சித்தம் [அத்தால்
வாய்ந்தபொருள் இல்லையெனில் பேசாமை நின்றநிலை
வாய்க்கும் அன்றே.

342. காந்தத்தை எதிரே கண்டால் இரும்பானது அக்காந்தத்துக்கும் முன்னே போய் ஒட்டி நிற்கும். அக்காந் தத்துடன் பொருந்தாது விலகி ஒழிந்து நின்ற இடம் எங்கே அங்கு அசைவில்லாமல் இருக்கும். அதுபோல் மனத்தைப் பற்றி இழுக்கும் உலகியற் பொருள்கள் காட்சிக்குப் புலனாகும் இடங்களில் எல்லாம் மனம் அப்பொருள்களில் போய் ஒட்டி அசைவின்றி நிற்கும். அமைதி வடிவான மேலான பொருளே! பற்றுதற்குரிய பொருள்கள் இல்லை யானால் மனமானது மௌனமாய் நிற்கும் நிலையினின்று தவறாது நிற்கும்.

(கருந்தாது—இரும்பு)

343. வினை வருவது எப்படி?

பொற்பு றுங்கருத் தேசுக மாய்அதில் பொருந்தக்
கற்பின் மங்கைய ரென விழி கதவுபோற் கவினச்
சொற்ப னத்தினுஞ் சோர்வின்றி இருந்தநான்
சோர்ந்து
நிற்ப தற்கிந்த வினைவந்த வாறென்கொல் நிமலா!

343. மலங்கள் அற்றவனே! கற்புடைய மங்கையரைப் போல் எளியேன் கருத்துக்கு இடமான உள்ளமே அழகான வீடாக, அந்த வீட்டில் அமைந்த கதவுகள் விழிகளாகச் சிறந்து கனவிலும் தளர்ச்சி இல்லாது வாழ்ந்த நான் தளர்ச்சி அடைந்து நிற்குமாறு இந்தக் கன்மவினை வந்த வாறு என்ன?

344. ஏழை எவ்வாறு உய்வேன்?

வந்தவா றிந்தவினை வழி யிதுஎன மதிக்கத்
தந்தவா றுண்டோ? உள்ளுணர் விலை அன்றித்
தமியேன்
நொந்த வாறுகண் டிரங்கவும் இலை கற்ற நூலால்
எந்த வாறினித் தற்பரா உய்குவேன் ஏழை!

344. நான் இப்போது அனுபவிப்பதற்குக் காரணமாய் வந்த வினை வந்ததற்குக் காரணம் இது, அது நீங்குவதற் கான வழி இது எனத் தெளியத் தக்க உள்ளுணர்ச்சியை எனக்குத் தந்தது உண்டோ? இல்லை! அதுவே அல்லாமல் நான் வாடியிருப்பதை நோக்கி நீ இரங்கவுமில்லை! தனக்குத் தானே முதல்வனே! அறியேன் கற்ற நூல் உணர்ச்சியினால் எவ்வாறு பிழைப்பேன்?

345. அருள்நெறியை நாடுவேன்!

சொல்லாலும், பொருளாலும் அளவை யாலும்
 தொடரவொண்ணா அருள்நெறியைத் தொடர்ந்து [நாடி
நல்லார்கள் அவையகத்தே இருக்க வைத்தாய்
 நன்னர்நெஞ்சம் தன்னலமும் நணுகு வேனோ
இல்லாளி யாய்உலகோ டுயிரை யீன்றிட்டு
 எண்ணரிய யோகினுக்கும் இவனே யென்னக்
கல்லாலின் கீழிருந்த செக்கர் மேனிக்
 கற்பகமே பராபரமே கயிலை வாழ்வே!

345. இல்லறத்தானாய் உலகத்துடன் உயிர்களைத் தோற்றுவித்து நினைப்பதற்கு அரிய யோக நெறிக்கும் இவனே சிறந்தவன் என்று சொல்லும்படி கல்லால மரத்தின் கீழ் வீற்றிருக்கின்ற கற்பகமரமே! மேலான பொருளே! சொல்லாலும் பொருளாலும் அளவைகளாலும் தொடர இயலாத அருள் வழியைத் தொடர்ந்து நாடி, அடியாரின் கூட்டத்திடையே என்னை இருக்கச் செய்தாய். அதன் பயனான நல்ல உள்ளத்தின் நன்மையையும் நான் அடைவேன்.

346. நுண்ணியோர் கூற்று யாது?

சாக்கிரமாம் நுதலினிலிந் திரியம் பத்தும்
 சத்தாதி வசனாதி வாயு பத்தும்
நீக்கமில்அந் தக்கரணம் புருட னோடு
 நின்றமுப் பானைந்தும் நிலவும் கண்டத்
தாக்கியசொப் பனமதனில் வாயுப் பத்தும்
 அடுத்தனசத் தாதிவச னதி யாக
நோக்குகர ணம்புருட னுடனேகூட
 நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே.

346. புருவ நடுவில் நெற்றியில் உயிர் நின்று தொழிற்படுவது நனவு நிலை (சாக்கிராவத்தை). அதற்குரியவை

முப்பத்தைந்து. அவை வருமாறு: உடல் முதலான பொறிகள் பத்து, சத்தம், பரிசம் முதலான ஞானேந்திரியம் ஐந்து, வசனம் முதலான கன்மேந்திரியம் ஐந்து, உயிர் வளி முதலான வாயுக்கள் பத்து, நீக்கம் இல்லாத அந்தக் கரணம் நான்கு, ஆள் ஒன்று என்பவை.

கழுத்தில் உண்டாவது கனவு (சொப்பனாவத்தை) இதற்குரியவை இருபத்தைந்து. அவை வருமாறு: பிராணன் முதலான வாயுக்கள் பத்து. அடுத்துள்ள ஓசை பரிசம் முதலான ஞானேந்திரியம் ஐந்தும், பேசுதல் முதலான கன்மேந்திரியம் ஐந்தும் ஆக பத்து, பார்க்கப்படும் அந்தக் கரணம் நான்கு, ஆள் ஒன்று என்ற இருபத்தைந்து.

ஞானேந்திரியம்: மெய், வாய், கண், மூக்கு, செவி கன்மேந்திரியம்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் சத்தாதி வசனாதி — சத்தம் முதலியன; வசனம் முதலியன எனப் பொருள் கொள்க. ஞானேந்திரிய புலன்கள்: (புலன்களை விடயம் எனவும் சொல்லுப) சத்தம், பரிசம், ரூபம் ,ரசம், கந்தம். கன்மேந்திரிய புலன்கள்; வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.

347

சுழுத்திஇத யந்தனில்பி ராணன் சித்தம்
சொல்லரிய புருடனுடன் மூன்றதாகும்
வழுத்தியநா பியில்துரியம் பிராணனோடு
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கும்
அழுத்திடுமூ லம்தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருடன் ஒன்றி அமரும் ஞானம்

பழுத்திடும்பக் குவரறிவர் அவத்தை ஐந்திற்
பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசுதானே.

347. சுழுத்தி என்ற அவத்தைக்கு இடமான இதயத்தில் பிராண வாயுவும், எண்ணமான சித்தமும், ஆள் என்னும் புருடனும் என்று மூன்று கருவிகள் இயங்கும். கூறப்படும் உந்தியில் துரியாவத்தை நிகழும். அங்குப் பிராண வாயுவுடன் நிலைபெற்ற புருடனும் கூடவே விளங்கும். அழுத்துவதற்குரிய மூலத்தானத்தில் துரியாதீத அவத்தை உண்டாகும். அதில் ஆளுடனே பொருந்தி அமர்ந்திருக்கும் அவத்தை ஐந்தில் பாங்காய்க் கருவி நிற்கும் இயல்பை ஞான முதிர்ச்சியுடையவர் அறிந்து கொள்வர்.

348. நின் அருள் வேண்டும்

இடத்தைக் காத்திட்ட சுவாஎனப் புன்புலால்
இறைச்சிச்
சடத்தைக் காத்திட்ட நாயினேன் உன்னன்பர்தயங்கும்
மடத்தைக் காத்திட்ட சேடத்தால் விசேடமாய் வாழ
விடத்தைக்காத்திட்ட கண்டத்தோய் நின்னருள்
வேண்டும்.

348. நஞ்சைத் தடுத்து உண்டருளிய கழுத்தை உடையவனே! தன்னை வளர்ப்பவனின் வீட்டைக் காக்கும் நாய் போன்று இழிந்த புலால் நாற்றம் உடைய ஊனால் ஆன உடலைக் காத்திருந்த நாய் போன்ற நான், நின் அடியார் உறைகின்ற மடத்தைக் காத்திருந்து அவர்கள் இட்ட எச்சில் உணவால் சிறப்புடன் வாழ்வதற்கு நின் அருள் எனக்கு வேண்டும்.

(சுவா — நாய்)

349. ஐயம் இல்லை!

வாத னைப்பழக் கத்தினான் மனம் அந்த மனத்தால்
ஓத வந்திடும் உரை உரைப் படிதொழில் உளவாம்
ஏதம் அம்மன மாயைஎன் றிடின் கண்ட எல்லாம்
ஆத ரஞ்செயாப் பொய் அதற்கு ஐயம்உண் டாமோ?

349. பல பிறவியில் உண்டான பழக்கத்தினால் உள்ளம் வெளியே செல்ல முயலும். அத்தகைய உள்ளத்தினால் சொல் வெளிப்படும். அச் சொல்லின்படி தொழில் நிகழும். பயிற்சியால் குற்றத்துக்கு இடமான அந்த வுள்ளம் நிலையில்லாத மாயா காரியம் என்றால், கண்கூடாய்க் காணப்படுவன எல்லாம் விரும்பத்தகாத பொய்யே ஆகும். அவ்வாறு கூறுவதற்கு ஐயம் உள்ளதோ?

350. மெய் உணருதல், போதம்!

ஐய வாதனைப் பழக்கமே மனநினை வதுதான்
வைய மீதினில் பரம்பரை யாதினும் மருவும்
மெய்யில் நின்றொளிர் பெரியவர் சார்வுற்று விளங்கிப்
பொய்ய தென்பதை ஒருவி மெய் உணருதல் போதம்.

350. என் இறைவ! எண்ணங்கள் ஊழ்வினைப் பழக்கத்தால் உண்டாவன. இவ்வுலகத்தில் வழி வழியாக எல்லாப் பொருள்களிலும் அவை பொருந்தும். உண்மையில் நிலைத்து விளங்கும் பெரியோரின் சார்பை அடைந்து விளங்கிப் பொய்யை விட்டு நீங்கி உண்மையை அறிதலே சிவஞானமாகும்.

351. சிவபெருமானின் தன்மை

குலம்இ லான் குணம் குறிஇலான் குறைவிலான் கொடிதாம்
புலம்இ லான் தனக் கென்னஓர் பற்றிலான் பொருந்தும்

இலம்இ லான்மைந்தர் மனைவியில் லான் எவன்
அவன்சஞ்
சலாம்இ லான் முத்தி தரும்பர சிவன்எனத் தகுமே.

351. முழு முதல்வன் குலம் இல்லாதவன். மாலையயின் காரியமான மலங்கள் அற்றவன். பிறப்பால் உண்டாகும் பெயர் இல்லாதவன். ஒன்றிலும் குறைபாடில்லாதவன். கொடிய ஐம்புலன்களில் பற்று இல்லாதவன். தனக்கு என்று ஓர் ஆதாரம் இல்லாதவன். தான் உறைவதற்கு ஓர் இல்லம் இல்லாதவன். மக்கள் மனைவி என்ற சுற்றத் தொடர்பு இல்லாதவன். இத்தகைய இயல்புடையவன் யாவன்? அவனே சலனம் இல்லாதவனும் வீடுபேற்றை அளித்தருளும் பரமசிவனும் ஆவான் எனக் கூறுவது தகும்.

352. பொய் ஒரு போதும் மெய்யாகாது!

கடத்தை மண்ணெனல் உடைந்தபோ தோ இந்தக்
கருமச்
சடத்தைப் பொய்எனல் இறந்தபோ தோ சொலத்
தருமம்
விடத்தை நல்லமிர் தாஉண்டு பொற்பொது
வெளிக்கே
நடத்தைக் காட்டிஎவ் வுயிரையும் நடிப்பிக்கும்
நலத்தோய்!

352. ஆலகால நஞ்சினை உணவாக உட்கொண்டு பொன்னம்பலமான அறிவு வெளியில் தன் நடனத்தை யாவரும் காணும்படி செய்து எல்லா உயிர்களையும் ஆட்டுவிக்கின்ற நன்மை வாய்ந்தவனே! மண்குடத்தை, உடைந்த பொழுதில் தானோ மண் என்று கூறுவது அறமாகும்! வினை வயத்தால் வந்த இந்த வுடலை, இறந்த பொழுதில்தானோ பொய் என்று கூறுவது அறமாகும்? அன்று. (மண்குடம் உடைதற்கு முன்பும் மண்தான். உடல் இறப்பதற்கு முன்பும் பொய்தான், எனவே பொருளின்

இயல்பை அது உள்ளபோதே உணர்தல் வேண்டும் என்பதாம்)

353. குருவாகி என்னை ஆட்கொண்டாய்!

நானெனவும் நீஎனவும் இருதன்மை நாடாமல்
நடுவே சும்மா
தானமரும் நிலையிதுவே சத்தியம்சத் தியம்எனநீ
தமிய னேற்கு
மோனகுரு வாகியும்கை காட்டினையே திரும்பவும்
முளைத்துத் தோன்றி [நான்
மானதமார்க் கம்புரிந்திங் கலைந்தேனே பரந்தேனே
வஞ்ச னேனே.

353. 'நான்' என்றும், 'நீ' என்றும், இரண்டு வகையாய்ப் பிரித்து உணராமல், 'நடுவில் பொதுவாய் மௌனமாய் இருக்கும் நிலையான இதுவே உண்மை உண்மை' என நீ மௌன குருவாய் வந்து கைகாட்டி உணர்த்தினீரே! அங்ஙனம் நீ உணர்த்தியும் திரும்பவும் நான் என்ற எண்ணம் முளைத்து வெளிவந்து மனம் போனபடி செய்து அலைந்தேனே, எங்கும் சென்றேனே! அதனால் பாவியானேன்.

354. சிவபெருமான் சிறப்பு

தன்மயம் சுபாவச் சுத்தம் தண்ணருள் வடிவம் சாந்தம்
மின்மய மான ஆண்ட வெளியுரு வான பூர்த்தி
என்மயம் எனக்குக் காட்டா தெனைஅப கரிக்கவந்த
சின்மயம் அகண்டா காரம் தெட்சிணா திக்க மூர்த்தம்

354. இறைவன் தென்முகச் செல்வராய்க் கோலம் கொண்ட தன்மையாவது, எல்லாவற்றிலும்தான் நீக்கமின்றி நிற்கும் தன்மையும், தான் தூய்மை இயல்புடன் இருந்து

தன்னைச்சார்ந்தவற்றைத் தூய்மைப்படுத்தும் தூய்மையும், குளிர்ந்த அருளும், அமைதியும், மின்மயமான அண்ட வெளியில் உருவாய் விளங்கும் நிறைவும், என் இயல்பை எனக்குக் காட்டாது என்னைத் தன்னுள் படுத்திக் கொள்ள (விழுங்க) வந்த அறிவு வடிவாய், எல்லையற்ற பெரிய வடிவே நிலையமாய் நிற்கும் தன்மையாம்.

355. வீட்டுக்கு வித்து!

சிற்ற ரும்பன சிற்றறி வாளனே தெளிந்தால்
மற்ற ரும்பென மலரெனப் பேரறி வாகிக்
கற்ற ருப்பிய கேள்வியான் மதித்திடக் கதிச்சீர்
முற்ற ரும் பிடபெ ளனியாய்ப் பரத்திடை முளைப்பான்

355. சிறிய பூவின் அரும்பைப் போன்ற சிறிய அறிவுடையவன் ஒருவனை ஆட்கொள்ள வந்தவனே! தன் இந்த நிலையைத் தெளிந்து கொண்டால், அந்த சிற்றரும்பு பேரரும்பாகிப் பின் மணம் கமழ மலர்ந்து பேரறிவுடன் விளங்கி ஆசானை அடுத்துக் கற்றுப் பெற்ற கல்வியால் பலரும் மதிக்க நற்கதிக்குரிய சிறந்த குணங்களை எல்லாம் அடைந்து மோன நிலையுடன் விளங்குவான். வீடுபேறு எய்தி அங்கு விளங்குவான்.

356

மயக்கு சிந்தனை தெளிவென இருநெறி வகுப்பால்
நயக்குமொ ன்றன்பால் ஒன்றிலை எனல்நல வழக்கே
இயக்க முற்றிடு மயக்கத்தில் தெளிவுறல் இனிதாம்
பயக்க வல்லதோர் தெள் வுடை யவர்க்கெய்தல்
பண்போ!

356. அறிவு மயங்கிய உள்ளம் எனவும் தெளிந்த உள்ளம் எனவும் இரண்டுவகைப்பட்ட பிரிவுகள் உள்ளன.

அவற்றுள் ஒன்றினைச் சார்ந்த உள்ளத்துக்கு மற்றொன்று இல்லை. இஃது எங்கும் உள்ள வழக்கேயாகும். அலைகின்ற மனத்தைவிடத் தெளிதல் இனிமையுடையதாகும். நன்மை அளிக்கவல்ல ஒப்பில்லாத தெளிவையுடையவர்க்கு மயக்கம் வந்து பொருந்துதல் நல்ல குணமாகுமோ?

357. ஒன்றே தெய்வம்

அருள்வடி வேழு மூர்த்தம்
அவைகள்சோ பானம்என்றே
சுருதிசொல் லியவாற் றாலே
தொழுந்தெய்வம் எல்லாம்ஒன்றே
மருளெனக் கில்லை முன்பின்
வருநெறிக் கிவ்வ ழக்குத்
தெருளின்முன் னிலையாம் உன்னைச்
சேர்ந்தியான் தெளிகின் றேனே.

357. நீ உயிர் பொருட்டுக் கொள்ளும் அருள்வடிவங்கள் ஏழாகும். அவை இறைவனான நின்னை அடைவதற்குரிய படிகளாகும் என்று மறைகள் கட்டளையிட்டுள்ளன. இதனால் எல்லாச்சமயத்தவராலும் வணங்கப்படும் தெய்வம் ஒன்றே ஆகும். இவ்வுண்மையை அறிதலால் முன்னும் பின்னும் வந்ததும் போவதுமான வழிக்கு மயக்கம் இல்லை. முன்னே கண்ணாரக் காணக் கூடிய உன்னை அடைந்து தெளிவைப் பெறுகின்றேன்.

358. எத்தனைப் பிறப்போ?

எத்தனைப் பிறப்போ எத்தனை இறப்போ
எளியனேற்கு இதுவரை அமைத்த
தத்தனை யெல்லாம் அறிந்தநீ அறிவை
அறிவிலி அறிகிலேன் அந்தோ
சித்தமும் வாக்கும் தேகமும் நினைவே

செனமமும் இனியெனால் ஆற்றா
வைத்திடிங் கென்னை நின்னடிக் குடியா
மறைமுடி இருந்தவான் பொருளே!

358. மறையின் முடிவாய் உள்ள சிறந்த பொருளே! எனக்கு இதுவரை அமைக்கப் பெற்றது எத்தனைப் பிறப்போ! எத்தனை இறப்போ! எனக்கு வாய்ந்த அவ்வளவையும் நீ அறிவாய்! அறிவற்ற நான் அவற்றை அறியேன். ஐயோ, மனமும் வாக்கும் உடலும் உன்னுடையனவே! இனிப் பிறப்பும் என்னால் பொறுக்க இயலாது. நின் அடிமையாய் என்னை வைத்திடுவாயாக!

359. இருவினை தரும் துன்பம்!

வான்பொரு ளாகி எங்கும்நீ யிருப்ப
வந்தெனைக் கொடுத்துநீ யாகா
தேன்பொருள் போலக் கிடக்கின்றேன் முன்னை
இருவினை வாதனை யன்றோ
தீன்பொரு ளான அமிர்தமே நின்னைச்
சிந்தையிற் பாவனை செய்யும்
நான்பொருளானேன் அல்லன்நல் லரசே
நானிறந் திருப்பது நாட்டம்.

359. மிகவும் நல்ல என் அரசே! மேலான பொருளாகி எங்கும் நீ இருக்கின்றாய். அங்ஙனம் இருக்க நின்னை அடுத்து என்னை நினக்குத்தந்து நீயாய் நானாகாது சடப் பொருளைப்போல் ஏனோ கிடக்கின்றேன். இதற்குக் காரணம் முன் பிறவியில் செய்த வினைகளின் பழக்கமே யாகும். பழகுவதற்குரிய அமிழ்தமே! நின்னை உள்ளத்தில் நினைக்கின்ற நான் ஒரு பொருளின் தன்மையை அடைந்தேன் இல்லை! நான் சுதந்தரம் அற்றிருப்பதே விரும்புவதாகும்.

360. பற்றறுவது எந்நாள்?

நாட்டம்மூன் றுடையசெந்நிற மணியே
நடுவுறு நாயக விளக்கே
கோட்டமில் குணத்தோர்க் கெளியநிர்க் குணமே
கோதிலா அமிர்தமே நின்னை
வாட்டமில் நெஞ்சம் கிண்ணமாச் சேர்த்து
வாய்மடுத் தருந்தினன் ஆங்கே
பாட்டளி நறவம் உண்டயர்ந் ததுபோற்
பற்றயர்ந் திருப்பதெந் நாளோ!

360. மூன்று கண்களையுடைய செந்நிறமான மணியே! சமயங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவாக விளங்கும் தலைமையுடைய விளக்கே! மாறுபாடு இல்லாத குணங்களையுடையவர்க்கு எளிமையாய் விளங்கும் குணங்கள் இல்லாதவனே! தளர்ச்சியில்லாத உள்ளத்தை அமிழ்தக் கிண்ணமாக என் வாயில் வைத்து இன்னிசை பாடும் வண்டுகள் தேனை உண்டு களித்து அயர்வதைப் போல் நான் பற்றற்று இருப்பது எந்த நாளோ?

361. நான் வேண்டும் வரம்

என்னுடை யுயிரே என்னுளத் தறிவே
என்னுடை அன்பெனும் நெறியாய்
கன்னல்முக் கனிதேன் கண்டமிர் தென்னக்
கலந்தெனை மேவிடக் கருணை
மன்னிய உறவே உன்னைநான் பிரியா
வண்ணம்என் மனமெனும் கருவி
தன்னது வழிஅற் றென்னுழைக் கிடப்பத்
தண்ணருள் வரமது வேண்டும்.

361. என் உயிர்க்கு உயிராய் விளங்குபவனே! என் உள்ளத்தில் உள்ள அறிவே! என் அன்பு என்ற அரிய, நல்

வழியே! கருப்பஞ்சாறும், முக்கனி, தேன், கற்கண்டு, அமிழ்து, என்று கூறுமாறு சொல்ல இயலாத இன்பமாகக் கலந்து பொருந்திட அருள் பொருந்திய உறவே! உன்னை யான் பிரியாதபடி என் உள்ளம் என்ற கருவி தன் வழியே செல்லாது என்னிடத்து அடங்கிக் கிடக்கும்படி குளிர்ந்த அருள் என்ற வரத்தை எனக்குத் தருதல் வேண்டும்.

25. எனக்கெனச் செயல்

(இப்பகுதியில் முதற் செய்யுளின் தொடக்கம் 'எனக் கெனச் செயல்' என்பதாகும். ஆதலால் இப்பகுதி இப் பெயர் பெற்றது. இதில் உள்ள செய்யுட்கள் இருபத் தெட்டு.)

362. நீ நினைத்தபடி அருள்செய்

எனக்கெ னச்செயல் வேறிலை யாவுமிங் கொருநின்
தனக்கெ னத்தகும் உடல்பொருள் ஆவியும் தந்தேன்
மனத்த கத்துள அழுக்கெலாம் மாற்றி எம்பிரான்நீ
நினைத்த தெப்படி அப்படி யருளுதல் நீதம்.

362. எம்பெருமானே, எனக்கு என்று வேறு ஒரு செயலும் இல்லை. எல்லாம் இங்கு ஒப்பில்லாத நினக்கே உரியவையாகும் எனல் தக்கது. ஆகையால் என் உடலை யும் பொருளையும் உயிரையும் நினக்கே தந்தேன். என் உள்ளத்தில் உள்ள குற்றங்களையெல்லாம் நீக்கி, நின் எண்ணம் எப்படியோ அப்படியே அருள் செய்வது நல்ல தாகும்.

363. யாரிடம் உரைப்பேன்?

உளவ றிந்தெலாம் நின்செய லாமென உணர்ந்தோர்க்கு
அளவில் ஆனந்தம் அளித்தனை அறிவிலாப் புன்மைக்

களவு நாயினேற் கிவ்வண்ணம் அமைத்தனை கருத்துத்
தளருந் தன்மைஇங் காரொடும் புகலுவேன் தக்கோய்!

363. தக்கவனே! அறிவு நூல்களின் உண்மையை யுணர்ந்து எல்லாம் நின் செயல்களேயாகும் என்று உணர்ந்தவர்க்கு அளவற்ற இன்பத்தைக் கொடுத்தருளினாய். அறிவில்லாத அற்பமான களவுடைய நாயேனுக்கு இந்தவுலகத்தில் உழன்று துன்புறுமாறு அமைத்தாய். என் உள்ளம் தளரும் இயல்பினை இங்கு யாருடன் சொல்லுவேன்?

364. உன்னை அறிய அருள் புரி!

என்னைத் தான்இன்ன வண்ணமென் றறிகிலா ஏழை
தன்னைத் தான்அறிந் திடஅருள் புரிதியேல் தக்கோய்
பின்னைத் தான் நின்தன் அருள்பெற்ற மாதவப்
பெரியோர்
நின்னைத் தான்நிகர் ஆர்என வாழ்த்துவர் நெறியால்.

364. தக்க இயல்புடையவனே! என்னை இன்ன தன்மை உடையவன் என்று அறிந்து கொள்ள இயலாத எளியேன் தன்னைத்தான் தெரிந்து கொள்ளுமாறு அருள் செய்தாயாயின், பின்பு, நினது அருளைப் பெற்ற பெருந் தவங்களைச் செய்து முடித்த அறிஞர்கள் 'நின்னைப் போன்றவர் யார் உள்ளார்?' என்று வாழ்த்துவர்.

365. எவ்வாறு உய்வேன்?

ஏதம் இன்றித்தன் அடியிணைக்கு அன்புதான் ஈட்டும்
காதல் அன்பர்க்குக் கதிநிலை ஈதெனக் காட்டும்
போத நித்திய புண்ணிய எண்ணரும் புவன
நாத தற்பர நான்எவ்வாறு உய்குவேன் நவிலாய்!

365. குற்றம் இல்லாது நின் திருவடிகளுக்கு அன்பு காட்டும் பத்தியுடைய அடியார்க்கு முத்தி நிலை இது என்று காட்டியருளும் அறிஞனே! நிலைபேறுடையவனே! புண்ணியனே! கருதுவதற்கு அரிய உலகங்களுக்கெல்லாம் இறைவனே! தனக்குத் தானே தலைவன் ஆனவனே! அறிவற்ற நான் எவ்வாறு பிழைப்பேன்! கூறுவாயாக!

366. உன் நினைவின்றி வேறு நினைவில்லை!

வேதம் எத்தனை அத்தனை சிரத்தினும் விளங்கும்
பாத நித்திய பரம்பர நிரந்தர பரம
நாத தற்பர சிற்பர வடிவமாய் நடிக்கும்
நீத நிர்க்குண நினையன்றி ஒன்றும்நான் நினையேன்.

366. மறைகள் எத்தனையுண்டோ, அவ்வளவின் முடியிலும் விளங்கும் திருவடிகளை யுடையவனே! நிலையானவனே! மேலானவனே! நிரந்தரமானவனே! நாயகனே! தனக்குத் தானே முதல்வனே! அறிவு வடிவாகிப் பல கோலங்களைக் கொள்பவனே! நீதியுடையவனே! முக்குணங்கள் அற்றவனே! உன்னையல்லாது வேறொரு இறைவனை நான் நினைக்க மாட்டேன்.

367. உன்னை யார் அறிவார்?

நெறிகள் தாம்பல பலவுமாய் அந்தந்த நெறிக்காம்
செறிவும் தெய்வமும் பலபல வாகவும் செறிந்தால்
அறியும் தன்மைஇங் காருனை அறிவினால் அறிந்தோர்
பிறியுந தன்மைஇல் லாவகை கலக்கின்ற பெரியோய்!

367. தம் அறிவால், நின்னை அறிந்தவர் நீங்கும் வகையில்லாமல் அன்பர்களின் பால் வெளிப்படுகின்ற இறைவனே! இவ்வுலகத்தில் வழிகள் பலவாயும் அவற்றுக்குப்

பொருந்திய தெய்வங்களும் பல வாயும் (அவற்றுள் நீ) நிறைந்திருந்தால், நின்னை அறிந்து கொள்கின்ற இயல் புடையவர் யார்?

368. என்னை ஏன் இப்படிப் படைத்தாய்?

பெரிய அண்டங்கள் எத்தனை அமைத்து அதில்
பிறங்கும்
உரிய பல்லுயிர் எத்தனை அமைத்து அவைக் குறுதி
வருவ தெத்தனை அமைத்தனை அமைத்தருள்
வளர்க்கும்
அரிய தத்துவ எனக்கிந்த வண்ணம்ஏன்
அமைத்தாய்?

368 இறைவ! பெரியஅண்டங்கள்பலவற்றையும் அமைத் தாய்! அவற்றில் விளங்குதற்குரிய பல வுயிர்கள் அமைத்து அவை வாழ்வதற்குரிய நன்மைகள் பலவற்றையும் படைத் தாய்! இவ்வாறு எங்கும் திருவருளை வளர்க்கின்ற அரிய உண்மைப் பொருளே! அருள் செய்யாது வருந்த இவ்வாறு ஏன் அமைத்தாய்?

369. உன்னை மறுப்பவர் இல்லை

கணம தேனும்நின் காரணம் தன்னையே கருத்தில்
உணரு மாதவர்க் கானந்தம் உதவினை ஒன்றும்
குணம்இலாத பொய்வஞ்சனுக் கெந்தை நிர்க்குண மாம்
மணம் உலாமலர்ப் பதந்தரின் உன்னையார் மறுப்பார்?

369. இமைப் பொழுதே ஆயினும் எல்லா வுலகத் துக்கும் வினை முதற் காரணனாக விளங்கும் நின்னை உள்ளத்தில் கொண்டு உணரும் மாதவர்க்குப் பேரின் பத்தைத் தந்தருளினாய். நல்ல குணங்கள் இல்லாத பொய் யும் வஞ்சனையும் உடைய எனக்கு, எந்தையே, முக்குணம்

இல்லாத எண்குணனே, நறுமணம் கமழும் திருவடியைத் தந்தருளினால் அங்ஙனம் செய்யமுடியாதபடி நின்னைத் தடுப்பவர் யார்?

370. கைம்மாறு இல்லை!

கன்னல் முக்கனி கண்டு தேன் சருக்கரை கலந்தது
என்ன முத்தியிற் கலந்தவர்க் கின்பமாய் இருக்கும்
நன்ன லத்தநின் நற்பதந் துணையென நம்பச்
சொன்ன வர்க்கென்னால் ஆம்கைம்மா றில்லைஎன்
சொல்வேன்!

370. கருப்பஞ்சாறு, முக்கனி, சற்கண்டு, தேன், சர்க்கரை ஆகியவை ஒன்றாய்க் கலந்தது என்று சொல்லும் படி முத்தியில் கலந்தவர்க்குப் பேரின்பமாய் விளங்குவாய்! அத்தகைய நன்னலம் நிறைந்த நின் திருவடியினைத் துணை யாய்க் கொண்டு உய்யும்படி எனக்கு அறிவுறுத்திய மௌன குருவிற்கு அடியேன் செய்யும் கைம்மாறு யாதும் இல்லை. அவர்தம் பெருமையை நான் எங்ஙனம் எடுத்து விளக்குவேன்?

371. எவ்வாறு உய்வேன்?

தந்தை தாய்தமர் மகவெனும் அவைபெலாம் சகத்தில்
பந்த மாம் என்றே அருமறை வாயினாற் பகர்ந்து
எந்தை நீஎனை இன்னம்அவ் அல்லலில் இருத்தின்
சிந்தை தான்தெளிந் தெவ்வணம் உய்வணம்
செப்பாய்!

371. தந்தை, தாய், உறவினர், மகன் என்று கூறப்படு கின்ற அவையெல்லாம் உலகத்தில் தளையாகும் என்று அரிய மறைகளை அருளிய வாயால் திருவாய் மலர்ந்த எந்தை நீ. இத்தகைய நீ, என்னை இன்னமும் துன்பத்தில்

இருத்தினால் மனம் தெளிந்து உய்யும் வகை எப்படி? கூறு வாயாக!

372. என்னைக் கைவிடாதே

துய்யன் தண்ணருள் வடிவினன் பொறுமையால்
துலங்கும்
மெய்யன் என்றுனை ஐயனே அடைந்தனன் மெத்த
நொய்யன் நுண்ணிய அறிவிலன ஒன்றைநூ றாக்கும்
பொய்யன் என்றெனைப் புறம்விடின் என்செய்வேன்
புகலாய்!

372. ஐயனே! 'நீ தூய்மையானவன், குளிர்ந்த அருள் வடிவுடையவன், பொறுமையால் விளங்கும் மெய்ம்மையானவன்' என்று எண்ணி நின்னை அடைந்தேன். 'நான் மிகவும் அற்பமானவன். நுண்மையான அறிவற்றவன். ஒன்றை நூறாக்கும் பொய்ம்மையுடையவன்' என்று என்னைப் புறத்தில் தள்ளி விட்டால் என்ன செய்வேன்! கூறுவாயாக!

373. மனத்தில் வந்து தங்குவாயாக!

ஒன்ற தாய்ப் பலவாய் உயிர்த் திரட்கெலாம் உறுதி
என்ற தாய் என்று முள்ளதாய் எவற்றினும் இசைய
நின்ற தாய் நிலை நின்றிடும் அறிஞ என் நெஞ்சம்
மன்றதாயின்ப வுருக்கொடு நடித் திடின் வாழ்வேன்.

373. ஒன்றாகிப் பல பொருளாய், உயிர்க்கூட்டங்களுக்கெல்லாம் பற்றுக் கோடாய், என்றும் நிலையாய் உள்ளதாய், எவ்வகைப்பட்ட பொருளிலும் கலந்து வாழ்வதாய் நிலைத்து நிற்கும் முற்றறிவுடையவனே! என் மனத்தைச் சபையாய்க் கொண்டு இன்பவடிவைக் கொண்டு நீ நடிப்பதானால் யான் வாழ்வேன்.

374. நீ அறியாதது உண்டோ?

தனிஇ ருந்தருள் சகசமே பொருந்திடத் தமியேற்
கினிஇ ரங்குதல் கடன் இது சமயம் என் இதயக்
கனிவும் அப்படி யாயின தாதலாற் கருணைப்
புனித நீஅறி யாததொன் றுள்ளதோ புகலாய்!

374. அருளையுடைய புனிதனே! தனித்திருந்து அருள் தன்மையுடைய சகச நிட்டையை (மோன சமாதியை) அடைய எனக்கு அருள் செய்திடல் நினக்குக் கடமையாகும். அதற்கு ஏற்ற சமயம் இதுவேயாகும். என் உள்ளத்தின் எண்ணமும் அதுவேயாகும். ஆதலால் நின் உள்ளம் அறியாதது ஒன்றுண்டோ? கூறுவாயாக!

375. நின்னைப் பொருந்தும் நாள் எந்தநாள்?

திருந்து சீரடித் தாமரைக் கன்புதான் செய்யப்
பொருந்து நாள்நல்ல புண்ணியம் செய்யுநாள் பொருந்தாது
இருந்த நாள்வெகு தீவினை இழைத்தநாள் என்றால்
அருந்தவா உனைப் பொருந்தும்நாள் எந்தநாள் அடிமை

375. அரிய தவவடிவினனே! திருத்தமான சிறந்த திருவடித் தாமரைகளுக்கு அன்பு செய்வதற்குப் பொருந்திய நாள் நல்ல புண்ணியம் உண்டாவதற்குக் காரணமான நல்ல நாளாகும். அன்பு செலுத்தாதிருந்த நாளானது பல பாவங்களைச் செய்த நாளாகும். அடியேன் நின்னை அடையும் நாள் எந்தநாளோ?

376. இன்னும் இன்னல் ஏன்?

பின்னும் முன்னுமாய் நடுவுமாய் யாவினும் பெரிய து
என்னும் தன்மையாய் எவ்வுயிர்த் திரளையும் இயக்கி

மன்னும் தண்ணருள் வடிவமே உனக்கன்பு வைத்தும்
துன்னும் இன்னல்ஏன் யான்எனும் அகந்தைஏன்
சொல்லாய்!

376. பிற்காலத்தும் உள்ளதாய், முற்காலத்தும் உள்ளதாய், இடையிலும் இருப்பதாய், எல்லாவற்றினும் பெரியது என்ற தன்மை கொண்டதாய், எல்லா வுயிர்க்கூட்டங்களையும் உள் நின்று இயக்கி அவற்றுள் நிலைபெற்றுள்ள குளிர்ந்த அருள் வடிவமே! உனக்கு யான் அன்பு செலுத்தியும் எனக்குத் துன்பம் ஏன்? யான் என்னும் செருக்கு எனக்கு ஏன்? கூறுவாயாக!

377. உன்னை மறந்து எங்ஙனம் உய்வேன்!

மின்னை அன்னபொய் வாழ்க்கையே நிலையென
மெய்யாம்
உன்னை நான்மறந் தெவ்வணம் உய்வணம் உரையாய்
முன்னை வல்வினை வேரற முடித்தென்றும் முடியாத்
தன்னைத் தன்னடி யார்க்கருள் புரிந்திடும் தக்கோய்!

377. முன்னைய பிறவிகளில் செய்த வலிய பாவத்தின் வேர் அற்றுப் போகும்படி செய்து எக்காலத்தும் அழிவற்று விளங்குவாய்! நின்னை நின் மெய்யடியார்க்குத் தந்தருளுவாய்! இவ்வாறு அருள் செய்யும் தக்கவனே! மின்னலைப் போன்று தோன்றி மறையும் தன்மையுடைய நிலையாமையுடைய இவ்வுலகப் பொய் வாழ்க்கையையே நிலையாய் எண்ணி என்றும் தோற்றக் கேடுகள் இல்லாத மெய்யான நின்னை மறந்து நான் எவ்வாறு வாழ்வேன்? உய்யும் வகையை உரைப்பாயாக!

378. நின் திருவடியே அடைக்கலம்

எம்ப ராபர எம்முயிர்த் துணைவ என் றிறைஞ்சும்
உம்பர் இம்பர்க்கும் உளக்கணே நடிக்கின்றாய் உன்தன்

அம்பொன் மாமலர்ப் பதத்தையே துணைஎன அடிமை
நம்பி னேன்இனிப் புரப்பதெக் காலமோ நவிலாய்!

378. 'எம் மேலானவனே! எம் உயிர்த்துணையே!' என்று வணங்கும் மேல் உலகத்தில் வாழ்பவர்க்கும் இவ்வுலகத்தில் வாழ்பவர்க்கும் உள்ளத்தில் நடித்தருள்கின்றாய். நினது அழகிய பொன் போன்ற தாமரை போன்ற அடிகளை துணையாகும் எனக் கொண்டு நம்பி நிற்கின்றேன். இனி நீ என்னைக் காப்பது எக்காலமோ, அறியேன்!

379. என் இனிச் செய்வேன்?

பாடி ஆடி நின் றிரங்கி நின் பதமலர் முடிமேல்
சூடி வாழ்ந்தனர் அமல நின் அடியர் யான் தொழும்பன்
நாடி யேயிந்த உலகத்தை மெய்யென நம்பித்
தேடி னேன்வெறுந் தீமையே என்இனிச் செய்வேன்.

379. தூய்மையானவனே! நின் மெய்யடியார் ஆடியும் பாடியும் நின்திருமுன் நின்று அழுதும் நின் மலரடிகளைத்தம் தலைமீது சூடியும் உய்ந்தனர். யான் நின் அடியவன். நான் இவ்வுலகத்தை நிலையானது என்று நம்பி அளவில்லாத தீவினைகளைத் தேடினேன். இனி யான் என்ன செய்வேன்!

380. வழி சொன்னால் வாழ்வேன்!

களவு வஞ்சனை காமம்என் றிவையெலாம் காட்டும்
அளவு மாயைஇங் காரெனக் கமைத்தனர் ஐயா
உளவி லேஎனக் குள்ளவா றுணர்த்தின் உன் அடிமை
வளரும் மாமதி போல்மதி தளர்வின்றி வாழ்வேன்.

380. ஐயனே! கள்ளம், வஞ்சனை, ஆசை என்பவையெல்லாம் காட்டும் அளவையுடையது மாயை. இவற்றை

எனக்கு அமைத்து வைத்தவர் யார்? மறைவாய் இதனை நின் திருவருள் எனக்கு உணர்த்துமானால் நான் மனத் தளர்ச்சி இன்றி வளரும் பிறைச் சந்திரனைப் போல் நின் அடிக்கீழ் வாழ்வேன்.

381. அகம் வாடவோ சொல்!

வான நாயக வானவர் நாயக வளம்கூர்
ஞான நாயக நான்மறை நாயக நலஞ்சேர்
மோன நாயக நின்னடிக்கு அன்பின்றி முற்றும்
தீன னாய்அகம் வாடவோ என்செய்வேன் செப்பாய்

381. வான் உலகத் தலைவனே! வானவர் தலைவனே! வளமை மிக்க ஞானத் தலைவனே! நான்கு வேதங்களுக்கும் தலைவனே! நன்மை பொருந்திய மோனத் தலைவனே! உன் திருவடிக்கு அன்பு இல்லாது முற்றும் ஏழையாகி உள்ளம் வாடவோ? என்ன செய்ய வல்லாய்? கூறுவாயாக!

382. என் நெஞ்சக் கல்லைக் கோயிலாகக் கொள்க!

ஏதம் அற்றவர்க் கின்பமே பொழிகின்ற இறையே
பாத கக்கருங் கல்மனம் கோயிலாப் பரிந்து
சூத கத்தனாய் யாதினும் இச்சைமேல் தோன்றும்
வாத னைக்கு இடம் ஆயினேன் எவ்வணம்
வாழ்வேன்?

382. குற்றம் அற்றவர்க்கு இன்பத்தையே அளிக்கின்ற இறைவனே! பாவ வடிவான கருங்கல்லைப் போன்ற மனமானது நினக்குரிய ஆலயமாய் இருக்கவும், நான் அதற்கு மாறாக, வஞ்சனை மிக்க மனமுடையவனாய் எப்பொருளிலும் ஆசையையே அதிகமாகத் தோற்றுவிக்கும் துன்பத்துக்கு ஆளானேன். அங்ஙனமாயின், நான் எங்ஙனம் வாழ்வேன்?

383. அறிகிலேன் சிறிதும்!

தெளிவோடு ஈகையோ அறிகிலான் அறிவிலான் சிறிதும்
அளியி லான் இவன் திருவருட் கயலென அறிந்தோ
எளிய ன் ஆக்கினை என்செய்வேன் என்செய்வேன்
எல்லா
ஒளியு மாய் நிறை வெளியுமாய் யாவுமாம் உரவோய்!

383. விளங்கும் ஒளியுடன் கூடிய எல்லாவகைப்பட்ட பொருளுமாகி எங்கும் பரந்துள்ள வெளியுமாகி விளங்கும் பேரறிஞனே! மனத் தெளிவுடன் கொடைத் தன்மையை அறியான், அறிவற்றவன், சிறிதும் இரக்கம் இல்லாதவன் என்று நின் மனத்தில் கொண்டு என்னைப் புறத்தில் தள்ளி விட்டாய். அங்ஙனம் தள்ளிவிடின் யான் என்ன செய் வேன்?

384. நின் அருளைப் பெறுவது எப்போது?

கண்ணி னுள்மணி என்னவே தொழுமன்பர்
கருத்துள்
நண்ணு கின்றநின் அருள்எனக் கெந்தநாள் நணுகும்
மண்ணும் விண்ணும் மற் றுள்ளன பூதமும் மாறாப்
பெண்ணும் ஆணுமாய் அல்லவாய் நிற்கின்ற
பெரியோய்!

384. உலகமும் வானமும் மற்றுமுள்ளவையுமாகிய தீ, நீர், காற்று என்ற பூதங்களும் நீங்காத பெண்ணும் ஆணும் ஆகி. அவையல்லவையுமாகி, நிற்கின்ற பெரியவனே! கண்ணுக்குள் மணி என்று கூறுமாறு வணங்கும் அடியார் உள்ளத்துள் பொருந்தும் திருவருளானது எனக்கு எக்காலத் தில் பொருந்தும்?

385. எந்தாய்! என் செய்வேன்?

சகமெ லாம்தனி புரந்தனை தகவுடைத் தக்கோர்
அகமெலாம் நிறைந் தானந்த மாயினை அளவில்
மகமெ லாம்புரிந் தோரைவாழ் வித்தனை மாறா
இகமெ லாம்எனைப் பிறந்திடச் செய்ததேன் எந்தாய்!

385. என் தந்தையே! நீ எல்லா வுலகங்களையும் காத்தாய்! தகுதியையுடைய தக்கவரின் தூய உள்ளம் எல்லாம் நிறைந்து பேரின்ப மயமாய் உள்ளாய்! எண்ணற்ற வேள்விகளை யெல்லாம் செய்தவரை வாழ்வித்தாய்! மாறாமல் மீண்டும் மீண்டும் இவ்வுலகத்தில் பிறக்கும்படி செய்தது எதன் பொருட்டு?

386. அடியார்க்கு அடியனாவேன்!

ஏய்ந்த நல்லருள் பெற்றவர்க்கு ஏவலாய் எளியேன்
வாய்ந்த பேரன்பு வளர்க்கவுங் கருணைநீ வளர்ப்பாய்
ஆய்ந்த மாமறை எத்தனை அத்தனை அறிவால்
தோய்ந்த பேர்கட்கும் தோன்றிலாத் தோன்றலாந்
தூயோய்!

386. ஆராயப்பட்ட வேதங்கள் எத்தனை உண்டோ அத்தனையும் கற்ற அறிஞர்க்கும் நின் கோலத்தைக் காட்டியருளாத பெரியவனான தூயவனே! பொருத்திய நின் மெய்யடியார்க்கு ஏவலாகி வாய்ப்பான பேரன்பினை வளர்க்குமாறு நீ அருளைச் செய்வாயாக!

387. துன்ப வெள்ளத்தில் மூழ்கினேன்!

தக்க நின்னருள் கேள்வியோ சிறிதின்றித் தமியேன்
மிக்க தெய்வமே நின்இன்ப வெள்ளத்தில் வீழேன்

ஒக்கல் தாய்தந்தை மகவெனும் பாசக்கட் டுடனே
துக்க வெள்ளத்தில் ஆழ்கின்றேன் என்செய்வான்
துணிந்தேன்?

387. மேலான தெய்வமே! தகுதியுடைய நின் திருவருளைப் பற்றிய கேள்வி சிறிதும் இன்றி ஏழையேன் நின் பேரின்பக் கடலில் மூழ்காதவன் ஆனேன். சுற்றத்தினர், தாய், தந்தை, குழந்தை என்ற பாசத் தளைகளினால் துன்ப வெள்ளத்துள் மூழ்குகின்றேன். நான் என்ன செயலைச் செய்யத் துணிந்தேன்?

388. தயவு செய்து அருள்வாய்!

பவம்பு ரிந்திடும் பாவியேற் கருள்நிலை பதியத்
தவம்செ யும்படி தயவுசெய்து அருள்வதே தருமம்
அவம்பு ரிந்திடார்க் கானந்த அமிர்தத்தை அளிக்க
நவங்கொள் தத்துவத் திரையெறி கடலெனும்
நலத்தோய்!

388. பிறவி எடுப்பதற்குக் காரணமான செயல்களைக் கனவிலும் நினையாத அடியார்களுக்கு நின் திருவடிப் பேற்றை அளித்தற் பொருட்டுப் புதுமையுடைய உண்மை அலைகளை வீசிக் கொண்டு வரும் பெருங் கடலான இறைவனே! பாவத்தையே செய்யும் பாவியான எனக்கு நின் திருவருள் நிலை பதியத் தவம் செய்யுமாறு அருள் செய்வதே அறமாகும்.

389. விதையை விற்ற பேதை நான்!

உற்று ணர்ந்தெலாம் நீயல தில்லைஎன் றுனையே
பற்று கின்றனர் எந்தை நின் அன்பர் யான் பாவி

முற்று மாயமாம் சுகத்தையே மெய்யென முதல்தான்
அற்றிருந்திடத் தொழில்செய்வான் றனை நிக
ரானேன்.

389. எம் தந்தையே! உன் அடியவர்கள் ஆராய்ந்து அறிந்து எல்லாப் பொருள்களும் நீயே அல்லாது வேறில்லை என்று எண்ணி, நின்னையே அடைந்தனர். ஆயின், பாவி யான யானோ, முழுதும் மாயையின் காரியமான உலகத் தையே மெய்யானது என்று, முதலே அற்று ஒழியத் தொழி லைச் செய்பவன் போல முதல்வன் ஆன நின்னை மறந்தவன் ஆனேன்.

26. மண்டலத்தின்

(இப்பகுதியின் முதல் செய்யுளின் தொடக்கம் 'மண்ட லத்தின்' என்பதாகும். ஆதலால் இப்பெயரை இது பெற்றது. இதில் உள்ள செய்யுட்கள் பதினொன்று, ஆறாம் ஏழாம் செய்யுட்கள் தவிர மற்றவை அந்தாதியாய் அமைந்துள்ளன.

390. பரம்பொருளின் தன்மை

மண்டலத்தின் மிசைஒருவன் செய்தவித்தை அகோ
வார ணாதி [எனவும்
அண்டமவை அடுக்கடுக்காய் அந்தரத்தில் நிறுத்தும்
தானம் போல [அவ
எண்டருநல் அகிலாண்ட கோடியைத்தன் அருள்
இலக வைத்துக் [வெளியில்
கொண்டுநின்ற அற்புதத்தை எவராலும் நிச்சயிக்கக்
கூடா வொன்றை

390 இந்த வுலகத்தில் ஒருவன் செய்த வித்தையானது வியப்பானது எனவும், கோழி முதலியவற்றின் முட்டைகளை அடுக்கடுக்காய் வானத்தில் வைக்கின்ற திறத்தைப் போல்

எண்ணில்லாத பல வுலகங்களை யெல்லாம் தன் அருள் வெளிக்குள் விளங்க அடங்க வைத்துக் கொண்டுள்ள அதிசயப் பொருள் எவராலும் இத்தகையது எனத் துணியக் கூடாத (ஒப்பில்லாதது)

(இப்பாட்டு முடியவில்லை. எட்டாம் பாட்டுடன் முடியும். குளகம். இவ்வெட்டும் ஒரு தொடர் 'அகோ'— வியப்பை உணர்த்தும் இடைச்சொல்)

391

ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரம் கடந்தேழாம்
யோக பூமி
நின்று தெளிந் தவர்பேசா மௌனநியா யத்தை
நிறைவைத் தன்னை [நிறை
யன்றிஒரு பொருளிலதா எப்பொருட்கும் தான்
அசல மாகி [முதலாய்
என்றுமுள இன்பத்தைத் தண்ணென்ற சாந்தபத
இயற்கை தன்னை

391. இறைவனும் உயிரும் ஒன்று என்ற மாயாவாதக் கொள்கையும் அவை வெவ்வேறு—இரண்டு என்ற வேற்றுமைக் கொள்கையும் கடந்து, ஏழாவது பூமியில் தங்கி அறிந்தவர்க்குப் பேசாமை என்ற மௌன நிலை, முழுநிறைவு, தன்னை அல்லாது வேறு பொருள் இல்லையான எப்பொருளுக்கும் தான் முதலாய் ஆகி, சலியாததாகி என்றும் நிலை பெற்ற இன்பம், மிகவும் குளிர்ச்சியுடைய இயற்கை,

392

பதமூன்றும் கடந்தவர்க்கும் மேலான ஞானபதப்
பரிசு காட்டிச்
சதமாகி நிராலம்ப சாட்சியதாய் ஆரம்பத்
தன்மை யாகி

விதம்யாவும் கடந்தவித்தை எனும்இருளைக் கீண்
டெழுந்து விமல மாகி
மதம்ஆறும் காணாத ஆனந்த சாகரத்தை
மௌன வாழ்வை.

392. சரியை கிரியை யோகம் என்ற மூன்றையும் கடந்தவர்க்கு மேன்மையான ஞானபதத்தின் இயல்பைக் காட்டி நிலையாகிப் பற்றுக் கோடில்லாத சாட்சி பூதமாகி, ஆதியான தன்மையுடையதாகி எல்லா விதங்களையும் தாண்டி, அஞ்ஞானம் என்னும் இருளைப் பிளந்து எழுந்து குற்றம் அற்றதாகி ஆறு சமயங்களும் காணாத இன்பக் கடல், மோன வாழ்க்கை,

393

வாழ்வனைத்தும் தந்தஇன்ப மாகடலை நல்லமிர்தை
மணியைப் பொன்னைத்
தாழ்வறஎன் உளத்திருந்த தத்துவத்தை அத்துவித
சாரம் தன்னைச்
சூழ்பெரும்பே ரொளியை ஒளி பரந்தபர வெளியை
சுகத்தை மாறா இன்பச்
தேழுலகுங் கலந்தின்றாய் நாளையாய் என்றுமாம்
இயற்கை தன்னை,

393. இவ்வுலக வாழ்வனைத்தும் தந்த பெருங் கடல், சிறந்த அமிழ்து, மாணிக்கம், பொன், தாழ்வு இல்லாத என் உள்ளத்தில் இருந்த உண்மை, அத்துவித சாரம், சூழ்ந்துள்ள மிகப் பெரிய ஒளி, ஒளி பரவிய அறிவு வெளி, பேரின்பம், ஏழுலகங்களிலும் பரவி இன்றாகி நாளையாகி என்றுமாகிய இயற்கை,

394

தன்னைஅறிந் தவர்தம்மைத் தானாகச் செய்தருளும்
சமத்தை லோகம்
மின்னை நிகர்த் திடஅழியாச் சொருபானந் தச்சுடரை
வேத மாதி
என்னையறி வரிதென்னச் சமயகோ டிகளிடைய
இடைய றாத
பொன்னை விரித்திடும்உலகத் தும்பரும்இம் பரும்
புனித மெய்யை. [பரவும்

394. தன்னை உணர்ந்தவரை தம்மைத் தாமாகச் செய்தருளும் சமய நிலை, உலகம் மின்னலை ஒத்து அழிந்திடவும் கெடாத இசைவடிவான பேரொளி, வேதம் முதலியவை என்னை அறிதல் அரிதாம் எனவும் பல சமயங்களும் காணமுடியாமல் பின்வாங்கவும் நீங்காத பொன்னுலகத்தின் தேவரும் மனிதரும் வணங்குகின்ற தூயமேனி.

395

பரவரிய பரசிவமாய் அதுஎனலாய் நான்எனலாய்ப்
பாச சாலம்
விரவிநின்ற விசித்திரத்தை ஐக்யபதத்து இனிதிருந்த
விவேகந் தன்னை
இரவுபகல் நினைப்புமறப் பெனுந்தொந்தம் அறியார்
இதயம் வேதச் [கள்
சிரமெனவாழ் பராபரத்தை ஆனந்தம் நீங்காத
சிதாகா சத்தை,

395. துதிப்பதற்கரிய மேலான சிவபெருமான், அவனது அருளால் அது எனக்கூறுவதற்கு ஏதுவாகி, நான் என்பதற்கு ஏதுவாகி, பாசக் கூட்டத்தால் கலந்து நின்ற வியப்பான வடிவு, இரவு பகல் நினைவு மறைப்பு என்று

கூறப்படுகின்ற தொடர்பு, அறியாதவரின் உள்ளமே மறை முடிவு என்று அதில் விளங்கும் மேலான பொருள், இன்பம் நிறைந்த அறிவு வெளி,

396

அத்துவித அனுபவத்தை அனந்தமறை இன்னம்
 அறியேம் என்னும் [இன்னம்
நித்தியத்தை நிராமயத்தை நிர்க்குணத்தைத்
 நினைவுக் குள்ளே [தன்னருளால்
வைத்துவைத்துப் பார்ப்பவரைத் தானாக எந்நாளும்
 வளர்த்துக் காக்கும்
சித்தினை மாத் தூவெளியைத் தன்மயமாம் ஆனந்தத்
 தெய்வம் தன்னை

396. அத்துவிதத்தால் உணரப்படும் நுட்பொருள், எல்லையற்ற வேதங்கள் இன்னம் இன்னம் அறியோம் என்று கூறும் அழிவில்லாத பொருள், நோய் இல்லா ஒன்று, மாயையின் காரியமான முக்குணம் இல்லாதது, தனது அருளால் தன் எண்ணத்துக்குள் வைத்து எந்நாளும் வளர்த்துக் காக்கும் அளவிடப்படாத தூயவெளி, தன்மயமாய்க் காணப்படும் பேரின்பப் பெருந்தெய்வம்.

397. நன் மனத்தால் ஆகும் நலம்

தன்னிலே தானாக நினைந்துகனிந்து அமிழ்ந்துசுக
 சமாதி யாகப்
பொன்னிலே பணிபோலும் மாயைதரு மனமே உன்
 புரைகள் தீர்ந்தாய்
என்னிலோ யான்பிழைப்பேன் எனக்கினியார் உன்
 இல்லை யில்லை [போல்வார்
உன்னிலோ திருவருளுக் கொப்பாவாய் என் உயிர்க்கோர்
 உறவு மாவாய்,

397. தன் உடலிலே அந்த உடலுக்கு அயலாய் ஆன்ம வடிவாய் விளங்குவது இறை. அப்பொருளை எண்ணி உள்ளம் நெகிழ்ந்து உருகி இன்பத்தை உண்டாக்கும் சமாதி யுண்டாகப் பொன்னால் செய்யப்பட்ட அணிபோல் மாயையின் காரியமாய் விளையும் மனமே! உன் குற்றங்கள் நீங்கப் பெறுவாயானால் உயிர் பிழைப்பேன். எனக்கு இனியவர் உன்னைப் போல் எவரும் இல்லை, இல்லை. நினைத்துப் பார்த்தால் நீ நன்மைக்குத் துணையாய் நிற்கும் தன்மையில் திருவருளுக்கு நிகராவாய். எனக்கு அரிய உறவும் ஆவாய்.

398. இக பரம் நீயே!

உறவுடலை எடுத்தவரில் பிரமாதி யேனும்உனை
ஒழிந்து தள்ளற்
கறவும்அரி தரிதன்றோ இகபரமும் உன்னையன்றி
ஆவ துண்டோ
வறிதிலுன்னை அசத்தென்னல் வழக்கன்று சத்தெனவும்
வாழ்த்து வேன்என்
சிறுமைகெடப் பெருமையின்நின் சென்மதே யத்தினிநீ
செல்லல் வேண்டும்.

398. உடலுடன் கூடிப் பிறந்த நான்முகன் முதலிய தேவரானாலும், உள்ளமே உன்னை வேண்டா என்று நீங்கிக் காலம் கழிப்பதற்குப் பெரிதும் அரிதாகும் அன்றோ? இம்மை வாழ்வு மறுமை வாழ்வு என்னும் இரண்டும் உம்மையல்லாமல் எவர்க்கும் எய்தாது. வீணாய் உன்னை அசத்து என்று கூறுதல் வழக்கம் அன்று. அறிவுள்ள அழிவில்லாத சத்து எனவே உன்னை வாழ்த்துவேன். என் தாழ்வு நீங்க, நீ உன்னுடைய பெருமைமிக்க பிறப்பிடத்தில் கூறுதல் வேண்டும்.

399. மனம் அடங்குதலால் பெறும் பேறு!

வேண்டியநாள் என்னோடும் பழகியநீ எனைப்பிரிந்த
விசாரத் தாலே
மாண்டுகிடக் கினும்அந்த எல்லையையும் பூரணமா
வணக்கம் செய்வேன்
ஆண்டகுரு மௌனிதன்னால் யான்எனதற்
றவனருள்நா
னாவேன் பூவிற்
காண்டகஎண் சித்திமுத்தி எனக்குண்டாம் உன்னால்
என்
கவலை தீர்வேன்.

399. என் உள்ளமே! பல நாட்களாய் என்னுடன் பழகியிருந்த நீ என்னை விட்டு நீங்கிய துன்பத்தினால் நீ மடிந்து கிடந்தாலும் அந்த இடத்தையும் நான் வணங்குவேன். நீ நீங்கியதால், என்னை ஆட்கொண்ட மௌன குருவினால் 'யான்', 'எனது' என்பவை நீங்கி, அந்தக் குருவின் திருவருளே நானாகி விடுவேன். இவ்வுலகத்தில் காணுமாறு எட்டுச் சித்திகளும் வீடுபேறும் எனக்கு உண்டாகும். உன்னால் என் கவலை நீங்கும்.

400. இனிப் பிறவி யில்லை!

தீராத என்சனன வழக்கெல்லாம் தீரும்இந்தச்
சனனத் தோடே
யாரேனும் அறிவரிய சீவன்முத்தி உண்டாகும்
ஐய ஐயோ
காரேனும் கற்பகப்பூங் காவேனும் உனக்குவமை
காட்டப் போமோ
பாராதி யாகஎழு மண்டலத்தில் நின்மகிமை
பகர லாமோ!

400. உள்ளமே, நீ இறந்துவிடின் பல காலமாய்த் தொடர்ந்து வரும்என் பிறவி வழக்கு எல்லாம் இந்தப் பிறவி ஒன்றுடனே நீங்கும். எவராலும் அறிதற்கு அரிய சிறந்த உயிர் எனப்படும் சீவன் முத்தி நிலையும் உண்டாகும். ஐயனே, அந்தோ, வேண்டுமிடத்து வேண்டியபடி பெய்யும் வியக்கத்தக்க மழையையும் கற்பக தரப் பூங்காவையும் உனக்கு உவமையாகக் காட்ட முடியுமோ?

27. பாயப் புலி

(இப்பகுதியில் முதற் செய்யுளின் தொடக்கம்'பாயப்புலி' என்பது. ஆதலால் இது இப் பெயர் பெற்றது. இப்பகுதி யில் உள்ளவை ஐம்பத்தொன்பது செய்யுட்கள், பாயப் புலி—பாய்+அப்புலி)

401. நின் மனப்படி என் வாழ்க்கை!

பாயப் புலிமுனம் மான்கன்றைக்
காட்டும் படி அகில
மாயைப் பெரும்படைக் கேயிலக்
காஎனை வைத்தனையோ
நீயெப் படிவகுத் தாலும்நன்
றே நின் பெருங்கருணை
தாயொத் தடியர்க் கருள்சச்சி
தானந்தத் தற்பரமே!

401. பாயும் தன்மையுடைய அப்புலியின் முன்னம், மான் தன் கன்றைக் காட்டுவதைப் போன்று, அகில மாயை என்ற பெரும்படைக்கு இரையாக என்னை வைத்திட் டாயோ! நீ எவ்வகையாய் வகைப்படுத்தினாலும் நன்றே! நின் பெரிய அருளை அடியவர்க்குத் தாயைப் போன்று அருளும் அறிவின்ப வடிவான தனித்த முழுமுதலே!

402. வினையை விலக்குவாய்!

தற்பர மாம்சிற் பரமாகி
    மன்றந் தனில்நடித்து
நிற்பர் அம் போருகன் மால்பணி
    நீதர் என்நெஞ்சகமாம்
கற்பரந் தாங்குக் கரைந்திட
    வானொத்த காட்சி நல்கும்
பொற்பர மாய்என் வினைக்கருந்
    தாதைப் பொடிசெய்ததே.

402. நான்முகனும் திருமாலும் வணங்கத் தக்க சிறப்பை யுடையவர்; தற்பரமான சிற்பரமாகிப் பொன்னம் பலத்தில் கூத்தை இயற்றுவர். அத்தகையவர், என் உள்ள மான கல்லானது பரவியது போல் உருகிட மேன்மையான தோற்றத்தை அளிக்கும் அழகான அரமாகி என் வினையான இரும்பைத் தூளாக்கியது.

403. தவமிலேன்

செய்யும் தவம்சற்றும் இல்லாத
    நான் உன் திருவடிக்கே
கொய்யும் புதுமலர் இட்டு மெய்
    யன்பர் குழாத்துடனே
கையும் சிரமிசைக் கூப்பி நின்
    றாடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென்
    றோ புலியூர் அத்தனே!

403. தில்லையில் வீற்றிருக்கின்ற தந்தையே! செய்யப் படும் தவம் சிறிதும் யான் செய்யவில்லை! நின் திருவடிக்கே

பறிக்கும் புதிய மலர் மாலை கட்டி உண்மையடியார் கூட்டத்துடன் கூடிக் கையைத் தலைமீது குவித்து வணங்குதலும் ஆடுதலும் மனம் நெகிழ்ந்து உருகி உய்வதற்கு வேண்டியவற்றையும் செய்யவில்லை. இவற்றையெல்லாம் நின் திருவருளால் செய்து உரியபடி உய்யுமாறு நீ அருள் செய்வது எந்நாளோ?

404. எத்தனை நாள் ஆகும் நின்னைக் காண!

அத்தனைச் சிற்றம் பலவனை
    என்னுயி ராகிநின்ற
சுத்தனைச் சுத்த வெளியா
    னவனைச் சுகவடிவாம்
நித்தனை நித்த நிராதார
    மாகிய நின்மலனை
எத்தனை நாள்செல்லு மோ மன
    மே கண்டு இறைஞ்சுதற்கே.

404. மனமே! என் தந்தையை, சிற்றம்பலத்தில் நடிப்பவனை, என் உயிராகி வீற்றிருக்கின்ற தூயவனை, வெற்று வெளியானவனை, இன்ப வடிவான நித்திய மாயுள்ளவனை, எக்காலத்தும் ஆதாரமாய் உள்ள மலம் அற்றவனை கண்ணாரக் கண்டு வணங்க எத்தனைக் காலம் கழியுமோ?

405. என் உள்ளத்தில் நிற்பாய் என்றும்

கண்டார் உளத்தினில் கால்ஊன்றிப்
    பெய்யும் கருணைமுகில்
அண்டார் புரத்துக்கும் அன்பர்
    வினைக்கும் அசனிதன்னைக்
கொண்டாடி னார்முனங் கூத்தாடும்

அத்தன்றன் கோலமெல்லாம்
விண்டால்அம் மா ஒன்றுங் காணாது
வெட்ட வெறுவெளியே.

405. இறைவனான தன்னைக் கண்டவர் உள்ளங்களில் அடியிட்டுக் கருணை மழையைப் பெய்கின்ற மேகமான பகைவரின் திரிபுரங்களுக்கும் சிவனடியார் வினைக்கும் இடியாய் விளங்கும் முழுமுதல்வனான தன்னை வணங்கியவரின் முன்பு கூத்தாடும் உன்மத்தன். அவனுடைய கோலங்களை எல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்துச் சொல்லலாம் என்றால் ஒரு சிறிதும் காண்பதற்கு இயலாது. காணப்படுவது சிற்றம்பலம் என்ற அறிவு வெளி ஒன்றே யாகும். என்னே வியப்பு!

406 என் மனத்தில் நிற்க விரைந்து வா!

வெளியான நீயென் மனவெளி
யூடு விரவின் ஐயா!
ஒளியாரும் கண்ணும் இரவியும்
போல்நின் றுலாவுவன்காண்
அளியாருங் கொன்றைச் சடைஆட
அம்புலி ஆடக் கங்கைத்
துளிஆட மன்றுள் நடமாடும்
முக்கண் சுடர்க்கொழுந்தே!

406. வண்டுகள் நிறைந்த கொன்றை மலர் மாலையைச் சூடிய சடை அசையவும், அச்சடையில் உள்ள பிறைச்சந்திரன் அசையவும், சிற்றம்பலத்தில் நடனம் ஆடும் மூன்று கண்களையுடைய சுடர்க் கொழுந்தே! ஐயனே! அறிவு வெளியான சிற்றம்பலமாய் விளங்கும் நீ என் மனவானில் வந்து கலந்தால் ஒளியுடைய விழியும் கதிரவனும் போல் தங்கி உலவுவேன்.

407. பிறவிக் கடலைக் கடக்க உதவும் உன் திருவடி

கொழுந்தா துறைமலர்க் கோதையர்
மோகக் குரைகடலில்
அழுந்தாத வண்ணம்நின் பாதப்
புணைதந் தருள்வதென்றோ
எழுந்தா தரவுசெய் எம்பெருமான் என்று
இறைஞ்சி விண்ணோர்
தொழுந்தாதை யே வெண் பொடிபூத்த
மேனிச் சுகப்பொருளே!

407. தேவர்கள் எழுந்து நின்று, ''எம் இறைவ! எமக்கு ஆதரவு அருளுவாயாக!'' என்று வணங்குவதற்குரிய தந்தையே! வெண்ணீறு அணிந்த மேனியையுடைய இன்ப வடிவே! செழிய மகரந்தம் உள்ள மலர்களைச் சூடிய மங்கையரின் ஆசையான ஆரவாரத்துடன் கூடிய கடலில் அழுந்திடாவண்ணம் நின் திருவடியான மரக்கலத்தைத் தந்தருளுவது எக்காலமோ! அறியேன்!

408. நின் அருள் இன்றேல் இன்பம் இல்லை!

சுகமாகும் ஞானம் திருமேனி
யாநல்ல தொண்டர்தங்கள்
அகமேபோற் கோயில் எனமகிழ்ந்
தேமன்று ளாடியகற்
பகமே உன் பொன்னடி நீழல்கண்
டாலன்றிப் பாவிக்கிந்தச்
சகமாயை யானஅ ருங்கோடை
நீங்கும் திறமிலையே.

408. பேரின்ப ஊற்றுக்குக் காரணமான பேரறிவே திருமேனியாகவும் நல்ல திருத்தொண்டரின் உள்ளமே

அழகிய கோயிலாகவும் கொண்டு மகிழ்ந்து சிற்றம்பலத்தில் கூத்தாடிய கற்பக மரமே! நின் பொற்பாத நிழல் கண்டால் அல்லது இந்தப்பாவிக்கு இந்த உலக மாயையான அரிய கோடைக் காலமானது நீங்கும்படி இல்லை.

409. உலகைப் பாங்காக இயக்கும் பரம்பொருளே!

நீங்கா துயிருக் குயிராகி
நின்ற நினையறிந்தே
தூங்காமல் தூங்கின்அல் லாதே
எனக்குச் சுகமும் உண்டோ
ஓங்கார மாம்ஐந் தெழுத்தால்
புவனத்தை உண்டுபண்ணிப்
பாங்கா நடத்தும் பொருளே
அகண்ட பரசிவமே.

409. பிரணவ வடிவான திருவைந்தெழுத்தால் உலகங்களை உண்டாக்கி முறையாய் அவற்றையெல்லாம் செவ்வனே நடத்தும் பெரும்பொருளே! எல்லையற்ற மேலான சிவ பெருமானே! உயிர்களுக்கு உயிராய்த் தங்கி யருளுகின்ற நின்னை உணர்ந்து தூங்காமல் தூங்கினால் அல்லது அடியேனுக்கு இன்பமும் உண்டோ?

(ஓங்காரம் — பிரணவ மந்திரம். ஓம் என்ற நாதமும் எழுத்தான விந்தும், அகரம், உகரம், மகரம் என்ற மூன்றும் கூடிய ஐந்தெழுத்து மந்திரம். இது திருவைந்தெழுத்து எனப்படும் தூய பஞ்சாட்சரம், சூட்சம பஞ்சாட்சரம், 'நமசிவாய' என்பது)

ஓம் என்பது உயிர். மற்ற மந்திரங்கள் உடல்கள். ஓம் என்று உச்சரித்தபின்பே மற்ற மந்திரங்களை உச்சரிப்பர். இந்த நிலை பஞ்சாட்சரத்துக்கு இல்லை. ஓம் என்பதைச் சேர்த்துப் பஞ்சாட்சரத்தை உச்சரித்தால் அஃது எட்டெழுத்

தாகிவிடும். ஆகவே 'ஓம்' என்பது இல்லாமலேயே பஞ்சாட் சரம் வழங்கும். ஓம் என்பது சேர்ந்தே மற்ற மந்திரங்கள் இயலும். இதை உச்சரித்தால் பாசத்தினின்றுந் தாண்டி உயரச் செய்யும். ஆதலால் ஓம் எனப்படும்.)

410. ஐம்புலன்களை அடக்க அருள்வாய்

சிவமாதி நான்முகக் கோஅந்த
மாமறை செப்புகின்ற
நவமாய் இலங்கிய ஒன்றே
இரண்டற்ற நன்மைபெறா
தவமே தரும்ஐம் புலப்பொறிக்
கேயென் அறிவுபொல்லாப்
பவமே விளைக்களன் றோவெளி.
மான்எனப் பாய்ந்ததுவே.

410. 'சிவ பெருமானே முதற்பொருள்' என்று நான் முகன் கற்றுக் கொண்ட பெரிய மறைகள் கூறும் புதுமை யுடையதாய் விளங்குகின்ற ஒப்பில்லாத பொருளாகும் இரண்டு அன்று எனப்படும் அத்துவிதப் புணர்ப்பு நிலையாம். அந்த நல்ல நிலையைப் பெறாமல் என் மனமானது பொல் லாத பிறவியை உண்டாக்குகின்ற பொறிபுலன்களில் செல்வ தற்கோ வெட்ட வெளியில் திரியும் மானைப் போன்று துள்ளிக் குதித்தது!

411. ஆனந்த வெள்ளம் நின் அருள்!

ஆறொத் திலங்கு சமயங்கள்
ஆறுக்கும் ஆழ்கடலாய்
வீறிப் பரந்த பரமான
ஆனந்த வெள்ளம்ஒன்று
தேறித் தெளிந்து நிலைபெற்ற

மாதவர் சித்தத்திலே
ஊறிப் பரந்தண்ட கோடிஎல்
லாம்நின்று உலாவியதே.

411. ஆறுகளைப் போன்று விளங்குகின்ற ஆறு சமயங் களுக்கும் ஆழமான கடலுக்கு ஒப்பாய்ப் பரந்த மேலான இன்ப வெள்ளம் ஒன்று மிகவும் தெளிந்து நிலைபெற்ற துறவோர் உள்ளத்தில் ஊறிக் கசியுமாறு அண்ட கோடிகள் எல்லாம் நின்று பரவின.

412. எந்நிலையிலும் நீயே துணை!

நடக்கினும் ஓடினும் நிற்கினும்
வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினும் செவ்விது இருக்கினும்
நல்லருட் கேள்வியிலே
தொடக்கும்என் நெஞ்சம் மனமற்ற
பூரணத் தொட்டிற்குளே
முடக்குவன் யான் பர
மானந்த நித்திரை மூடிடுமே.

412. நான் நடந்தாலும், ஓடினாலும், நின்றாலும், வேறொரு எண்ணம் இல்லாது கிடந்தாலும், சுகமாய் இருந் தாலும், நல்ல அருட் கேள்வி கேட்டலில் என் உள்ளமானது கட்டுண்டு கிடக்கும். என் மனம் இறந்த முழுநிறைவான தொட்டிக்குள் முடங்கிக் கிடப்பேன். அப்போது பேரின்ப மான பேருறக்கம் என்னை வந்து கூடும்.

413. நெஞ்சே துயர் ஒழி!

எண்ணாத தெண்ணிய நெஞ்சே
துயர்ஒழி என்னிரண்டு

கண்ணே! உறங்குக என் ஆணை
முக்கட் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மௌனத்தி
னான்முத்தி சாதிக்கலாம்
நண்ணாத தொன்றில்லை எல்லா
நலமும் நமக்குளவே.

413. எண்ணக் கூடாததை எண்ணிய நெஞ்சே! நின் துன்பத்தை நீக்குவாயாக! என் இரு கண்களே இன்பமாய் உறங்குக! என் மீது ஆணை! மூன்று கண்களையுடைய அருள் செல்வரின் குளிர்ச்சி பொருந்திய அருளினால் உண்டாகும் மோன நிலையாலே வீடுபேற்றை அடையலாம். இனி மேல் நமக்குக் கிட்டாத பொருள் ஏதும் இல்லை. எல்லா நன்மைகளும் இனி நமக்கு உண்டாகும்.

414

நானென் றொருமுதல் உண்டென்ற
நான்தலை நாணஎன்னுள்
தானென்று ஒருமுதல் பூரண
மாகத் தலைப்பட்டொப்பில்
ஆனந்தந் தந்தென் அறிவையெல்
லாம்உண் டவசம்நல்கி
மோனந் தனைவிளைத் தால்இனி
யாது மொழிகுவதே?

414. 'நான்' என்று ஒரு முதன்மையான பொருளானது உண்டுஎன்று செருக்குக் கொண்டு திரிந்தவன் நான். இத்தகைய நான் வெட்கம் அடையும்படி என் உள்ளத்தில் 'தான்' என்று ஒப்பற்றமுதற்பொருள் நிறைவாய்க் கூடியது; ஒப்பில்லாத சிவானந்தத்தை அளித்தது; என் அறிவு முழுவதையும் கவர்ந்தது! பரவசம் அளித்தது; மவுன நிலையை உண்டாக்கியது. ஆதலால், இனி யான் என்ன சொல்வது?

415

தானம் தவம்சற்றும் இல்லாத
 நானுண்மை தான்அறிந்து
மோனம் பொருள்எனக் கண்டிடச்
 சற்குரு மோனனுமாய்த்
தீனன் றனக்ரிங் கிரங்கினை
 யே இனிச் சிந்தைக்கென்றும்
ஆனந்தந் தான்அல்லவா பர
 மே சச்சி தானந்தமே!

415. மேலானவனே! உண்மை அறிவு இன்பப் பொருளே! கொடை, தவம் சிறிதும் இல்லாத நான், உண்மையை உணர்ந்து, மௌன நிலையே உண்மைப் பொருளாகும் என்று அறிந்து கொள்ள மௌன குருவாகி எளியவனான எனக்கு இங்கு இரங்கியருளினாயே! இனி உள்ளத்துக்கு என்றும் இன்பமே அன்றோ!

416

எனக்கோர் சுதந்திரம் இல்லையப்
 பா எனக்கு எய்ப்பில்வைப்பாய்
மனக்கோ தகற்றும் பரம்பொரு
 ளே என்னைவாழ்த்திட
நினக்கே பரம் நின்னை நீங்காத
 பூரண நீள்கருணை
தனக்கே பரம் இனிச் சும்மா
 இருக்கத் தகும்என்றுமே.

416. என் தந்தையே! எனக்கு ஒரு சுதந்தரம் இல்லை! நான் இளைத்தவிடத்துப் பெருஞ்செல்வமாகி, உள்ளத்தில் உள்ள குற்றத்தை அகற்றும் மேலான பொருளே! என்னை

வாழ்விப்பது உனக்குக் கடனாகும். அதுவே அன்றி, உன்னை விட்டு நீங்காத நிறைவான பேரருளுக்கும் கடனாகும். இவை எனக்கு வாய்க்கப் பெற்றால் இனிமேல் நான் மௌனமாய் இருக்க எக்காலமும் இயலும்.

417. இவை உயிர்க்கு அரண் இல்லை!

இடம்பெறு வீடு மின்னார் சேய்
சமுகம் இருநிதியும்
உடம்பைவிட் டாருயிர் போம்போது
கூடி உடன்வருமோ
மடம்பெறு மாயை மனமே
இனியிங்கு வாமௌனி
திடம்பெற வைத்து மௌனம் சகாயம்
தெரிந்து கொள்ளே.

417. அகன்ற இடமும், மங்கையர், மக்கள், உலகம், பெருஞ்செல்வம் என்ற இவை அனைத்தும் அரிய உயிரானது உடலை விட்டு நீங்கிப் போகும்போது, (அவை) ஒன்றாய்க் கூடி உடன் வருமோ? அறியாமை உடைய மாயையின் செயலான மனமே! இனி எனக்கு அருகில் வருக! மௌன குருவானவர் உறுதி பெற வைத்த மவுன நிலையே 'நமக்கு எச்சமயத்தும் உறுதி அளிப்பதாகும். இதை உணர்வாயாக!

418. எனக்கும் உய்தி உண்டோ!

நாற்றச் சடலத்தை ஒன்பது
வாசல் நடைமனையைச்
சோற்றுப் பசையினை மும்மல
பாண்டத் தொடக்கறையை
ஆற்றுப் பெருக்கன்ன கன்மப்
பெருக்கை அடர்கிருமிச்

சேற்றைத் துணைஎன்ற நாய்க்கும்உண்
டோகதி சேர்வதுவே!

418. தீய நாற்றத்தை உடைய உடலை, ஒன்பது துளைகளையுடைய நடக்கும் இயல்பு கொண்ட வீட்டை, சோற்றால் ஆன பசையினை, மூன்று வகையான மலங்களும் நிறைந்த பாண்டமான தொடக்கினை யுடைய சிறிய வீட்டை, ஆற்று வெள்ளம் போன்ற கன்ம வெள்ளத்தை, நெருங்கிய புழுக்கள் கொண்ட சேற்றை, துணை என்று நினைத்திருந்த நாயை ஒத்த எனக்கும் நற்கதியைப் பெறும் பேறு உண்டோ?

419. உலகப்பற்றை விடுவேனோ?

பொய்யார் உலகம் நிலையல்ல
கானற் புனல்எனவே
மெய்யா அறிந்தென்ன என்னால்
இதனை விடப்போகுமோ
கையால் மௌனம் தெரித்தே
கல் லால்நிழற் கண்ணிருந்த
ஐயாஅப் பாஎன் அரசே முக்
கண்ணுடை ஆரமுதே!

419. கையால் காட்டிய சின்முத்திரையால் மௌன நிலை உணர்த்தி கல்லால மரத்தின் கீழ் நிழலில் எழுந்தருளிய ஐயனே! தந்தையே! என் மன்னவனே! மூன்று கண்களையுடைய அமிழ்தமே! பொய்மையுடைய உலகம் நிலையானது அன்று. கானல் நீரைப் போன்று உள்ளது என்று உண்மையாக அறிந்து கொண்டதால் என்ன பயன்? என்னால் இந்தப் பொய்யான உலகை விட முடியுமோ?

420. நின் அருள் இன்றேல் உயிர் இல்லை!

ஆரா அமுதென் மோனம்
 வகித்துக் கல் லாறநிழற்கீழ்ப்
பேராது நால்வ ருடன்வாழ்முக்
 கண்ணுடைப் பேரரசே
நீராய் உருகவுள் அன்புதந்
 தேசுக நிட்டையைநீ
தாரா விடின்என் பெருமூச்சுத்
 தானத் தனஞ்சயனே.

420. தெவிட்டாத அமிழ்தம் போன்று சின்முத்திரை தாங்கிக் கல்லால மரத்தின் நிழலில் நீங்காமல் முனிவர் நால்வருடன் வீற்றிருந்த மூன்று கண்களையுடைய அரசே நீரின் தன்மையாய் உருகும்படி மனத்தில் அன்பைத் தந்து இன்ப நிட்டையினை நீ அளிக்காது போனால் என் பெரு மூச்சுத்தான் தனஞ்சயன் என்ற அந்தக் காற்றாகும்.

(தனஞ்சயன் — உயிர் நீங்கியபின் தலையைக் கிழித்துக் கொண்டு செல்வது. பத்து வகைப்பட்ட காற்றுகளுள் ஒன்று) சுகநிட்டை — சிவராச யோகம். இதுவே சிவஞானத்துக்கு அங்கம். மற்றவை அடயோகம். காற்று (வாயு) பத்தாவன: (1) உயிர்க் காற்று (பிராணனன்) 2. மலக் காற்று (அபானன்), 3. தொழிற் காற்று (வியானன்), 4. ஒலிக் காற்று (உதானன்), 5. நிரவுக் காற்று (சமானன்), 6. தும்மற் காற்று (நாகன்), 7. விழிக்காற்று (கூர்மன்), 8. கொட்டாவிக் காற்று (கிருகரன்), 9. இமைக்காற்று (தேவதத்தன்), 10 வீங்கற் காற்று (தனஞ்சயன்).

421. மனம் கனிதல் வேண்டும்!

வாயுண்டு வாழ்த்த மௌனம் செய்
 போது மௌனஅருள்

தாயுண்டு சேயென்ன என்னைப்
புரக்கச் சதானந்தாம்
நீயுண்டு நின்னைச் சரணபுக
நான் உண்டென் நெஞ்சம்ஐயா
தீயுண் டிருந்த மெழுகலவோ
கதி சேர்வதற்கே.

421. ஐயா! உன்னை வாழ்த்துவதற்கு வாய் உண்டு. மோன நிலை கூடும் போது அதைக் கூட்டி முடிக்க மோன வடிவான திருவருள் என்னும் தாய் உண்டு. மகனைப் போன்று என்னைக் காப்பாற்ற நித்திய இன்பமான நீயுண்டு. உன்னை அடைக்கலமாக அடைய நான் உண்டு. முத்தியை அடையும் பொருட்டு என் நெஞ்சமானது தீயாய் காய்ச்சப் பட்ட மெழுகு அன்றோ!

422. அன்பற்ற நான் என் செய்வேன்?

கல்லால் எறிந்தும் கை வில்லால்
அடித்தும் கனிமதுரச்
சொல்லால் துதித்தும் நற் பச்சிலை
தூவியும் தொண்டர்இனம்
எல்லாம் பிழைத்தன அன்பற்ற
நானினி ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற
முக்கண் குருமணியே!

422. அடியார் சிலர் முன்னம் நேர்நின்ற மூன்று கண்களையுடைய எம் இறைவ! நல்ல நிறம் பொருந்திய மாணிக்கமே! கற்களால் எறிந்தும், கைவில்லால் அடித்தும், கனிபோன்ற இனிய சொற்களினால் துதித்தும், தூய பச்சிலைகளைத் தூவியும் அடியவர் கூட்டம் எல்லாரும்

பிழைத்தனர். அத்தகைய அன்பில்லாத யான் இனிமேல் எந்த வகைப்பட்ட தொண்டைச் செய்து பிழைப்பேன்?

423. நெஞ்சே, பேய்த்தனம் ஏன்?

முன்னிலைச் சுட்டொழி நெஞ்சே நின்
போதம் முளைக்கில்லையோ
பின்னிலைச் சன்மம் பிறக்கும்கண்
டாய்இந்தப் பேய்த்தனம்ஏன்
தன்னிலை யேநில்லு தானே
தனிச்சச்சி தானந்தமாம்
நன்னிலை வாய்க்கும்எண் சித்தியுங்
காணும் நமதல்லவே.

423 என் நெஞ்சே! முன்னிலைச் சுட்டை ஒழிப்பாயாக! நின் அறிவானது தலை தூக்கின், ஐயோ, பின்பு பிறவியானது மறுபடியும் உண்டாகும். இத்தகைய பேய்த் தன்மை ஏன்! தன் உண்மை நிலையே தானே நிற்க தானே வலிய ஒப்பில்லாத உண்மை அறிவின்பமான நன்னிலை ஏற்படும். எட்டுவகைச் சித்திகளும் வாய்க்கும். முன்னிலையாகக் காணப்படும் பொருள் எல்லாம் நம்முடையவை அல்லவே!

424. என் செய்வேன்!

சொல்லால் மவுனம் மனமென்
றேசொல்லிச் சொல்லிக்கொண்ட
தல்லால் மனம்அறப் பூரண
நிட்டையில் ஆழ்ந்ததுண்டோ
கல்லாத மூடன் இனிஎன்செய்
வேன்சகற் காரணமாம்
வல்லாள னான மவுன
சதானந்த மாகடலே!

424. உலகத்துக்குக் காரணனான வல்லவன் என்ற மோனத்தினாலே அழியாத இன்பக் கடலே! சொல்லினால் 'நான் மவுனமாய் இருக்கின்றேன்' எனச் சொல்லிக் கொண்டதே அல்லாமல் மனமானது அடங்க, முழுமையான நிட்டையில் அழுந்தியது உண்டோ? இதற்கேற்ற கல்வியைக் கல்லாத மூடன் நான். இனி என்ன செய்வேன்?

425. மனம் அடங்க வழி யாது?

ஆரணம் ஆகமம் எல்லாம்
உரைத்த அருள்மௌன
காரண மூலம்கல் லாலடிக்
கேயுண்டு காணப்பெற்றால்
பாரணம் கோடு சுழல்நெஞ்ச
மாகிய பாதரசம்
மாரண மாய்விடும் எண்சித்தி
முத்தியும் வாய்த்திடுமே,

425. மறைகள் ஆகமங்கள் ஆகியவை எல்லாம் உரைத்த அருள் வாய்ந்த மோன நிலை பொருந்திய உலகத் துக்கெல்லாம் காரணமான மூலப் பொருள் கல்லால மரத்தின் கீழ் இருக்கின்றது. அந்தப் பொருளைக் காணப் பெற்றால் பூமியுடனும் மங்கையருடனும் உழலும் உள்ள மான பாதரசமானது இறந்துவிடும். எட்டு வகைப்பட்ட அணிமா முதலான சித்திகளும் வீடும் கிடைக்கும்.

426. மௌனமே நிட்டையாம்!

சித்த மவுனி வடபால்
மவுனி நம் தீபகுண்ட
சுத்த மவுனி எனுமூவ
ருக்கும் தொழும்புசெய்து

சத்த மவுன முதல்மூன்று
மௌனமும் தான்படைத்தேன்
நித்த மவுனமல் லால்அறி
யேன்மற்றை நிட்டைகளே.

426. சித்த மௌனி, கல்லால மரத்தின் கீழ் இருந்த மௌனி, நம் தீபகுண்ட மௌனி எனக் கூறப்படுகின்ற மூன்று மௌனிகளுக்கும் பணியைச் செய்து சொல் மௌனம் மனமௌனம், உடல் மௌனம் என்ற மூன்று மௌனங் களையும் நான் பெற்றுள்ளேன். இனி எக்காலத்தும் மௌனம் அல்லாது வேறான யோக நிட்டைகளை யான் அறியேன்.

(வடபால்மவுனி — தட்சிணாமூர்த்தி. சித்த மவுனி — தன்னைத் தடுத்தாட் கொண்ட மௌனமுனி. தீபகுண்ட மவுனி — தீப குண்டத்தினிடையே இருந்து மந்திரோப தேசம் செய்து தீட்சை அளித்த குரு).

427. எனக்கு இனி என்ன குறை?

கண்டேன் நினதருள் அவ்வரு
ளாய்நின்று காண்பதெல்லாம்
உண்டே அதுவும் நினதாக்கி
னேன்உவட் டாதஇன்பம்
மொண்டே அருந்தி இளைப்பாற்றினேன்
நல்ல முத்திபெற்றுக்
கொண்டேன் பராபரமே எனக்கு
ஏதும் குறைவில்லையே.

427. மேலான பொருளே! நின் திருவருளை நான் கண்டு கொண்டேன். அதன் அருள் மயமாய் இருந்து கொண்டு காண்பவை யாவும் உண்டே! அங்ஙனம் பார்க்கும் தன்மையும் உன்னுடையவை ஆக்கி விட்டேன். தெவிட்

டாத இன்பத்தை முகந்து உண்டு என் இளைப்பைப் போக்கிக் கொண்டேன். உண்மையான மோட்சத்தை அடைந்தேன். எனக்கு இனிமேல் என்ன குறை இருக்கின்றது?

428. அமிழ்தம் பருகுவேன்!

மேற்கொண்ட வாயுவும் கீழ்ப்பட
　　மூலத்து வெந்தழலைச்
சூற்கொண்டமேகமென ஊமை
　　நின்று சொரிவதையென்
னால்கண்ட தன்று மௌனோப
　　தேசி அளிக்கையின்இப்
பால்கண்டு கொண்டனன் மேலே
　　அமிர்தம் பருகுவனே.

428. மேல் நோக்கிப் போகும் காற்று, கீழ் நோக்கிச் சென்று, கீழ் மூலாதாரத்தில் உள்ள கொடிய தீயைக் கருக்கொண்ட மேகம் போல் மவுன நிலையினின்று பொழிவதை நான் தனித்துத் தெரிந்து கொண்டதில்லை. மௌன குருவின் அருளினால் இப்போது கண்டு கொண்டேன். இனி, நெற்றிப் புருவ நடுவில் உள்ள திங்கள் அமுதத்தை உண்பேன்.

429. வாய் விட்டு அரற்றுவேன்!

சொல்லால் தொடர்பொரு ளால்தொட
　　ராப்பரஞ் சோதிநின்னை
வல்லாளர் கண்ட வழிகண்டி
　　லேன் சகமார்க்கத்திலும்

செல்லாதென் சிந்தை நடுவே
    கிடந்து திகைத்துவிம்மி
அல்லான தும்பக லானதும்
    வாய்விட்டு அரற்றுவனே.

429. சொல்லினாலும் சொல் தொடாமல் விளையும் பொருளாலும் தொடர முடியாத மேலான ஒளியே! நின்னை ஞானியர் கண்டு வணங்கிய வகையை யான் அறியேன். நிலைக்காத உலக உண்மையை நின்னருளால் கண்டு கொண்ட என் மனம் அந்த உலக வழியிலும் செல்லாது. அந்த இரண்டுக்கும் நடுவிலே இருந்து மயங்கி விம்மி இருள் காலமான இரவிலும், பகலிலும் வாய் திறந்து புலம்புவேன்.

430. சிறியேனுக்கு இரங்குவாய்!

அறியாத என்னை அறிவாயும்
    நீயென்று அகம்புறமும்
பிறியா தறிவித்த பேரறி
    வாம் சுத்தப் பேரொளியோ
குறியாத ஆனந்தக் கோவோ
    அமுதருள் குண்டலியோ
சிறியேன் படுந்துயர் கண்டுகல்
    லால் நிழல் சேர்ந்ததுவே.

430. சிறியவனான நான் அனுபவிக்கும் துன்பத்தைக் கண்டு கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளிச் சேர்ந்து, எவராலும் அறியக் கூடாத என்னை அறிபவன் நீ என்று உள்ளும் வெளியும் நீங்காதிருந்து அறிவித்த பேரறிவான அருட் பேரொளியோ? எண்ண ஒண்ணாத பேரின்பப் பெரு வாழ்வோ? அருள் அமுதைத் தந்தருளும் குண்டலி சத்தியோ? (அறியேன்)

431. வீடுபேறு அடைவது எப்படி?

எல்லாம் உதவும் உனைஒன்றில்
 பாவனையேனும் செய்து
புல்லா யினும்ஒரு பச்சிலை
 யாயினும் போட்டிறைஞ்சி
நில்லேன்நல் யோக நெறியுஞ்செ
 யேன் அருள் நீதிஒன்றும்
கல்லேன் எவ்வாறு பரமே
 பரகதி காண்பதுவே?

431. மேலான பொருளே! எல்லாவற்றையும் அளிக்கும் உன்னை ஏதாவது ஒன்றில் பாவித்துப் புல்லையேனும் ஒரு பச்சிலையையேனும் இட்டு வணங்கி நில்லேன். நல்ல யோக நெறியையும் செய்யேன். திருவருள் தொடர்பான நீதியற நூல் எதையும் நான் கற்றதில்லை. இத்தகைய இயல்புடைய யான் எவ்வகையில் முத்தி நிலையை அறிந்து கொள்வது?

432. ஒன்றும் புரியவில்லை!

ஒன்றும் தெரிந்திட வில்லை என்
 னுள்ளத் தொருவ எனக்கு
என்றும் தெரிந்த இவை அவை
 கேள்இர வும்பகலும்
குன்றும் குழியும் வனமும்
 மலையும் குரைகடலும்
மன்றும் மனையும் மனமாதி
 தத்துவ மாயையுமே.

432. என் மனத்தில் வீற்றிருக்கின்ற ஒப்பில்லாதவனே! மாயைக்கு அயலான ஒரு பொருளும் எனக்குத் தோன்றவில்லை. என்றும் எனக்குத் தெரிந்துள்ளவை கீழே

குறித்துள்ளவையாகும். அவற்றைக் கேட்பாயாக! இரவும் பகலும், சிறிய மலையும், குளமும், காடும், பெரிய மலையும் ஒலிக்கும் கடலும், அம்பலமும், வீடும், உள்ளம் முதலான உண்மைத் தொகுதியான மாயையின் காரியங்களாகும்.

433. என்னையும் ஆட்கொண்டான்!

பழுதுண்டு பாவையர் மோக
    விகாரப் பரவையிடை
விழுகின்ற பாவிக்கும் தன்தாள்
    புணையை வியந்தளித்தான்
தொழுகின்ற அன்பர் உளம்களி
    கூரத் துலங்கும்மன்றுள்
எழுகின்ற ஆனந்தக் கூத்தன்
    என்கண்மணி என்னப்பனே.

433. துதிக்கும் அடியாரின் உள்ளம் மகிழ விளங்கும் சிற்றம்பலத்திலே நடிக்கும் இன்பக் கூத்தாடுபவன், என் கண்ணின் மணியைப் போன்றவன், என் தந்தை அத்தகைய அவன், ஆறாத துன்பத்தை அடைந்து மங்கையர் மீது கொள்ளும் ஆசைக் கடலுள் அழுந்திக் கிடந்த எனக்கும் தன் திருவடிகளான மரத் தெப்பத்தை வியந்து தந்தருளினான்.

434. எனக்கு இரங்கினால் இழுக்காகுமோ?

அழுக்கார்ந்த நெஞ்சுடையேனுக்கை
    யாநின் அருள் வழங்கின்
இழுக்காகும் என்றெண்ணி யோஇரங்
    காத இயல்புகண்டாய்
முழுக்காத லாகி விழிநீர்
    பெருக்கிய முத்தரெனும்

குழுக்காண நின்று நடமாடுந்
தில்லைக் கொழுஞ்சுடரே!

434. நிறைவான அன்புடைய வராகிக் கண்ணீர் விட்ட வீடுபேற்றினர் என்று கூறத்தக்க அடியார் கூட்டம் காணத் தோன்றித் திருக்கூத்தாடுகின்ற சிதம்பரத்தில் கொழுவிய சுடரே! ஐய! குற்றம் மிக்க நெஞ்சையுடைய எனக்கு நின்னருளைத் தரின் குற்றமாகும் என்று கருதியோ எனக்கு இரங்காது இருப்பது?

435. கல் நெஞ்சமே, தவம் செய்யாததேன்!

ஆலம் படைத்த விழியார்கள்
மால்கொண் டவர்செய்இந்த்ர
சாலம் படைத்துத் தளர்ந்தனை
யேஎன்றும் தண்ணருள்கூர்
கோலம் படைத்துக்கல் லாலடிக்
கீழ்வைகும் கோவுக்கன்பால்
காலம் படைக்கத் தவம்படை
யாதென்கொல் கல்நெஞ்சமே!

435. கல்போன்ற என் நெஞ்சமே! ஆலகால நஞ்சு பொருந்திய கண்களையுடைய மங்கையர் மீது காதல் கொண்டு அம்மங்கையர் செய்கின்ற இந்திர சாலத்துக்கு உள்ளாகித் தளர்ச்சி யடைந்தாயே! என்றும்குளிர்ந்த அருள் மிகுந்த கோலத்துடன் விளங்கிக் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு அன்பு செலுத்தும் காலம் ஏற்படத் தவம் செய்யாதது ஏன்?

436. மாயக் காட்டில் அலைந்தேன்!

சும்மா விருக்கச் சுகம்சுகம்
என்று சுருதியெல்லாம்

அம்மா நிரந்தரம் சொல்லவும்
கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையும்
தப்பிஎன் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன்
அந்தோஎன் விதிவசமே.

436. அம்மா, பேசாமல் மனம் சிவனே என்று இருப்பதான சும்மா இருத்தலே இன்பம் உண்டாவதாகும். இவ்வாறு மறைகள் யாவும் எக்காலமும் கூறும். அத்தகைய உண்மையைக் கேட்கும் உணர்வு இல்லாது எம் இறைவனான மௌன குருவின் மொழியையும் தவறி என் அறியாமையினால் கொடிய மாயக்காட்டில் அலைந்து திரிந்தேன். ஐயோ! இஃது என் தலை விதியே!

437. நம்மைப் போல் மூடர் உண்டோ?

தினமே செலச்செல வாழ்நாளும்
நீங்கச் சகத்திருள்சொற்
பனமே எனவெளி கண்டே
இருக்கவும் பாசபந்த
இனமே துணைஎன் றிருந்தோம்
நமன்வரின் என்செய்குவோம்
மனமேநம் போலஉண் டோசுத்த
மூடர்இவ் வையகத்தே?

437 என் உள்ளமே! ஒவ்வொரு தினமும் செல்லச் செல்ல ஆயுளும் நீங்க, உலகத்து இருளானது கனவே யாகும் என்று வெளிப்படையாய்க் கண்டிருந்தும் பாசக் கட்டே உற்ற துணையாகும் என்று எண்ணி வாழ்ந்தோம். நம் உயிரைக் கவர்ந்து கொண்டு செல்ல இயமன் வரின் என்ன செய்வோம்? என்ன வாழ்வு வாழ்ந்தோம்? நம் போன்ற மூடர் உண்டோ? இவ்வுலகில்?

438. இந்தப் பிறவியே இறுதிப் பிறவியாக அருள்வாய்!

கடலெத் தனைமலை யெத்தனை
அத்தனை கன்மம் அதற்கு
உடல்எத் தனைஅத் தனைகடல்
நுண்மணல் ஒக்கும் இந்தச்
சடலத்தை நான்விடு முன்னே
உனைவந்து சாரஇருள்
படலத்தை மாற்றப் படாதோ
நிறைந்த பராபரமே!

438. எங்கும் நிறைந்த மேலான பொருளே! உலகில் கடல்கள் எத்தனை உள்ளன, மலைகள் எத்தனை உள்ளன, அந்த இருவினைகளுக்கு ஈடாக உடல்கள் எத்தனை, அத்தனை கடலில் உள்ள நுண் மணல்களின் தொகை. எனவே, இத்தகைய உடலை யான் விடுவதற்கு முன்னமேயே நின்னை வந்து நான் அடையுமாறு, அதற்குத் தடையாய் உள் ள இருள் படலத்தை மாற்றிடக் கூடாதோ?

439. வினை தோன்றியது எப்படி?

நினையும் நினைவும் நினையன்றி
இல்லை நினைந்திடுங்கால்
வினையென் றொருமுதல் நின்னைஅல்
லாது விளைவதுண்டோ
தனையும் தெளிந்துன்னைச் சார்ந்தோர்கள்
உள்ளச்செந் தாமரையாம்
மனையும் பொன்மன்றமும் நின்றாடும்
சோதி மணிவிளக்கே!

439. தங்களை உணர்ந்து உம்மை அடைந்தவரின் உள்ளமான செந்தாமரை வீட்டிலும் தில்லைச் சிற்றம்

பலத்தும் நிலைத்துத் திருக்கூத்தாடியருளும் ஒளியுடைய விளக்கே! மணித்தீபமே! யான் எண்ணும் எண்ணமும் உன்னையன்றி எண்ணுவதில்லை. எண்ணும்போது வினை என்று கூறப்படுகின்ற ஒப்பற்ற முதலான பொருள் நின் ஆணையின்றி விளைவுதுண்டோ?

440. இனியுமா வினைத் துன்பம்?

உள்ளத் தையும்இங் கெனையும்நின்
கையினில் ஒப்புவித்தும்
கள்ளத்தைச் செய்யும் வினையால்
வருந்தக் கணக்கும்உண்டோ
பள்ளத்தில் வீழும் புனல்போல்
படிந்துன் பரமஇன்ப
வெள்ளத்தின் மூழ்கினர்க் கேஎளி
தாம்தில்லை வித்தகனே!

440. ஆழமான பள்ளத்தில் பாய்ந்து ஓடும் நீரைப் போன்று அமைந்து உன் மேலான இன்பக் கடலிலே மூழ்கியவருக்கே எளிதாக எழுந்தருளுகின்ற தில்லையில் வீற்றிருக்கின்றவனே! என் நெஞ்சத்தையும் இங்கு என்னையும் நின்னிடத்தில் யான் ஒப்படைத்தேன். ஒப்படைத்தும், இன்னமும், வஞ்சம் செய்கின்ற வினையினால் துன்பம் அடைய முறையுண்டோ?

441. நின் திருவடியே கதி!

கள்ளம் பொருந்தும் மடநெஞ்ச
மேகொடுங் காலர்வந்தால்
உள்ளன் பவர்கட்குண்டோ இல்லை
யேஉலகீன்ற அன்னை
வள்ளம் பொருந்து மலரடி

காணமன் றாடும் இன்ப
வெள்ளச் செம்பாதப் புணையேயல்
லால்கதி வேறில்லையே.

441. வஞ்சமுடைய அறிவற்ற என் மனமே! கொடிய கூற்றுவன் தூதர் வந்தால் அவர்க்கு நெஞ்சத்தில் இரக்கம் என்மீது உண்டாகுமோ? உண்டாகாது. உலகங்கள் எல்லா வற்றையும் பெற்றெடுத்த தாய் கண்டு மகிழும்படி மன்றத்தில் ஆடும், கிண்ணம் போல் விளங்கும் செந்தாமரை யைப் போன்ற மேலான பொற்பாதமான தெப்பமே அல்லாமல் கதிவேறு இல்லையே!

442. நெஞ்சமே தெளிவடைக!

தன்மய மானசு பாவத்தின்
மெள்ளத் தலைப்படுங்கால்
மின்மய மானச கம்யா
துரைத்தென் வெளியில்உய்த்த
சின்மய முத்திரைக் கையேமெய்
யாகத் தெளிந்தநெஞ்சே
நின்மயம் என்மயம் எல்லாம்
நிறைந்த நிராமயமே.

442. இறைவனின் பெருநிறைவான இயல்பில் மெல்லக் கூடும்போது, மின்னல் போன்ற நிலைக்காத உலகம், யாது சொல்லி என்ன பயன்! விளக்கமாய் அளித்த மோன முத்திரையுடன் கூடிய திருக்கையால் உண்மையைத் தெரிந்துகொண்ட மனமே! இறைவனின் நிறைவுள் யான் அடங்கும் நிறைவும் அமைந்திருக்கின்றது. இரண்டும் எங்கும் நிறைந்து காணப்படுகின்ற நிராமயம் (இறை) ஆகும்.

443. எல்லாம் நீயே!

ஆயும் கலையும் சுருதியும்
    காண்டற் கரியவுனைத்
தோயும் படிக்குக் கருணைசெய்
    வாய்சுக வான்பொருளே
தாயும் பிதாவும் தமருங்
    குருவுந் தனிமுதலும்
நீயும் பரையுமென் றேஉணர்ந்
    தேன்இது நிச்சயமே.

443. இன்ப வடிவான மேலான பொருளே! ஆராயப் படுகின்ற பலகலைகளும் மறைகளும் கண்கூடாகக் காண்ப தற்கு அரிய உன்னை அடையுமாறு திருவருளைச் செய்வா யாக! தாயும் தந்தையும் உறவினரும் குருவும் ஒப்பில்லாத முதற் பொருளும் நீயும் நின் தேவியும் என்று யான் தெளிந்தேன்.

(பரை-உமையவள்; பரன் என்பதன் பெண்பால்)

444. என்னிடம் கருணை உண்டோ?

அல்லும் பகலும் உனக்கே
    அபயம் அபயம்என்று
சொல்லும்சொல் இன்னம் தெரிந்ததன்
    றோதுதிப் பார்கள்மனக்
கல்லும் கரைக்கும் மவுனா
    உனதுகருணை என்பால்
செல்லும் பொழுதல்லவோ செல்லு
    வேன் அந்தச் சிற்சுகத்தே.

444. வணங்குபவரின் மனமான கல்லைக் கரைக்கின்ற மௌன குருவே! இரவும் பகலும் நினக்கே அடைக்கலம்,

அடைக்கலம், என்று கூறி அழைக்கின்ற சொல் இன்னும் நின் திருச்செவிக்கு எட்டியதில்லையே! நின் அருளானது என்னிடம் அடையும் பொழுதன்றோ நின் திருவடிப் பேரின்பத்தில் யான் முழுகுவேன்!

445. எல்லாம் நின் செயல்

எல்லாம் சிவன்செயல் என்றறிந்
தால்அவன் இன்னருளே
அல்லால் புகலிடம் வேறுமுண்
டோஅது வேநிலையா
நில்லாய்உன் னால்தமி யேற்குக்
கதியுண்டிந் நீள்நிலத்தில்
பொல்லா மயக்கத்தில் ஆழ்ந்தாவ
தென்ன புகல் நெஞ்சே!

445. நெஞ்சே! எல்லாம் இறைவனான சிவ பெருமானின் செயலே என்று அறிந்தால், அந்த இறைவனின் இனிய திருவருளே அல்லாமல் அடைக்கலமாய்ப் புகுவதற் குரிய இடம் வேறு உண்டோ? அதிலேயே நிலையாக நிற்பாயாக! அங்ஙனம் நின்றால், ஆதரவற்ற எனக்கு நின்னால் நற்கதியுண்டு. இந்தப் பெரிய வுலகத்தில் தீமை யான பெரிய மயக்கத்தில் ஆழ்வதால் உண்டான பயன் யாது? என் மனமே, கூறு!

446. தெளிவிலேன் என்செய்வேன்!

ஒளியே ஒளியின் உணர்வே
உணர்வின் உவகை பொங்கும்
களியே களிக்குங் கருத்தே
கருத்தைக் கவளங்கொண்ட
வெளியே வெளியின் விளைசுக

மேசுகர் வீறுகண்டும்
தெளியேன் தெளிந்தவரைப் போற்றி
டேன்என்ன செய்குவனே?

446. ஒப்பற்ற ஒளியே! அந்த ஒளியின் அறிவே! உயிர்களின் உணர்வினுள் விருப்பம் மிகுகின்ற களிப்பே! களிக்கும் கருத்தே! உயிர்களின் கருத்தைக் கவர்ந்து கோண்ட அறிவு வெளியே! அந்த அறிவு வெளியில் உண்டாகும் இன்பமே! சுக முனிவரின் பெருமையை நூல்களில் படித்தும் யான் தெளிவு அடைந்திடவில்லை. தெளிந்தவரை வணங்கவில்லை. யாது செய்வேன்?

447. என்று பிறவி தொலையும்?

மறக்கின்ற தன்மை இறத்தல்ஒப்
பாகும் மனமதொன்றில்
பிறக்கின்ற தன்மை பிறத்தல்ஒப்
பாகும்இப் பேய்ப்பிறவி
இறக்கின்ற எல்லைக்கு அளவில்லை
யோஇந்தச் சன்மஅல்லல்
துறக்கின்ற நாள்எந்த நாள்பர
மேநின் தொழும்பனுக்கே.

447. மேலான பொருளே! உயிர்கள் மறக்கின்ற தன்மை இறப்புக்கு ஒப்பானதாகும். நெஞ்சமானது ஒரு பொருளை நினைக்கும் தன்மை பிறப்பதற்கு ஒப்பானதாகும். பேய்த்தன்மையை ஒத்த இந்தப் பிறவிகள் கழிந்து கழிந்து மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு ஓர் அளவு இல்லை! இந்தப் பிறப்புத் துன்பமானது உன் அடியேனுக்குத் துறக்கின்ற நாள் எந்நாள்?

448. நல்ல கூத்து இது!

காட்டிய அந்தக் கரணமும்
மாயையிக் காயம்என்று
சூட்டிய கோலமும் நானா இயங்கத்
துறையிதனுள்
நாட்டிய நான்றனக் 'கென்றோர்
அறிவற்ற நான்இவற்றைக்
கூட்டிநின் றாட்டினை யேபர
மேநல்ல கூத்திதுவே.

448. மேலான பொருளே! காட்டப்பட்ட மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற நான்கும் அசுத்த மாயையின் காரியம் ஆகும். மாயையின் காரியமே இந்த வுடல். இந்த வுடம்பு என்று பெயர் சுட்டப்பட்ட கோலமும், பலவகையாய்ப் பற்பல துறைகளையுடைய இதற்குள் நிலைக்கச் செய்தது நானோ! இல்லை தனக்கென ஒரு சுதந்திர அறிவு இல்லாதவனாய் நான் விளங்குகின்றேன். உடலையும் என்னையும் ஒன்று கூட்டியுடன் இருந்து அறிவுறுத்தி ஆட்டுவிக்கின்றனையே! இது நல்ல கூத்து!

449. நின்னில் கலப்பேன்!

பொல்லாத மாமற் கடமன
மேஎனைப் போல் அடுத்த
எல்லாவற்றை யும்பற்றிக் கொண்டனையே
என்னை நின்மயமா
நில்லாய் அருள்வெளி நீநான்நிற்
பேன்அருள் நிட்டையொரு
சொல்லால் பதிந்து பரிபூர
ணானந்தம் தோய்குவனே.

449. எல்லாத் துன்பங்களுக்கும் காரணமான பெரிய குரங்கைப் போன்ற என் மனமே! நீ என்னைப் பற்றிக்

கொண்டிருப்பதைப் போன்று என்னை அடுத்துள்ள பொருள் களையும் பற்றிக் கொண்டிருக்கின்றாய். இஃது என்னே! நீ அறிவு வெளியில் தன்மயமாய் நிற்கக் க டவாயாக! அங்ஙனம் நின்றால் நான் திருவருள் நிட்டையை ஒரு சொல்லால் பதியப் பெற்று இருப்பேன். நிறைந்த இன்பத்தில் முழுகுவேன்.

(மா மர்க்கடம்—பெரிய குரங்கு)

450. நெஞ்சமே நின்னை வெல்வேன்!

வாராய்நெஞ் சேஉன்தன் துன்மார்க்கம்
யாவையும் வைத்துக் கட்டிங்கு
ஆராய் அடிக்கடிச் சுற்றுகின்
றாய்உன் னவலமதிக்கு
ஓரா யிரம்புத்தி சொன்னாலும்
ஓர்கிலை ஓகெடுவாய்
பாராய் உனைக்கொல்லு வேன்வெல்லு
வேன்அருள் பாங்குகொண்டே.

450. என் மனமே! வருக! உன் தீய வழிகள் யாவற்றையும் ஒரு புறத்தே ஒதுக்கி வை! இங்கிருந்து ஆராய்வாய்! அடிக்கடி எப்போதும் உலகத்தில் எங்கும் உழல்கின்றாய். உன் நிலை பேறில்லாத அளவுக்குப் பல அளவற்ற அறிவுரைகள் கூறினாலும் அவற்றையெல்லாம் நீ ஆராய்ந்து பார்ப்பதில்லை! அதனால், ஓ, நீ கெடுவாய்! இறைவனின் திருவருள் துணையால் உன்னை அடக்கி ஒடுக்குவேன்; வெல்வேன்.

451. வான் பொருளை நாடுக!

மாதத்திலேஒரு திங்கள்உண்
டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைத்திலை

யேவெறும் புன்மைநெஞ்சே
வேதத்தி லேதர்க்க வாதத்தி
லேவிளங் காதுவிந்து
நாதத்தி லேஅடங் காதந்த
வான்பொருள் நாடிக்கொள்ளே!

451. மிக இழிவான மனமே! ஒவ்வொரு மாதத்தில் ஒரு சந்திரன் பிறையாய்த் தோன்றி வளர்ந்து நிறைவாகி மறைவதைப் பார்க்கின்றாய். இதை நின் மனத்தில் சற்றும் எண்ணிப் பார்க்கவில்லை! மறைகளாலும் சொற்போரி விளங்காமலும் விந்துவிலும் நாதத்திலும் அடங்காமல் உள்ள அந்தச் சிறந்த பொருளை ஆராய்ந்து பற்றிக் கொள் வாயாக!

452. பொங்கும் கருணைக் கடலே!

எங்கும் வியாபித் துணர்வாய்
உனக்கென் இதயத்துள்ளே
தங்கும் துயரம் தெரியாத
வண்ணம் தடைசெய்ததார்
அங்கம் குனழந்துள் உருகும்அன்
பாளர்க்கு அணைகடந்து
பொங்கும் கருணைக் கடலே சம்
பூரண போதத்தனே!

442. உடல் புளகம் கொண்டு குழைந்து உள்ளம் உருகி நிற்கும் அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டு எல்லை கடந்து பெருகிடும் அருட்கடலே! நிறைவான பேரறிவு வடிவினனே! நீ எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் உணர்வாய்! என் மனத்துள் இருந்துவரும் துன்பத்தை உனக்குத் தெரியாத வண்ணம் தடை செய்தவர் யார்?

453. பொய்யர் தம் நட்பை விடுவது எப்போது?

வையக மாதர் சுகத்தையும்
பொன்னையும் மாயைமல
மெய்யையும் மெய்யென்று நின்னடி
யார்தம் விவேகத்தையும்
ஐயமில் வீட்டையும் மெய்ந்நூலை யும்
பொய்ய தாகஎண்ணும்
பொய்யர்தம் நட்பை விடுவதென்
றோபரி பூரணமே!

453. எங்குப் நிறைந்துள்ள பொருளே! உலகத்தில் பெண்டிர் இன்பத்தையும், பொருளையும் மாயையின் காரிய மான மலத்துக்குள் உடலையும்,மெய்என்றும் நின்அடியார்ன் அறிவையும், சந்தேகம் இல்லாத முத்தியையும் உண்மை நூல்களையும் பொய் என்றும் நினைக்கின்ற பொய்யரின் நட்பை நீக்குவது எந்த நாளோ?

454. பரிபாக காலம் வருமோ?

அளியும் கனியொத்து அருவினை
யால்நொந் தயர்வுறுவேன்
தெளியும் படிக்கும் பரிபாக
காலமும் சித்திக்குமோ
ஒளியும் கருணையும் மாறாத
இன்பமும் ஓர்உருவாய்
வெளிவந் தடியர் களிக்கநின்
றாடும் விழுப்பொருளே!

454. ஒளியும் அருளும் நீங்கப் பெறாத இன்பமும் ஒரு திருவடிவாய் வெளிப்போந்து சிவனடியார் மகிழச் சிற்றம் பலத்தில் எழுந்தருளி ஆனந்தக் கூத்தாடும் மேலான பொருளே! பழுத்த பழத்தைப் போன்ற தீய வினையால்

வாடித் தளர்கின்றேன். நான் தெளியும்படி பரியக்குவ காலமும் எனக்கு வாய்க்குமோ?

455. நான் என்ன செய்தேன்?

அடையார் புரம்செற்ற தேவேநின்
பொன்னடிக் கன்புசற்றும்
படையாத என்னைப் படைத்திந்தப்
பாரில் படர்ந்தவினைத்
தடையால் தளையிட்டு நெஞ்சம்புண்
ணாகத் தளரவைத்தாய்
உடையாய் உடைய படியன்றி
யான்செய்த தொன்றில்லையே.

455, தன்னை அடையாத பகைவரின் திரிபுரங்களை எரித்த இறைவ! உன் அழகிய திருவடிகளுக்கு அன்பைச் சிறிதும் கொள்ளாத என்னை இவ்வுலகத்தில் படைத்துப் பரந்த விலங்கு கொண்டு தளையாய்ப் பூட்டி மனம் புண்பட வைத்தனை! எல்லாம் உடையவனே, நீ என் உள்ளத்தில் கொண்டபடியே அல்லாது நான் செய்தது ஏதும் இல்லை!

456. எமன் வரும்போது என்ன செய்ய முடியும்?

ஆடும் கறங்கும் திரிகையும்
போல அலைந்தலைந்து
காடும் கரையும் திரிவதல்
லால்நின் கருணைவந்து
கூடும் படிக்குத் தவம்முய
லாதகொடியர் எமன்
தேடும் பொழுதென்ன செய்வார்
பரானந்த சிற்சுடரே!

456. மேலான பேரின்பத்தை அளிக்கின்ற பேரறிவு ஒளியே! வானத்தில் பறக்கும் காற்றாடியையும் குயவனிடத்துள்ள சக்கரத்தையும் போன்று திரிந்து திரிந்து காட்டிலும் நாட்டிலும் திரிவதே அல்லாது என்னருள் வந்து அடையுமாறு தவத்தைச் செய்யாத கொடியவர் இயமன் வந்து தேடுங்காலத்தில் என்ன செய்வர்?

457. கல்வியாலும் கேள்வியாலும் பயன் என்ன?

கற்றும் பலபல கேள்விகள்
 கேட்டும் கறங்கெனவே
சுற்றும் தொழில்கற்றுச் சிற்றின்பத்
 தூடு சுழலில் என்னாம்
குற்றம் குறைந்து குணம்மே
 லிடும் அன்பர் கூட்டத்தையே
முற்றும் துணைஎன நம்புகண்
 டாய்சுத்த மூடநெஞ்சே!

457. மிக மூடமான என் உள்ளமே! பல நூல்களைப் படித்தும் பற்பல நூற் பொருள்களைக் கேட்டும் காற்றாடி போல் திரிகின்ற செயலைத் தேர்ந்து உலகத்தின் சிற்றின்பத்திலே உழன்று வருந்தினால் பயன் யாது? குற்றம் இல்லாமல் நல்ல குணங்கள் மிகுகின்ற சிவனடியார் கூட்டத்தையே முழுதும் துணை என்று நம்புவாயாக!

458. கைம்மாறு இல்லை!

நீயென நான்என வேறில்லை
 என்னும் நினைவருளத்
தாயென மோன குருவாகி
 வந்து தடுத்தடிமைச்
சேயெனக் காத்தனை யேபர

மேநின் திருவருளுக்
கேயென்ன செய்யும் கைம் மாறுள
தோசுத்த ஏழையனே.

458. மேலான இறைவனே! நீ என்றும் நான் என்றும் வேறானவராய் நாம் இல்லை. இந்த எண்ணமானது எனக்கு உண்டாகத் தாய்போன்று மோன குருவாகி எழுந்தருளி வந்து உலகத்துன்பத்துள் முழுகாது தடுத்து அடியவனான என்னை என் குழந்தை என எண்ணிக் காத்தாய்! நின் திருவருளுக்கு மிக்க எளியவனான நான் செய்யும் கைம் மாறு உண்டோ? அங்ஙனம் இருந்தால் எனக்கு ஆணையிடுக.

459. சாத்திரப்படி செய்வேன்!

ஆத்திரம் வந்தவர் போல்அலை
யாமல் அரோகதிட
காத்திரம் தந்தென்னை யேஅன்னை
போலும் கருணைவைத்திம்
மாத்திர முன்னின்று உணர்த்தினை
யே மவுனா! இனிநான்
சாத்திரம் சொன்னபடியே
சமாதியும் சாதிப்பனே!

459. மௌன குருவே! மிக்க வேகம் வந்தவரைப் போன்று அலையாமல் நோயின்மையான வன்மையான உடலை அளித்து என்னைத் தாயைப் போன்று அருள் செய்து, இவ்வளவேனும் எழுந்தருளித் தெரிவித்தாயே! இனி நான் யோக சாத்திரம் கூறியபடி இயமம் முதலிய எட்டு வகை யோகங்களையும் செய்து முடிப்பேன்.

முதல் தொகுதி முற்றிற்று

பாடல் முதற் குறிப்பகராதி

□ □ □